# TNPSC தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் - ஏப்ரல் 2022

www.tnpscthervupettagam.com


























SHANKAR IAS ACADEMY™
SINCE 2004
The Best IAS Academy in India

Plot No. 1742, I Foor, 18th Main Road,
Anna Nagar, Chennai - 600 040.
Phone - 044-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

TNPSC துளிகள் ... 12
தமிழ்நாடு செய்திகள் ... 20
ஹூலூ குழும ஒப்பந்தம் – தமிழ்நாடு ... 20
துறைப் பரிமாற்றம் ... 20
சாகித்ய அகாடமி உறுப்பினர் பதவி ... 21
சென்னை மெட்ரோ இரயில் நிலையத்தின் மத்தியச் சதுக்கம் ... 21
கஞ்சா வேட்டை – 2.0 ... 22
வன்னியர் உள் இடஒதுக்கீடு தொடர்பான உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு ... 22
ஆனைகட்டி குடியிருப்பாளர் ... 22
பாலின ஆய்வகம் ... 23
தமிழ்நாடு பொதுச் சுகாதாரச் சட்டம் ... 23
ஆதிச்சநல்லூரில் நாணயங்கள் கண்டெடுப்பு ... 24
காவல் உதவி செயலி ... 24
மாநிலக் கல்விக் கொள்கை ... 25
தாய்க்குரிய நோய்த் தடுப்பாற்றல் பகுப்பாய்வு ... 25
அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 ஒதுக்கீடு ... 25
நடமாடும் வங்கிகள் – தமிழ்நாடு ... 26
சென்னை மாநகராட்சி நிதிநிலை அறிக்கை 2022 ... 26
மின்னணு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான மலிவான அந்நிய நேரடி முதலீட்டு நகரம் ... 27
மத்தியப் பல்கலைக்கழகங்களுக்கான பொது நுழைவுத் தேர்விற்கு எதிரான தீர்மானம் ... 28
சமத்துவ தினம் ... 28
மாநில வளர்ச்சிக் கடன்கள் - தமிழ்நாடு ... 28
தேசிய சீனியர் கூடைப்பந்து சாம்பியன்ஷிப் போட்டி ... 29
வேதாந்த் மாதவன் ... 29
கொங்கு சோழர் காலத்து நடுகற்கள் – அன்னூர் ... 30
தமிழ்நாடு கால்நடை மற்றும் விலங்கு அறிவியல் பல்கலைக்கழகம் ... 30
நாய்கள் இனப்பெருக்க மையம் ... 31
கிராமச் செயலகங்கள் ... 31
பல்கலைக்கழக துணைவேந்தர்கள் நியமனம் ... 31
தமிழ்நாடு சிறுபான்மையினர் உரிமை தினம் ... 32
ஆலிவ் ரிட்லி பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வு மையம் ... 32
தமிழகத்தில் கிராமசபைக் கூட்டங்கள் ... 32
மு. கருணாநிதியின் பிறந்தநாள் ... 33
தமிழகத் தயாரிப்புப் பொருட்கள் - புவிசார் குறியீடு ... 33
TNEB 2.0 திட்டம் ... 33

தேசியச் செய்திகள் ........ 34
இந்திய நகை கண்காட்சி மையக் கட்டிடம் ........ 34
தோட்டப் பயிர்கள் – 2020-21 ஆம் ஆண்டின் இறுதி மதிப்பீடுகள் ........ 34
இரயில் பாதைகளில் யானைகள் உயிரிழப்பதைத் தடுப்பதற்கான ஒரு நிரந்தர அமைப்பு ........ 35
பரம் சக்தி ........ 35
எரிபொருள் நிரப்புவதற்கான புதிய நிலையம் ........ 35
நரேந்திர சிங் தோமர் புத்தக வெளியீடு ........ 36
கொங்கன் இரயில்வே கழகம் ........ 36
INAS 316 ........ 36
5வது BIMSTEC உச்சி மாநாடு ........ 37
வருணா – 2022 ........ 37
டோக்ரா படைப்பிரிவு ........ 38
ஆயுதப்படைகள் சிறப்பு அதிகாரச் சட்டம் ........ 38
FASTER மென்பொருள் ........ 39
வர்ணிகா ........ 39
கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையம் ........ 39
இந்தியா-ஆஸ்திரேலியா பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக ஒப்பந்தம் ........ 40
இந்திய அண்டார்டிக் மசோதா 2022 ........ 40
இந்தியக் காண்டாமிருகத்தின் எண்ணிக்கை ........ 40
திருத்தப்பட்ட MGNREGA ஊதியங்கள் ........ 41
இந்தியப் பணவழங்கீட்டுச் சபையின் தலைவர் ........ 41
புத்தாக்க நிறுவனங்களின் நிறுவனர்கள் மையம் ........ 42
மாநிலங்களவையில் பாஜக 100 இடங்களுக்கும் மேல் கைப்பற்றல் ........ 42
ஒளிபரப்பு சேவைத் தளம் ........ 42
மரபணு திருத்தப்பட்டத் தாவரங்கள் ........ 43
உப்லப்த் நடவடிக்கை ........ 43
ஹீருன் சுயமாக முன்னேறிய உலகின் மிகப்பெரிய செல்வந்தப் பெண்மணிகள் - 2022 ........ 44
HDFC லிமிடெட் மற்றும் HDFC வங்கி ........ 44
2021-22 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் ஏற்றுமதி மதிப்பு ........ 44
பேரழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்களுக்கு நிதியளிப்பதைத் தடை செய்வதற்கான மசோதா ........ 45
ஒருங்கிணைந்த உயிரிச் சுத்திகரிப்பு நிலையங்கள் திட்டம் ........ 46
பிரகிருதி ........ 46
அரசியலமைப்பு (பட்டியலிடப்பட்டச் சாதிகள் மற்றும் பழங்குடியினர்) ஆணைகள் (இரண்டாவது திருத்தம்) மசோதா, 2022 ........ 47
3வது தேசிய நீர் விருதுகள் ........ 47
சன்சத் ரத்னா விருது 2022 - 12வது பதிப்பு ........ 47
இந்தியாவின் வேளாண் ஏற்றுமதி ........ 48
சுகாதார முன்னோடித் திட்டம் ........ 49
செவிலியர் மற்றும் மக்கள் தொகை விகிதம் ........ 49

கஞ்சர் 2022 ...... 49
இந்தியச் சுதந்திரப் போராட்டம் குறித்த கண்காட்சி ...... 49
சணல் மூலப்பொருள் - குறைந்தபட்ச ஆதரவு விலை ...... 50
முல்லைப் பெரியாறு அணைத் தீர்ப்பு ...... 50
பனாரசி பஷ்மினா ...... 51
Tour of Duty திட்டம் ...... 51
தேசிய சுகாதார ஆணையத்தின் சுகாதார நலத் திட்டம் ...... 51
அடல் புத்தாக்கத் திட்டம் ...... 52
குழாய் வழிச் செல்லும் இயற்கை எரிவாயுவில் பசுமை ஹைட்ரஜன் ...... 52
AVSAR முன்னெடுப்பு ...... 52
BRBNMPL நிறுவனத்தின் கற்றல் மற்றும் மேம்பாட்டு மையம் ...... 53
இந்தியா – அமெரிக்கா 2 + 2 அமைச்சர்கள் பேச்சுவார்த்தை ...... 53
பினாகா mk-1 மேம்படுத்தப்பட்ட ராக்கெட் அமைப்பு ...... 53
திட எரிபொருள் குழாயுடைய ராம்ஜெட் உந்துவிசை கருவி ...... 53
தேசியப் புலிகள் வளங்காப்பு ஆணையத்தின் அமர்வு ...... 54
சீமா தர்ஷன் திட்டப் பணி ...... 54
இந்தியக் கடற்கரையின் நிலை ...... 54
செறிவூட்டப்பட்ட அரிசிக்கான திட்டம் ...... 55
ஹெலினா ...... 56
காவிரி ஆற்றில் நுண் நெகிழிகள் ...... 57
மாதவ்பூர் கெத் கண்காட்சி ...... 57
2021-22 ஆம் ஆண்டில் இந்தியாவின் தங்க இறக்குமதி ...... 57
இந்தியாவின் கற்றல் பற்றாக்குறை பற்றிய உலக வங்கியின் அறிக்கை ...... 57
இந்தியாவில் காப்புரிமைப் பதிவுகள் ...... 58
மாணவர்களுக்கு இரண்டு முழு நேரக் கல்விப் படிப்புகள் ...... 58
பெருங்கற்கால கல் ஜாடிகள் ...... 58
2026 காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் ...... 59
நிலக்கரி எரிவாயு ஆலை ...... 60
உலக காற்று அறிக்கை 2022 ...... 60
ஸ்வாநிதி சே சம்ரித்தி திட்டம் ...... 60
பரபரப்பான முதல் 10 விமான நிலையங்கள் ...... 60
பிரதான்மந்திரி சங்க்ரஹாலயா ...... 61
நிதி ஆயோக் அமைப்பின் மாநில ஆற்றல் மற்றும் பருவநிலைக் குறியீடு ...... 61
நீர்வழிப் பாதைகள் மாநாடு 2022 ...... 62
InTranSE -II திட்டம் ...... 63
முதல் நீண்ட கால மதிப்பீட்டு முன்னறிவிப்பு ...... 63
கிருபன் சக்தி பயிற்சி ...... 63
பருத்தி இறக்குமதிக்கு சுங்க வரி விலக்கு ...... 63
டோர்னியர் 228 விமானம் ...... 64

மரணத் தண்டனை குறித்த முக்கியத் தீர்ப்பு ..... 64
பஞ்சாப் தேசிய வங்கி நிறுவிய தினம் ..... 64
ஐக்கிய நாடுகளின் சமூகப் பொருளாதார சபையின் 4 அமைப்புகளில் இந்தியா ..... 64
இந்தியா - எகிப்து நாட்டிற்கு கோதுமை இறக்குமதி ..... 65
மின்னணு ரசீது வசதி ..... 65
ஒற்றை அச்சு சூரியசக்தி இணைப்பு அமைப்பு ..... 66
108 அடி ஹனுமான் சிலை ..... 67
டீசல் இரயில் என்ஜின்கள் உயிரி - டீசல் மூலம் இயக்கம் ..... 67
தேசிய இசைவு வழங்கலுக்கான நேர மதிப்பீட்டு ஆய்வு 2022 ..... 68
'சகுந்தலா' செயற்கைக்கோள் ..... 68
AB-PMJAY ..... 69
ராஷ்ட்ரிய கிராம் ஸ்வராஜ் அபியான் ..... 69
கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் - ஓக்லா ..... 69
ஹுனார் ஹாத் ..... 70
தேசிய தரவு மற்றும் பகுப்பாய்வுத் தளம் ..... 70
புலம்பெயர்வு கண்காணிப்பு அமைப்பு ..... 70
உடான் திட்டம் ..... 71
செமிகான் இந்தியா மாநாடு 2022 ..... 71
மைன்வாக்ஸ் ..... 72
யமுனை நதியில் அம்மோனியா ..... 72
இந்தியாவில் நிலவும் தீவிர வறுமை பற்றிய உலக வங்கியின் அறிக்கை ..... 72
ரேடியோ அக்ஸ் ..... 73
மிதவை வானூர்தி நிலையம் – ஓகா ..... 73
வித்யா சமிக்சா கேந்த்ரா ..... 74
பாரம்பரிய மருத்துவ மையம் ..... 74
சுற்றுச்சூழல் அனுமதி வழங்கும் செயல்முறையில் மாற்றங்கள் ..... 74
அனைத்து திறன்மிகு நகரங்களிலும் ஒருங்கிணைந்த வழிகாட்டு மற்றும் கட்டுப்பாட்டு மையம் ..... 75
ஆக்டினிமென்ஸ் கோயாஸ் ..... 75
இ-தார் தளம் ..... 76
நாட்போல்ரெக்ஸ்-VIII ..... 76
நடமாடும் சூரியசக்தி மேற்கூரை அமைப்பு ..... 76
வாக்சீர் ..... 77
இந்தியாவின் முதலாவது தூயப் பசுமை ஹைட்ரஜன் ஆலை ..... 77
உலகின் மிக உயரமான சுரங்கப்பாதை ..... 77
தேசிய இணையவழிப் பாதுகாப்பு சார்ந்த சம்பவங்களுக்கான எதிர்ப்புப் பயிற்சி ..... 78
காரீஃப் பருவம் – 2022 ..... 78
இந்தியாவின் முதலாவது சர்வதேச பயணியர் கப்பல் மாநாடு ..... 79
உலகளாவிய ஆயுஷ் முதலீடு மற்றும் புத்தாக்க உச்சி மாநாடு 2022 ..... 79
திறன்மிகு நகரங்கள், திறன்மிகு நகரமயமாக்கல் மாநாடு ..... 79

இந்தியாவின் குழந்தைகளின் நிலை ..... 79
தலைமை அறிவியல் ஆலோசகர் ..... 80
2022 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் எண்ணெய் உற்பத்தி ..... 80
ஐக்கிய அரபு அமீரகத்தில் UPI ..... 81
அகில இந்தியக் காவல் அறிவியல் மாநாடு ..... 81
முப்பரிமாண அச்சாக்க உற்பத்தி கொள்கை ..... 81
அணு மின் நிலையங்கள் ..... 82
மத்திய குடிமைப் பணி தேர்வில் மாற்றுத் திறனாளி விண்ணப்பதாரர்கள் ..... 82
டெல்லி இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் - Posoco நிறுவனம் ..... 83
ரைசினா பேச்சுவார்த்தை 2022 ..... 83
வர்த்தக மற்றும் தொழில்நுட்பச் சபை ..... 83
உர்ஜா பிரவாஹா ..... 83
ராட்டில் மற்றும் குவார் மின் நிலையங்கள் ..... 84
வெளிநாட்டு வாக்காளர்களின் பதிவு ..... 84
குடும்ப நுகர்வு செலவினக் கணக்கெடுப்பு ..... 84
கிசான் பகிதாரி, பிரத்மிக்தா ஹமாரி – பிரச்சாரம் ..... 85
கின்னஸ் சாதனைப் புத்தகம் – இந்தியா ..... 85
AAHAR-2022: சர்வதேச உணவு மற்றும் விருந்தோம்பல் கண்காட்சி ..... 86
முத்தரப்பு மேம்பாட்டுக் கழக நிதி ..... 87
இந்தியா - எஃகு உற்பத்தி வளர்ச்சி ..... 87
பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒதுக்கீடுகள் ரத்து - கேந்திரிய வித்யாலயாக்கள் ..... 88
நிலையான மேம்பாட்டு இலக்குகள் குறித்த ஒப்பந்தம் ..... 88
சிவகிரி யாத்திரை & பிரம்ம வித்யாலயா ..... 88
இந்தியத் திறன்மிகு நகரங்கள் கண்காட்சி 2022 ..... 88
புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பரிமாற்றத் திட்டம் ..... 89
புதுமையான வேளாண் முறை ..... 89
சாலை விபத்துகள் குறித்த தகவல்களுக்கான ஒருங்கிணைந்த தரவுத் தளம் ..... 90
லித்துவேனியாவில் இந்தியத் தூதரகம் ..... 90
P&K உரங்களுக்கான ஊட்டச்சத்து அடிப்படையிலான மானிய வீதங்கள் ..... 90
சர்வதேசச் செய்திகள் ..... 91
பலிக்கட்டான் இராணுவப் பயிற்சி 2022 ..... 91
HURUN சுயமாக உருவான U40 உலகக் கோடீஸ்வரர்கள் 2022 ..... 91
உலகின் மிகப்பெரிய மின்சாரப் பயணக் கப்பல் ..... 92
உலக மக்கள்தொகை நிலை அறிக்கை 2022 ..... 92
கும்பல் கொலைகளுக்கு எதிரானச் சட்டம் ..... 93
இலங்கையில் அவசரநிலை அறிவிப்பு ..... 93
இணைய வனவிலங்கு வர்த்தகம் குறித்த அறிக்கை – உலக வனவிலங்கு நிதியம் ..... 93
ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபை – பருவநிலை நிபுணர் ..... 94
சர்வதேச விமானப் போக்குவரத்து இணைப்புத் திட்டம் ..... 94

இலங்கையின் அமைச்சரவை ........ 95
5வது ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் சபை ........ 95
பாகிஸ்தான் நெருக்கடி ........ 96
2022 ஆம் ஆண்டின் பாடத் திட்டத்தின் படியான QS உலகப் பல்கலைக்கழக தர வரிசை ........ 97
ஐக்கிய நாடுகள் அவையின் மனித உரிமைகள் சபையில் இருந்து ரஷ்யா இடைநீக்கம் ........ 97
நம்பிக்கையில்லாத் தீர்மானம் ........ 98
மைத்ரி ........ 98
பேரிடரைத் தாங்கும் உள்கட்டமைப்பிற்கான கூட்டணி ........ 98
மானிலிருந்து மனிதனுக்கு கோவிட்-19 பரவல் ........ 99
77 மில்லியன் பேர் வறுமையில் தவிப்பு ........ 99
வெப்பமண்டலப் புயல் மேகி ........ 99
ஹலோ கொடுப்பனவு அமைப்பு ........ 100
சார்மட் கண்டம் விட்டு கண்டம் பாயும் உந்துவிசை ஏவுகணை ........ 100
சீனா-சாலமன் தீவுகள் பாதுகாப்பு ஒப்பந்தம் ........ 100
இணைய வழிப் பாதுகாப்புப் பயிற்சிகள் ........ 101
பாரீஸ் புத்தகத் திருவிழா 2022 ........ 101
பாமாயில் ஏற்றுமதி – இந்தோனேசியா ........ 102
இம்மானுவேல் மக்ரோன் ........ 102
உலக இராணுவச் செலவினம் ........ 102
ஐரோப்பிய ஒன்றியத்தின் புதிய இணைய விதிகள் ........ 103
சர்வதேச மதச் சுதந்திர அறிக்கை 2022 ........ 103
ரஷ்யா மற்றும் UNWTO ........ 104
பொருளாதாரச் செய்திகள் ........ 104
சிறுசேமிப்புத் திட்டங்கள் மீதான வட்டி வீதங்கள் ........ 104
ஆக்சிஸ் வங்கி – சிட்டி வங்கி ஒப்பந்தம் ........ 105
RAMP திட்டம் ........ 105
இந்தியாவின் கடன் மதிப்பீடு ........ 105
மோசடி சம்பவங்கள் ........ 106
மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்களுக்கான வழிவகைக்கான முன்பண வரம்பு ........ 106
சரக்கு மற்றும் சேவை வரி ........ 106
இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறை ........ 107
முதல் பாதுகாப்பு நிதி ........ 107
இந்திய ரிசர்வ் வங்கியின் நாணய ரெப்போ விகிதங்கள் ........ 107
வரி வருவாய் ........ 108
நடப்புக் கணக்குப் பற்றாக்குறை ........ 108
நிலையான வைப்பு நிதி வசதி ........ 108
ஒருங்கிணைந்தப் பணவழங்கீட்டு இடைமுகம் மூலம் பணம் எடுத்தல் ........ 109
2022 ஆம் நிதியாண்டிற்கான சொத்து பணமாக்கல் திட்ட இலக்கு ........ 109
விகாஸ் சிரி சம்பத் - 1111 திட்டம் ........ 110

சிறு நிதிக் கடன்களுக்கான ஒழுங்குமுறை கட்டமைப்பு ..... 110
அமெரிக்க மத்திய வங்கி விகித உயர்வு ..... 111
ஆசிய வளர்ச்சிக் கண்ணோட்ட அறிக்கை 2022 ..... 111
நெக்ஸோ அட்டை ..... 111
ஃபின்க்ளூவேஷன் ..... 112
தனலட்சுமி வங்கி ..... 112
டிஜிட்டல் வங்கி அலகுகள் ..... 112
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ..... 113
புதிய வேதிக் குறிப்புப் பொருள் ..... 113
வியாழன் வடிவிலான இரட்டைக் கோள் கண்டுபிடிப்பு ..... 113
உலகக் காற்று அறிக்கை 2022 ..... 114
இந்தியாவின் விண்வெளிச் சிதிலங்கள் ..... 114
பன்மையச் செயற்கை முழங்கால் ..... 115
HD1 - இதுவரை கண்டறியப்படாத தொலைதூர அண்டம் ..... 116
சிலந்தி இனங்கள் ..... 116
பெர்னார்டினெல்லி - பெர்ன்ஸ்டீன் வால் நட்சத்திரம் ..... 116
விண்வெளிச் செங்கற்கள் ..... 117
பாக்ஸ்லோவிட் வைரஸ் தடுப்பு கோவிட் மாத்திரை ..... 118
ஆக்ஸியம் ஸ்பேஸ் ஆக்ஸ்-1 விண்வெளித் திட்டம் ..... 118
செவ்வாய்க் கிரகத்தில் சூரிய கிரகணம் ..... 119
இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் தேசிய நோய்த் தடுப்பு ஊக்கி ஆய்வியல் நிறுவனத்தின் சோதனைக் கருவி ..... 119
சுயப் படியெடுப்பு ரக எம்.ஆர்.என்.ஏ. கோவிட்-19 தடுப்பூசிகள் ..... 120
அண்டங்கள் ஒன்றிணைவதன் ஒளிப்படம் ..... 120
சுற்றுச்சூழல் செய்திகள் ..... 121
சந்திராப்பூர் - வெப்பமான நகரம் ..... 121
121 ஆண்டுகளில் பதிவான வெப்பமான நாட்கள் ..... 121
பருவநிலை மாற்றம் மீதான அரசுகளுக்கிடையிலான குழுமத்தின் 6வது மதிப்பீட்டு அறிக்கை – சிறப்பம்சங்கள் ..... 121
காற்றின் தரம் குறித்த தரவுத் தளம் 2022 ..... 122
வெப்ப நெகிழ்திறனை விரிவடையச் செய்தல் அறிக்கை ..... 123
காட்டுத் தீ பற்றிய ஆய்வு ..... 123
மாநிலச் செய்திகள் ..... 124
மழைநீர் சேமிப்புப் பிரச்சாரம் (Catch the Rain) – 2022 ..... 124
உயிர் வாழும் வேர்ப் பாலங்கள் - மேகாலயா ..... 124
அசாம் மற்றும் மேகாலயா ஒப்பந்தம் ..... 125
வினய சமரஷ்யா யோஜனா ..... 125
இராஜஸ்தான் நிறுவன தினம் ..... 125
இந்தியாவின் முன்னணி காய்கறி உற்பத்தியாளர் ..... 126

கைதிகளுக்கு தனிநபர் கடன் ...... 126
இந்தியப் படகு மற்றும் கடல்சார் கண்காட்சி ...... 126
கங்கூர் திருவிழா ...... 126
டெல்லி மாநகராட்சிக் கழக (திருத்தம்) மசோதா ...... 127
சார்ஹுல் திருவிழா 2022 ...... 127
மிகக்குறைவான வேலைவாய்ப்பின்மை வீதம் – சத்தீஸ்கர் ...... 127
நந்தினி ஷீரா சம்ரிதி கூட்டுறவு வங்கி ...... 128
காங்க்ரா தேயிலை ...... 128
சமூக அருங்காட்சியகம் ...... 129
ஹிம் பிரஹாரி திட்டம் ...... 129
கர்நாடக 'ஒருங்கிணைப்பு தினம்' ...... 129
பஞ்சாப் மாநிலத்தில் 300 யூனிட் இலவச மின்சாரம் ...... 130
மிக உயரமான இந்திய தேசியக் கொடி ...... 130
ஆப்பிரிக்கப் பன்றிக் காய்ச்சல் ...... 130
L-மூலம் வையக விரிவு வலை வழங்கி (செயல்பாட்டகம்) ...... 131
மூன்று சக்கர மின்சார வாகனத் தொழிற்சாலை ...... 131
நிமோனியா பாதிப்பினைச் சுழிய நிலையாக்குவதற்கான விழிப்புணர்வு மற்றும் நடவடிக்கை ...... 131
புழுங்கல் அரிசி விவகாரம் ...... 133
டிஜிட்டல் பேருந்து சேவை ...... 133
மணிப்பூர் - நாகாலாந்து எல்லைப் பிரச்சினை ...... 134
உலகத் தரம் வாய்ந்த தரவு மையம் ...... 134
தூத் வாணி சமூக வானொலி நிலையம் ...... 134
கிராம நூலகம் ...... 135
மேகாலயா தொழில் நிறுவனங்கள் கட்டமைப்புத் திட்டம் ...... 135
காஸ்மோஸ் மலபாரிக்கஸ் திட்டம் ...... 135
கோங்ஜோம் தினம் ...... 136
வெற்றறைக் கழிவுநீர் அமைப்பு ...... 136
பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ...... 137
டியூன் – நமித் மல்ஹோத்ரா ...... 137
இந்தியப் பேட்மிண்டன் சங்கத்தின் தலைவர் ...... 137
மிகவும் மதிப்பு மிக்க பிரபலங்கள் ...... 137
அபராஜிதா ஷர்மா ...... 138
ஆனந்தி கோபால் ஜோஷி ...... 138
கிராமிய விருதுகள் 2022 ...... 139
தேவிகா ரங்காச்சாரி எழுதியப் புத்தகம் ...... 139
கிராமி விருதுகள் 2022 – இந்திய வெற்றியாளர்கள் ...... 140
ஆசியாவின் பணக்காரர் ...... 140
பேராசிரியர் அலோக் சக்ரவால் எழுதிய புத்தகம் ...... 140
சாமேலி தேவி ஜெயின் விருது ...... 141

அஸ்வினி ஸ்ரீவஸ்தவாவின் புத்தகம் ........ 141
பிரிட்ஸ்கர் பரிசு 2022 ........ 141
பில்லி எலிஷ் ........ 141
குரு நாபா தாஸ் ........ 142
ஆண்டின் சிறந்த உலகப் பத்திரிகைப் புகைப்படம் ........ 142
சரஸ்வதி சம்மான் 2021 ........ 142
வினோத் ராய் எழுதிய புத்தகம் ........ 143
ஹர்கோபிந்த் கோரானா ........ 143
அமர் மித்ரா – எழுத்தாளர் ........ 143
லதா மங்கேஷ்கர் விருது ........ 144
ஞானபீட விருது ........ 144
உலக மரங்களின் நகரம் – 2021 ........ 145
இக்பால் சிங் லால்புரா ........ 145
தொழுநோய்க்கான சர்வதேச காந்தி விருது - 2021 ........ 145
80வது SKOCH உச்சிமாநாடு 2022 - NMDC ........ 146
பிரேம் ராவத் எழுதிய புத்தகம் ........ 146
தொல்காப்பியம் ........ 146
மால்கம் ஆதிசேஷய்யா விருது 2022 ........ 147
ஆண்டின் சிறந்த இயக்குனர் விருது ........ 147
இந்திய இராணுவத்தின் தலைவர் ........ 147
இராஜேஷ் தல்வார் எழுதிய புத்தகம் ........ 148
தேசிய உலோகவியலாளர் விருது 2021 ........ 148
ஹூருன் உலக சுகாதாரத் துறையின் பணக்காரர்கள் பட்டியல் 2022 ........ 148
T. இராமாராவ் ........ 149
ஜான் F. கென்னடி விருது ........ 149
தொழில்முனைவோர் தலைமைத்துவ விருதுகள் ........ 150
வாழ்நாள் சாதனையாளர் விருது ........ 150
உலக இளம் தலைவர்கள் பட்டியல் ........ 150
ஐக்கிய இராஜ்ஜியத்தின் காமன்வெல்த் பாயிண்ட்ஸ் ஆஃப் லைட் விருது ........ 151
M.விஜயன் ........ 151
இந்தியப் பொதுத் தொடர்பு சமூக விருதுகள் ........ 151
தேசிய மென்பொருள் மற்றும் சேவை நிறுவனங்களின் சங்கத்தின் தலைவர் ........ 151
விளையாட்டுச் செய்திகள் ........ 152
ஜியா ராய் ........ 152
அல் ரிஹ்லா ........ 152
கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள் ........ 152
ICC மகளிர் உலகக் கோப்பைப் போட்டி ........ 153
மியாமி ஓபன் 2022 ........ 153
ஆர்லியன்ஸ் மாஸ்டர்ஸ் 2022 ........ 153

தாய்லாந்து ஓபன் சர்வதேச குத்துச்சண்டை போட்டி 2022 ..... 153
ரெய்க்ஜாவிக் ஓபன் சதுரங்கப் போட்டி ..... 154
FIH இளையோர் மகளிர் ஹாக்கி உலகக் கோப்பை 2022 ..... 154
ஆடவர் ஹாக்கி உலகக் கோப்பையின் சின்னம் - 2023 ..... 155
ஐபிஎல் போட்டிகளில் 150 விக்கெட்டுகள் வீழ்த்திய வீரர் ..... 155
தேசிய மூத்தோர் ஆடவர் பிரிவு ஹாக்கி சாம்பியன்ஷிப் ..... 155
விஸ்டென் வழங்கும் 'ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரர்கள்' ..... 156
இன்விக்டஸ் போட்டிகள் ..... 156
ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டி ..... 157
கேலோ இந்தியா பல்கலைக் கழக போட்டிகள் - செயலி ..... 157
ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டி ..... 157
கீரன் பொல்லார்ட் - ஓய்வு ..... 157
ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டி 2022 ..... 158
**முக்கிய தினங்கள் ..... 158**
ஒடிசா தினம் - ஏப்ரல் 01 ..... 158
சர்வதேச குழந்தைகள் புத்தக தினம் – ஏப்ரல் 02 ..... 159
உலக மன இறுக்க விழிப்புணர்வு தினம் - ஏப்ரல் 02 ..... 159
இராணுவ மருத்துவப் படை நிறுவன தினம் - ஏப்ரல் 03 ..... 159
சுரங்க விழிப்புணர்வு மற்றும் சுரங்க நடவடிக்கைகளில் உதவிக்கான சர்வதேச தினம் – ஏப்ரல் 24 ..... 160
சர்வதேச மனசாட்சி தினம் – ஏப்ரல் 05 ..... 160
தேசியக் கடல்சார் தினம் – ஏப்ரல் 05 ..... 160
சர்வதேச வளர்ச்சி மற்றும் அமைதிக்கான விளையாட்டுத் தினம் - ஏப்ரல் 06 ..... 161
உலக சுகாதார தினம் - ஏப்ரல் 07 ..... 161
ருவாண்டாவில் 1994 இனப் படுகொலை பற்றிய சர்வதேசப் பிரதிபலிப்பு தினம் - ஏப்ரல் 07 ..... 161
சர்வதேச ரோமானி தினம் - ஏப்ரல் 08 ..... 162
மத்திய சேமக் காவல் படையின் 57வது வீர தினம் - ஏப்ரல் 09 ..... 162
உலக ஹோமியோபதி தினம் - ஏப்ரல் 10 ..... 162
பாதுகாப்பான தாய்மைக்கான தேசிய தினம் – ஏப்ரல் 11 ..... 162
உலக நடுக்குவாத நோய் தினம் - ஏப்ரல் 11 ..... 163
சர்வதேச மனித விண்வெளிப் பயண தினம் - ஏப்ரல் 12 ..... 163
சம ஊதிய தினம் - ஏப்ரல் 12 ..... 163
சர்வதேச தெருவோரக் குழந்தைகள் தினம் - ஏப்ரல் 12 ..... 163
சியாச்சின் தினம் - ஏப்ரல் 13 ..... 163
சர்வதேச தலைப்பாகைத் தினம் - ஏப்ரல் 13 ..... 164
ஜாலியன் வாலாபாக் படுகொலை - ஏப்ரல் 13 ..... 164
அம்பேத்கர் ஜெயந்தி - ஏப்ரல் 14 ..... 164
உலக சாகாஸ் நோய் தினம் - ஏப்ரல் 14 ..... 165
உலக கலை தினம் - ஏப்ரல் 15 ..... 165
இமாச்சலப் பிரதேச தினம் - ஏப்ரல் 15 ..... 165

உலக குரல் தினம் - ஏப்ரல் 16 ........ 165
யானைகளைப் பாதுகாத்தல் தினம் - ஏப்ரல் 16 ........ 166
உலக ஹீமோபிலியா தினம் - ஏப்ரல் 17 ........ 166
உலகப் பாரம்பரியத் தினம் - ஏப்ரல் 18 ........ 166
உலக கல்லீரல் தினம் - ஏப்ரல் 19 ........ 166
ஐக்கிய நாடுகளின் சீன மொழி தினம் – ஏப்ரல் 20 ........ 167
தேசியக் குடிமைப் பணி தினம் - ஏப்ரல் 21 ........ 167
உலகப் படைப்பாற்றல் மற்றும் புத்தாக்க தினம் - ஏப்ரல் 21 ........ 167
உலகப் புவி தினம் – ஏப்ரல் 22 ........ 167
உலகப் புத்தகம் மற்றும் பதிப்புரிமை தினம் - ஏப்ரல் 23 ........ 168
ஆங்கில மொழி தினம் - ஏப்ரல் 23 ........ 168
தேசியப் பஞ்சாயத்து ராஜ் தினம் - ஏப்ரல் 24 ........ 168
சர்வதேச அமைதிக்கான பலதரப்பு மற்றும் இராஜதந்திர தினம் - ஏப்ரல் 24 ........ 168
உலக ஆய்வக விலங்குகள் தினம் - ஏப்ரல் 24 ........ 169
உலக நோய்த் தடுப்பு வாரம் 2022 - ஏப்ரல் 24 முதல் 30 வரை ........ 169
உலக பென்குயின் தினம் - ஏப்ரல் 25 ........ 169
சர்வதேசப் பிரதிநிதிகள் தினம் - ஏப்ரல் 25 ........ 169
உலக மலேரியா தினம் - ஏப்ரல் 25 ........ 169
தேசிய டிஎன்ஏ தினம் - ஏப்ரல் 25 ........ 170
உலக அறிவுசார் சொத்து தினம் - ஏப்ரல் 26 ........ 170
சர்வதேச செர்னோபில் பேரிடர் நினைவு தினம் - ஏப்ரல் 26 ........ 170
உலக எழுதுபொருட்கள் தினம் 2022 - ஏப்ரல் 27 ........ 171
சர்வதேச தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தில் பெண்களின் ஈடுபாடு தினம் - ஏப்ரல் 28 ........ 171
வேலையில் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்திற்கான உலக தினம் - ஏப்ரல் 28 ........ 171
சர்வதேச நடன தினம் - ஏப்ரல் 29 ........ 171
உலக கால்நடை தினம் - ஏப்ரல் 30 ........ 172
ஆயுஷ்மான் பாரத் திவாஸ் - ஏப்ரல் 30 ........ 172
சர்வதேச சிற்ப தினம் - ஏப்ரல் 30 ........ 172

# TNPSC துளிகள்

- உள்கட்டமைப்பு, ஏலம் மற்றும் நிதிச் சேவைகள் என்ற வாரியத்தின் தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக உதய் கோடக் அறிவித்துள்ளார்.
  - இந்த வாரியத்தின் மேலாண்மை இயக்குநரான C.S. ராஜன் என்பவரை அதன் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநராக 6 மாத காலத்திற்கு நியமித்துப் பெரு நிறுவன விவகாரங்கள் துறை அமைச்சகம் ஆணை ஒன்றைப் பிறப்பித்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டு மார்ச் 28 அன்று, மக்களவையில் 2022 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (பட்டியலினப் பழங்குடியினர்) ஆணை (திருத்தம்) மசோதாவானது நிறைவேற்றப் பட்டது.
  - இந்த மசோதாவானது, திரிபுராவின் பட்டியலினப் பழங்குடியினர் பட்டியலிலுள்ள 'குகி' பிரிவினரின் கீழ் 'டார்லோவ்' என்ற சமூகத்தினரை ஒரு உட்பிரிவினராகச் சேர்ப்பதற்கு முன்மொழிந்துள்ளது.
- உலகின் மிகப்பெரிய விரைவுப் போக்குவரத்து நிறுவனமான FedEx நிறுவனம் தனது புதிய தலைமைச் செயல் அதிகாரியாக இந்திய அமெரிக்கரான ராஜ் சுப்ரமணியம் என்பவரை நியமிக்க உள்ளதாக அறிவித்துள்ளது.
  - இந்த நிறுவனமானது இதற்கு முன்பு ஃபிரடெரிக் W ஸ்மித் என்பவரின் தலைமையில் இருந்தது.
- டொராண்டோ நகரில் நடைபெற்ற போட்டியில் ஜமைக்கா அணியை 4-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி 36 ஆண்டுகளில் முதல் முறையாக கத்தார் நாட்டில் நடைபெறும் 2022 ஆம் ஆண்டின் கால்பந்து உலகக் கோப்பைப் போட்டிக்கு கனடா தகுதி பெற்று உள்ளது.
  - 2022 ஆம் ஆண்டு FIFA உலகக் கோப்பைக்குத் தகுதி பெறும் 20வது அணியாக கனடா அணி மாறியது.
- உலகம் முழுவதும் உள்ள மக்களில் பெரும்பாலானோரைப் பாதிக்கும் மனநலக் கோளாறு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதற்காக வேண்டி மார்ச் 30 ஆம் தேதியன்று உலக இருமுனை (இரு துருவம்) தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.
  - இந்த ஆண்டு உலக இருமுனைத் தினத்தின் கருத்துரு, #BipolarTogether என்பதாகும்.
- உலக காப்புத் தினமானது ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 31 ஆம் தேதியன்று கொண்டாடப் படுகிறது.
  - தொழில்நுட்பத்தை நாம் அதிகம் சார்ந்து இருப்பதால், நமது விலை மதிப்பற்ற டிஜிட்டல் (எண்ணிம) ஆவணங்களைப் பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வை இந்த தினம் நமக்கு நினைவூட்டுகிறது.
- சர்வதேச போதைப்பொருள் பரிசோதனைத் தினமானது 2017 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 31 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது.
  - இந்தத் தினமானது மருந்துகளின் தீங்கு குறைப்பு முயற்சிகளை ஊக்குவிப்பது மற்றும் போதைப் பொருள் தொடர்பான அபாயங்களைக் குறைக்கச் செய்வது போன்றவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- காட்டு விலங்குகளுக்குச் சட்டப்பூர்வ உரிமை வழங்கிய உலகின் முதல் நாடாக தென் அமெரிக்க நாடான ஈக்வடார் மாறியுள்ளது.
- இந்தியப் பெருங்கடல் கடற்படைக் கருத்தரங்கின் (IONS) முதலாவது கடல்சார் பயிற்சி 2022 என்பது கோவா மற்றும் அரபிக்கடல் ஆகிய பகுதிகளில் நடத்தப் பட்டது.

- மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரண நடவடிக்கைகளில் உறுப்பினர் நாடுகளுடைய கடற்படைகளின் இயங்குந் தன்மையை மேம்படுத்துவதே இந்தப் பயிற்சியின் ஒரு நோக்கமாகும்.

❖ மகாராஷ்டிரா, தெலுங்கானா மற்றும் டெல்லி ஆகிய மாநிலங்கள் முகக் கவசம் அணிவது கட்டாயம் இல்லை என அறிவித்துள்ளது.

- கோவிட்-19 பெருந்தொற்று நிலைமையில் ஏற்பட்டுள்ள நிலையான சரிவைக் கருத்தில் கொண்டு, ஏப்ரல் மாதம் முதல் இந்த கோவிட்-19 விதிமுறைகளை முழுமையாக தளர்த்துவதாக இந்த மாநிலங்கள் அறிவித்துள்ளன.

❖ சாம்சங் டேட்டா சிஸ்டம் இந்தியா பிரைவேட் லிமிடெட் மற்றும் அபிடெக் ஐடி சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் ஆகியவற்றுடன் மணிப்பூர் மாநில அரசு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை மேற்கொண்டுள்ளது.

- இது மணிப்பூர் ஒலிம்பியன் பூங்கா மற்றும் குமான் லம்பக் விளையாட்டு வளாகத்தின் களமாக ஒரு உலகத் தரம் வாய்ந்த "விளையாட்டு ரீதியான டிஜிட்டல் (எண்ணிம) அனுபவத்தை வழங்கக் கூடிய ஒரு மையத்தை" அமைப்பதற்கான ஒரு ஒப்பந்தமாகும்.

❖ அமேசான் இந்தியா நிறுவனமானது, '2022 ஆம் ஆண்டு சம்பவ் தொழில்முனைவோர் சவாலினை' அறிவித்துள்ளது.

- இந்த முன்முயற்சியானது, இதில் பங்கேற்கும் நாட்டில் உள்ள பல்வேறுப் புத்தாக்க நிறுவனங்களுக்கு தங்கள் வணிக முன்மொழிவை வெளிப்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பை வழங்கும்.

❖ இந்தியப் பளுதூக்கும் வீராங்கனை மீராபாய் சானு 2021 ஆம் ஆண்டிற்கான பிபிசி இந்திய விளையாட்டு வீராங்கனையாக தேர்வு செய்யப்பட்டார்.

❖ அரசு சாரா நிறுவனங்களின் நிகர சுழிய உமிழ்வு உறுதிப்பாடு குறித்த ஒரு உயர்நிலை நிபுணர் குழுவில் அருணபா கோஷ் (இந்தியா) என்பவரை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியா குட்டேரஸ் நியமித்துள்ளார்.

- அருணபா கோஷ் ஆற்றல், சுற்றுச்சூழல் மற்றும் நீர் வளச் சபை எனப்படும் பருவ நிலை மற்றும் ஆற்றல் சார்ந்த ஒரு சிந்தனைக் குழுவின் தலைமை நிர்வாக அதிகாரி ஆவார்.

❖ நேபாள நாட்டிற்கான தற்போதைய இந்தியத் தூதரான வினய் மோகன் க்வாத்ரா என்பவரை இந்தியாவின் அடுத்த வெளியுறவுச் செயலாளராக இந்திய அரசு நியமித்து உள்ளது.

- தற்போதைய வெளியுறவுச் செயலாளர் ஹர்ஷ்வர்தன் ஷ்ரிங்களாவினையடுத்து இவர் இப்பதவியை ஏற்க உள்ளார்.

❖ பருவநிலை மாற்றம் மீதான அரசுகளுக்கிடையிலான குழுமமானது இந்தியாவில் மலேரியாவின் இடம் சார்ந்த பரவலில் மாற்றங்களைக் கணித்துள்ளது.

- தெற்கு மற்றும் கிழக்கு மாநிலங்களையும் சேர்த்து இமாலய மலைப் பகுதிகளிலும் அத்தொற்று ஏற்படக் கூடியதற்கான வாய்ப்புள்ளதையும் அக்குழுமம் எச்சரித்தது.

❖ டெல்லியிலுள்ள அரசுப் பள்ளிகளில் பள்ளி நேரத்திற்குப் பிறகு, பாடத் திட்டங்களுக்கு அப்பாற்பட்ட செயல்பாடுகளில் ஈடுபட ஊக்குவிக்கும் வகையில் பொழுதுபோக்கு திறன் மையங்களை டெல்லி அரசு நிறுவியுள்ளது.

- இந்த கூடுதல் செயல்பாடுகளை ஊக்குவிப்பதற்கு, பள்ளி நேரத்திற்குப் பிந்தைய நேரத்தில் இதனைப் பயன்படுத்தவும், பள்ளியின் உள்கட்டமைப்பினைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்வதற்காக வேண்டி இந்த நடவடிக்கையானது எடுக்கப் பட்டது.

❖ தீன்தயாள் அந்த்யோதயா யோஜனா – தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும் சுய உதவிக்குழுக்கள் இணைப்பில், சிறப்பாக செயல்படும் வங்கி என HDFC வங்கி சிறப்பிக்கப்பட்டுள்ளது.

- தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டத்தின் சுய உதவிக் குழுக்களுக்குப் பங்களிக்கச் செய்ததற்காக விருது வழங்கி கௌரவிக்கப்படும் ஒரே தனியார் வங்கி HDFC வங்கி ஆகும்.

❖ கீவ் (Kyiv) புறநகர்ப் பகுதியில் இருந்து ரஷ்யப் படைகள் வெளியேறியதைத் தொடர்ந்து, உக்ரைனின் புச்சா நகரின் தெருக்களில் பொது மக்கள் கொத்து கொத்தாக இறந்து கிடக்கும் காணொளிகள் மற்றும் புகைப் படங்கள் வெளியாகியுள்ளன.

- இந்தக் கொடூரமான படங்கள் உலகளாவிய அளவில் கண்டனத்தை ஈர்த்து உள்ளதோடு ரஷ்யாவிற்கு எதிராக விசாரணை மற்றும் வலுவான தடைகளை விதிக்குமாறு கோரிக்கைகளையும் விடுத்துள்ளது.

❖ மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகமானது நிபுணர்கள் அடங்கிய ஆலோசனைக் குழு ஒன்றை அமைத்துள்ளது.

- குறை கடத்திகளின் உற்பத்தி, கண்டுபிடிப்பு மற்றும் வடிவமைப்பில் இந்தியாவை உலகளவில் ஒரு முன்னணி நாடாக மாற்றுவதற்கான இந்திய அரசாங்கத்தின் திட்டங்களை முன்னெடுத்துச் செயல்படுத்துவதற்காக இந்தக் குழு அமைக்கப் பட்டுள்ளது.

❖ அமெரிக்காவின் நாடாளுமன்ற மேலவையானது, அந்த நாட்டின் உச்ச நீதிமன்றத்தில் பணியமர்த்தப்பட உள்ள முதல் கறுப்பினப் பெண் நீதிபதியாக, கேதன்ஜி பிரவுன் ஜாக்சன் நியமிக்கப்பட உள்ளதை உறுதிப் படுத்தியது.

❖ மிகவும் அதிகளவில் பரவக்கூடிய XE என்ற கொரோனா வைரஸ் திரிபின் முதல் தொற்றானது இந்தியாவின் மும்பை நகரில் பதிவாகியுள்ளதாக அந்த நகர நிர்வாகம் தெரிவித்துள்ளது.

- தென்னாப்பிரிக்காவிலிருந்து மும்பை நகரத்திற்குப் பயணம் மேற்கொண்ட 50 வயதுப் பெண்ணிடம் BA.1 மற்றும் BA.2 ஆகிய இரண்டு ஓமிக்ரான் திரிபின் கலப்பின வைரஸின் தொற்று கண்டறியப்பட்டது.

❖ ஹாலிவுட் திரைப்பட அகாடமியானது, வில் ஸ்மித்துக்கு ஆஸ்கர் விருது வழங்கும் விழாவில் கலந்து கொள்ள 10 ஆண்டுகள் தடை விதித்துள்ளது.

- அவர் கடந்த அகாடமி விருது வழங்கும் விழாவில் நிகழ்ச்சித் தொகுப்பாளர் கிறிஸ் ராக்கை மேடையில் அறைந்ததையடுத்து இந்த ஒரு நடவடிக்கையானது மேற் கொள்ளப் பட்டது.

❖ ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் 10 ஆம் தேதியன்று உலக ஹோமியோபதி தினமானது அனுசரிக்கப் படுகிறது.

- இந்தியாவில் இந்த ஆண்டின் இந்தத் தினத்திற்கான கருத்துரு, “People’s Choice For Wellness” என்பதாகும்.

❖ அமெரிக்காவில் ஒவ்வோர் ஆண்டின் ஏப்ரல் 11 ஆம் தேதியானது தேசியச் செல்லப் பிராணிகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

- இந்த நாளில், மக்கள் தங்களது ஓய்வற்ற வேலை நேரத்தில் சிறிது நேரம் ஒதுக்கி தங்களது செல்லப் பிராணிகளுக்குக் கூடுதல் கவனம், அன்பு மற்றும் அக்கறை செலுத்துவர்.

❖ முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிலிப்பாக்குட்டை என்னுமிடத்தில் அமைக்கப் பட்டுள்ள பெரியார் நினைவு சமத்துவபுரத்தினைத் திறந்து வைத்தார்.

- பிலிப்பாகுட்டை பகுதியானது நாமக்கல் மாவட்டத்தின் நாமகிரிப்பேட்டை என்ற பஞ்சாயத்து ஒன்றியத்தில் அமைந்துள்ளது.

❖ பாகிஸ்தான் எதிர்க்கட்சித் தலைவர் செபாஷ் செரீஃப், பாகிஸ்தானின் புதிய பிரதமராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

- 70 வயதான இவர் 3 முறை பிரதமராக பதவி வகித்த நவாஷ் செரீஃப் என்பவரின் இளைய சகோதரர் ஆவார்.

❖ டாக்டர் மனோஜ் சோனி என்பவர் மத்திய குடிமைப் பணி ஆணையத்தின் தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.

- இந்த ஆணையத்தின் முந்தைய தலைவர் பிரதீப் குமார் ஜோசி என்பவரையடுத்து இவர் அப்பதவியில் நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற 2022 ஆம் ஆண்டின் WSF உலக இரட்டையர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்திய இணை அணியினரான தீபிகா பலிக்கல் கார்த்திக் மற்றும் சவுரவ் கோசல் ஆகியோர் வெற்றி பெற்றனர்.

- WSF உலக இரட்டையர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவுக்கு கிடைத்த முதல் தங்கப் பதக்கம் இதுவாகும்.

❖ 2023 ஆம் ஆண்டில் இந்திய நாட்டினால் நடத்தப்பட உள்ள G20 உச்சி மாநாட்டின் தலைமை ஒருங்கிணைப்பாளராக, வெளியுறவுச் செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா நியமிக்கப்பட்டுள்ளார்.

- இந்த உச்சி மாநாட்டை ஏற்பாடு செய்வதற்காக இந்தப் பதவியினை அரசு புதிதாக உருவாக்கியுள்ளது.

❖ இந்தியக் கடலோரக் காவற்படையானது MK III எனப்படும் மேம்பட்ட இலகுரக ஹெலிகாப்டர் (ALH) அடங்கிய படைப் பிரிவு ஒன்றை நிறுவியுள்ளது.

- இது கடல் பாதுகாப்பை மேலும் பலப்படுத்தும்.

❖ உமியா மாதா கோவிலின் 14வது நிறுவன தினத்தன்று பிரதமர் மோடி காணொளி வாயிலாக உரையாற்றினார்.

- உமியா மாதா கோயிலானது குஜராத்தின் ஜூனாகத் என்னுமிடத்தில் உள்ள ஒரு சமயத் தலமாகும்.

❖ சமையல் எண்ணெய் விற்பனை நிறுவனமான ருச்சி சோயா, தனது நிறுவனத்தின் பெயரை பதஞ்சலி ஃபுட்ஸ் லிமிடெட் என மாற்றுவதற்கு அந்த நிறுவனத்தின் வாரியம் முடிவு செய்துள்ளதாக கூறியது.

❖ முதலாவது கேலோ இந்தியா - தேசிய மகளிர் வில்வித்தை தரவரிசைப் போட்டியானது ஜார்க்கண்ட் மாநிலத்தின் ஜாம்ஷெட்பூர் நகரில் உள்ள டாடா வில்வித்தைப் பயிற்சி அகாடமியில் நடைபெற உள்ளது.

- இந்திய வில்வித்தை சங்கமானது, ஜார்க்கண்ட் வில்வித்தை சங்கம் மற்றும் டாடா எஃகு நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து இந்தப் போட்டியை நடத்துகிறது.

- மதிய உணவுத் திட்டத்தின் கீழ், பள்ளி மாணவர்களுக்கு முட்டை வழங்கும் 13வது மாநிலமாக கர்நாடகா மாற உள்ளது.
- தேசியத் தீயணைப்புச் சேவை தினமானது ஏப்ரல் 14 அன்று அனுசரிக்கப்படுகிறது.
  - 1944 ஆம் ஆண்டில் இந்த தினத்தன்று நிகழ்ந்த ஒரு துரதிர்ஷ்டவசமான விபத்தின் போது 71 தீயணைப்புப் பணியாளர்கள் ஆற்றிய மாபெரும் அர்ப்பணிப்பு மற்றும் தியாகத்திற்கு மரியாதை செலுத்தும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் இந்தத் தினம் அனுசரிக்கப்படுகிறது.
- மத்திய அமைச்சர் G. கிஷான் ரெட்டி, புதுடெல்லியில் உள்ள இந்திரா காந்தி தேசியக் கலை மையத்தில் 'ஈஷான் மந்தன்' எனப்படும் ஒரு மூன்று நாட்கள் அளவிலான வட கிழக்குப் பகுதிக்கான ஒரு திருவிழாவைத் தொடங்கி வைத்தார்.
  - மூன்று நாட்கள் வரை நடைபெறும் ஈஷான் மந்தன் நிகழ்ச்சியானது வடகிழக்கு இந்தியாவின் வளமான இனம் மற்றும் வண்ணமயமானச் சிறப்பம்சங்களை கொண்டாடும் ஒரு தினமாகும்.
- 2023 ஆம் ஆண்டு ஸ்ட்ரீட் சைல்ட் அல்லது தெருவோரக் குழந்தைகளுக்கான உலகக் கோப்பைக் கிரிக்கெட் போட்டியை நடத்துவதற்கு இந்தியா தயாராக உள்ளது.
  - ஸ்ட்ரீட் சைல்ட் யுனைடெட் மற்றும் சேவ் தி சில்ட்ரன் இந்தியா ஆகிய சில அமைப்புகளால் இந்த உலகக் கோப்பைப் போட்டியானது நடத்தப்படுகிறது.
- ஆப்கானிஸ்தான் முழுவதும் ஓபியம் பாப்பி எனப்படும் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களைப் பயிரிடுவதற்கு தலிபான் அமைப்பு தடை விதித்துள்ளது.
  - ஆப்கானிஸ்தான் நாடானது உலகிலேயே அதிகளவு கஞ்சா உற்பத்தி செய்யும் நாடாக, உலகளாவிய உற்பத்தியில் 85 சதவீதம் என்ற அளவில், உள்ளது.
- MH-60 'ரோமியோ' என்ற பல்பயன்பாட்டு ஹெலிகாப்டரை இயக்கச் செய்வதற்கான ஒரு பயிற்சியை இந்தியக் கடற்படையின் முதல் தொகுதி விமானப் படையினர் அமெரிக்காவில் நிறைவு செய்துள்ளனர்.
  - இந்தியா அமெரிக்காவிடமிருந்து 24 MH-60R ஹெலிகாப்டர்களை வாங்குகிறது.
- சமீபத்தில் நாக்பூர் மற்றும் மகாராஷ்டிராவின் பிற பகுதிகளில் இரவு நேரத்தின் போது சுடர் விட்டு எரியும் ஒளிக் கற்றை ஒன்று வானைக் கிழித்துக் கொண்டு சென்ற ஒரு அரிய நிகழ்வு நிகழ்ந்தது.
  - சிலர் இதை விண்கற்கள் பொழிவு என்றும், மற்ற சிலர் இது உண்மையில் ஒரு சீன ராக்கெட் விண்ணிலிருந்து புவியினுள் நுழையும் செயல் என்றும் கூறுகிறார்கள்.
- இமாச்சலப் பிரதேசத்தில் 125 அலகுகள் வரையில் அம்மாநில மக்களுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கப் படும் என்று அந்த மாநில முதல்வர் ஜெய்ராம் தாக்கூர் அறிவித்து உள்ளார்.
  - மேலும், அந்த மாநிலத்தின் கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கும் குடிநீர் கட்டணம் செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.
- சர்வதேச நாணய நிதியமானது இந்தியாவின் பிரதான் மந்திரி கரிப் கல்யான் அன்ன யோஜனா திட்டத்தைப் பாராட்டியுள்ளது.
  - கோவிட்-19 பெருந்தொற்றின் போது நாட்டில் அதிகரித்து வந்த தீவிர வறுமை மேலும் பரவுவதை இது தடுத்தது.

- டென்மார்க்கின் கோபன்ஹேகன் நகரில் நடைபெற்ற டேனிஷ் ஓபன் என்ற நீச்சல் போட்டியில் இந்தியாவின் முன்னணி நீச்சல் வீரர் சஜன் பிரகாஷ் ஆடவருக்கான 200 மீட்டர் பட்டர்பிளை பிரிவில் தங்கப் பதக்கம் வென்றார்.
- இந்தோனேசியா நாடானது இந்தியாவில் இருந்து வேளாண் பொருட்களை இறக்குமதி செய்வதை நிறுத்தியுள்ளது.
    - உணவுப் பாதுகாப்பை மதிப்பிட்டுப் பகுப்பாய்வுச் சான்றிதழ்களை வழங்கும் சில ஆய்வகங்களைப் பதிவு செய்வதில் புதுடெல்லி அரசு அதிகாரிகள் தவறியதை அது மேற்கோளிட்டுக் காட்டியுள்ளது.
- இமாச்சலப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஷிங்கு லா கணவாயில் உலகின் மிக உயரிய சுரங்கப் பாதையை எல்லைச் சாலைகள் அமைப்பானது கட்டமைக்கவுள்ளது.
    - இது இமாச்சலப் பிரதேசம் மற்றும் லடாக் ஆகிய பகுதிகளை இணைக்கும் வகையில் 16,580 அடி உயரத்தில் நிறுவப்படும்.
- இளம் இந்திய கிராண்ட் மாஸ்டரான சென்னையினைச் சேர்ந்த D. குகேஷ் ஸ்பெயினில் நடைபெற்ற 48வது லா ரோடா சர்வதேச ஓபன் சதுரங்கப் போட்டியில் வெற்றி பெற்றார்.
    - இதில் R. பிரக்ஞானந்தா 3வது இடத்தினைப் பெற்றார்.
- அணுசக்தி ஆணையத்தின் தலைவர் பொறுப்பினை வகிக்கும் கமலேஷ் நீல்கந்த் வியாசின் பதவிக் காலத்தினை மேலும் ஓர் ஆண்டிற்கு நீட்டிக்க அரசு அனுமதி வழங்கி உள்ளது.
    - 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இப்பதவிக்கு முதன்முறையாக நியமிக்கப் பட்ட இவரது பதவிக் காலமானது 2வது முறையாக நீட்டிக்கப்பட்டுள்ளது.
- ஆயுஷ் சிகிச்சையைப் பயன்படுத்திப் பலன் பெறுவதற்காக வேண்டி இந்தியாவிற்கு வர விரும்பும் வெளிநாட்டினருக்கு சிறப்பு ஆயுஷ் நுழைவு இசைவு சீட்டு வழங்கும் ஒரு முறையை இந்தியா அறிமுகப்படுத்த உள்ளது.
    - காந்தி நகரில் நடைபெற்ற உலகளாவிய ஆயுஷ் முதலீடு மற்றும் புத்தாக்க உச்சி மாநாட்டினைத் தொடங்கி வைக்கும் போது பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் இது குறித்து அறிவித்தார்.
- குரு தேஜ் பகதூரின் 401வது பிறந்தநாளை முன்னிட்டுப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் செங்கோட்டையில் இருந்து நாட்டு மக்களிடம் உரையாற்றினார்.
    - குரு தேஜ் பகதூர் முகலாயர்கள் காலத்தில் மேற்கொள்ளப் பட்ட கட்டாய மத மாற்றங்களை எதிர்த்துப் போரிட்டவரும் ஒன்பதாவது சீக்கிய குருவும் ஆவார்.
- பொது நிர்வாகத்தில் சிறந்து விளங்கிய நபர்களுக்கான பிரதமர் மந்திரியின் விருதுகளை புது டெல்லியில் உள்ள விக்ஞான் பவனில் பிரதமர் நரேந்திர மோடி வழங்கினார்.
    - குடிமைப் பணி தினத்தை (ஏப்ரல் 21) முன்னிட்டு இந்த விருதுகள் வழங்கப்பட்டன.
- தமிழகத்தின் 4 மண்டலங்களில் 4 ஒலிம்பிக் பயிற்சி மையங்களை நிறுவுவதற்கு தமிழக அரசு முடிவு செய்துள்ளது.
    - சட்ட சபையில் 110வது விதியின் கீழ் இந்த அறிவிப்பானது வெளியிடப்பட்டுள்ளது.
- மிகவும் எதிர்பார்க்கப்பட்ட மகளிர் கிரிக்கெட் போட்டிக்கான இந்தியப் பிரீமியர் லீக் போட்டியானது 2023 ஆம் ஆண்டில் தொடங்க உள்ளது.
    - தொடக்கப் போட்டித் தொடரில், முகமை அடிப்படையிலான அமைப்பான இந்தப் போட்டியானது, 6 அணிகளைக் கொண்டிருக்கும்.

- ப்ராக்டர் & கேம்பிள் என்ற இந்திய நிறுவனமானது, இந்தோனேசியாவில் அதன் வணிகத்தினை மேற்கொண்டு வழி நடத்திய L.V. வைத்தியநாதன் என்பவரை தனது புதிய தலைமை நிர்வாக அதிகாரியாக நியமித்துள்ளது.
  - இதன் தாய் நிறுவனத்தின் ஒரு புதியப் பொறுப்பினை மதுசூதன் கோபாலன் என்பவர் ஏற்க உள்ளதால், அவரையடுத்து வைத்தியநாதன் இந்தப் பொறுப்பை ஏற்க உள்ளார்.
- டிஜிட் இன்சூரன்ஸ் நிறுவனமானது, ஜஸ்லீன் கோலி என்பவரைத் தனது புதிய மேலாண்மை இயக்குநராகவும் தலைமை நிர்வாக அதிகாரியாகவும் நியமித்துள்ளது.
  - இவர் விஜய் குமார் என்பவரையடுத்து இப்பதவியினை ஏற்றுள்ளார்.
- ஆசிய ஆப்பிரிக்கக் கூட்டமைப்புடன் இணைந்து நடத்தப்பட்ட 2022 ஆம் ஆண்டிற்கான இந்திய சர்வதேச மாநாட்டில், தொழிலதிபர் பபிதா சிங் உலக அமைதித் தூதராக நியமிக்கப் பட்டுள்ளார்.
  - கல்வி, விளையாட்டு, கலை, கலாச்சாரம் மற்றும் இராஜதந்திரம் ஆகியவை மூலம் அமைதியை மேம்படுத்தியதற்காக இவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.
- ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் 23 ஆம் தேதியன்று, உலகில் இரண்டாவது அதிகம் பேசப் படும் மொழியான ஸ்பானிய மொழியைக் கொண்டாடும் விதமாக ஸ்பானிய மொழி தினம் கொண்டாடப்படுகிறது.
  - மிகவும் புகழ்பெற்ற ஒரு ஸ்பானிய எழுத்தாளரான மிகுவல் டி செர்வாண்டஸ் சாவேத்ராவை (Miguel De Cervantes Saavedra) கௌரவிக்கும் விதமாகவும் இத்தினம் கொண்டாடப் படுகிறது.
- பிரிட்டிஷ் பிரதமர் போரிஸ் ஜான்சன், குஜராத்தின் வடோதரா அருகே உள்ள ஹலோல் எனுமிடத்தில் அமைக்கப்பட்டுள்ள, ஏற்றுமதியை மையமாகக் கொண்டு நிறுவப்பட்ட JCB நிறுவனத்தின் புதிய தொழிற்சாலையைத் திறந்து வைத்தார்.
  - இந்தத் தொழிற்சாலை உலகளாவிய உற்பத்திகளுக்கான பாகங்களை தயாரிக்கச் செய்யும்.
- நிதி ஆயோக் அமைப்பின் துணைத் தலைவர் பதவியிலிருந்து ராஜிவ் குமார் என்பவர் ராஜினாமா செய்ததையடுத்து, அதன் துணைத் தலைவராக பொருளாதார நிபுணர் சுமன் பெரியை மத்திய அரசு நியமித்தது.
  - ராஜிவ் குமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு நிதி ஆயோக் அமைப்பின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டார்.
- ஜம்முவின் சம்பா மாவட்டத்தில் உள்ள பாலி என்ற கிராமம், கரிமச் சுழிய நிலையினை அடைந்த நாட்டின் முதல் பஞ்சாயத்து ஆக மாறியது.
  - இந்தக் கிராமமானது, முழுவதுமாக சூரிய சக்தியால் இயங்குகிறது.
- இலங்கை நாடு எரிபொருளைக் கொள்முதல் செய்வதற்கு உதவுவதற்காக இந்தியா கூடுதலாக 500 மில்லியன் டாலர் நிதியுதவியை வழங்க உள்ளது.
  - இது இலங்கை அரசு பெட்ரோலியம் கொள்முதல் செய்வதற்கு இந்தியா வழங்கிய இரண்டாவது 500 மில்லியன் டாலர் மதிப்பிலான கடனாகும்.
- இலங்கை மிகவும் மோசமான ஒரு பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிப்பதால், அதன் 51 பில்லியன் டாலர் மதிப்பிலான வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்த இயல வில்லை.
  - இறக்குமதிக்கான அன்னியச் செலாவணி முழுவதுமாக தீர்ந்து விட்டதை அடுத்து இந்த அறிவிப்பானது விடுக்கப் பட்டது.

- ஒரு சமூக வலை தளமான ட்விட்டர் (கீச்சகம்) மீதான கட்டுப்பாட்டை எலோன் மஸ்க் கைப்பற்றியுள்ளார்.
  - இந்த ஒப்பந்தத்தின் மூலம், அவர் சுமார் 44 பில்லியன் அமெரிக்க டாலர்கள் வழங்கி இந்த சமூக வலைதளத்தினைக் கைப்பற்ற உள்ளார்.
- டெல்லி மற்றும் பஞ்சாப் அரசுகள் ஒரு தனித்துவமிக்க தகவல் பகிர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
  - இந்த இரு மாநில அரசுகளும் ஒவ்வொன்றிடமிருந்தும் தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு மேலும் முன்னேறுவதற்கான தகவல்களை பகிர்ந்து கொள்ளச் செய்வதற்காக வேண்டி இந்த ஒப்பந்தத்தினை மேற்கொண்டுள்ளன.
- உலகின் மிகவும் வயதான நபராக கருதப்படும் ஜப்பானியப் பெண் கேன் டனகா தனது 119வது வயதில் காலமானார்.
  - இவர் ஜப்பானின் ஃபுகுவோகா பகுதியில் பிறந்தவர் ஆவார்.
- பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்காக ஒரு கார்பன் விலைக் கொள்கையை ஏற்றுக் கொண்ட அமெரிக்காவின் முதல் பெரிய புதைபடிவ எரிபொருள் உற்பத்தி மாகாணமாக பென்சில்வேனியா மாறியுள்ளது.
  - நிலக்கரி, எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு மின் நிலையங்கள் அவை வெளியிடும் ஒவ்வொரு டன் கார்பன் டை ஆக்சைடுக்கும் மதிப்புகளைப் பெற வேண்டிய நிபந்தனைகள் உள்ள 11 மாகாணங்களுள் ஒன்றாக இது இணைகிறது.
- மெனோர்கா ஓபன் என்ற சதுரங்கப் போட்டியில் ஒரு இந்தியக் கிராண்ட் மாஸ்டரான சென்னையின் D.குகேஷ் வெற்றி பெற்றார்.
  - இவர் சமீபத்தில் ஸ்பெயினின் லா ரோடா என்ற நகரில் நடைபெற்ற 48வது ஓபன் அஜெட்ரெஸ் லா ரோடா சதுரங்கப் போட்டியில் வெற்றி பெற்றார்.
- விராட் கோலிக்குப் பிறகு, இந்தியன் பிரீமியர் லீக் போட்டியில் 6,000 ரன்கள் குவித்த இரண்டாவது கிரிக்கெட் வீரர் என்ற பெருமையை ஷிகர் தவான் பெற்றார்.
  - மும்பை வான்கடே மைதானத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு எதிராக நடைபெற்ற போட்டியில் தவான் இந்தச் சாதனையை நிகழ்த்தினார்.
- இராணுவ ஆட்சியின் கீழ் உள்ள மியான்மர் நாட்டில் உள்ள நீதிமன்றமானது, முன்னாள் தலைவர் ஆங் சான் சூகி மீது ஊழல் குற்றத்தினைச் சாட்டி அவருக்கு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.
- பா.ஜ.க. கட்சித் தலைவரும், ஒரு முன்னாள் மத்திய அமைச்சருமான விஜய் சாம்ப்லா என்பவர் தேசியப் பட்டியல் சாதியினர் ஆணையத்தின் தலைவராக 2வது முறையாக நியமிக்கப் பட்டுள்ளார்.
  - பஞ்சாப் மாநிலத் தேர்தலுக்கு முன்னதாக சாம்ப்லா இந்த ஆணையத்தில் தான் வகித்த தலைவர் பதவியை ராஜினாமா செய்து விட்டு தேர்தலில் போட்டியிட்டார்.
- மத்திய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் அமைச்சரான நாராயண் ரானே தத்து எண்டர்ப்ரைஸ் இந்தியா எனப்படுகின்ற அந்த அமைச்சகம் நிகழ்த்தும் ஒரு மாபெரும் நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார்.
  - சம்பந்தப்பட்டப் பல்வேறு அரசுத் துறைகள், அமைச்சகங்கள் மற்றும் தொழில் சங்கங்களுக்கு இடையே ஒரு ஒருங்கிணைப்பை உருவாக்குவதே இந்த நிகழ்வின் ஒரு நோக்கமாகும்.

# தமிழ்நாடு செய்திகள்

## லூலூ குழும ஒப்பந்தம் – தமிழ்நாடு

- மத்தியக் கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக கொள்முதல் செய்யப்படும் வேளாண் பொருட்களைப் பதப்படுத்துவதற்கான உணவுப் பதப்படுத்துதல் மற்றும் தளவாடங்கள் மையங்களை லூலூ குழுமம் நிறுவ உள்ளது.
- தமிழகத்தில் வணிக வளாகங்கள், பல்பொருள் அங்காடிகள் மற்றும் உணவு தளவாடப் பூங்கா ஆகியவற்றை நிறுவுவதற்காக லூலூ குழுமம் தமிழகத்தில் 3,500 கோடி ரூபாய் முதலீடு செய்ய உள்ளது.
- இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழான முதலாவது வணிக வளாகமானது சென்னையில் 2024 ஆம் ஆண்டில் நிறுவப்படும்.
- அதே சமயம் முதல் பல்பொருள் அங்காடியானது கோயம்புத்தூரிலுள்ள லட்சுமி மில்ஸ் வளாகத்தில் நிறுவப்படும்.



## துறைப் பரிமாற்றம்

- R.S. ராஜகண்ணப்பன் மற்றும் S.S. சிவசங்கர் ஆகிய அமைச்சர்களின் துறைகள் இடம் மாற்றப் பட்டுள்ளன.
- இராஜகண்ணப்பன் கையாண்டு வந்த போக்குவரத்து, தேசியமயமாக்கப்பட்டப் போக்குவரத்து மற்றும் மோட்டார் வாகனச் சட்டத் துறையானது S.S. சிவசங்கரிடம் ஒப்படைக்கப்பட்டது.
- சிவசங்கர் கையாண்டு வந்த "பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன், மிகவும் பிற்படுத்தப் பட்ட வகுப்பினர் நலன் மற்றும் சீர்மரபினர் நலன்" என்ற துறையானது இராஜ கண்ணப்பனிடம் ஒப்படைக்கப்படும்.



## சாகித்ய அகாடமி உறுப்பினர் பதவி

- எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதிக்கு சாகித்ய அகாடமி தனது உறுப்பினர் பதவியை வழங்கியது.
- இந்தியாவின் மிக உயரிய இலக்கிய கௌரவமான இது புகழ்பெற்ற சிறந்த இலக்கியத் தகுதியுடைய அறிஞர்களுக்கு வழங்கப்படுகிறது.
- ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அகாடமி உறுப்பினர்களின் எண்ணிக்கை 21 ஆக மட்டுமே வரையறுக்கப் பட்டுள்ளது.
- இந்திரா பார்த்தசாரதி பத்மஸ்ரீ விருது பெற்றவர் ஆவார்.
- இவர் 16 நாவல்கள், 10 நாடகங்கள் மற்றும் சிறுகதைகள் மற்றும் கட்டுரைகளின் தொகுப்புகள் போன்றவற்றை வெளியிட்டுள்ளார்.
- இவர் 1977 ஆம் ஆண்டில் குருதிப்புனல் என்ற தனது நாவலுக்காக சாகித்ய அகாடமி விருதைப் பெற்றார்.
- சாகித்ய அகாடமி விருது மற்றும் சங்கீத நாடக அகாடமி விருது ஆகிய இரண்டு விருதுகளையும் பெற்ற ஒரே தமிழ் எழுத்தாளர் இவரே ஆவார்.



## சென்னை மெட்ரோ இரயில் நிலையத்தின் மத்தியச் சதுக்கம்



- 'மத்தியச் சதுக்கம்' வளாகத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.
- இந்த வசதியானது இந்தப் பகுதியில் அமைந்துள்ள சில முக்கியமானக் கட்டிடங்களை இணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது ஒரு பல்முனை மையமாகவும் செயல்படுகிறது.

## கஞ்சா வேட்டை – 2.0

- கஞ்சா மற்றும் பான் மசாலாப் பொருட்கள் விற்பனைக்கு எதிராக மாநிலம் முழுவதும் ஒரு மாத கால அளவிலான சோதனையை மேற்கொள்ளுமாறு காவல்துறை தலைமை இயக்குநர் சைலேந்திர பாபு உத்தரவிட்டுள்ளார்.
- இதற்கு கஞ்சா வேட்டை – 2.0 நடவடிக்கை என்று பெயரிடப்பட்டுள்ளது.
- தற்போதைய இந்த நடவடிக்கையானது மார்ச் 28 முதல் ஏப்ரல் 27 வரை நடைபெற உள்ளது.
- முன்பு, கஞ்சா மற்றும் பான் மசாலாப் பொருட்களை விற்பனை செய்வதைத் தடை செய்வதற்கு 2021 ஆம் ஆண்டு டிசம்பர் முதல் 2022 ஆம் ஆண்டு ஜனவரி வரையில் இதே போன்ற ஒரு நடவடிக்கையினைக் காவல்துறை மேற்கொண்டது.

## வன்னியர் உள் இடஒதுக்கீடு தொடர்பான உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு

- மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பிரிவிற்குட்பட்ட வன்னியர் சமுதாயத்தினருக்கு 10.5 சதவீத உள் இடஒதுக்கீடு வழங்கும் வகையில், கடந்த ஆண்டு தமிழகத்தில் கொண்டு வரப்பட்ட சட்டத்தை (தமிழ்நாடு சிறப்பு இட ஒதுக்கீட்டுச் சட்டம் 2021) ரத்து செய்து சென்னை உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பை உச்ச நீதிமன்றம் உறுதி செய்தது.
- அரசு வேலை வாய்ப்புகளிலும், கல்வி நிறுவனங்களின் சேர்க்கையிலும் இதன்மூலம் உள் இடஒதுக்கீடு வழங்கப்பட இருந்தது.
- வன்னியர் சமூகத்தின் மீது ஒப்பீட்டளவிலான ஒரு பின்தங்கிய நிலையைக் காட்டச் செய்வதற்குப் போதுமான தரவுகள் எதுவும் இல்லாமல் எண்களின் அடிப்படையில் மட்டுமே இந்தச் சட்டமானது கொண்டு வரப்பட்டது என்று உச்ச நீதிமன்றம் கூறியது.
- மேலும் நீதிமன்றமானது இந்த ரீதியில் சட்டம் இயற்றுவதற்கு மாநிலத்திற்கு எந்த வித தடையும் இல்லை என்றும் கூறியது.
- அவ்வாறு இட ஒதுக்கீட்டுச் சட்டம் இயற்றப் படுகையில் சாதி ஒரு அடிப்படையாக இருக்கலாம், ஆனால் அது மட்டுமே அடிப்படையாக இருக்கக் கூடாது என்றும் அது கூறி உள்ளது.

## ஆனைகட்டி குடியிருப்பாளர்


- முதுமலை புலிகள் காப்பகப் பாதுகாப்பு மண்டலத்தில் உள்ள சிகூரில் உள்ள ஆனைகட்டி என்ற பகுதியில் வசிக்கும் பழங்குடியினர் ஒருவர், 41 பெண்கள் தண்ணீர் சாம்பியன்களில் ஒரு நபர் ஆவார்.
- இது இந்திய அரசு மற்றும் UNDP-SIWI நீர் ஆளுமை வசதி ஆகியவற்றின் ஒரு பகுதியாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

## பாலின ஆய்வகம்




- சென்னை பெருநகர மாநகராட்சியானது ஒரு பாலின ஆய்வகத்தைத் திறந்து வைத்து உள்ளது.
- இந்தியாவிலேயே ஒரு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பால் தொடங்கப்பட்ட இது போன்ற முதல் முயற்சி இதுவாகும்.
- இந்த வசதியைத் தொடங்குவதற்கான முதல் கட்டமாக மூன்று நிபுணர்களை இந்த அமைப்பு நியமித்துள்ளது.
- அனைவரும் பெண்களாக நியமிக்கப்பட்டுள்ள இந்த மூன்று நிபுணர்கள் குழு, பொது இடங்களில் பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்தச் செய்வதற்கான மாற்றங்களை பரிந்துரைப்பதற்காக ஒவ்வொரு பொது உள்கட்டமைப்புத் திட்டத்தையும் மதிப்பாய்வு செய்ய உள்ளது.

## தமிழ்நாடு பொதுச் சுகாதாரச் சட்டம்




- 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சுகாதாரச் சட்டத்தின் கீழ், தமிழக அரசு தான் விதித்த அறிக்கையினை திரும்பப் பெற்றுள்ளது.
- இது குறிப்பிடப்பட்ட அனைத்து அலுவலகங்களிலும் கோவிட்-19 தடுப்பு மருந்துச் செலுத்திய நபர்களே உள்ளனர் என்பதை உறுதி செய்யும் வகையில் இந்த நடவடிக்கை என்பது மேற்கொள்ளப்பட்டது.
- பொதுச் சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநரகமானது 2021 ஆம் ஆண்டு நவம்பர் 18 அன்று வெளியிடப்பட்ட இந்த அறிவிப்பினை திரும்பப் பெற்றது.

## ஆதிச்சநல்லூரில் நாணயங்கள் கண்டெடுப்பு



- ❖ கடல் ஆமையின் சின்னங்கள் பொறிக்கப்பட்ட இரண்டு சங்க கால முத்திரைக் காசுகள் கண்டெடுக்கப்பட்ட ஒரு நிகழ்வானது ஆதிச்சநல்லூரின் தொல்லியல் வரலாற்றிலேயே முதன்முறையாகும்.
- ❖ தூத்துக்குடி மாவட்டத்தின் ஸ்ரீவைகுண்டம் தாலுக்காவிலுள்ள தாமிரபரணியின் கடை மட்டப் பள்ளத்தாக்குப் பகுதியில் இந்த வரலாற்றுத் தளம் அமைந்துள்ளது.
- ❖ ஆதிச்சநல்லூர் என்பது முதுமக்கள் தாழிகள் கண்டெடுக்கப்பட்டதால் இது பண்டைய காலப் புதையிடமாக பெரும்பாலும் அறியப்பட்டது.
- ❖ 1876 ஆம் ஆண்டில் டாக்டர் ஜகோர் எனும் ஒரு ஜெர்மானியத் தொல்லியலாளர் முதல் முறையாக இந்த இடத்தினைக் கண்டறிந்தார்.
- ❖ சமீபத்தியக் கண்டுபிடிப்புகளைக் கொண்டு (முத்திரைக் காசுகள்) ஆதிச்சநல்லூர் என்பது நாணயங்கள் தயாரிக்கும் இடமாக இருந்திருக்கலாம் அல்லது மனிதர்கள் ஆரம்பக் கட்டத்தில் குடியேறிய இடங்களில் ஒன்றாக இருந்திருக்கலாம் எனத் தொல்லியல் ஆய்வுகள் கூறுகின்றன.

## காவல் உதவி செயலி




- ❖ முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்தில் 'காவல் உதவி' என்ற ஒரு செயலியை வெளியிட்டார்.
- ❖ பொதுமக்கள் குறிப்பாக பெண்கள் அவசரக் காலங்களில் காவல்துறையின் உதவியை நாடும் வகையில், 60 அம்சங்களுடன் இந்தச் செயலி தொடங்கப்பட்டுள்ளது.

- இந்தச் செயலியானது அவசர உதவி மற்றும் தொலைபேசி அழைப்பு செய்யும் வசதி (112/100/101) ஆகியவற்றைக் கொண்டுள்ளது.
- இயக்கத்தில் உள்ள போது புகார் தெரிவிக்கும் வசதி மற்றும் இருப்பிடத்தைப் பகிர்ந்து கொள்ளும் வசதியும் இதில் உள்ளது.

## மாநிலக் கல்விக் கொள்கை

- டெல்லி உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி முருகேசன் என்பவரின் தலைமையில் 13 பேர் கொண்ட ஒரு குழுவை தமிழக அரசு அமைத்தது.
- ஓராண்டுக்குள் புதிய கல்விக் கொள்கையை உருவாக்குவதற்கான பரிந்துரைகளை இந்தக் குழு அளிக்கும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.
- இந்தக் குழுவின் இதர மற்ற உறுப்பினர்கள்: சவீதா பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் L. ஜவஹர்நேசன், கணித அறிவியல் நிறுவனத்தின் ஓய்வு பெற்ற பேராசிரியர் R. ராமானுஜம், மாநில திட்டக்குழு உறுப்பினர்களான சுல்தான் இஸ்மாயில் மற்றும் R . ஸ்ரீனிவாசன், யுனிசெஃப் அமைப்பின் முன்னாள் கல்வி நிபுணர் அருணா ரத்னம், தமிழ் எழுத்தாளர் S. ராமகிருஷ்ணன், முன்னாள் உலக சதுரங்கச் சாம்பியன் விஸ்வநாதன் ஆனந்த், இசைக் கலைஞர் T.M.கிருஷ்ணா, கல்வியாளர்கள் துளசிதாஸ் மற்றும் S.மாடசாமி, கீச்சாங்குப்பத்தில் உள்ள அரசு ஊராட்சி ஒன்றிய நடு நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் R. பாலு, அகரம் அறக்கட்டளையைச் சேர்ந்த ஜெயஸ்ரீ தாமோதரன் ஆகியோர் ஆவர்.


## தாய்க்குரிய நோய்த் தடுப்பாற்றல் பகுப்பாய்வு

- சென்னையில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் தாய்க்குரிய நோய்த் தடுப்பாற்றல் பகுப்பாய்வு இயந்திரம் மற்றும் மாநில உடல்நல மன்றத் திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.
- இது மருத்துவமனையில் முதன்மை உடல்நலப் பரிசோதனை என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கும்.
- இதன் மூலம் 11-14 வாரங்கள் கர்ப்பமாக இருக்கும் பெண்களுக்கு, அவர்கள் சுமக்கும் கருவில் மரபணுக் குறைபாடுகள் எதுவும் உள்ளதா எனப் பரிசோதிக்க முடியும்.
- பின்னர், தாய்மார்களும் அவர்களது குடும்பத்தினரும் கர்ப்பம் தரிக்க வேண்டுமா அல்லது கலைக்க வேண்டுமா என்பதை முடிவு செய்யலாம்.
- இயல்பிற்கு முரணாகப் பிறக்கும் குழந்தைகளை இது தடுக்க உதவும்.

## அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 ஒதுக்கீடு

- 2020 ஆம் ஆண்டின் அக்டோபர் மாதத்தில் நிறைவேற்றப்பட்ட மாநிலச் சட்டத்தினை அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் அதன் செல்லுபடியாகும் தன்மையை சென்னை உயர்நீதிமன்றம் உறுதி செய்தது.
- இதன்படி அரசுப் பள்ளிகளில் தேர்ச்சி பெற்று தேசிய தகுதி நுழைவுத் தேர்வில் (NEET) தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு மருத்துவச் சேர்க்கையில் 7.5% உள் ஒதுக்கீடு வழங்க வேண்டும்.

- இது கலையரசன் குழு அளித்த பரிந்துரைகளின் பேரில் அளிக்கப் பட்டது.




## நடமாடும் வங்கிகள் – தமிழ்நாடு

- 34 நடமாடும் வங்கிகள் அறிமுகப்படுத்தப்படும் என்று தமிழ்நாட்டின் கூட்டுறவு வசதித் துறை அமைச்சர் ஐ. பெரிய சாமி அறிவித்தார்.
- தமிழ்நாடு மாநில உயர்நிலைக் கூட்டுறவு வங்கி மற்றும் அனைத்து மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் சார்பில் இது அறிமுகப்படுத்தப்படும்.
- இவை ஏடிஎம் (தானியங்குகிப் பண இயந்திரம்) சேவைகள் உட்பட மேலும் பல முக்கிய வங்கிச் சேவைகளை வழங்கும்.

## சென்னை மாநகராட்சி நிதிநிலை அறிக்கை 2022



- சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், 6 ஆண்டுகளுக்குப் பிறகு, மாநகராட்சி நிதி நிலை அறிக்கையைத் தாக்கல் செய்தார்.
- மேயர் வெளியிட்ட சில முக்கிய அறிவிப்புகள்
    - மாநகராட்சி நடத்தும் பள்ளிகளில் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கப் படும்.

- பள்ளிகளில் கண்காணிப்பு கேமராக்கள் அமைக்கப்படும்.
- பள்ளிகளில் ஆங்கிலம் பேசுவதை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.
- நிர்பயா என்ற நிதியின் கீழ் மாணவிகளுக்கு சானிட்டரி நாப்கின்கள் (மாதவிடாய்த் துணிகள்) வழங்கப்படும்.
- 70 சென்னை மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு இணைய தள இணைப்பு வசதி வழங்கப்படும்.

## மின்னணு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான மலிவான அந்நிய நேரடி முதலீட்டு நகரம்

**BEST LOCATIONS FOR COST OF OPERATING AN ELECTRONICS R&D CENTRE**

| RANK | LOCATION | COUNTRY | $/YEAR |
|---|---|---|---|
| 1 | Chennai | India | 1,241,653 |
| 2 | Penang | Malaysia | 1,321,254 |
| 3 | Gurgaon | India | 1,529,718 |
| 4 | Pune | India | 1,532,809 |
| 5 | Kaunas | Lithuania | 1,632,117 |
| 6 | Jakarta | Indonesia | 1,687,078 |
| 7 | Bangalore | India | 1,697,349 |
| 8 | Ciudad Juarez | Mexico | 1,783,171 |
| 9 | Changzhou | China | 1,812,795 |
| 10 | Kuala Lumpur | Malaysia | 1,867,036 |

Estimated cost to operate an electronics R&D centre with 50 employees and 2000 sq m of office space
Source: **fDi** Benchmark

- சென்னையில் 50 பேர் கொண்ட ஓர் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்திற்கு ஆண்டிற்கு 1.24 மில்லியன் டாலர் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.
- இது உலகிலேயே மிகக் குறைவானச் செலவினமாகும்.
- பினாங் என்ற மலேசிய நகரம் 2வது இடத்தில் உள்ளது.
- இதனைத் தொடர்ந்து குர்கான் மற்றும் புனே ஆகிய நகரங்கள் உள்ளன.
- மேலும், தமிழகத்தில் மேற்கொள்ளப்படும் அந்நிய நேரடி முதலீடானது 41.5% உயர்ந்து உள்ளது.
- இதில் சியோலுக்கு அடுத்தபடியாக சென்னை இரண்டாவது இடத்தில் உள்ளது
- இந்தத் தரவரிசையில் சென்னையையடுத்து குவாங்சோ மற்றும் சென்சென் போன்ற சீன நகரங்கள் இடம் பெற்றுள்ளன.
- இந்தப் பட்டியலின் முதல் 10 இடங்களில் இடம் பெற்றுள்ள மற்ற 3 இந்திய நகரங்கள் பெங்களூரு, புனே மற்றும் குர்கான் ஆகியனவாகும்.

## மத்தியப் பல்கலைக்கழகங்களுக்கான பொது நுழைவுத் தேர்விற்கு எதிரான தீர்மானம்

- மத்தியப் பல்கலைக்கழகங்களுக்கான பொது நுழைவுத் தேர்வுத் திட்டத்தை கைவிடக் கோரி இந்திய அரசை வலியுறுத்தும் ஒரு தீர்மானத்தை தமிழக அரசு நிறைவேற்றி உள்ளது.
- பாரதிய ஜனதா கட்சியைத் தவிர மற்ற அனைத்துக் கட்சிகளும் இந்தத் தீர்மானத்தை ஒரு மனதாக ஆதரித்தன.
- இத்தீர்மானத்தில், நாடு முழுவதும் பல்வேறு மாநிலக் கல்வி வாரியங்கள் இருப்பதால், தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி சபையினுடைய பாடத்திட்டத்தின் அடிப்படையில் நடத்தப்படும் இந்த நுழைவுத் தேர்வு அனைத்து மாணவர்களுக்கும் சமமான வாய்ப்பை வழங்காது என்று தமிழக சட்டசபை கூறியது.
- மத்தியப் பல்கலைக் கழகங்களுக்கான பொது நுழைவுத் தேர்வின் காரணமாக மாநிலத்தில் உள்ள பல்வேறு மத்தியப் பல்கலைக்கழகங்கள் மற்றும் அவற்றின் கீழ் செயல்படும் இணைப்புக் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை குறையும் என்று தமிழக அரசு தெரிவித்தது.
- மேலும், சமூகத்தின் விளிம்புநிலை மாணவர்களின் நிலையை மத்திய பல்கலைக் கழகங்களுக்கான பொது நுழைவுத் தேர்வு உயர்த்தாது என்று மாநில அரசு வாதிட்டது.

## சமத்துவ தினம்

- டாக்டர்.B.R. அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளானது, 'சமத்துவ நாளாக' கொண்டாடப் படும் என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.
- டாக்டர். அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாள் ஆனது ஏப்ரல் 14 அன்று கொண்டாடப் படுகிறது.
- முதல்வர் அவர்கள் சட்டசபையில் 110வது விதியின் கீழ் இந்த ஒரு அறிவிப்பினை வெளியிட்டார்.
- 110வது விதியின் கீழ், முதலமைச்சரோ அல்லது எந்தவொரு அமைச்சரோ, எந்த ஒரு விவாதமும் இன்றி நிறைவேற்றக் கூடிய வகையிலான எந்தவொரு தீர்மானத்தையும் சட்டமன்றத்தில் அறிவிக்கவோ அல்லது கொண்டு வரவோ முடியும்.

## மாநில வளர்ச்சிக் கடன்கள் - தமிழ்நாடு

- 2022-23 ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் 23,500 கோடி ரூபாய் கடன் பெறப் போவதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.
- ஏப்ரல்-ஜூன் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலக் கட்டத்தில் மாநில வளர்ச்சிக் கடன்கள் (SDLs) எனப்படும் பத்திரங்களை வெளியிடுவதன் மூலம் மாநில அரசுகள்/ஒன்றியப் பிரதேச அரசுகள் 1,90,375 கோடி ரூபாய் கடன் வாங்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- 2021-22 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் ஒப்பீட்டுக் காலக் கட்டத்தில், தமிழக அரசு 23,450 கோடி ருபாயைக் கடனாகப் பெறுவதாகக் குறிப்பிட்டது.
- ஆனால் உண்மையில் திரட்டப்பட்ட தொகை சற்று அதிகமாக 24,000 கோடி ரூபாயாக இருந்தது.

- ICRA லிமிடெட் எனப்படும் மதிப்பீட்டு நிறுவனமானது, 2023 ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் மகாராஷ்டிரா அதிகபட்சமாக 32,000 கோடி ரூபாய் அளவிற்குக் கடன் வாங்கி உள்ளதாக கூறுகிறது.

## தேசிய சீனியர் கூடைப்பந்து சாம்பியன்ஷிப் போட்டி

- 71வது தேசிய சீனியர் கூடைப்பந்து சாம்பியன்ஷிப் ஆடவர் பிரிவில் தமிழ்நாடு அணி 87-69 என்ற புள்ளிக் கணக்கில் நடப்பு சாம்பியனான பஞ்சாப் அணியை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்றது.
- பெண்கள் பிரிவில் இந்திய இரயில்வே அணி 131-82 என்ற புள்ளிக் கணக்கில் தெலுங்கானா அணியை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்றது.



## வேதாந்த் மாதவன்

- டேனிஷ் ஓபன் நீச்சல் போட்டியில் ஆண்களுக்கான 1500 மீட்டர் ஃப்ரீஸ்டைல் பிரிவில், 16 வயதான வேதாந்த் மாதவன் வெள்ளிப் பதக்கம் வென்றார்.
- இப்போட்டி டென்மார்க்கின் கோபன்ஹேகன் நகரில் நடைபெற்றது.
- இவர் நடிகர் மாதவனின் மகன் ஆவார்.
- இவர் 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நடைபெற்ற லாட்வியா ஓபன் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றார்.
- கடந்த ஆண்டு நடைபெற்ற ஜூனியர் நேஷனல் அக்வாடிக் சாம்பியன்ஷிப் என்ற போட்டியிலும் நான்கு வெள்ளி மற்றும் மூன்று வெண்கலம் உள்பட 7 பதக்கங்களை இவர் வென்றுள்ளார்.



## கொங்கு சோழர் காலத்து நடுகற்கள் – அன்னூர்



- திருப்பூரைச் சேர்ந்த சில தொல்லியல் ஆர்வலர்கள் சமீபத்தில் மூன்று நடுகற்களைக் கண்டறிந்துள்ளனர்.
- இவை கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள அன்னூரில் 11 அல்லது 12 ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த கொங்கு சோழர்களின் ஆட்சிக் காலத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.
- வீர ராஜேந்திரன் தொல்லியல் மற்றும் வரலாற்று ஆய்வு மையத்தின் இயக்குநர் S.ரவிக் குமார் தலைமையிலான ஒரு குழுவினர், 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அன்னூரில் உள்ள மன்னீஸ்வரர் கோயிலுக்கு அருகில் உள்ள இந்த நடுகற்களைக் கண்டுபிடித்தனர்.
- இந்த மூன்று நடுகற்களுள் ஒன்று ‘தலைபலி சிற்பம்’ ஆகும்.
- இரண்டாவது கல்லானது, இடது கையில் ஒரு வில்லுடனும் வலது கையில் அம்புடனும் இருக்கும் ஒரு வீரரின் உருவத்தைச் சித்தரிக்கிறது.
- மூன்றாவது நடுகல்லில், ஒரு வீரன் ஓர் எதிரியை வாளினால் தாக்குவதையும், அவன் இடது கையில் ஒரு வில்லைப் பிடித்திருப்பதையும் சித்தரிக்கிறது.

## தமிழ்நாடு கால்நடை மற்றும் விலங்கு அறிவியல் பல்கலைக்கழகம்

- இந்தியாவிலுள்ள 15 மாறில கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகங்களுள் தமிழ்நாடு கால்நடை மற்றும் விலங்கு அறிவியல் பல்கலைக் கழகமானது முதலிடத்தினைப் பெற்றுள்ளது.
- இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் சமீபத்திய (2020) தர வரிசைப்பட்டியலில் இது தர நிலைப்படுத்தப்பட்டுள்ளது.
- இந்தப் பல்கலைக்கழகமானது, நாட்டிலுள்ள வேளாண்மை, கால்நடை, தோட்டக்கலை மற்றும் மீன்வளப் பல்கலைக்கழகங்கள் அடங்கியப் பட்டியலில் 12வது இடத்தினைப் பெற்றுள்ளது.
- 2017 ஆம் ஆண்டில் 41வது இடத்தில் இருந்து இந்தப் பல்கலைக் கழகமானது 2020 ஆம் ஆண்டில் 12வது இடத்திற்கு முன்னேறியது ஒரு குறிப்பிடத்தக்கச் சாதனையாகும்.

## நாய்கள் இனப்பெருக்க மையம்

- தென்காசி மாவட்டத்தில், தமிழ்நாடு கால்நடை மற்றும் கால்நடை அறிவியல் பல்கலைக் கழகமானது, (TANUVAS - Tamil Nadu Veterinary and Animal Sciences University) பூர்வீக நாய் ஆராய்ச்சி மையத்தினை அமைக்க முடிவு செய்துள்ளது.
- இது "நாய்களின் இனங்களை மீட்டெடுத்துப் பாதுகாப்பதற்கான மையம்" ஆகும்.
- தமிழ்நாடு கால்நடை மற்றும் கால்நடை அறிவியல் பல்கலைக் கழகமானது, தமிழ்நாட்டின் நாய் வகைகளான ராஜபாளையம், சிப்பிப் பாறை, கன்னி, கோம்பை போன்ற இனங்களை இனப்பெருக்கம் செய்து விற்பனை செய்யும்.
- இந்த நாய் இனங்கள் பாதுகாப்பு மற்றும் வேட்டையாடும் திறன்களுக்கு பெயர் பெற்றவையாகும்.
- கோழிப் பண்ணைகள் மற்றும் நாட்டு மாடுகளுக்காக ஆராய்ச்சி மையங்களை இந்தப் பல்கலைக் கழகம் நடத்தி வந்தாலும், நாட்டு நாய்களை வளர்ப்பதற்கான திட்டத்தை இப்பல்கலைக் கழகம் தொடங்குவது இதுவே முதல் முறையாகும்.

## கிராமச் செயலகங்கள்

- தமிழக அரசு தனது திட்டங்களைக் கிராமப்புறங்களில் செயல்படுத்துவதற்கு உதவும் வகையில் 'கிராமச் செயலகங்களை' அமைக்க உள்ளது.
- கிராமச் செயலகங்களில் இணையதள இணைப்பு, ஊராட்சி மன்றத் தலைவர்கள், செயலாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் தங்குவதற்கான அறைகள், கூட்ட அரங்குகள், அடிப்படை வசதிகள் உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தப்படும் என்று முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.
- இந்த ஆண்டு, முதல் கட்டமாக மொத்தம் 600 கிராமப் பஞ்சாயத்துகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## பல்கலைக்கழக துணைவேந்தர்கள் நியமனம்

- தமிழகத்தில் துணைவேந்தர்களை நியமிக்க மாநில அரசிற்கு அதிகாரம் அளிக்கும் ஒரு மசோதாவை (தமிழ்நாடுப் பல்கலைக்கழகச் சட்டங்கள் திருத்தம், 2022) தமிழ்நாடு சட்டமன்றம் ஏற்றுக் கொண்டது.
- இது வரையில் இந்த அதிகாரம் ஆளுநரிடம் இருந்தது.
- இது 12 பல்கலைக்கழகங்களுக்குப் பொருந்தும்.
- 1923 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகச் சட்டத்தினைத் திருத்த ஒரு தனி மசோதா உள்ளது.
- தமிழ்நாட்டில் 13 பல்கலைக் கழகங்களுக்கு ஆளுநர் வேந்தராகவும், உயர்கல்வித் துறை அமைச்சர் இணை வேந்தராகவும் உள்ளனர்.
- குஜராத்தில் 1949 ஆம் ஆண்டு முதல் இந்த அதிகாரத்தை முதல்வர் மட்டுமே கொண்டு உள்ளார்.
- இந்த விவகாரம் தொடர்பாக மகாராஷ்டிராவில் கடந்த ஆண்டு இதே போன்ற மசோதா ஒன்று நிறைவேற்றப்பட்டது.

- இதே நிலைமை தான் தெலங்கானாவிலும் கர்நாடாகாவிலும் உள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் மேற்கு வங்கம் ஆளுநரின் இந்த அதிகாரத்தினைப் பறித்தது.
- 2007 ஆம் ஆண்டில் புஞ்சி ஆணையமும் இதனைப் பரிந்துரை செய்தது.

## தமிழ்நாடு சிறுபான்மையினர் உரிமை தினம்

- தமிழக அரசானது, ஆண்டுதோறும் டிசம்பர் 18 ஆம் தேதியைச் சிறுபான்மையினர் உரிமை தினமாக மாநில அளவில் கடைபிடிக்க முடிவு செய்துள்ளது.
- இந்தத் தினமானது தமிழகத்தின் மாவட்ட அளவில் சம்பந்தப்பட்ட அந்தந்த மாவட்ட ஆட்சியரின் தலைமையின் கீழ் அனுசரிக்கப் படுகிறது.

## ஆலிவ் ரிட்லி பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வு மையம்

- சென்னையில் ஒரு சர்வதேச ஆலிவ் ரிட்லி ஆமை (சிற்றாமை) பாதுகாப்பு மற்றும் மறு வாழ்வு மையத்தைத் தமிழக அரசு நிறுவ உள்ளது.
- இந்த மையம் சிற்றாமைகள் பற்றி ஒரு ஆராய்ச்சியை மேற்கொள்ளச் செய்வதோடு, அது பற்றியத் தரவுகளைச் சேகரித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும்.
- ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் மற்றும் தமிழக அரசு ஆகியவற்றின் நிதி உதவியுடன் இந்த மையமானது நிறுவப்பட உள்ளது.

## தமிழகத்தில் கிராமசபைக் கூட்டங்கள்

- நவம்பர் 01 ஆம் தேதியை மீண்டும் உள்ளாட்சித் தினமாக கடைபிடிக்க உள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.
- 2007 ஆம் ஆண்டு முதல் தி.மு.க. ஆட்சியில் நவம்பர் 01 ஆம் தேதியானது உள்ளாட்சித் தினமாக அனுசரிக்கப்பட்டது.
- 10 அளவுருக்களின் அடிப்படையில் சிறப்பாகச் செயல்படும் கிராமப் பஞ்சாயத்துகளுக்கு உத்தமர் காந்தி என்ற கிராமப் பஞ்சாயத்து விருது வழங்கப் பட்டு வந்த ஒரு நடைமுறையைத் தமிழக அரசாங்கம் மீண்டும் தொடங்க உள்ளது.
- இது 2006 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்டாலும் பின்னர் வந்த அதிமுக அரசால் நிறுத்தப்பட்டது.
- ஓர் ஆண்டில், 37 மாவட்டங்களுள் ஒரு கிராமப் பஞ்சாயத்து தேர்ந்தெடுக்கப்படும்.
- தமிழகத்தில் இதுவரை நான்கு முறை நடத்தப்பட்டு வந்த கிராமசபைக் கூட்டங்கள் இனி ஆண்டிற்கு ஆறு முறை நடத்தப்படும்.
- குடியரசு தினம் (ஜனவரி 26), தொழிலாளர் தினம் (மே 1), சுதந்திர தினம் (ஆகஸ்ட் 15) மற்றும் மகாத்மா காந்தியின் பிறந்த நாள் (அக்டோபர் 2) ஆகிய நாட்களோடு சேர்த்து, உலக தண்ணீர் தினம் (மார்ச் 22) மற்றும் உள்ளாட்சி தினம் (நவம்பர் 1) ஆகிய நாட்களில் இனி கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்படும்.

## மு. கருணாநிதியின் பிறந்தநாள்

- முன்னாள் முதல்வர் கருணாநிதி அவர்களின் பிறந்த நாளான ஜூன் 3ஆம் தேதியானது ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சட்டசபையில் அறிவித்தார்.
- இந்த ஆண்டு ஜூன் 3 ஆம் தேதியன்று ஓமந்தூரார் அரசுத் தோட்ட வளாகத்தில் திமுக தலைவர் கருணாநிதியின் உருவச் சிலையானது நிறுவப்படும்.

## தமிழகத் தயாரிப்புப் பொருட்கள் - புவிசார் குறியீடு

- புளியங்குடி அமில எலுமிச்சை, தூயமல்லி அரிசி மற்றும் விருதுநகர் சம்பா வத்தல் (மிளகாய்) ஆகியவற்றிற்குப் புவிசார் குறியீடுகளை வழங்கக் கோரி சமீபத்தில் விண்ணப்பிக்கப் பட்டுள்ளது.
- தென்காசியில் உள்ள புளியங்குடி கிராமம், அமில எலுமிச்சை சாகுபடிக்குப் பெயர் பெற்றதாகும்.
- தமிழகத்தில் விருதுநகர், ராமநாதபுரம், சிவகங்கை, தூத்துக்குடி ஆகிய சில மாவட்டங்களில் மிளகாய் அதிகம் விளைகிறது.
- தூயமல்லி அரிசியில் இரும்பு, மெக்னீசியம் மற்றும் துத்தநாகம் ஆகிய சத்துகள் அதிகம் உள்ளது.

## TNEB 2.0 திட்டம்

- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோகக் கழகம் ஆனது 'TNEB 2.0' என்ற ஒரு திட்டத்தினைத் தொடங்க உள்ளது.
- இது அதிகரித்து வரும் மின்தேவையைப் பூர்த்தி செய்து 2030 ஆம் ஆண்டிற்குள் மின் விநியோக முறையை நவீனமயமாக்குவதற்கான ஒரு திட்டமாகும்.
- சிங்கார சென்னை 2.0 போலவே 'TNEB 2.0' திட்டமும் மாநிலத்தில் மின்சார உற்பத்தியை இரட்டிப்பாக்குவதையும், தடையில்லா விநியோகத்தை உறுதி செய்ய மின் விநியோக முறையை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 'TNEB 2.0' திட்டமானது, 33,877 மெகா வாட்டாக உள்ள மின் உற்பத்தியை 77,153 மெகா வாட்டாக இரட்டிப்பாக்குவதை நோக்கமாகக் கொண்டதாகும்.
- மாநிலத்தில் உள்ள அனல், நீர் மற்றும் எரிவாயு விசையாழி (சுழலி) மின் உற்பத்தி ஆலைகளின் மின் உற்பத்தித் திறனானது 7,175 மெகாவாட்டிலிருந்து 41,085 மெகா வாட்டாக உயர்த்தப் படும்.


# தேசியச் செய்திகள்

## இந்திய நகை கண்காட்சி மையக் கட்டிடம்

❖ பியூஷ் கோயல் அவர்கள் துபாய் நகரில் அமைக்கப்பட்டுள்ள இந்திய நகை கண்காட்சி மையக் கட்டிடத்தினைத் திறந்து வைத்தார்.

❖ இதன் திறப்பு விழாவின் போது, வருடாந்திர ஏற்றுமதி இலக்கினைத் தற்போதுள்ள 35 பில்லியன் டாலர் மதிப்பிலிருந்து 100 பில்லியன் டாலர்களாக உயர்த்தும் வகையில் செயல்படுமாறு இரத்தினக்கற்கள் மற்றும் நகை ஏற்றுமதிச் சபையின் ஏற்றுமதி உறுப்பினர்களிடம் அமைச்சர் வலியுறுத்தினார்.

## தோட்டப் பயிர்கள் – 2020-21 ஆம் ஆண்டின் இறுதி மதிப்பீடுகள்




❖ பல்வேறு தோட்டப் பயிர்களின் 2020-21 ஆம் ஆண்டின் இறுதி மதிப்பீடுகள் மற்றும் 2021-22 ஆம் ஆண்டிற்கான முன்கூட்டிய மதிப்பீடுகள் குறித்தத் தகவல்களை வேளாண் மற்றும் விவசாயிகள் நலத் துறையானது வெளியிட்டுள்ளது.

❖ 2019-20 ஆம் ஆண்டில் சுமார் 14.13 மில்லியன் டன்களாக (4.4%) இருந்த மொத்த தோட்டப் பயிர்கள் உற்பத்தியானது 2020-21 ஆம் ஆண்டில் 334.60 மில்லியன் டன்களாக (மதிப்பிடப் பட்டது) உயர்ந்துள்ளது.

❖ பழங்கள் உற்பத்தி : 102.48 மில்லியன் டன் (மதிப்பிடப்பட்டது), 2019-20 ஆம் ஆண்டில் இதன் அளவு 102.08 மில்லியன் டன்களாக இருந்தது.

❖ 2019-20 ஆம் ஆண்டில் 188.28 மில்லியன் டன்களாக இருந்த காய்கறி உற்பத்தியானது, 2020-21 ஆம் ஆண்டில் 6.5% உயர்ந்து 200.45 மில்லியன் டன்களாக (மதிப்பிடப் பட்டது) உள்ளது.

❖ வெங்காய உற்பத்தி : 26.64 மில்லியன் டன், இது 2019 ஆம் ஆண்டில் 26.09 மில்லியன் டன்களாக இருந்தது.

❖ 2019-20 ஆம் ஆண்டின் உருளைக்கிழங்கு உற்பத்தியானது அந்த ஆண்டு அளவை விட 7.61 மில்லியன் டன்கள் உயர்ந்து 2020-21 ஆம் ஆண்டில் 56.17 மில்லியன் டன்களாக (மதிப்பிடப் பட்டுள்ளது) உயர்ந்துள்ளது.

- தக்காளி உற்பத்தி : 21.18 மில்லியன் டன், இது 2019-20 ஆம் ஆண்டில், 20.55 மில்லியன் டன்களாக இருந்தது.
- நறுமணம் மற்றும் மருத்துவப் பயிர்கள் : 2019-20 ஆம் ஆண்டில் 0.73 மில்லியன் டன்களாக இருந்த இதன் உற்பத்தி 2020-21 ஆம் ஆண்டில் 0.83 மில்லியன் டன்களாக உயர்ந்துள்ளது.
- 2019-20 ஆம் ஆண்டில் 16.12 மில்லியன் டன்களாக இருந்தத் தோட்டப் பயிர்கள் உற்பத்தி 2020-21 ஆம் ஆண்டில் 16.63 மில்லியன் டன்களாக உயர்ந்துள்ளது.
- 2019-20 ஆம் ஆண்டில், 10.14 மில்லியன் டன்களாக இருந்த மசாலாப் பொருட்களின் உற்பத்தியானது, 2020-21 ஆம் ஆண்டில் 9.7% உயர்ந்து 11.12 மில்லியன் டன்களாக உயர்ந்துள்ளது.
- 2020-21 (இறுதி மதிப்பு) ஆம் ஆண்டில் இருந்த மதிப்பை விட 0.4% உயர்ந்து 2021-22 ஆம் ஆண்டின் மொத்தத் தோட்டப்பயிர்கள் உற்பத்தியின் மதிப்பானது 333.3 மில்லியன் டன்கள் (மதிப்பீடு) என்ற அளவில் சுமார் 1.35 மில்லியன் டன்கள் உயர்ந்துள்ளது.

## இரயில் பாதைகளில் யானைகள் உயிரிழப்பதைத் தடுப்பதற்கான ஒரு நிரந்தர அமைப்பு

- இரயில்பாதைகளில் யானைகள் உயிரிழப்பதைத் தடுப்பதற்காக வேண்டி, இரயில்வே அமைச்சகம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகம் ஆகியவற்றை உள்ளடக்கிய நிரந்தர ஒருங்கிணைப்புக் குழு ஒன்றினை மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் அமைத்துள்ளது.
- இந்தியா முழுவதும், 2018-19 ஆம் ஆண்டில் 19 யானைகளும், 2019-20 ஆம் ஆண்டில் 14 யானைகளும், 2020-21 ஆம் ஆண்டில் 12 யானைகளும் இரயில்பாதைகளில் விபத்திற்கு உள்ளாகி உயிரிழந்துள்ளன.
- யானைகளின் இயற்கைக்கு புறம்பான உயிரிழப்பிற்கான 2வது மிகப்பெரிய காரணம் இரயில் பாதைகளில் ஏற்படும் விபத்துகளேயாகும்.

## பரம் சக்தி

- தேசிய மீத்திறன் கணினித் திட்டத்தின் கீழ், கரக்பூரின் இந்தியத் தொழில்நுட்பக் கழகத்திற்குப் பரம் சக்தி என்ற பெட்டா திறன் அளவிலான மீத்திறன் கணினியானது அர்ப்பணிக்கப்பட்டது.
- இது மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகம் மற்றும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் ஒரு கூட்டுத் திட்டமாகும்.
- பரம் சக்தி மீத்திறன் கணினி வசதியானது கணக்கீடு மற்றும் தரவு அறிவியலின் பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

## எரிபொருள் நிரப்புவதற்கான புதிய நிலையம்

- இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் என்ற நிறுவனத்துடன் இணைந்து இந்திய விமானப் படை ஒரு புதிய முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ், இந்திய விமானப் படையின் விமானங்களுக்கு அரசினால் நடத்தப் படும் எரிசக்தி எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் நிரப்பப்படும்.

- பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் கூற்றுப்படி, இந்திய விமானப்படைக்குச் சொந்தமான வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்புவதற்கு வசதியாக, 'Fleet Card-Fuel on Move' என்ற வசதி உருவாக்கப்பட்டுள்ளது.

## நரேந்திர சிங் தோமர் புத்தக வெளியீடு

- மத்திய அமைச்சர் நரேந்திர சிங் தோமர், "2030 ஆம் ஆண்டுக்கான இந்திய வேளாண்மை: விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்தச் செய்வதற்கான நடவடிக்கைகள், ஊட்டச்சத்துப் பாதுகாப்பு மற்றும் நிலையான உணவு மற்றும் பண்ணை அமைப்புகள்" என்று தலைப்பிடப்பட்ட ஒரு புத்தகத்தை வெளியிட்டார்.
- இந்தப் புத்தகமானது நிதி ஆயோக் மற்றும் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு நிகழ்வில் வெளியிடப்பட்டது.
- இந்தப் புத்தகமானது 2019 ஆம் ஆண்டு முதல் உணவு மற்றும் வேளாண் அமைப்பால் செயல்படுத்தப் பட்டு, நிதி ஆயோக் மற்றும் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலம், மீன்வளம், கால்நடை வளர்ப்பு மற்றும் பால் பண்ணை அமைச்சகங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட தேசியப் பேச்சுவார்த்தைகளின் ஒரு விவாதச் செயல்முறையின் விளைவுகளை எடுத்துரைக்கிறது.

## கொங்கன் இரயில்வே கழகம்

- கொங்கன் இரயில்வே கழகமானது, மகாராஷ்டிராவின் ரோஹாவில் இருந்து கர்நாடக மாநிலத்தின் தோக்கூர் வரையிலான 741 கிலோ மீட்டர் பாதை முழுவதையும் மின் மயமாக்கியுள்ளது.
- 741 கிலோமீட்டர் நீளமுள்ள இந்தப் பாதையை மின்மயமாக்கியதன் மூலம் ரூ.150 கோடி எரிபொருள் சேமிப்பாகும்.
- இது மாசு எதுவும் இல்லாத, தடையற்றச் செயல்பாடுகளை உறுதி செய்வதோடு எரிபொருளுக்காக டீசலைச் சார்ந்திருப்பதையும் குறைக்கும்.
- 2023 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதத்திற்குள், இந்திய இரயில்வே தனது அகல இரயில் பாதைக் கட்டமைப்பினை 100 சதவீதம் மின்மயமாக்கும் திட்டங்களைக் கொண்டு உள்ளது.
- கொங்கன் இரயில்வே மூலம் மும்பை நகரம் மங்களூரு நகரத்துடன் இணைக்கப் பட்டு உள்ளது.
- கொங்கன் இரயில் பாதை ஆனது கோவா, மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா வழியே நாட்டின் மேற்குக் கடற்கரையினூடே செல்கிறது.

## INAS 316

- கோவாவில் நிலை நிறுத்தப்பட்டுள்ள ஐஎன்எஸ் ஹன்சா கப்பலில் நடத்தப் பட்ட ஒரு விழாவில் இந்தியக் கடற்படையின் இரண்டாவது பி-8I ரக விமானப் படையானது இந்தியக் கடற்படையில் இணைக்கப்பட்டது.
- ஐஎன்ஏஎஸ் 316 என்ற இந்த விமானத்திற்கு 'காண்டோர்ஸ்' என்று தலைப்பிடப் பட்டு உள்ளது.

- காண்டோர் என்பது மாபெரும் இறக்கைகள் கொண்ட, உலகின் மிகப்பெரிய பறக்கும் நிலப் பறவைகளில் ஒன்றாகும்.

## 5வது BIMSTEC உச்சி மாநாடு




- இந்த உச்சி மாநாடானது இலங்கையில் கலப்பு முறையில் நடைபெற்றது.
- 2022 ஆம் ஆண்டு BIMSTEC உச்சி மாநாட்டில் BIMSTEC சாசனம் ஏற்றுக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப் பட்டது.
- இந்த சாசனம் ஆனது, BIMSTEC குழுவை ஒரு கொடி, ஒரு சின்னம் மற்றும் உறுப்பினர் நாடுகளால் கடைபிடிக்கப்பட வேண்டிய முறைப்படி பட்டியலிடப்பட்ட கொள்கைகள் கொண்ட ஓர் அமைப்பாக முறைப்படுத்துகிறது.
- BIMSTEC தலைவர்கள் 3 வெவ்வேறு BIMSTEC ஒப்பந்தங்கள் கையெழுத்தான ஒரு நடைமுறையையும் மேற்பார்வையிட்டனர்.
- மேலும், BIMSTEC செயலகத்திற்கு அதன் செயல்பாட்டு வரவு செலவுத் திட்டத்தை அதிகரிப்பதற்காக 1 மில்லியன் அமெரிக்க டாலர்கள் இந்திய நாட்டினால் வழங்கப் படும்.
- நாளந்தா சர்வதேசப் பல்கலைக்கழகம் வழங்கும் BIMSTEC உதவித் தொகை திட்டத்தின் நோக்கமும் விரிவுபடுத்தப் படுகிறது.
- உறுதியானப் பிராந்தியத்தை நோக்கி, வளமானப் பொருளாதாரம், ஆரோக்கியமான மக்கள் (Towards a Resilient Region, Prosperous Economies, Healthy People) என்பது இந்த உச்சி மாநாட்டின் கருத்துரு ஆகும்.

## வருணா – 2022

- இந்தியக் கடற்படை மற்றும் பிரான்சு நாட்டுக் கடற்படை ஆகிய இரண்டிற்குமிடையே மேற்கொள்ளப்படும் 20வது இருதரப்புக் கடற்படைப் பயிற்சியான வருணா பயிற்சி 2022 ஆம் ஆண்டு மார்ச் 30 முதல் ஏப்ரல் 03 வரையில் அரபிக்கடலில் நடத்தப்பட்டது.
- இரு நாடுகளின் கடற்படைகளுக்கு இடையே மேற்கொள்ளப்படும் இந்த இருதரப்புக் கடற்படைப் பயிற்சியானது 1993 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது.
- இந்தப் பயிற்சிக்கு 2001 ஆம் ஆண்டில் வருணா எனப் பெயரிடப்பட்டது.

## டோக்ரா படைப்பிரிவு




- இராணுவ அதிகாரிகளின் தலைவரான ஜெனரல் M.M. நரவனே, டோக்ரா படைப் பிரிவின் இரு படைப் பிரிவுகளுக்கு மதிப்பு மிக்க குடியரசுத் தலைவரின் வண்ணம் என்ற oru விருதினை வழங்கினார்.
- அந்த இரு படைப் பிரிவுகளாவன 20 டோக்ரா மற்றும் 21 டோக்ரா ஆகியனவாகும்.
- உத்தரப் பிரதேசத்தின் பைசாபாத் நகரில் உள்ள டோக்ரா படைப்பிரிவு மையத்தில் நடத்தப் பட்ட ஒரு அணிவகுப்பில் இந்த விருதானது வழங்கப்பட்டது.

## ஆயுதப்படைகள் சிறப்பு அதிகாரச் சட்டம்




- இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில், ஆயுதப்படைகள் சிறப்பு அதிகாரச் சட்டத்தின் கீழ் வரும் பகுதிகளைக் குறைக்க உள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.
- அந்தப் பாதிக்கப்பட்ட மாநிலங்களாவன; அசாம், நாகாலாந்து, அருணாச்சலப் பிரதேசம் மற்றும் மணிப்பூர் ஆகியனவாகும்.
- நாடு முழுவதும் உள்ள, மோதல்களால் பாதிக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளையும் ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் ஒரு நோக்கத்துடன் 1958 ஆம் ஆண்டில் இந்தச் சட்டமானது இயற்றப்பட்டது.
- அசாம் மாநிலத்தில் உள்ள 23 மாவட்டங்களில் இச்சட்டம் முழுமையாக நீக்கப்பட்டு, ஒரு மாவட்டத்தில் மட்டும் பகுதியளவில் விதிக்கப்படும்.

- மணிப்பூர் மாநிலத்தில் உள்ள 6 மாவட்டங்களிலுள்ள 15 காவல்நிலையங்களில் ஆயுதப் படைகள் சிறப்பு அதிகாரச் சட்டத்தின் கீழான அதிகாரங்கள் விலக்கப்படும்.
- இந்த மாநிலத்திலுள்ள மற்றுமொரு மாவட்டத்தில் உள்ள இரு காவல் நிலையங்களின் அதிகார வரம்போடு 3 மாவட்டங்களில் மட்டும் இச்சட்டம் செல்லுபடியாகும்.
- நாகாலாந்து மாநிலத்தின் 7 மாவட்டங்களிலுள்ள 15 காவல் நிலையங்களில் இந்தச் சட்டத்தின் கீழான அதிகார வரம்புகள் விலக்கப்படும்.

## FASTER மென்பொருள்

- இந்தியத் தலைமை நீதிபதி N.V. ரமணா "மின்னணு ஆவணங்களின் விரைவான மற்றும் பாதுகாப்பானப் பரிமாற்றம்" என்ற ஒரு தளத்தினை வெளியிட்டார்.
- இது ஒரு பாதுகாப்பான மின்னணு ஊடகம் வழியாக, இடைக்கால தடை உத்தரவுகள், தடை உத்தரவுகள் மற்றும் ஜாமீன் உத்தரவுகளை சரியான அதிகாரிகளுக்கு அனுப்ப உச்ச நீதிமன்றத்திற்கு வழிவகை செய்கிறது.
- உச்ச நீதிமன்றப் பதிவகமானது தேசியத் தகவல் மையத்துடன் இணைந்து இந்த FASTER அமைப்பினை உருவாக்கியுள்ளது.

## வர்ணிகா

- பாரதிய ரிசர்வ் வங்கி நோட் முத்ரன் பிரைவேட் லிமிடெட் (BRBNMPL - Bharatiya Reserve Bank Note Mudran Private Limited) என்ற நிறுவனமானது கர்நாடகாவின் மைசூரு நகரில் "வர்னிகா" என்ற மை உற்பத்தி அலகு ஒன்றை நிறுவியுள்ளது.
- இது ஆண்டுக்கு 1,500 மெட்ரிக் டன் மையினைத் தயாரிக்கும் திறன் கொண்டதாகும்.
- இதன் மூலம் ரூபாய் நோட்டுகளின் பாதுகாப்பை அதிகரிக்க முடியும்.
- BRBNMPL என்பது முழுவதும் ரிசர்வ் வங்கிக்குச் சொந்தமான ஒரு துணை நிறுவனம் ஆகும்.
- சக்தி காந்த தாஸ் அவர்கள் (ரிசர்வ் வங்கியின் ஆளுநர்) இந்த மை உற்பத்திப் பிரிவைத் தொடங்கி வைத்தார்.
- இது 'மேக் இன் இந்தியா' முன்னெடுப்பிற்கான ஓர் ஊக்கமாக அமையும்.

## கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையம்

- இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை மேற்கொண்டுள்ளன.
- இது கொழும்பு நகரில், பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் மூலம் ஒரு கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்தை அமைப்பதற்கான ஒரு ஒப்பந்தமாகும்.
- இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான மோதல் ஒரு மையக் கட்டத்தை எட்டி உள்ள நிலையில், இது இந்தியப் பெருங்கடலின் ஒரு பிராந்தியத்தில் கடல்சார் ரீதியில் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்தச் செய்யும் என்பதால் இந்த ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் முக்கியமானதாகும்.

## இந்தியா-ஆஸ்திரேலியா பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக ஒப்பந்தம்

- இந்த ஒப்பந்தத்தின் கீழ், ஆஸ்திரேலியா தனது சந்தையில் உள்ள தோல், ஜவுளி, விளையாட்டுப் பொருட்கள் மற்றும் நகைகள் போன்ற 95 சதவீதத்திற்கும் அதிகமான இந்தியப் பொருட்களுக்கு வரியில்லா அணுகலை வழங்க உள்ளது.
- ஆஸ்திரேலியாவின் 9வது பெரிய வர்த்தகப் பங்குதார நாடாக இந்தியா உள்ளது.
- இந்தியாவின் வர்த்தக பங்குதார நாடுகளில், ஆஸ்திரேலியா 17வது இடத்தைப் பிடித்து உள்ளது.

## இந்திய அண்டார்டிக் மசோதா 2022

- 'அண்டார்டிக் மசோதாவை', சமீபத்தில் அரசு மக்களவையில் தாக்கல் செய்தது.
- அண்டார்டிகாவிற்கு மேற்கொள்ளப்படும் பயணங்கள் மற்றும் செயல்பாடுகள், அந்தக் கண்டத்தில் வசிக்கும் உயிரினங்களுக்குடையே ஏற்படக்கூடிய சாத்தியமான மோதல்கள் ஆகியவற்றை ஒழுங்குமுறைப் படுத்துவதை இது வலியுறுத்துகிறது
- இந்த மசோதா இந்தியக் குடிமக்களுக்கும் அங்கு வசிக்கும் வெளிநாட்டுக் குடிமக்களுக்கும் பொருந்தும்.
- இது அண்டார்டிக் சுற்றுச்சூழல் மற்றும் அது சார்ந்த மற்றும் அதனோடு தொடர்புடைய சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பதற்காக தேசிய நடவடிக்கைகளை வழங்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இந்தியக் காண்டாமிருகத்தின் எண்ணிக்கை




- காசிரங்கா தேசியப் பூங்கா மற்றும் புலிகள் காப்பகத்தில் உள்ள பெரிய ஒற்றைக் கொம்பு அல்லது இந்தியக் காண்டாமிருகங்களின் எண்ணிக்கையானது நான்கு ஆண்டுகளில் 200 வரை அதிகரித்துள்ளது.
- கடந்த 2018 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட காண்டாமிருகக் கணக்கெடுப்பின்படி, இந்த எண்ணிக்கையானது 2,413 ஆக இருந்தது.

- இந்தியக் காண்டாமிருகம் ஆனது பெரிய ஒற்றைக் கொம்பு காண்டாமிருகம் மற்றும் பெரிய இந்தியக் காண்டாமிருகம் என்றும் அழைக்கப்படுகிறது.
- இது இந்தியத் துணைக்கண்டத்தைத் தாயகமாகக் கொண்ட காண்டாமிருகம் ஆகும்.
- இது சர்வதேச இயற்கை வளங்காப்பு அமைப்பின் சிவப்புப் பட்டியலில் பாதிக்கப்படக் கூடிய இனம் என்றும், 1972 ஆம் ஆண்டு வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டத்தில் முதலாவது அட்டவணையிலும் பட்டியலிடப்பட்டுள்ளது.

## திருத்தப்பட்ட MGNREGA ஊதியங்கள்

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டத்தின் கீழ் புதிய ஊதிய விகிதங்களை மத்திய அரசு அறிவித்துள்ளது.
- இது 2022-23 ஆம் நிதியாண்டுக்கான ஊதிய விகிதம் ஆகும்.
- 34 ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும் மாநிலங்களுள், 21 ஒன்றியப் பிரதேசங்கள் 5 சதவீதத்திற்கும் குறைவான ஊதிய விகித உயர்வைப் பெற்றுள்ளன.
- 10 மாநிலங்களில் 5 சதவீதம் ஊதிய விகிதமானது உயர்த்தப்பட்டுள்ளது.
- மிசோரம், மணிப்பூர், திரிபுரா ஆகிய மாநிலங்களுக்கு எவ்வித உயர்வுகளும் வழங்கப் படவில்லை.
- ஊதிய விகிதங்களில் மேற்கொள்ளப்பட்ட இந்த மாற்றமானது ஒன்றிய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.
- 2022-23 ஆம் ஆண்டில் கோவா மாநிலத்தில் ஊதிய விகித உயர்வானது 7.14 சதவீதம் அதிகரித்து ஒரு நாளைக்கு ரூ.315 ஆக உயர்ந்துள்ளது.
- மேகாலயா மாநிலத்தில் ஊதிய விகிதமானது, 1.77 சதவீதம் அதிகரித்து ஒரு நாளைக்கு ரூ.230 என்ற அளவில் மிகக் குறைந்த உயர்வையே கண்டுள்ளது.
- தமிழ்நாடு, அசாம், புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் 2 சதவீதம் முதல் 3 சதவீதம் என்ற அளவிலான உயர்வினைக் கண்டுள்ளன.
- ஒரு நாளைக்கு ரூ. 331 என்ற விகிதத்தில் அதிக ஊதிய விகிதத்தை பெறும் ஹரியானா மாநிலத்தைத் தொடர்ந்து, கோவா ரூ. 315 என்ற விகிதத்திலும், அதைத் தொடர்ந்த இடத்தில் கேரளா, கர்நாடகா மற்றும் அந்தமான் & நிக்கோபார் தீவுகள் ஆகிய ஐந்து ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும் மாநிலங்கள் உள்ளன.
- குறைந்த ஊதிய விகிதம் கொண்ட 5 ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும் மாநிலங்கள் என்ற பிரிவில் திரிபுரா (ரூ.212), பீகார் (ரூ 210) ஆகியவையும் அதைத் தொடர்ந்து ஜார்க்கண்ட், சத்தீஸ்கர் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களும் உள்ளன.

## இந்தியப் பணவழங்கீட்டுச் சபையின் தலைவர்

- விஸ்வாஸ் படேல், 2022 ஆம் ஆண்டில் இரண்டாவது முறையாக இந்தியப் பண வழங்கீட்டுச் சபையின் தலைவராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- இவர் இதற்கு முன்னதாக 2018 ஆம் ஆண்டில் இந்தச் சபையின் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டார்.
- 2013 ஆம் ஆண்டில், இவர் இச்சபையின் இணைத் தலைவராக பணியாற்றினார்.
- இந்தியப் பணவழங்கீட்டுச் சபை என்பது ஒரு கட்டணச் சூழல் தொழில்துறை அமைப்பு ஆகும்.

- மேலும், இது இந்தியாவின் இணையம் மற்றும் கைபேசி சங்கத்தின் ஓர் அங்கமாகும்.
- இந்தியப் பணவழங்கீட்டுச் சபை, பணமில்லாத பரிவர்த்தனைச் சமூகத்தை மேம்படுத்துவதையும், இந்தியாவில் டிஜிட்டல் எண்ணிமக் கட்டணத்தை மேம்படுத்தச் செய்வதற்கான குறிக்கோளினையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## புத்தாக்க நிறுவனங்களின் நிறுவனர்கள் மையம்

- இந்தியாவில் உள்ள புத்தாக்க நிறுவனங்களின் நிறுவனர்களுக்காக மைக்ரோசாப்ட் நிறுவனம் ஒரு புதிய டிஜிட்டல் மற்றும் உள்ளார்ந்த தளத்தை அறிமுகப்படுத்தியது.
- இந்த தளமானது, 'புத்தாக்க நிறுவனங்களின் நிறுவனர்கள் மையத்திற்கான மைக்ரோ சாப்ட்' என்று அழைக்கப்படுகிறது.
- இது இந்தியாவிலுள்ள புத்தாக்க நிறுவனர்களின் தொடக்க காலத்தியப் பயணத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் அவர்களுக்கு ஆதரவளிக்கும்.
- தொழில் வல்லுநர்கள் மற்றும் மைக்ரோசாஃப்ட் கற்றல் தளம் ஆகியவற்றின் மூலம் வழிகாட்டுதல் மற்றும் திறன் சார்ந்த வாய்ப்புகளைப் பெற இந்த முயற்சி புத்தாக்க நிறுவனங்களுக்கு உதவும்.

## மாநிலங்களவையில் பாஜக 100 இடங்களுக்கும் மேல் கைப்பற்றல்

- அசாம், திரிபுரா மற்றும் நாகாலாந்து ஆகிய மாநிலங்களில் தலா ஒரு தொகுதியில் வெற்றி பெற்ற பிறகு, 1990 ஆம் ஆண்டிற்குப் பிறகு மாநிலங்களவையில் 100 இடங்களை எட்டிய முதல் கட்சி என்ற பெருமையைப் பாஜக பெற்றது.
- ஆறு மாநிலங்களில் உள்ள 13 மாநிலங்களவை இடங்களுக்குச் சமீபத்தில் நடைபெற்ற இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற்றத் தேர்தலில், பஞ்சாப்பில் பாஜக தனது வலுவான ஒரு இடத்தை இழந்தது.
- ஆனால் அது மூன்று வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் இமாச்சலப் பிரதேசத்தில் தலா ஒரு இடத்தைப் பெற்றது.

## ஒளிபரப்பு சேவைத் தளம்

- தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சர் அனுராக் தாகூர், அந்த அமைச்சகத்தின் ஒளிபரப்பு சேவைத் தளத்தினைத் தொடங்கி வைத்தார்.
- நம் நாட்டின் ஊடகம் மற்றும் பொழுதுபோக்குத் துறைகள் மிகவும் விரைவாக வளர்ந்து வருகின்றன.
- இது அடுத்த 2 ஆண்டுகளில், தற்போதுள்ள 25 பில்லியன் டாலர் மதிப்பினைக் கடந்து 30 பில்லியன் டாலர் என்ற வரம்பினை எட்டும்.
- இந்தியாவில் 1762க்கும் மேற்பட்ட பல்சேவை மையங்கள், 900க்கும் மேற்பட்ட செயற்கைக் கோளால் இயங்கும் தொலைக்காட்சி நிறுவனங்கள், 380க்கும் மேற்பட்ட FM அலைவரிசைகள் மற்றும் 350 சமூக ரேடியோ நிலையங்கள் உள்ளன.
- இந்தத் தளமானது மேக் இன் இந்தியா, வணிகம் செய்தலை எளிமையாக்கல் திட்டம் மற்றும் டிஜிட்டல் இந்தியா முன்னெடுப்பு ஆகியவற்றுள் அடங்கும்.

## மரபணு திருத்தப்பட்டத் தாவரங்கள்




- ❖ மரபணு மாற்றப்பட்டப் பயிர்களுக்கு, இந்தியாவில் விதிக்கப்பட்டுள்ள சில கடுமையான கட்டுப்பாடுகளிலிருந்து சில குறியிட்ட வகையிலான மரபணு திருத்தப் பட்ட பயிர் வகைகளுக்கு மட்டும் முதல்முறையாக விலக்கு அளித்து இந்திய அரசு ஆணை ஒன்றைப் பிறப்பித்துள்ளது.
- ❖ இவ்வகைப் பயிர்களை உருவாக்குதல் மற்றும் அதன் ஆராய்ச்சிக்கு இந்த ஆணை ஓர் உத்வேகத்தை அளிக்கும்.
- ❖ சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகமானது, SDN-1 மற்றும் SDN-2 ஆகிய மரபணு மாற்றப்பட்டத் தாவரங்களுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் 7 முதல் 11 வரையிலான விதிகளிலிருந்து விலக்கு அளித்துள்ளது.
- ❖ விதி – 1989 என்ற மரபணு மாற்றப்பட்ட பயிர்கள் என்ற விதியின் கீழ் தீங்கு விளைவிக்கக் கூடிய நுண்ணுயிரிகளை அல்லது மரபணு ரீதியில் உருவாக்கப் பட்ட செல்களைத் தயாரித்தல், இறக்குமதி செய்தல் (அ) பயன்படுத்துதல் (அ) ஏற்றுமதி செய்தல் மற்றும் சேமித்தல் போன்றவற்றிற்காக இவற்றிற்கு விலக்கு அளிக்கப்பட்டது.
- ❖ 2020 ஆம் ஆண்டு முதல் நிலுவையிலுள்ள மரபணு மாற்றப்பட்டத் தாவரங்கள் தொடர்பான வழிகாட்டுதல்களுக்கு ஒப்புதல் வழங்கி அறிவிப்பதற்கு இந்த ஆணை அரசிற்கு உதவும்.
- ❖ 2012 ஆம் ஆண்டில் மரபணுத் திருத்த முறையானது கண்டுபிடிக்கப்பட்டது.

## உப்லப்த் நடவடிக்கை

- ❖ சட்டவிரோதமான முறையில் பயணச்சீட்டு வழங்குதல் தொடர்பான ஒரு மாத கால அளவிலான நடவடிக்கையின் (இந்தியா முழுவதுமான) ஒரு பகுதியாக, 1,459 தரகர்களைக் கைது செய்து, 366 IRCTC முகவர் அடையாளக் குறியீடுகள் மற்றும் 6751 தனி நபர் அடையாளக் குறியீடுகளை ரயில்வே பாதுகாப்புப் படை முடக்கியதாக 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 02 அன்று இரயில்வே நிர்வாகம் அறிவித்தது.

- திருவிழா மற்றும் கோடைக்கால நெரிசல் காரணமாக, முன்பதிவு செய்யப்படும் பயணச் சீட்டுகளுக்கான தேவை கடுமையாக அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்புடன், நீண்ட தூர இரயில் சேவைகள் தொடங்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்த நடவடிக்கை என்பது தொடங்கப்பட்டது.

## ஹீருன் சுயமாக முன்னேறிய உலகின் மிகப்பெரிய செல்வந்தப் பெண்மணிகள் - 2022

- பயோகான் நிறுவனத்தின் கிரண் மஜூம்தார்-ஷா, நைக்கா நிறுவனத்தின் ஃபல்குனி நாயர் மற்றும் ஜோஹோ நிறுவனத்தின் ராதா வேம்பு ஆகியோர் 2022 ஆம் ஆண்டின் ஹீருன் சுயமாக முன்னேறிய உலகின் மிகப்பெரிய செல்வம் மிக்க பெண்மணிகள் என்ற பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.
- சீனாவின் பெய்ஜிங் நகரைச் சேர்ந்த வூ யஜீன் என்ற ஒரு சொத்து மேம்பாட்டு நிபுணர் இப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளார்.
- இவரின் சொத்து மதிப்பு 17 பில்லியன் டாலராகும்.
- நைக்கா நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியும் நிறுவனருமான ஃபல்குனி நாயர் 7.6 பில்லியன் டாலர் சொத்து மதிப்புடன் முதல் 10 இடங்களில் இடம் பெற்று உள்ளார்.
- ராதா வேம்பு 3.9 பில்லியன் டாலர் சொத்து மதிப்புடன் இந்தியாவின் 2வது சுயமாக முன்னேறிய செல்வம் மிக்க பெண்மணியாகத் திகழ்கிறார்.
- ஹீருண் பட்டியலில் இவர் 25வது இடத்தில் உள்ளார்.
- பயோகான் பயோலாஜிக்ஸ் மற்றும் பயோகான் லிமிடெட் நிறுவனத்தின் நிறுவனரும் செயல் தலைவருமான கிரண் மஜூம்தார்-ஷா 3.8 பில்லியன் டாலர் என்ற அளவிலான சொத்து மதிப்புடன் இப்பட்டியலில் 26வது இடத்தில் உள்ளார்.

## HDFC லிமிடெட் மற்றும் HDFC வங்கி

- இந்தியாவின் மிகப்பெரிய ஒரு தனியார் துறை வங்கியான HDFC வங்கியினை HDFC கழகத்துடன் (வீட்டுவசதி மேம்பாட்டு நிதிக் கழகம்) இணைப்பதற்கு HDFC நிறுவனத்தின் இயக்குநர்கள் வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த ஒப்பந்தமானது வங்கியின் வீட்டு வசதிக் கடன் துறையினை உருவாக்கி, அதன் தற்போதைய நுகர்வோர் பரவலையும் மேம்படுத்தும்.
- இதன் பின்பு HDFC வங்கியானது எந்த ஒரு அடையாளம் காணப்பட்ட ஊக்குவிப்புக் குழுமம் எதுவுமின்றி 100% என்ற அளவில் ஒரு பட்டியலிடப்பட்ட நிறுவனமாக மாறும்.
- இந்த இணைப்பு ஒப்பந்தத்திற்குப் பிறகு, HDFC லிமிடெட்டின் தற்போதைய பங்கு தாரர்கள் HDFC வங்கியில் 41% பங்குகளை வைத்திருப்பார்கள்.

## 2021-22 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் ஏற்றுமதி மதிப்பு

- 2021-22 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் சரக்கு ஏற்றுமதி 418 பில்லியன் டாலர்களை எட்டியது.


- சரக்கு ஏற்றுமதியின் உயர்வில் முக்கியப் பங்கு வகித்த துறைகளில் பொறியியல், பெட்ரோலியப் பொருட்கள், நகைகள், இரத்தினங்கள், மருந்துப் பொருட்கள் மற்றும் வேதிப் பொருட்கள் ஆகியவையும் அடங்கும்.
- 2021-22 ஆம் நிதியாண்டின் போது நாட்டின் சரக்கு வர்த்தகமானது, (இறக்குமதி மற்றும் ஏற்றுமதி) 1 டிரில்லியன் டாலர்களை எட்டியது.
- இந்திய இறக்குமதிகளின் மதிப்பும், ஒரு சாதனை அளவான 610 பில்லியன் டாலர்களை எட்டியது.
- 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு அனுப்பப் பட்ட சரக்கு மதிப்பும் ஒரு சாதனை அளவான 40.38 பில்லியன் டாலர்களை எட்டியது.
- 2021-21 ஆம் ஆண்டில், நாட்டின் சரக்கு ஏற்றுமதியின் மதிப்பு 292 பில்லியன் டாலர்கள் ஆகும்.
- 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையிலான காலக் கட்டத்தில் வேளாண் ஏற்றுமதியின் மதிப்பு 48 பில்லியன் டாலர்களைக் கடந்தது.
- பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுவதில் முன்னிலையிலுள்ள நாடுகள்: அமெரிக்கா, வங்காள தேசம், ஐக்கிய அரபு அமீரகம், சிங்கப்பூர், நெதர்லாந்து, ஐக்கிய இராஜ்ஜியம், ஹாங் காங், ஜெர்மனி மற்றும் பெல்ஜியம் ஆகிய நாடுகளாகும்.




## பேரழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்களுக்கு நிதியளிப்பதைத் தடை செய்வதற்கான மசோதா

- பேரழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்களுக்கு நிதியுதவி வழங்கச் செய்வதைத் தடை செய்திடவும், அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடும் மக்களின் நிதிச் சொத்துகள் மற்றும் பொருளாதார வளங்களை முடக்கவும், அவற்றைப் பறிமுதல் செய்யவும் அல்லது அவற்றை இணைத்துக் கொள்ளவும் வேண்டி மத்திய அரசுக்கு அதிகாரம் அளிக்கும் ஒரு மசோதாவானது மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.

- 2005 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பேரழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்கள் மற்றும் அவற்றின் விநியோக முறைகள் (சட்டவிரோத நடவடிக்கைகள் தடை) சட்டமானது, பேரழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்களைத் தயாரிப்பதை மட்டுமே தடை செய்தது.




## ஒருங்கிணைந்த உயிரிச் சுத்திகரிப்பு நிலையங்கள் திட்டம்

- டாக்டர். ஜிதேந்திர சிங், ஒருங்கிணைந்த உயிரிச் சுத்திகரிப்பு நிலையங்கள் என்ற தூய எரிசக்தி முன்னெடுப்பினைத் தொடங்கி வைத்தார்.
- பல்வேறு பொது-தனியார் கூட்டணிகள் மூலம் நாடு முழுவதும் உள்ள தூய எரிசக்தி அமைப்புகளை மேம்படுத்துதல் மற்றும் அவற்றை விரைவுபடுத்துதல் என்ற ஒரு புதிய நோக்கத்துடன் இந்தத் திட்டமானது தொடங்கப்பட்டுள்ளது.
- "புத்தாக்கத் திட்டத்தின்" மூலம் அடையக்கூடிய குறைந்த கார்பன் உமிழ்வுடைய ஒரு எதிர்காலத்தினை அடைவதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை மனதில் கொண்டு இந்தத் திட்டமானது தொடங்கப்பட்டுள்ளது.

## பிரகிருதி

- 'பிரகிருதி' என்ற ஒரு உருவச் சின்னத்தை மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் பூபேந்திர யாதவ் வெளியிட்டார்.
- நாட்டின் எதிர்காலச் சந்ததியினருக்கு ஏற்ற சிறந்த சூழலுக்குப் பங்களிக்கக் கூடிய சிறிய மாற்றங்கள் குறித்து நாட்டு மக்களிடையே ஒரு விழிப்புணர்வைப் பரப்பும் நோக்கத்துடன் இந்தச் சின்னமானது வெளியிடப்பட்டது.
- 'பிரகிருதி' என்ற சின்னத்தின் வெளியீடு, ஒருமுறை மட்டுமேப் பயன்படுத்தக்கூடிய நெகிழிகளை ஒழிப்பதற்கான மற்றொரு படியை எடுத்துள்ளது.

## அரசியலமைப்பு (பட்டியலிடப்பட்டச் சாதிகள் மற்றும் பழங்குடியினர்) ஆணைகள் (இரண்டாவது திருத்தம்) மசோதா, 2022

- உத்தரப் பிரதேசத்தின் நான்கு மாவட்டங்களில் உள்ள கோண்ட் சமூகத்தை ஒரு பட்டியலினச் சாதியினர் என்ற பட்டியலில் வைப்பதற்காக இயற்றப்பட்ட 1950 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (பட்டியலிடப்பட்டச் சாதிகள்) ஆணையை இது திருத்துகிறது.
- இந்த நான்கு மாவட்டங்களில் உள்ள கோண்ட், துரியா, நாயக், ஓஜா, பதரி மற்றும் ராஜ்கோண்ட் சமூகங்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க இது முயல்கிறது.
- ஜார்க்கண்டில் உள்ள பட்டியலிடப்பட்டச் சாதிகள் பட்டியலில் இருந்து போக்தா (Bhogta) என்ற சமூகத்தைத் தவிர்க்கவும் இது திருத்தம் செய்கிறது.

## 3வது தேசிய நீர் விருதுகள்

- இந்திய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் மூன்றாவது தேசிய நீர் விருதுகளை வழங்கி உள்ளார்.
- நீர்வள மேலாண்மைத் துறையில் முன்மாதிரியான ஒரு பணிக்காக இது வழங்கப் படுகிறது.
- மேலும் அவர் ‘ஜல் சக்தி அபியான்: 2022 ஆம் ஆண்டிற்கான மழை நீரைச் சேமியுங்கள் பிரச்சாரம்’ என்ற பிரச்சாரத்தினைப் புது தில்லியில் தொடங்கினார்.
- உத்தரப் பிரதேசம் முதல் பரிசையும், அதனைத் தொடர்ந்து ராஜஸ்தான் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசினையும் பெற்றுள்ளன.
- தமிழ்நாட்டின் மதுரை மாநகராட்சி, "சிறந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு" பிரிவில் விருது பெற்ற மாநகராட்சிகளுள் ஒன்றாகும்.
- செங்கல்பட்டு மாவட்டத்தின் வெள்ளப் புத்தூர் ஊராட்சி தமிழ்நாடு "சிறந்த கிராம ஊராட்சி" என்ற பிரிவில் விருது பெற்ற ஊராட்சிகளுள் ஒன்றாகும்.
- புதுச்சேரி காவேரிப்பட்டினம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருவள்ளூர் அமலோற்பவம் ஹூர்து அகாடமி, உத்தரப் பிரதேச மாநிலம் நொய்டாவில் உள்ள அமிட்டி இன்டர்நேஷனல் பள்ளி ஆகியன சிறந்தப் பள்ளி என்ற பிரிவில் விருதுகளை வென்றன.

## சன்சத் ரத்னா விருது 2022 - 12வது பதிப்பு

- இது பிரைம் பாயின்ட் என்ற அறக்கட்டளையால் வழங்கப்பட்டது.
- சன்சத் ரத்னா விருதுகள் குழுவுக்கு நாடாளுமன்ற விவகாரங்களுக்கான இணை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் தலைவராகவும் இந்தியாவின் முன்னாள் தலைமை தேர்தல் ஆணையர் டி எஸ் கிருஷ்ணமூர்த்தி இணைத் தலைவராகவும் இருந்தனர்.
- PRS இந்தியா என்ற ஒரு அமைப்பு வழங்கிய தரவுகளின் அடிப்படையில் 17வது மக்களவையின் தொடக்கத்தில் இருந்து 2021 ஆம் ஆண்டின் குளிர்காலக் கூட்டத் தொடர் முடியும் வரை அவர்களின் ஒட்டு மொத்தச் செயல்திறனின் அடிப்படையில் விருது பெற்றவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.
- இந்தப் பதிப்பின் புதிய அம்சமான வாழ்நாள் சாதனையாளர் ஏபிஜே அப்துல் கலாம் விருதானது தமிழ்நாட்டின் முன்னாள் சுகாதாரத் துறை அமைச்சரான எச் வி

ஹண்டேவுக்கு வழங்கப்பட்டது.

- கர்நாடக முன்னாள் முதல்வர் வீரப்ப மொய்லிக்கும் இந்த விருது வழங்கப்பட்டது.
- இந்தப் பதிப்பில் மொத்தம் 11 பாராளுமன்ற உறுப்பினர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

| |
|---|
| 1) Nationalist Congress Party – Sule (Maharashtra) |
| 2) Revolutionary Socialist Party - N K Premachandran (Kerala) |
| 3) Shiv Sena - Shrirang Appa Barne (Maharashtra) |
| 4) Trinamool Congress - Saugata Roy (West Bengal) |
| 5) Congress MP Kuldeep Rai Sharma (Andaman and Nicobar Islands) |
| 6) Bharatiya Janata Party - Bidyut Baran Mahato (Jharkhand) |
| 7) Bharatiya Janata Party - Heena Vijayakumar Gavit (Maharashtra) |
| 8) Bharatiya Janata Party - Sudhir Gupta (Madhya Pradesh) |
| 9) Biju Janata Dal - Amar Patnaik (Odisha) |
| 10) Nationalist Congress Party - Fauzia Tahseen Ahmed Khan (Maharashtra) |
| 11)Communist Party of India (Marxist) K K Ragesh (Kerala) |

## இந்தியாவின் வேளாண் ஏற்றுமதி

- 2021-22 ஆம் நிதியாண்டில் (FY22) முதல் முறையாக இந்தியாவின் வேளாண் ஏற்றுமதி மதிப்பு என்பது 50 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பைத் தாண்டியது.
- அரிசி (9.65 பில்லியன் டாலர்), கோதுமை (2.19 பில்லியன் டாலர்), சர்க்கரை (4.6 பில்லியன் டாலர்) மற்றும் பிற தானியங்கள் (1.08 பில்லியன் டாலர்) போன்ற முக்கியப் பொருட்கள் இதுவரை இல்லாத அளவுக்கு அதிகளவில் ஏற்றுமதி செய்யப் பட்டுள்ளன.
- உலக அரிசிச் சந்தையில் இந்தியா கிட்டத்தட்ட 50% வர்த்தகத்தைக் கைப்பற்றி உள்ளது.



## சுகாதார முன்னோடித் திட்டம்

- இந்திய அரசின் கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்பண்ணைத் துறையானது உத்தர காண்டில் ஒரு சுகாதாரக் கட்டமைப்பை சுகாதார ஆதரவு அலகு மூலம் செயல்படுத்தச் செய்வதற்கான ஒரு முன்னோடித் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இந்த ஒரு முன்னோடித் திட்டத்தின் மூலம் கற்றுக் கொண்ட பல அனுபவங்களின் அடிப்படையில் தேசிய சுகாதாரச் செயல்திட்டத்தை உருவாக்குவதே இதன் முக்கிய குறிக்கோள் ஆகும்.
- இந்திய அரசின் தலைமை அறிவியல் ஆலோசகர் தலைமையில் அமைக்கப்பட்ட அமைச்சகங்களுக்கு இடையேயான ஒரு சுகாதாரக் குழுவானது இந்த சுகாதார ஆதரவு அலகினைச் செயல்படுத்தும்.

## செவிலியர் மற்றும் மக்கள் தொகை விகிதம்

- இந்தியாவில், 1000 மக்கள்தொகைக்குத் தற்போதுள்ள செவிலியர்களின் விகிதமானது 1.96 : 1000 ஆகும்.
- இந்தத் தகவலை மத்திய சுகாதார அமைச்சகம் மாநிலங்களவையில் தெரிவித்தது.
- இந்தியச் செவிலியர் சபையின் ஆவணங்களின் படி, இந்தியாவில் சுமார் 33.41 லட்சம் பதிவு செய்யப்பட்ட செவிலியர்கள் உள்ளனர்.

## கஞ்சர் 2022

- இந்தியா மற்றும் கிர்கிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு இடையிலான 9வது கூட்டுச் சிறப்புப் படைப் பயிற்சியானது இமாச்சலப் பிரதேசத்தின் பக்லோவில் உள்ள சிறப்புப் படைப் பயிற்சிப் பள்ளியில் நடத்தப் பட்டது.
- இப்பயிற்சியில் இந்தியா மற்றும் கிர்கிஸ்தானைச் சேர்ந்த சிறப்புப் படைக் குழுக்கள், மோதலின் போது ஏற்படும் தற்போதைய மற்றும் வளர்ந்து வரும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்கான தந்திரோபாயங்கள், நுட்பங்கள் மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் தங்கள் அனுபவத்தையும் சிறந்த நடைமுறைகளையும் பகிர்ந்து கொண்டன.

## இந்தியச் சுதந்திரப் போராட்டம் குறித்த கண்காட்சி

- இந்தியச் சுதந்திரப் போராட்டத்தை விளக்கும் கண்காட்சி ஒன்று பாராளுமன்ற நூலகத்தில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.
- கல்வி அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்திய வரலாற்று ஆராய்ச்சிச் சபையானது இந்த கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளது.
- இந்தக் கண்காட்சி 1757 முதல் 1947 வரையிலான இந்திய நாட்டு மக்களின் சுதந்திரப் போராட்டத்தை காட்சிப்படுத்தியது.


## சணல் மூலப்பொருள் - குறைந்தபட்ச ஆதரவு விலை

- 2022-2023 ஆம் ஆண்டின் பருவகாலத்திற்கான சணல் மூலப்பொருளின் குறைந்தபட்ச ஆதரவு விலையை (MSP) பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு அங்கீகரித்துள்ளது.
- 2022-2023 ஆம் ஆண்டின் பருவகாலத்திற்கு சணல் மூலப்பொருளின் குறைந்தபட்ச ஆதரவு விலையானது குவிண்டாலுக்கு 4,750 ரூபாய் என்ற அளவில் நிர்ணயிக்கப் பட்டுள்ளது.
- இது முந்தையப் பருவ காலத்தினைக் காட்டிலும் 250 ரூபாய் அதிகமாகும்.




## முல்லைப் பெரியாறு அணைத் தீர்ப்பு

- மத்திய நீர்வள ஆணையத் தலைவரை மேற்பார்வைக் குழுத் தலைவராக்க வேண்டும் என்று கேரளா கோரிக்கை விடுத்திருந்தது.
- இதற்கு மத்திய அரசு எதிர்ப்பு தெரிவித்தது.
- கண்காணிப்புக் குழுவின் தற்போதையத் தலைவரை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை என்று மத்திய அரசு கருதியது.
- முல்லைப் பெரியாறு வழக்கில் தேசிய அணைப் பாதுகாப்பு ஆணையத்தின் சட்டப் பூர்வ அதிகாரமானது, மேற்பார்வைக் குழுவிடம் தற்காலிகமாக மாற்றப்படும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- இரு மாநிலங்களிலிருந்தும் தலா ஓர் உறுப்பினர் அந்தக் குழுவில் சேர்க்கப்பட்டு, கண்காணிப்புக் குழு மேலும் பலப்படுத்தப்படும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- இந்தக் குழுவை மறுசீரமைப்பதற்கு மத்திய அரசும் ஒப்புக் கொண்டுள்ளது.
- ஒவ்வொரு குழுவிலும் கேரளா மற்றும் தமிழ்நாடு மாநிலங்களின் பிரதிநிதிகள் இடம் பெறுவார்கள்.



## பனாரசி பஷ்மினா

- ❖ சமீபத்தில், காதி மற்றும் கிராமத் தொழில்துறை ஆணையமானது (KVIC) சுய-நிலைத் தன்மை மற்றும் கைவினைஞர் படைப்பாற்றலை மேம்படுத்தச் செய்வதற்காக வேண்டி "பனாரசி பஷ்மினா" என்ற இழையை அறிமுகப்படுத்தியது.
- ❖ லே-லடாக் மற்றும் ஜம்மு & காஷ்மீர் பகுதிகளுக்கு வெளியே பஷ்மினா பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- ❖ இது லே-லடாக், டெல்லி மற்றும் வாரணாசி ஆகிய பகுதிகளில் உள்ள பல்வேறு கலைத் திறன்களின் ஒரு கலவையை உருவாக்குகிறது.
- ❖ இது லடாக்கில் பெண்களுக்கு நிலையான வேலை வாய்ப்புகளை உருவாக்குவதையும் வாரணாசியில் உள்ள பாரம்பரிய நெசவாளர்களின் திறன்களைப் பல்வகைப் படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## Tour of Duty திட்டம்

- ❖ இராணுவ விவகாரங்கள் துறையானது "Tour of Duty" (TOD) திட்டத்தினை உறுதி செய்து உள்ளது.
- ❖ இது இராணுவப் படைகளில் வருங்காலத்தில் மேற்கொள்ளப்படும் ஆள் சேர்ப்பிற்கான ஒரு தீவிரமான திட்டமாகும்.
- ❖ இந்தத் திட்டத்தின் கீழ் அவசரத் தேவையின் அடிப்படையில் 3 முதல் 5 ஆண்டுகளுக்கு மட்டுமே இளைஞர்கள் இராணுவ வீரர்களாக நியமிக்கப் படுவர்.
- ❖ இது இராணுவ நவீனமயமாக்கல் செயல்முறையை மோசமாகப் பாதிக்கின்ற அதிக சம்பளம் மற்றும் ஓய்வூதியச் செலவுகளைக் கட்டுக்குள் கொண்டு வரும்.
- ❖ இத்திட்டமானது அவர்களுக்கு எந்தவொரு ஓய்வூதியப் பயன்களையும் வழங்காது.
- ❖ 'அக்னிபாத்' பணி சேர்ப்பு என்ற அழைக்கப்பட உள்ள இத்திட்டமானது, ஆரம்பத்தில் சோதனை அடிப்படையில் தொடங்கப்பட உள்ளது.

## தேசிய சுகாதார ஆணையத்தின் சுகாதார நலத் திட்டம்



- 2022 ஆம் ஆண்டிற்கான புதிய சுகாதார நலத்திட்டமானது, ஆயூஷ்மான் பாரத் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா திட்டத்தின் கீழ் தேசிய சுகாதார ஆணையத்தினால் தொடங்கப் பட்டுள்ளது.
- தேசிய சுகாதார ஆணையத்தின் சுகாதார நலத் திட்டத்தின் புதிய அறிவிப்பில் 365 புதிய நடைமுறைகள் சேர்க்கப்பட்டதையடுத்து, இந்தத் திட்டத்தின் கீழான மொத்த மருத்துவ வசதிகளின் எண்ணிக்கை 1949 ஆக உயர்ந்தது.
- இந்தத் திட்டத்தின் கீழ், நகரத்தின் வகை மற்றும் மருத்துவ நலன் ஆகியவற்றின் அடிப்படையில் வகையீட்டு விலையானது நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- இத் திட்டமானது தமிழ்நாட்டின் மகாபலிபுரத்தில் நடைபெற்ற 2 நாட்கள் அளவிலான சந்திப்பில் தொடங்கப்பட்டது.

## அடல் புத்தாக்கத் திட்டம்

- 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையில் அடல் புத்தாக்கத் திட்டத்தினைத் தொடரச் செய்வதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- 10,000 அடல் மேம்பாட்டு ஆய்வகங்களையும் 101 அடல் புத்தாக்கக் காப்பு மையங்களையும் உருவாக்குதல் மற்றும் அடல் புதிய இந்தியா சவால்கள் திட்டம் மூலம் 200 தொழில்முனைவோருக்கு ஆதரவளித்தல் உள்ளிட்ட இலக்குகளை இந்தத் திட்டம் கொண்டுள்ளதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- பள்ளிகள், பல்கலைக் கழகம், ஆராய்ச்சி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில்துறை நிலைகளில் ஈடுபடுவதன் மூலம் நாடு முழுவதும் புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவிற்கான ஒரு சூழலமைவினை உருவாக்குவதே இதன் இலக்காகும்.

## குழாய் வழிச் செல்லும் இயற்கை எரிவாயுவில் பசுமை ஹைட்ரஜன்

- கவாஸ் என்னுமிடத்திலுள்ள தேசிய அனல்மின் கழகத்திற்குச் சொந்தமான குஜராத் எரிவாயு லிமிடெட் நிறுவனத்தின் குழாய்வழிச் செல்லும் இயற்கை எரிவாயுக் கட்டமைப்பில் பசுமை ஹைட்ரஜனை கலக்கும் ஒரு முயற்சியினை தேசிய அனல்மின் கழகம் மேற்கொண்டுள்ளது.
- இந்த அற்புதமானத் திட்டமானது நாட்டிலேயே இதுபோன்ற முதல் முயற்சியாகும்.
- இது சமையல் துறையைக் கார்பன் இல்லாத ஒரு துறையாக மாற்றி இந்தியாவினை ஆற்றல் திறனில் தன்னிறைவு அடையச் செய்வதற்கான ஒரு நடவடிக்கையாகும்.

## AVSAR முன்னெடுப்பு

- இந்திய விமானநிலைய ஆணையமானது, "AVASAR" என்ற ஒரு முன்னெடுப்பினை தொடங்கியுள்ளது.
- இது பெண்கள், கலைஞர்கள் மற்றும் கைவினைஞர்களின் திறமைகளை ஊக்குவித்து, அவர்களுக்கானச் சரியான வாய்ப்புகளை வழங்குவதற்கான ஒரு முயற்சியாகும்.
- AVSAR என்பதன் விரிவாக்கம், "Airport as Venue for Skilled Aritisans of the Region" (விமான நிலையத்தினைக் கைவினைஞர்களுக்கான இடமாக மாற்றுதல்) என்பதாகும்.

## BRBNMPL நிறுவனத்தின் கற்றல் மற்றும் மேம்பாட்டு மையம்

- கர்நாடகாவின் மைசூரு நகரில் பாரதிய ரிசர்வ் வங்கிப் பண முத்ரன் நிறுவனத்தின் கற்றல் மற்றும் மேம்பாட்டு மையத்திற்கு இந்திய ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்தி காந்த தாஸ் அடிக்கல் நாட்டினார்.
- இந்த நிறுவனமானது முழுவதும் இந்திய ரிசர்வ் வங்கிக்குச் சொந்தமான அதன் ஒரு துணை நிறுவனமாகும்.
- இந்தியப் பத்திர அச்சடிப்பு மற்றும் நாணயத் தயாரிப்புக் கழக நிறுவனம் மற்றும் இந்திய வங்கிப் பணத்தாள் ஆலை (தனியார்) நிறுவனம் ஆகியவற்றின் ஒரு தீவிர ஆதரவுடன் இந்தக் கற்றல் மற்றும் மேம்பாட்டு மையமானது நிறுவப்படுகிறது.

## இந்தியா – அமெரிக்கா 2 + 2 அமைச்சர்கள் பேச்சுவார்த்தை


- இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகியன தங்களுக்கு இடையிலான 2+2 பாதுகாப்பு மற்றும் வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் பேச்சுவார்த்தையினை வாசிங்டன் நகரில் நடத்தின.
- பிடென் ஆட்சியின் கீழ் நடைபெறும் இத்தகைய முதல் பேச்சுவார்த்தை இதுவாகும்.
- இந்தப் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து, விண்வெளி சார்ந்த சூழலியல் விழிப்பு உணர்வு தொடர்பான ஒரு ஒப்பந்தமும் கையெழுத்தாக உள்ளது.

## பினாகா mk-1 மேம்படுத்தப்பட்ட ராக்கெட் அமைப்பு

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு மற்றும் இந்திய ராணுவம் ஆகியவை இணைந்து பினாக்கா ராக்கெட் அமைப்பின் புதிய வடிவமைப்பினை, பொக்ரான் சோதனை தளத்தில் வைத்து வெற்றிகரமாக பரிசோதனை செய்தது.
- இதில் பினாகா mk-1 மேம்படுத்தப்பட்ட ராக்கெட் அமைப்பு மற்றும் நிலப் பரப்பினை கையகப்படுத்துதலைத் தவிர்க்கும் பினாகா ராக்கெட் ஆயுத அமைப்பு ஆகியவை அடங்கும்.
- இதன்மூலம், பினாகா mk-1 மேம்படுத்தப்பட்ட ராக்கெட் அமைப்பின் தொழில்நுட்ப ஆய்வுகளுக்கான முதல் கட்டமானது வெற்றிகரமாக நிறைவடைந்தது.
- மேலும் இந்த அமைப்பினைப் பரிசோதனை செய்வதற்கும் தொடர் உற்பத்தி செய்வதற்கும் தொழில் துறை நிறுவனங்கள் தயாராக உள்ளன.

## திட எரிபொருள் குழாயுடைய ராம்ஜெட் உந்துவிசை கருவி

- திட எரிபொருள் குழாயுடைய ராம்ஜெட் உந்துவிசை ஏவுகணை அமைப்பினை இந்தியா வெற்றிகரமாகப் பரிசோதித்தது.
- இந்தப் பரிசோதனையானது, ஒடிசாவின் சந்திப்பூரிலுள்ள ஒருங்கிணைந்தப் பரிசோதனை தளத்தில் மேற்கொள்ளப்பட்டது.
- இந்தியாவின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பானது இந்த ஏவுகணை அமைப்பினை உருவாக்கும் பணியை 2017 ஆம் ஆண்டில் தொடங்கியது.




Ramjet Propulsion system configuration

## தேசியப் புலிகள் வளங்காப்பு ஆணையத்தின் அமர்வு

- அருணாச்சலப் பிரதேசத்தில் நடத்தப் பட்ட தேசியப் புலிகள் வளங்காப்பு ஆணையத்தின் 20வது அமர்விற்கு ஒன்றிய சுற்றுச்சூழல் அமைச்சர் பூபேந்தர் யாதவ் தலைமை ஏற்றார்.
- இந்த அமர்வானது, அருணாச்சலப் பிரதேசத்தின் பக்கே புலிகள் காப்பகத்தில் நடத்தப் பட்டது.
- தேசியத் தலைநகரைத் தவிர்த்து வேறு ஓர் இடத்தில் தேசியப் புலிகள் வளங்காப்பு ஆணையத்தின் அமர்வு நடைபெறுவது இதுவே முதல்முறையாகும்.
- புலிகள் வளங்காப்பகங்களுக்கான ஒரு காட்டுத் தீ தணிக்கை நெறிமுறையை இந்த ஆணையம் வெளியிட்டுள்ளது.
- முழு சுழற்சி அளவில் காட்டுத்தீ நிகழ்வுகளுக்கான தயார்நிலை மற்றும் மேலாண்மை செய்தல் ஆகியவற்றை மதிப்பீடு செய்வதில் இது புலிகள் வளங்காப்பு மேலாண்மை அதிகாரிகளுக்கு உதவும்.


## சீமா தர்ஷன் திட்டப் பணி

- மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அமித் ஷா சீமா தர்ஷன் திட்ட பணிகளைத் தொடங்கி வைத்தார்.
- இது குஜராத்தின் பனாஷ்கந்தா மாவட்டத்தில் அமைந்த இந்திய-பாகிஸ்தான் எல்லையில் அமைந்துள்ள நாதாபேட் என்னுமிடத்தில் தொடங்கப்பட்டது.
- இது நமது எல்லையில் பணி புரியும் எல்லைப் பாதுகாப்புப் படையினரின் வாழ்க்கை மற்றும் பணியினைப் பற்றி மக்கள் புரிந்து கொள்ள வழிவகை செய்யும் ஒரு நோக்கத்துடன் தொடங்கப்பட்டுள்ளது.

## இந்தியக் கடற்கரையின் நிலை

- இந்திய முதன்மை நிலப்பரப்பில் கடற்கரையின் நிலை குறித்து புவி அறிவியல் துறை அமைச்சகமானது மக்களவையில் தெரிவித்தது.

- தேசியக் கடற்கரை ஆராய்ச்சி மையமானது 1990 ஆம் ஆண்டு முதல் தொலை உணர்வு தரவு மற்றும் புவியிடங்காட்டி வரைபடத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திக் கடற்கரை அரித்தல் நிகழ்வினைக் கண்காணித்து வருகிறது.
- இந்தியாவின் 6907.18 கி.மீ. நீள கடற்கரையானது 1990 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையில் மதிப்பிடப் பட்டுள்ளது.
- இந்த முதன்மை நிலப் பரப்பில் உள்ள 6907.18 கி.மீ. நீள கடற்கரையில்,
  - 34% பல்வேறு வகை அரித்தல் நிகழ்விற்கு உட்பட்டுள்ளது.
  - 26% ஆனது திரளாகும் தன்மையுடையது.
  - மீதமுள்ள 40% ஆனது நிலையானதாகவும் உள்ளது.
- 534.35 கி.மீ. நீள கடற்கரையைக் கொண்ட மேற்கு வங்காள மாநிலத்தில், 1990 முதல் 2018 வரையில் சுமார் 60.5% கடல் அரிப்பு ஏற்பட்டுள்ளது.
- இதனைத் தொடர்ந்து மேற்குக் கடற்கரையில் 592.96கி.மீ. நீள கடற்கரைக் கொண்ட கேரள மாநிலத்தில் 46.4% கடல் அரிப்பு ஏற்பட்டுள்ளது.
- 991.47கி.மீ. நீளமுள்ள தமிழகக் கடற்கரையானது 42.7% கடல் அரிப்பினைச் சந்தித்து உள்ளது.
- மிக நீளமான கடற்கரையைக் கொண்ட குஜராத் மாநிலத்தில் 27.06% கடல் அரிப்பு ஏற்பட்டுள்ளது.
- 41.66 கி.மீ. நீளமுள்ளப் புதுச்சேரி ஒன்றியப் பிரதேசத்தில் 56.2% கடல் அரிப்பு ஏற்பட்டு உள்ளது.




## செறிவூட்டப்பட்ட அரிசிக்கான திட்டம்

- பொருளாதார விவகாரங்கள் மீதான மத்திய அமைச்சரவைக் குழுவானது, 2024 ஆம் ஆண்டுக்குள் அரசுத் திட்டங்களின் கீழ், செறிவூட்டப்பட்ட அரிசியினை விநியோகம் செய்வதற்கான ஒரு திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.
- பிரதமர் தலைமையிலான மத்திய அமைச்சரவையானது, கீழ்க்கண்ட அமைப்புகளின் மூலம் செறிவூட்டப்பட்ட அரிசியினை விநியோகம் செய்வதற்கு ஒப்புதல் அளித்து உள்ளது.

- தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழான இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோக அமைப்பு,
- ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுச் சேவை அமைப்பு,
- பிரதான் மந்திரி போஷன் சக்தி நிர்மான – PM POSHAN (முன்னதாக மத்திய உணவுத் திட்டம் என்றழைக்கப்பட்டது) மற்றும்
- அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் பல கட்டங்களாக செயல்படுத்தப்படும் இந்திய அரசின் இதர நலத்திட்டங்கள்.

❖ இந்த முன்னெடுப்பானது 3 கட்டங்களாக அமல்படுத்தப்படும்

- முதல் கட்டம் – 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள், இந்தியா முழுவதும் PM POSHAN மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுச் சேவை அமைப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.
- இரண்டாம் கட்டம் – பசியால் வாழும் அதிக சுமையுள்ள மாவட்டங்களில் (மொத்தம் 291 மாவட்டங்கள்) உள்ள இதர அரசுத் திட்டங்கள் மற்றும் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோக அமைப்பு திட்டங்களுடன் முதல் கட்டத் திட்டமும் அமல்படுத்தப்படும்.
- மூன்றாம் கட்டம் – 2024 ஆம் ஆண்டிற்குள் மீதமுள்ள மாவட்டங்களில் இரண்டாம் கட்டத்தோடுச் சேர்த்து இத்திட்டம் அமல்படுத்தப்படும்.




## ஹெலினா

❖ உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட 'ஹெலினா' எனப்படும் ஒரு ஹெலிகாப்டரிலிருந்து ஏவப்படக் கூடிய ஒரு பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டு ஏவுகணையானது சமீபத்தில் வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது.

❖ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம், இந்திய ராணுவம் மற்றும் இந்திய விமானப்படை ஆகியவற்றின் அறிவியலாளர்கள் குழு ஒன்றினால் இந்தச் சோதனையானது நடத்தப்பட்டது.

❖ ஹெலினா அதிகபட்சமாக ஏழு கிலோமீட்டர் தொலைவு வரையிலான வரம்புடையது.

## காவிரி ஆற்றில் நுண் நெகிழிகள்

- நுண் நெகிழிகள் போன்ற மாசுபடுத்திகள் காவிரி ஆற்றில் வாழும் மீன்களில் எலும்பு வளர்ச்சிக் குறைபாடுகள் போன்ற வளர்ச்சிக் குறைபாடுகளை ஏற்படுத்தக் கூடும் என்று ஒரு புதிய ஆய்வில் தெரியவந்துள்ளது.
- சுற்றுச்சூழல் நச்சுயியல் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்ற இதழில் இந்த ஆய்வு வெளியிடப் பட்டுள்ளது.
- பெங்களூரு நகரில் உள்ள இந்திய அறிவியல் கழகத்தினைச் சேர்ந்த உபேந்திரா நோங்தோம்பா இந்த ஆய்வினைத் தலைமையேற்று மேற்கொண்டார்.
- நோங்தோம்பாவின் ஆய்வகத்தில் மாணவராக இருந்த முனைவர் ஆய்வுப் பட்டப் படிப்பு மாணவரான அப்பாஸ் டோபா அனிபோவோஷே என்பவரே இந்த ஆய்வின் முதல் ஆசிரியர் ஆவார்.

## மாதவ்பூர் கெத் கண்காட்சி

- இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், குஜராத்தின் போர்பந்தர் நகரில் உள்ள மாதவ்பூர் கெத் என்ற இடத்தில் நடைபெறும் மாதவ்பூர் கெத் கண்காட்சியைத் தொடங்கி வைத்தார்.
- குஜராத் அரசானது இந்தியக் கலாச்சாரத் துறை அமைச்சகத்துடன் இணைந்து மாதவ்பூர் கெத் கண்காட்சியை நடத்துகிறது.
- இது பகவான் கிருஷ்ணர் மற்றும் ருக்மணியின் புனிதமான திருமண நிகழ்வைக் கொண்டாடும் வகையிலான நிகழ்ச்சியாகும்.

## 2021-22 ஆம் ஆண்டில் இந்தியாவின் தங்க இறக்குமதி

- 2021-22 ஆம் நிதியாண்டில், அதிகத் தேவையின் காரணமாக இந்தியாவின் தங்க இறக்குமதி 33.34 சதவீதம் அதிகரித்து 46.14 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உள்ளது.
- 2020-21 ஆம் நிதியாண்டில், தங்க இறக்குமதி 34.62 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தது.
- உலகிலேயே அதிகளவில் தங்கத்தை உபயோகிக்கும் நாடுகளின் பட்டியலில் சீனா முதலிடத்தில் உள்ள நிலையில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது..
- 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி வரையில் இந்திய நாட்டின் தங்க இறக்குமதியானது மொத்த அளவின் அடிப்படையில் 842.28 டன்களாக இருந்தது.


## இந்தியாவின் கற்றல் பற்றாக்குறை பற்றிய உலக வங்கியின் அறிக்கை

- கோவிட்-19 பெருந்தொற்றுக் காலத்தில் பெரும் பாதிப்பைச் சந்தித்த பல துறைகளில் கல்வித் துறையும் ஒன்றாகும்.
- இந்தியாவின் 'கற்றல் பற்றாக்குறையானது' 70 சதவீதமாக உயர்ந்துள்ளதாக உலக வங்கி கவலை தெரிவித்துள்ளது.
- இது நாட்டின் கல்வித் துறையை மோசமாக்கியுள்ளதாகவும் அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

- உலக வங்கியின் உலகக் கல்வி இயக்குனர் ஜெய்மே சவேத்ரா இந்தத் தகவலை வெளியிட்டார்.

## இந்தியாவில் காப்புரிமைப் பதிவுகள்

- 11 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு முதல்முறையாக 2022 ஆம் ஆண்டு ஜனவரி முதல் மார்ச் மாதம் வரையிலான காலத்தில் இந்தியாவின் காப்புரிமைப் பதிவுகளானது, சர்வதேச காப்புரிமைப் பதிவு எண்ணிக்கையை விஞ்சியுள்ளது.
- மொத்தம் 19,796 காப்புரிமை விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டன.
- அவற்றுள் 10,706 விண்ணப்பங்கள் (54%) இந்திய விண்ணப்பதாரர்களாலும் 9,090 விண்ணப்பங்கள் இந்தியரல்லாத விண்ணப்பதாரர்களாலும் தாக்கல் செய்யப்பட்டன.




## மாணவர்களுக்கு இரண்டு முழு நேரக் கல்விப் படிப்புகள்

- பல்கலைக்கழக மானியக் குழுவானது, மாணவர்கள் தற்போது இரண்டு முழுநேரக் கல்விப் படிப்புகளை நேரடி முறையில் தொடர முடியும் என்று அறிவித்தது.
- நாடு முழுவதும் உள்ள அனைத்துப் படிப்புகளுக்கும் இந்த வழிகாட்டுதல்கள் பொருந்தும்.
- மாணவர்கள் பட்டயக் கல்வி மற்றும் இளங்கலைப் பட்டம், இரண்டு முதுகலைக் கல்வி அல்லது இரண்டு இளங்கலைக் கல்வி ஆகியவற்றின் சேர்க்கையில் ஒன்றைத் தேர்வு செய்யலாம்.
- ஒரு மாணவர் முதுகலை பட்டப்படிப்பைத் தொடர தகுதியுடையவராக இருந்து, மேலும் வேறு ஒரு பிரிவில் இளங்கலைப் பட்டப்படிப்பில் சேர விரும்பினால், அவர் ஒரே நேரத்தில் இளங்கலை மற்றும் முதுகலை ஆகிய இரு பட்டப் படிப்புகளையும் தொடர முடியும்.

## பெருங்கற்கால கல் ஜாடிகள்

- அசாமின் திமா ஹசாவ் என்ற மாவட்டத்தில், பல பெருங்கற்கால கல் ஜாடிகள் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன.
- இந்தக் கண்டுபிடிப்பானது, தென்கிழக்கு ஆசியாவிற்கும் இந்தியாவின் வடகிழக்குப் பகுதிக்கும் இடையே, கி.மு. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்த சில சாத்தியமான தொடர்புகளை எடுத்துரைக்கிறது.

- 'அசாம் கல் ஜாடி தளங்கள் குறித்த தொல்பொருள் ஆய்வு' என்ற தலைப்பில் மூன்று தனித்துவமான வடிவ ஜாடிகள் குறித்து ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.
- நச்சு பங்க்ளோ என்ற ஒரு இடத்தில், 546 ஜாடிகள் கண்டுபிடிக்கப்பட்டதால் அது நமது பூமியின் மிகப்பெரிய இத்தகைய பொருள் கண்டறியப்பட்ட ஒரு தளமாகும்.
- லாவோஸ், அசாம் மற்றும் இந்தோனேஷியா ஆகியவற்றுக்கு இடையே உள்ள இந்தக் கலாச்சார உறவைப் புரிந்து கொள்வதற்கு வேண்டி மேலும் பல ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு இந்த ஆய்வு வழி வகுத்துள்ளது.
- இந்தோனேஷியா மற்றும் லாவோஸ் ஆகிய இரண்டு இடங்களில் மட்டுமே இது போன்ற ஜாடிகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.



## 2026 காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள்




- வழக்கமான ஒற்றை நகரத் தொகுப்பு அணுகுமுறையிலிருந்து விலகி, காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் 2026 ஆம் ஆண்டில் விக்டோரியாவில் நடைபெற உள்ளன.
- பெரும்பாலான போட்டிகள் அந்த நாட்டின் பிராந்திய மையங்களால் ஏற்பாடு செய்யப் பட்டு இருக்கின்றன.
- 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், மெல்போர்ன், ஜீலாங், பெண்டிகோ, பல்லாரட் மற்றும் கிப்ஸ்லேண்ட் உள்ளிட்ட ஆஸ்திரேலியாவின் பல நகரங்கள் மற்றும் பிராந்திய மையங்களில் இந்த விளையாட்டுப் போட்டிகள் நடைபெற உள்ளன.

## நிலக்கரி எரிவாயு ஆலை

- ஜிண்டால் எஃகு & எரிசக்தி ஆலை நிறுவனமானது, சத்தீஸ்கரில் உள்ள ராய்கர் ஆலையில் நிலக்கரி வாயுவாக்கும் ஒரு ஆலையை அமைக்கத் திட்டமிட்டுள்ளது.
- இது நாட்டிலேயே இரண்டாவது ஆலையாகும்.
- இந்நிறுவனம் ஆனது, ஏற்கனவே ஒடிசாவின் அங்குல் நகரில் உள்ள தனது ஆலையில் எஃகு உற்பத்தி செய்வதற்கு வேண்டி நிலக்கரி வாயுவாக்கல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தச் செய்கிறது.

## உலக காற்று அறிக்கை 2022

- இது உலக காற்று ஆற்றல் சபையினால் வெளியிடப்பட்டது.
- இது 2005 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இது உலகளவில் காற்று ஆற்றல் தொழில்துறையின் ஒருங்கிணைந்த அமைப்பாகச் செயல்படுகின்ற, காற்றாலை மின் உற்பத்திக்கான சர்வதேச வர்த்தகச் சங்கமாகும்.
- உலகளாவியப் பருவநிலை இலக்குகளை அடைய இந்த தசாப்தத்திற்குள் 2021 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட 94 GW திறனிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் உலகம் முழுவதும் உள்ள காற்றாலைகளின் உற்பத்தியை நான்கு மடங்கு அதிகரிக்க வேண்டும்.
- சீனாவில் புதிய ஆலைகள் நிறுவப்படுவது குறைந்ததால், 2022 ஆம் ஆண்டில் புதிதாக நிறுவப்பட்ட கடல்சார் ஆலைகள் 2019/2020 ஆம் ஆண்டு நிலைமைகளுக்குக் கீழ் குறைய வாய்ப்புள்ளது.

## ஸ்வாநிதி சே சம்ரித்தி திட்டம்

- வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகமானது, 'ஸ்வாநிதி சே சம்ரித்தி' என்ற திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- இந்தியாவின் 14 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் கூடுதலாக 126 நகரங்களில் இத்திட்டமானது தொடங்கப்பட்டது.
- இந்தத் திட்டமானது, நாடு முழுவதும் உள்ள லட்சக்கணக்கானத் தெருவோர வியாபாரிகள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்குச் சமூகப் பாதுகாப்புப் பலன்களை வெற்றிகரமாக வழங்கச் செய்து அவர்களுக்கு ஏற்படும் வாழ்வாதாரம் சார்ந்த அபாயங்களிலிருந்து அவர்களைப் பாதுகாக்கிறது.

## பரபரப்பான முதல் 10 விமான நிலையங்கள்

- சர்வதேச விமான நிலையச் சபையானது, 2021 ஆம் ஆண்டிற்கான உலகளவில் மிகவும் பரபரப்பான முதல் 10 விமான நிலையங்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது.
- ஹார்ட்ஸ்ஃபீல்ட்-ஜாக்சன் அட்லாண்டா (அமெரிக்கா) சர்வதேச விமான நிலையம் 75.7 மில்லியன் பயணிகளுடன் இதில் முதலிடத்தில் உள்ளது.
- இதில் டல்லாஸ்/ஃபோர்ட் வொர்த் (அமெரிக்கா) என்ற சர்வதேச விமான நிலையம் இரண்டாவது இடத்தையும், டென்வர் (அமெரிக்கா) என்ற சர்வதேச விமான நிலையம் மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளது.


| Ranks | Airport | PASSENGERS* |
|---|---|---|
| 1 | Atlanta | 75,704,760 |
| 2 | Dallas Fort Worth | 62,465,756 |
| 3 | Denver | 58,828,552 |
| 4 | Chicago O'Hare | 54,020,339 |
| 5 | Los Angeles | 48,007,284 |
| 6 | Charlotte | 43,302,230 |
| 7 | Orlando International | 40,351,068 |
| 8 | Guangzhou | 40,259,401 |
| 9 | Chengdu | 40,117,496 |
| 10 | Las Vegas | 39,754,366 |

## பிரதான்மந்திரி சங்க்ரஹாலயா

- ❖ பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் டெல்லியில் பிரதான் மந்திரி சங்க்ரஹாலயா எனும் அருங்காட்சியகத்தினைத் திறந்து வைத்தார்.
- ❖ புகழ்பெற்ற தீன் மூர்த்தி வளாகத்தில் அமைந்துள்ள சங்கரஹாலயா, சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாவின் (ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ்) ஒரு பகுதியாக திறக்கப் பட்டது.
- ❖ இந்த அருங்காட்சியகம் ஜவஹர்லால் நேரு முதல் மன்மோகன்சிங் வரையிலான 14 பிரதமர்களின் பதவிக் காலத்தினை ஞாபகப் படுத்துகிறது.
- ❖ இது சுதந்திரம் வாங்கியதில் இருந்து இந்தியாவின் அனைத்துப் பிரதமர்களுக்கான ஒரு நினைவிடமாக இருக்கும்
- ❖ இந்த அருங்காட்சியகமானது, ஒவ்வொரு பிரதமரும் எதிர்கொண்ட துன்பங்களையும், அவற்றைச் சமாளித்து புதிய இந்தியாவிற்கான அடித்தளத்தை அமைப்பதில் அவர்கள் எவ்வாறு வெற்றியடைந்தார்கள் என்பதையும் இளைஞர்கள் அறிய வழிவகை செய்யும் வகையில் இளைஞர்களுக்கு உத்வேகம் அளிக்கும் ஒரு மூல ஆதாரமாகத் திகழும்.

## நிதி ஆயோக் அமைப்பின் மாநில ஆற்றல் மற்றும் பருவநிலைக் குறியீடு

- ❖ நிதி ஆயோக் அமைப்பின் மாநில ஆற்றல் மற்றும் பருவநிலைக் குறியீட்டின் முதல் சுற்றில், 50.1 மதிப்புடன் பெரிய மாநிலங்கள் பிரிவில் குஜராத் முதலிடத்தைப் பெற்று உள்ளது.
- ❖ குஜராத்தைத் தொடர்ந்து கேரளா மற்றும் பஞ்சாப் ஆகியவை முறையே இதே பிரிவின் கீழ் இரண்டு மற்றும் மூன்றாவது இடங்களில் உள்ளன.
- ❖ மாநில ஆற்றல் மற்றும் பருவநிலைக் குறியீடானது ஆற்றல் செயல்திறன், விநியோக நிறுவனங்களின் செயல்திறன் மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை உள்ளிட்ட ஆறு அளவுருக்களின் அடிப்படையில் மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களைத் தர வரிசைப் படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இந்தப் பட்டியலில் தமிழ்நாடு மாநிலம் 43.4 மதிப்பெண்களுடன் 9வது இடத்தில் உள்ளது.




## நீர்வழிப் பாதைகள் மாநாடு 2022




- இந்த மாநாடானது, அசாம் மாநிலத்தில் உள்ள திப்ருகரில் இந்திய உள்நாட்டு நீர் வழிகள் ஆணையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- இந்த மாநாட்டின் நோக்கமானது, இந்திய நாட்டின் வடகிழக்குப் பகுதியில் உள்ள சர்வதேச மற்றும் உள்நாட்டு நீர்வழிப் பாதைகளின் சுற்றுச்சூழல் அமைப்பிற்கானத் திறனைத் திறம்படப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்துவதேயாகும்.
- இந்த மாநாட்டின் தொழில்துறைக்கான பங்குதாரர் அமைப்பு இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறைக் கூட்டமைப்பு ஆகும்.

## InTranSE -II திட்டம்

- ❖ இந்திய நகரங்களுக்கான நுண்ணறிவு சார் போக்குவரத்து அமைப்பு முன்னெடுப்பின் இரண்டாம் கட்டத்தின் கீழ், இந்தியப் போக்குவரத்துச் சூழலமைவிற்கான உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட நுண்ணறிவுப் போக்குவரத்து அமைப்புகள் என்ற ஒரு தீர்வினை அரசாங்கம் தொடங்கியுள்ளது.
- ❖ இந்திய நகரங்களுக்கான நுண்ணறிவு சார் போக்குவரத்து அமைப்பு முன்னெடுப்பு (InTranSe) என்பது தேசிய அளவிலான கூட்டு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டம் ஆகும்.
- ❖ InTranSE-II என்பது இந்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தின் (MeitY) ஒரு முன்னெடுப்பாகும்.

## முதல் நீண்ட கால மதிப்பீட்டு முன்னறிவிப்பு

- ❖ இந்திய வானிலை ஆய்வு மையமானது, ஜூன் முதல் செப்டம்பர் வரையிலான காலப் பகுதியில் தென்மேற்குப் பருவக் காலத்தின் மழைப் பொழிவிற்கான ஒரு நீண்ட கால முன்னறிவிப்பை வெளியிட்டுள்ளது.
- ❖ இந்த ஆண்டு மழைப்பொழிவானது இயல்பாக இருக்கும் என்றும் இந்த மதிப்பீட்டில் கூறப் பட்டுள்ளது.
- ❖ வெளியிடப்பட்டுள்ள இந்த முன்னறிவிப்பின்படி, நீண்ட கால சராசரி மதிப்பீட்டில் (LPA) தென்மேற்குப் பருவமழை 96 முதல் 104 சதவீதம் வரை இயல்பானதாக இருக்கும்.

## கிருபன் சக்தி பயிற்சி

- ❖ மேற்கு வங்கத்தின் சிலிகுரிக்கு அருகில் உள்ள தீஷ்தா களச் சோதனைத் தளத்தில் திரிசக்தி படைப்பிரிவு, கிருபன் சக்தி என்றப் பயிற்சியினை நடத்தியது.
- ❖ இந்தப் பயிற்சியானது, போரில் ஒருங்கிணைந்து ஈடுபடச் செய்வதற்காக இந்திய ராணுவம் மற்றும் மத்திய ஆயுதக் காவல் படை ஆகியவற்றின் சில செயல்திறன்களை ஒருங்கிணைப்பதை நோக்கமாகக் கொண்டது.

## பருத்தி இறக்குமதிக்கு சுங்க வரி விலக்கு

- ❖ பருத்தி விலையைக் குறைக்க, பருத்தி இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட அனைத்து சுங்க வரிகளிலிருந்தும் விலக்கு அளிப்பதற்கு இந்திய அரசு முடிவு செய்துள்ளது.
- ❖ அரசினால் அறிவிக்கப்பட்ட இந்த வரி விலக்கானது, துணி, நூல், முழுத் தயாரிப்புகள் மற்றும் ஆடைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஜவுளி விநியோகப் பிரிவிற்குப் பலன் அளிக்கும் என்றும், நுகர்வோர் மற்றும் ஜவுளித் தொழிலுக்கு வேண்டிய ஒரு உதவியை அளிக்கும் என்றும் கூறப்படுகிறது.
- ❖ கச்சா பருத்தி மீது விதிக்கப்பட்ட 5 சதவீத விவசாய உள்கட்டமைப்பு & மேம்பாட்டு வரி மற்றும் 5 சதவீத அடிப்படைச் சுங்க வரி ஆகியவையும் நீக்கப்பட வேண்டும் என்று தொழில்துறையினர் கோரியுள்ளனர்.
- ❖ பருத்தி இறக்குமதி மீதான வேளாண் உள்கட்டமைப்பு மேம்பாட்டு உள்வரி மற்றும் சுங்க வரி விலக்கானது மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியத்தினால் அறிவிக்கப் பட்டுள்ளது.


## டோர்னியர் 228 விமானம்

- அலையன்ஸ் ஏர் எனப்படும் விமானத் தயாரிப்பு நிறுவனத்தினால் இந்தியாவிலேயேத் தயாரிக்கப்பட்ட டோர்னியர் 228 என்ற விமானமானது திப்ருகர்-பாசிகாட் வழித் தடத்தில் தனது முதல் வணிகப் பயணத்தை மேற்கொண்டது.
- அலையன்ஸ் ஏர் என்ற விமானப் போக்குவரத்து நிறுவனமானது, பொதுமக்கள் போக்குவரத்திற்காக இந்தியாவிலேயேத் தயாரிக்கப்பட்ட விமானங்களை இயக்கிய இந்தியாவின் முதல் வணிக விமானப் போக்குவரத்து நிறுவனம் ஆகும்.
- இதன் முதல் பயணம் அசாமில் உள்ள திப்ருகர் மற்றும் அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள பாசிகாட் ஆகிய நகரங்களுக்கு இடையில் இயக்கப்பட்டது.

## மரணத் தண்டனை குறித்த முக்கியத் தீர்ப்பு

- உச்ச நீதிமன்றத்தின் ஓர் அமர்வானது, மரணத் தண்டனை விதிக்கப்பட்ட கைதியின் உளவியல் மதிப்பீட்டை மேற்கொள்வதைக் கட்டாயமாக்கியுள்ளது.
- தூக்குத் தண்டனை மட்டுமே ஒரு பொருத்தமான தண்டனையாக இருக்கிறதா என்று ஆராயும் நேரத்தில் கைதியின் நடத்தை குறித்த அறிக்கையையும் சமர்ப்பிக்குமாறு உச்சநீதிமன்றம் கோரியுள்ளது.

## பஞ்சாப் தேசிய வங்கி நிறுவிய தினம்





- பஞ்சாப் தேசிய வங்கியானது 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 அன்று தனது 128வது நிறுவிய தினத்தைக் கொண்டாடியது.
- இது இந்தியாவின் இரண்டாவது பெரிய வங்கியாகும்.
- தலைசிறந்த சுதந்திரப் போராட்ட வீரரான லாலா லஜபதி ராய் அவர்களால் 1894 ஆம் ஆண்டில் இந்த வங்கியானது நிறுவப்பட்டது.
- இவர் ஷேர்-இ-பஞ்சாப் (பஞ்சாப் சிங்கம்) என்று பெருமையுடன் அழைக்கப்படுகிறார்.
- இந்த வங்கியானது, சுதேசி இயக்கத்தின் தாக்கத்திற்குட்பட்ட முதல் சுதேசி வங்கி ஆகும்.

## ஐக்கிய நாடுகளின் சமூகப் பொருளாதார சபையின் 4 அமைப்புகளில் இந்தியா

- மேம்பாட்டிற்கான அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆணையம் உட்பட ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூகச் சபையின் நான்கு முக்கிய அமைப்புகளுக்கு இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

- பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளுக்கான குழுவிற்கு, தூதர் பிரீத்தி சரண் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இந்தியா உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 4 அமைப்புகள்
    - பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளுக்கான குழு
    - சமூக மேம்பாட்டு ஆணையம்
    - அரசு சாரா நிறுவனங்களுக்கான குழு மற்றும்
    - மேம்பாட்டிற்கான அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆணையம் ஆகும்.

## இந்தியா - எகிப்து நாட்டிற்கு கோதுமை இறக்குமதி




- உக்ரைன் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளிலிருந்து உலகிலேயே அதிகளவில் கோதுமை இறக்குமதி செய்யும் எகிப்து நாடானது, தனது நாட்டில் கோதுமை இறக்குமதி செய்வதற்கு இந்திய நாட்டிற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தியா சுமார் ஒரு மில்லியன் டன் கோதுமையை அந்நாட்டிற்கு ஏற்றுமதி செய்ய உள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் உலகளாவிய கோதுமை உற்பத்தியில் இந்தியா 14.14 சதவீத பங்கைக் கொண்டு உலகின் இரண்டாவது பெரிய கோதுமை உற்பத்தியாளராக இருந்தது.
- பஞ்சாப், உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ஹரியானா, பீகார், ராஜஸ்தான் மற்றும் குஜராத் ஆகியவை கோதுமை விளையும் முக்கிய மாநிலங்கள் ஆகும்.


## மின்னணு ரசீது வசதி

- மத்திய நிதி மற்றும் பெருநிறுவன விவகாரங்கள் துறைக்கான அமைச்சர் நிர்மலா சீதாராமன் மின்னணு ரசீது வழங்கும் முறையைத் தொடங்கி வைத்தார்.
- இது 46வது பொதுக் கணக்குத் தினத்தை முன்னிட்டுத் தொடங்கப்பட்டது.

- மின்னணு ரசீது முறை என்பது கட்டணம் செலுத்துதல் முறையில் வெளிப்படைத் தன்மையைக் கொண்டு வருவதற்காக வணிகம் செய்வதை எளிதாக்கல் மற்றும் டிஜிட்டல் இந்தியா சூழல் அமைப்பின் ஒரு பகுதியாகும்.




## ஒற்றை அச்சு சூரியசக்தி இணைப்பு அமைப்பு





- டாடா ஆற்றல் நிறுவனமான டாடா பவர் ரினீவபிள்ஸ் நிறுவனமானது குஜராத்தில் உள்ள தோலேராவில் 300 மெகாவாட் சோலார் ஆலையை இயக்கத் தொடங்கியுள்ளது.
- இது இந்தியாவின் மிகப்பெரிய ஒற்றை அச்சு சூரியசக்தி இணைப்பு அமைப்பாகும்.
- இந்த ஆலையானது, ஆண்டுக்கு 774 MU (million units) திறனை உற்பத்தி செய்யும்.
- மேலும், இது ஆண்டிற்கு தோராயமாக 704340 மெட்ரிக் டன் என்ற அளவிற்கு கார்பன் வெளியேற்றத்தைக் குறைக்கும்.

## 108 அடி ஹனுமான் சிலை

- ஹனுமான் ஜெயந்தியை முன்னிட்டு, குஜராத்தின் மோர்பி நகரில் அமைக்கப் பட்டு உள்ள 108 அடி உயர ஹனுமான் சிலையைப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் திறந்து வைத்தார்.
- 'ஹனுமான்ஜி சார்தாம்' என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக, இந்தியாவின் நான்கு திசைகளிலும் கட்டப்படும் நான்கு சிலைகளில் இது இரண்டாவது சிலையாகும்.
- இமாச்சலப் பிரதேசத்தின் சிம்லாவிலும் இதே போன்ற ஒரு அனுமன் சிலை அமைக்கப் பட்டுள்ளது.
- ராமேஸ்வரம் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய இரு இடங்களிலும் மேலும் இரண்டு சிலைகள் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.



## டீசல் இரயில் என்ஜின்கள் உயிரி - டீசல் மூலம் இயக்கம்




- இந்திய இரயில்வே, தனது டீசல் எஞ்சின்களை உயிரி டீசலைப் பயன்படுத்தி இயக்கத் திட்டமிட்டுள்ளது.

- ஆராய்ச்சி வடிவமைப்புகள் மற்றும் தர நிர்ணய அமைப்பு (RDSO) மூலம் டீசல் எஞ்சின்களை இயக்குவதற்கு B-5 உயிரி டீசல் சோதனை செய்யப்பட்டுள்ளதாக இந்திய இரயில்வே நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளது.
- உயிரி-டீசல் பயன்பாடு இரயில்வேயின் டீசல் செலவைச் சேமிக்க உதவும்.
- உயிரி-டீசல், உமிழ்வைக் குறைக்கவும் உதவுவதால் மாசுபாடு குறைகிறது.

## தேசிய இசைவு வழங்கலுக்கான நேர மதிப்பீட்டு ஆய்வு 2022

- மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியம் (CBIC - Central Board of Indirect Taxes and Customs) சமீபத்தில் நடத்தப்பட்ட இசைவு வழங்கலுக்கான நேர மதிப்பீட்டு ஆய்வு (TRS - Time Release Studies) குறித்த ஒரு தொகுப்பு அறிக்கையை வெளியிட்டது.
- இசைவு வழங்கலுக்கான நேர மதிப்பீடு என்பது செயல்திறனை அளவிடுவதற்கான ஒரு கருவியானதோடு, இது சர்வதேச வர்த்தகத்தின் சரக்கு இசைவு செயல்முறையை மதிப்பிடுகிறது.
- உலக வர்த்தக அமைப்பானது, உலக சுங்க அமைப்பு மற்றும் வர்த்தக வசதி ஒப்பந்தம் ஆகியவற்றின் கீழ் இந்த ஆய்வு முறையைப் பரிந்துரைக்கிறது.
- இந்தச் செயல்முறையானது, சரக்குகளின் சராசரி வெளியீட்டு நேரத்தை, அதாவது சரக்குப் பொருள் சுங்க நிலையத்தை வந்தடைவதற்கும் இறக்குமதி அல்லது ஏற்றுமதி செயல்முறைக்கு அனுப்பப் படுவதற்கும் ஆகும் நேரத்தைப் பொருத்து அமைகிறது.

## ‘சகுந்தலா’ செயற்கைக்கோள்

- பெங்களூர் நகரைத் தலைமையிடமாகக் கொண்ட ஒரு விண்வெளித் தொழில்நுட்பப் புத்தாக்க நிறுவனமான பிக்ஸ்செல் நிறுவனம் தனது முதலாவது முழு அளவிலான வணிகச் செயற்கைக் கோளை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியதாக அறிவித்து உள்ளது.
- இது ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் பால்கன்-9 ரைட்ஷேர் ஏவுத் திட்டத்தில் இடம்பெறத் திட்டமிடப்பட்டுள்ள 36-செயற்கைக்கோள் தொகுப்பின் ஒரு பகுதியாக இருக்கும்.
- 'சகுந்தலா' செயற்கைக் கோளானது விண்வெளிக்கு இதுவரையில் விண்ணில் செலுத்தப் பட்ட உயர்-தெளிவுத்திறன் கொண்ட அதி நிறமாலை வணிக ஒளிப்படக் கருவியில் ஒன்றை ஏந்திச் செல்கிறது,
- இது கிரகத்திற்கான 24x7 மணி நேர சுகாதாரக் கண்காணிப்பு அமைப்பை உருவாக்கச் செய்வதற்கான ஒரு முயற்சியில் இந்த நிறுவனத்தை மேலும் ஒரு படி முன்னேற்றிச் செல்கிறது.
- 15 கிலோவுக்கும் குறைவான எடை கொண்ட சகுந்தலா செயற்கைக் கோளானது, புலப்படக்கூடியது முதல் அகச்சிவப்பு நிறமாலை வரையிலான 150க்கும் மேற்பட்ட வண்ணப் பட்டைகளில் சுற்றுப் பாதைச் சார்ந்த படங்களைப் படம்பிடிக்கும் திறன் கொண்டதாகும்.
- இது விண்வெளித் துறையில் இந்தியாவின் தனியார் நிறுவனங்களின் வளர்ந்து வரும் பங்கைக் குறிக்கிறது.

## AB-PMJAY

- ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்யா யோஜனா (AB-PMJAY) திட்டத்தின் கீழ், 2022 ஆம் ஆண்டிற்கான சுகாதாரப் பயன்கள் திட்டத்தின் புதிய பதிப்பைத் தேசிய சுகாதார ஆணையம் அறிமுகப் படுத்தியுள்ளது.
- இதில் 365 புதிய நடைமுறைகள் சேர்க்கப் பட்டதை அடுத்து, இதன் புதிய மொத்த எண்ணிக்கை 1,949 ஆக உயர்ந்தது.

## ராஷ்ட்ரிய கிராம் ஸ்வராஜ் அபியான்




- 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 முதல் 2026 ஆம் ஆண்டு மார்ச் 31 வரையிலான காலக் கட்டத்தில் செயல்படுத்துவதற்காக வேண்டி, மத்திய அரசின் நிதி உதவியைப் பெறும், புதுப்பிக்கப் பட்ட ராஷ்ட்ரிய கிராம் ஸ்வராஜ் அபியான் என்ற திட்டத்தைத் தொடரப் பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தத் திட்டம் இப்போது 15வது நிதிக்குழுவின் பதவிக் காலத்துடன் ஒன்றிணைந்து இயங்குகிறது.
- இந்தத் திட்டம் பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களின் நிர்வாகத் திறன்களை மேம்படுத்தச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டமானது முதலில் 2018-19 முதல் 2021-22 வரை செயல்படுத்துவதற்காக 2018 ஆம் ஆண்டில் அமைச்சரவையால் முதன்முறையாக அங்கீகரிக்கப்பட்டது.

## கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் - ஓக்லா

- ஜல் சக்தி அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் சமீபத்தில், டெல்லியில் கட்டுமானத்தில் உள்ள, ஒரு நாளைக்கு 564 மில்லியன் லிட்டர் கழிவுநீரைச் சுத்திகரிப்பு செய்யும் ஓக்லா கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலையை ஆய்வு செய்தார்.

- இது யமுனையைச் சுத்தம் செய்யும் பணியில் மிக முக்கியப் பங்கு வகிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- இந்த ஆலை ஆசியாவிலேயே மிகப்பெரிய ஆலையாக இருக்கும்
- இது கழிவுநீரில் இருந்து மாசுபட்டப் பொருட்களை அகற்றி, அதைச் சுற்றியுள்ள சுற்றுச் சூழலில் வெளியேற்றுவதற்கு ஏற்ற ஒரு கழிவுநீரை உற்பத்தி செய்வதை அல்லது அதனை மறுபயன்பாட்டிற்கு உபயோகித்து, அதன் மூலம் நீர் மாசுபடுவதைத் தடுக்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ஹுனார் ஹாத்

- மத்திய அமைச்சர் அனுராக் தாக்கூர், மும்பையில் நடைபெற உள்ள 40வது ஹுனார் ஹாத் மன்றத்தினைத் தொடங்கி வைக்க உள்ளார் .
- ஹுனார் ஹாத் என்பது உள்ளூர் கலைஞர்கள் மற்றும் கைவினைஞர்களைப் பாதுகாத்து மேம்படுத்துவதற்கான ஒரு மன்றமாகும்.
- "உள்ளூர் உற்பத்திக்கு ஆதரவு தாருங்கள்" மற்றும் "ஆத்ம நிர்பர் பாரத்" ஆகியவற்றுக்கான பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் வேண்டுகோளை "ஹுனார் ஹாத்" வலுப்படுத்துகிறது.
- இது நாடு முழுவதிலும் இருந்து குறைந்தது 1,000 கலைஞர்கள் மற்றும் கைவினைக் கலைஞர்களை ஒன்றிணைக்கும்.

## தேசிய தரவு மற்றும் பகுப்பாய்வுத் தளம்

- நிதி ஆயோக் அமைப்பானது, தேசிய தரவு மற்றும் பகுப்பாய்வுத் தளத்தைத் தொடங்க திட்டமிட்டுள்ளது.
- இது அரசாங்கத் தரவைப் பயனர்களுக்கு உகந்த முறையில் வழங்குவதோடு, தரவு சார்ந்த முடிவெடுத்தல் மற்றும் ஆராய்ச்சியை ஊக்குவிக்கும்.
- 2020 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இந்தத் தளமானது, அரசாங்க மூல ஆதாரத் தரவுகள் முழுவதும் தரப்படுத்துவதையும், பல தரவுத் தொகுப்புகளைப் பயன்படுத்தி பயனர்களை எளிதாகப் பகுப்பாய்வு செய்ய அனுமதிக்கும் நெகிழ்திறன் மிக்க பகுப்பாய்வுகளை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## புலம்பெயர்வு கண்காணிப்பு அமைப்பு

- பருவகாலத்தினால் எளிதில் பாதிக்கப்படக் கூடிய புலம்பெயர் தொழிலாளர்களின் ஒரு இடப்பெயர்வினைத் தனிப்பட்ட அடையாள எண்கள் மூலம் வரைபடமிடுவதற்கு வேண்டி இணைய தள அடிப்படையிலான புலம்பெயர்வு கண்காணிப்பு அமைப்புப் பயன்பாட்டை மகாராஷ்டிரா அரசாங்கம் உருவாக்கியுள்ளது.
- இது நாட்டிலேயே முதன்முறையாக உருவாக்கப்பட்ட இது போன்ற முதல் திட்டமாகும்.
- இந்தத் திட்டத்தில், புலம்பெயர்ந்தப் பயனாளிகளுக்கு ஊட்டச்சத்து வழங்கல், நோய்த் தடுப்பு, சுகாதாரப் பரிசோதனை போன்ற ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுச் சேவைகளின் தொடர் பயன்கள் வழங்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

## உடான் திட்டம்

- உடான் (உடே தேஷ்கா ஆம் நகரிக்) எனப்படும் பிராந்திய இணைப்புத் திட்டம் (Ude Deshka Aam Nagrik) ஆனது, "புத்தாக்கம் (பொது) – மையப் பிரிவு" என்ற பிரிவின் கீழ் 2020 ஆம் ஆண்டிற்கான பொது நிர்வாகத்தில் சிறந்து விளங்குவதற்கான பிரதமரின் விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- இது பொது விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் முதன்மைத் திட்டமாகும்.
- இத்திட்டமானது, அளவுரு சார்ந்த இலக்குகளை அடைவதை விட, தரமான நிர்வாகம், தரமான சாதனைகள் மற்றும் தொலைதூர இணைப்பு ஆகியவற்றின் மீது ஈடுபாடு செலுத்துகிறது.




## செமிகான் இந்தியா மாநாடு 2022




- முதலாவது செமிகான் இந்தியா மாநாடானது (2022) பெங்களூரு நகரில் நடைபெற உள்ளது.
- இந்த மாநாட்டினை மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகம் ஏற்பாடு செய்கிறது.

- உலகின் தேவைக்கேற்ப இந்தியாவில் வடிவமைத்து உற்பத்தி செய்தல் : இந்தியாவைக் குறைகடத்தி உற்பத்தியாளர் நாடாக மாற்றுதல் என்பது இதன் கருத்துருவாகும்.
- செமிகான் இந்தியா – 2022 என்பது உலகளாவியக் குறைகடத்தி மதிப்புச் சங்கிலியில் இந்தியாவை ஒரு குறிப்பிடத்தக்க சந்தையாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.

## மைன்வாக்ஸ்

- இந்தியாவில், கோவிட்-19 அல்லது SarsCov2 வைரசிற்கு எதிரான ஒரு புதிய தடுப்பூசி உருவாக்கப்படுகிறது.
- இது குளிர்பதனம் அல்லது தொடர் குளிர்பதனச் சேமிப்பகமோ தேவைப்படாத ஒரு தடுப்பூசி ஆகும்.
- 'வைரசஸ்' என்ற இதழில் வெளிவந்த ஓர் ஆய்வின்படி, எலியின் மீது மேற்கொள்ளப் பட்ட சோதனைகளில், இந்தத் தடுப்பூசி வைரஸின் பல்வேறு திரிபுகளுக்கு எதிராக நோய் எதிர்ப்புப் பொருள்களை அல்லது ஆன்டிபாடிகளை உருவாக்கியுள்ளது.
- இந்த 'வார்ம்' (warm) என்றத் தடுப்பூசியை பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் கழகத்தினால் உருவாக்கப்பட்ட பெங்களூருவைச் சேர்ந்த மைன்வாக்ஸ் ஆய்வகம் என்ற நிறுவனம் உருவாக்கி வருகின்றது.
- இது 37 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் நான்கு வாரங்கள் வரையிலும் 100 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் 90 நிமிடங்கள் வரையும் சேமிக்கப்படக்கூடிய தனித்துவ மிக்க ஒரு தடுப்பூசியாகும்.


## யமுனை நதியில் அம்மோனியா

- யமுனை ஆற்றில் அம்மோனியாவின் அளவு அதிகமாக இருந்ததால் டெல்லியின் சில பகுதிகளில் மீண்டும் தண்ணீர் விநியோகம் தடைபட்டது.
- அந்த ஆற்று நீரில் இருந்த அம்மோனியாவின் செறிவு 7.4 ppm (மில்லியனில் ஒரு பகுதி) ஆகும்.
- இது டெல்லி ஜல் வாரியத்தின் நீர்ச் சுத்திகரிப்பு நிலையங்கள் செயல்முறைக்கு உட்படுத்தக் கூடிய அளவான சுமார் 1 ppm அளவை விட ஏழு மடங்கு அதிகம் ஆகும்.

## இந்தியாவில் நிலவும் தீவிர வறுமை பற்றிய உலக வங்கியின் அறிக்கை

- உலக வங்கியின் ஒரு ஆய்வு அறிக்கையின்படி, 2011 ஆம் ஆண்டில் 22.5 சதவீதமாக இருந்த இந்தியாவின் தீவிர வறுமை நிலையானது 2019 ஆம் ஆண்டில் கோவிட்-19 தொற்றிற்கு முந்தைய நிலையில் 10.2 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- மேலும், இந்தியாவின் நகர்ப்புறங்களை விட கிராமப்புறங்களில் வறுமை குறைவதன் வேகம் அதிகமாக உள்ளது.
- 2011 முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில், நகர்ப்புற மற்றும் கிராமப் புறங்களில், வறுமை நிலைகள் முறையே 7.9 சதவீதம் மற்றும் 14.7 சதவீதம் குறைந்து உள்ளது.

- 2019 ஆம் ஆண்டில், வறுமை நிலை ஆனது கிராமப்புறங்களில் 11.6 சதவீதமாகவும், நகர்ப்புறங்களில் 6.3 சதவீதமாகவும் இருந்தது.
- பணமதிப்பு இழப்பு செய்யப்பட்ட ஆண்டான 2016 ஆம் ஆண்டில் நகர்ப்புற வறுமை 2 சதவிகிதம் உயர்ந்துள்ள நிலையில் 2019 ஆம் ஆண்டில் கிராமப்புற வறுமை 10 புள்ளிகள் உயர்ந்தது.




## ரேடியோ அக்ஸ்

- பார்வையற்றோருக்கான இந்தியாவின் முதல் ரேடியோ (வானொலி) அலைவரிசை, 'ரேடியோ அக்ஸ்' என்ற பெயரில் மகாராஷ்டிராவின் நாக்பூர் நகரில் தொடங்கப் பட்டு உள்ளது.
- நாக்பூரைச் சேர்ந்த 96 வருடங்கள் பழைமையான நிறுவனமான நாக்பூர் தி பிளைண்ட் ரிலீஃப் அசோசியேஷன் மற்றும் சம்த்ருஷ்டி சமதா விகாஸ் அவம் அனுசந்தன் மண்டல் ஆகியவை இந்தக் கருத்தாக்கத்தினை உருவாக்கிய நிறுவனங்கள் ஆகும்.
- இந்த அலைவரிசையானது பல்வேறு இணைய வானொலி தளங்களில் இலவசமாகக் கிடைக்கப் பெறும்.


## மிதவை வானூர்தி நிலையம் – ஒகா

- இந்தியக் கடலோரக் காவற்படையின் தலைமை இயக்குநர் V.S. பதானியா என்பவர் ஒகா என்னுமிடத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒரு மிதவை வானூர்தி நிலையத்தினைத் திறந்து வைத்தார்.
- மேலும், அவர் வாதினார் என்னுமிடத்தில் நிறுவப்பட உள்ள கடலோரக் காவல் படையின் படகுத் துறைக்கும் அடிக்கல் நாட்டினார்.
- இரு மையங்களும் குஜராத்தின் கடலோரத் தேவபூமியான துவாரகா மாவட்டத்தில் அமைந்துள்ளன.
- மிதவை வானூர்தி நிலையம் என்பது தேவையுள்ள இடங்களுக்குப் பயண வசதியினை அளிப்பதற்கும், மிதவை வானூர்திகள் தரையிறங்க இசைவு செய்யும் வகையிலான உள்கட்டமைப்பினைக் கொண்ட ஒரு முனையமாகும்.

## வித்யா சமிக்சா கேந்த்ரா

- குஜராத் மாநிலக் கல்வித் துறையானது, காந்தி நகரில் ஒரு வழிகாட்டு மற்றும் கட்டுப்பாட்டு மையம் அல்லது வித்யா சமிக்சா என்ற கேந்த்ராவினை நிறுவியுள்ளது.
- இது சேர்க்கை, வருகை, கற்றல் பயன்கள், இடைநிற்றல் மற்றும் பள்ளியின் அங்கீகாரம் ஆகியவற்றைக் கண்காணித்து, பள்ளிகள் ஆசிரியர்கள் மற்றும் தொகுதி & தொகுப்பு நிலை வள மைய ஒருங்கிணைப்பாளர்களைக் கண்காணிக்கிறது.
- இந்த மையமானது, கற்றல் பயன்களை மேம்படுத்துவதற்காக தரவு மற்றும் தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## பாரம்பரிய மருத்துவ மையம்




- குஜராத்தின் ஜாம்நகரில் நிறுவப்பட்டுள்ள உலக சுகாதார அமைப்பின் உலகப் பாரம்பரிய மருத்துவ மையத்தினை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைக்க உள்ளார்.
- இது உலகிலேயே இதே போன்ற வகையிலான ஒரு முதல் மையமாகும்.
- தொழில்நுட்ப மேம்பாடுகள் மற்றும் சான்றுகள் ஆகியவற்றின் அடிப்படையிலான ஆராய்ச்சி ஆகியவற்றுடன் ஒருங்கிணைப்பதன் மூலம் பாரம்பரிய மருத்துவத்தின் செயல்திறனை வெளிக் கொணர்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## சுற்றுச்சூழல் அனுமதி வழங்கும் செயல்முறையில் மாற்றங்கள்

- மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத் துறை அமைச்சகமானது, மேம்பாட்டுத் திட்டங்களுக்கான சுற்றுச்சூழல் அனுமதி வழங்கும் செயல்முறையில் சில மாற்றங்களை அறிமுகப் படுத்தியுள்ளது.
- அதே சமயம் இதர சில திட்டங்களுக்கு இதன் அதிகார வரம்பிலிருந்து முற்றிலும் விலக்கு அளிப்பதற்கு இது முன்மொழிந்துள்ளது.
- இதற்கு சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.
- இதில் 39 வகையான மேம்பாட்டுத் திட்டங்களுக்குச் சுற்றுச்சூழல் அனுமதி பெறுதல் என்பது கட்டாயமாகும்.
- அவற்றுள் நீர்மின் நிலையம், சுரங்கம் மற்றும் அனல்மின் நிலையம் போன்றவை உள் அடங்கும்.

- இந்த அனுமதி வழங்கல் செயல்முறையானது 2006 ஆம் ஆண்டில் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிப்பின் மூலம் குறிப்பிடப்பட்டது.




## அனைத்து திறன்மிகு நகரங்களிலும் ஒருங்கிணைந்த வழிகாட்டு மற்றும் கட்டுப்பாட்டு மையம்

- இந்தியாவில் திறன்மிகு நகரங்கள் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டு வரும் 100 நகரங்களுள், 20 நகரங்களில் சில ஒருங்கிணைந்த வழிகாட்டு மற்றும் கட்டுப்பாட்டு மையங்கள் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளன.
- 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் தேதிக்குள் மீதமுள்ள நகரங்களிலும் இந்த மையங்கள் நிறுவப்படும்.
- இந்த மையங்கள் திறன்மிகு நகரங்கள் திட்டத்தின் ஒரு முக்கிய அங்கமாகும்.
- இந்தத் திட்டமானது 100 சுய நிலைத்தன்மையுடைய, குடிமக்களுக்கு உகந்த நகர்ப் புறக் குடியிருப்புகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உள்துறை அமைச்சகமானது ஒருங்கிணைந்த வழிகாட்டு மற்றும் கட்டுப்பாட்டு மைய மாதிரியினை இறுதி செய்து, மகாராஷ்டிரா, உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் இதனை ஒரு மாதிரித் திட்டமாக அமல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ஆக்டினிமென்ஸ் கோயாஸ்

- இந்திய வேளாண் ஆராய்ச்சிச் சபையினைச் சேர்ந்த தேசிய மீன் மரபணு வள வாரியத்தின் அறிவியலாளர்கள் புதிய இறால் இனம் ஒன்றைக் கண்டறிந்துள்ளனர்.
- இந்தப் புதிய இனத்திற்கு ஆக்டினிமென்ஸ் கோயாஸ் என்று பெயரிடப்பட்டுள்ளது.
- புதிதாகக் கண்டறியப்பட்ட இந்த இறால் இனமானது அகட்டி என்ற தீவின் பவளத் திட்டுப் பகுதியிலிருந்து சேகரிக்கப்பட்டது.
- அகட்டி தீவானது லட்சத்தீவின் ஓர் அங்கமாகும்.
- A. தினகரன், புருசோத்தமன் பரமசிவம், குல்தீப், K. லால் மற்றும் T.T. அஜித்குமார் ஆகியோர் அடங்கிய ஒரு குழுவினால் இந்த இனமானது கண்டறியப்பட்டது.



## இ-தார் தளம்

- சட்டத்தின் கீழ் கோரப்படும் மோட்டார் வாகன விபத்துகள் மற்றும் கோரிக்கைகள் மீதான தரவுகளை நெறிமுறைப் படுத்துவதற்கான e-DAR எனப்படும் ஒரு இணைய தளத்தின் செயல்விளக்கமானது சமீபத்தில் உச்சநீதிமன்றத்திடம் வழங்கப்பட்டது.
- E-DAR (விரிவான இணைய வழி விபத்து அறிக்கை) என்பது காப்பீட்டு நிறுவனங்களின் ஆதரவோடு சாலைகள், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகத்தினால் உருவாக்கப்பட்டது.
- இது சில புகைப்படங்களைக் கொண்டு சாலை விபத்துகள் பற்றிய உடனடித் தகவல்களைத் தந்து, விபத்து இழப்பீட்டுக் கோரிக்கைகளைத் துரிதப் படுத்தவும், பாதிக்கப் பட்டவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்கவும் உதவும்.

## நாட்போல்ரெக்ஸ்-VIII

- இந்தியக் கடலோரக் காவல்படையானது, 'நாட்போல்ரெக்ஸ்-VIII' (8வது) எனப்படும் இரண்டு நாள்கள் வரை நடைபெறும் தேசிய அளவிலான மாசு எதிர்ப்புப் பயிற்சியைத் தொடங்கியது.
- கடலில் கசிவு ஏற்பட்டால் மேற்கொள்ள வேண்டிய இந்த தயார்நிலைப் பயிற்சியைப் பாதுகாப்புச் செயலாளர் டாக்டர் அஜய் குமார் தொடங்கி வைத்தார்.
- நாட்போல்ரெக்ஸ்-VIII பயிற்சியின் நோக்கம் கடலில் ஏற்படும் கசிவு நிகழ்வுகளை எதிர்த்துப் போராடுவதில் அனைத்து பங்குதாரர்களின் தயார்நிலை மற்றும் எதிர்ப்புத் திறனை மேம்படுத்துவதாகும்.

## நடமாடும் சூரியசக்தி மேற்கூரை அமைப்பு

- இந்தியாவின் முதலாவது நடமாடும் சூரியசக்தி மேற்கூரை அமைப்பு குஜராத்தின் காந்தி நகரில் உள்ள சுவாமிநாராயண் அக்சர்தாம் கோவில் வளாகத்தில் நிறுவப் பட்டுள்ளது.
- இந்த 10 ஒளி மின்னழுத்தத் திறன் கொண்ட PV போர்ட் அமைப்பானது, புது டெல்லியின் சர்வோடெக் பவர் சிஸ்டம்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்தினால் தயாரிக்கப் பட்டது.
- இந்தியா முழுவதும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆற்றல் மிக்க நகரங்களை உருவாக்குவதற்காக வேண்டி, மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சகத்தினால் மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்பின் கீழ் இந்த அமைப்புகள் நிறுவப் பட்டுள்ளன.

## வாக்சீர்

- இந்தியக் கடற்படையின் P75 என்ற திட்டத்தின் ஆறாவது நீர்மூழ்கிக் கப்பலான வாக்சீர் என்பது சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- P75 திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட ஸ்கார்பியன் ரக நீர்மூழ்கிக் கப்பல்களில் இது கடைசிக் கப்பலாகும்.
- P75 திட்டத்தின் கீழ், ஐஎன்எஸ் கல்வாரி, ஐஎன்எஸ் காந்தேரி, ஐஎன்எஸ் கரஞ்ச் மற்றும் ஐஎன்எஸ் வேலா ஆகியவை படையில் இணைக்கப்பட்டன.
- வாக்சீர் கப்பலின் கடல்பரப்பிலான இயக்கம் குறித்தச் சோதனைகள் நடைபெற்று வருகின்றன.
- சாண்ட் ஃபிஷ் (sandfish) எனப்படும் இந்தியப் பெருங்கடலின் ஆழ்கடலில் வாழும் ஒரு வேட்டையாடும் மீனின் பெயரைக் கொண்டு இதற்கு வாக்சீர் என்று பெயரிடப்பட்டது.
- ரஷ்யாவிலிருந்துப் பெறப்பட்ட முதல் நீர்மூழ்கிக் கப்பலான வாக்சீர் 1974 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் தேதியன்று இந்தியக் கடற்படையில் இணைக்கப்பட்டு, 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் தேதியன்றுப் படையிலிருந்து விலக்கப் பட்டது.

## இந்தியாவின் முதலாவது தூயப் பசுமை ஹைட்ரஜன் ஆலை

- இந்தியாவின் முதலாவது தூயப் பசுமை ஹைட்ரஜன் ஆலையானது அசாமில் உள்ள ஜோர்ஹட் என்னுமிடத்தில் திறக்கப்பட்டுள்ளது.
- இது ஆயில் இந்தியா லிமிடெட் நிறுவனத்தினால் தொடங்கப்பட்டது.
- இந்த ஆலையானது, 100 kW எதிர்மின் அயனி மாற்றச் சவ்வு மின்னாற்பகுப்பு என்ற வரிசையை (Anion Exchange Membrane (AEM) Electrolyser array) பயன்படுத்தி, தற்போதுள்ள 500 kW சூரியசக்தி ஆலை மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தில் இருந்து பசுமை ஹைட்ரஜனை உற்பத்தி செய்கிறது.




## உலகின் மிக உயரமான சுரங்கப்பாதை

- எல்லைச் சாலைகள் அமைப்பானது 16,580 அடி உயரத்தில் இமாச்சலப் பிரதேசத்தின் ஷிங்கு லா கணவாயில் உலகின் மிக உயரமான சுரங்கப்பாதையினைக் கட்டமைக்க உள்ளது.
- இந்தச் சுரங்கப் பாதை லடாக்கின் ஜான்ஸ்கர் பள்ளத்தாக்குப் பகுதியை இமாச்சலப் பிரதேசத்துடன் இணைக்கும்.

- இந்த உயர்லட்சியத் திட்டத்தைச் செயல்படுத்தச் செய்வதற்காக வேண்டி மத்திய அரசு யோஜக் என்ற திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- இந்தச் சுரங்கப்பாதையின் தெற்கு வாசல் ஷிங்கு லாவில் அமைந்திருக்கும்.
- இந்தச் சுரங்கப்பாதையின் வடக்கு வாசல் லகாங்கில் அமைந்திருக்கும்.




## தேசிய இணையவழிப் பாதுகாப்பு சார்ந்த சம்பவங்களுக்கான எதிர்ப்புப் பயிற்சி

- அரசு அதிகாரிகள் மற்றும் முக்கியமான துறையின் நிறுவனங்களுக்காக தேசிய இணைய வழிப் பாதுகாப்பு சார்ந்த சம்பவங்களுக்கான ஒரு எதிர்ப்பு பயிற்சியினைத் தேசியப் பாதுகாப்புச் சபை செயலகம் ஏற்பாடு செய்துள்ளது.
- நாட்டின் இணைய நிலைப்பாட்டை வலுப்படுத்தும் ஒரு நோக்கத்துடன் இது ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
- தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் தேசிய இணையவழிப் பாதுகாப்பு சார்ந்த சம்பவங்களுக்கான எதிர்ப்புப் பயிற்சியைத் தொடங்கி வைத்தார்.

## காரீஃப் பருவம் – 2022

- 2022-23 ஆம் ஆண்டிற்கான காரீஃப் பருவத்திற்கான வேளாண்மை குறித்த ஒரு தேசிய மாநாட்டை மத்திய வேளாண் அமைச்சர் நரேந்திர சிங் தோமர் தொடங்கி வைத்தார்.
- இது புதுடெல்லியில் உள்ள தேசிய வேளாண் அறிவியல் வளாகத்தில் தொடங்கப் பட்டது.
- 2வது மேம்படுத்தப் பட்ட மதிப்பீடுகளின்படி (2021-22), நாட்டின் மொத்த உணவு தானிய உற்பத்தியானது 3160 லட்சம் டன்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- இது இதுவரையில் பதிவானதை விட அதிக வரம்பை எட்டியுள்ளது.
- எண்ணெய் வித்துகள் மற்றும் பருப்பு வகைகள் ஆகியவற்றின் உற்பத்தி முறையே 371.5 மற்றும் 269.5 லட்சம் டன்களாக இருக்கும்.
- 3 வது மேம்படுத்தப் பட்ட மதிப்பீடுகளின்படி, 2020-21 ஆம் ஆண்டில் தோட்டக்கலை உற்பத்தி 3310.5 லட்சம் டன்கள் ஆக இருந்தது.
- இது நாட்டின் தோட்டக்கலைத் துறையில் இதுவரை பதிவாகாத அளவுக்கு அதிகமாக உள்ளது.

## இந்தியாவின் முதலாவது சர்வதேச பயணியர் கப்பல் மாநாடு



- இந்தியாவின் முதலாவது சர்வதேச பயணியர் கப்பல் மாநாடானது (2022) மும்பையில் நடத்தப்பட உள்ளது.
- இந்த இரண்டு நாள் நிகழ்ச்சியைத் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகம், மும்பைத் துறைமுக ஆணையம் மற்றும் இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறைக் கூட்டமைப்பு ஆகியவை இணைந்து மும்பையில் ஏற்பாடு செய்துள்ளன.

## உலகளாவிய ஆயுஷ் முதலீடு மற்றும் புத்தாக்க உச்சி மாநாடு 2022

- குஜராத்தின் காந்திநகரில் உள்ள மகாத்மா மந்திர் எனுமிடத்தில் நடைபெற உள்ள இந்த உச்சி மாநாட்டை பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தொடங்கி வைக்க உள்ளார்.
- இந்த மூன்று நாள் அளவிலான மாநாடானது முக்கிய கொள்கை வகுப்பாளர்கள், தொழில்முனைவோர், முதலீட்டாளர்கள், புத்தாக்க நிறுவனங்கள் மற்றும் பிற தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்கள் ஆகியவற்றை ஒன்றிணைக்கும்.
- அவர்கள் புத்தாக்க கருத்துகளைப் பற்றி விவாதிக்கவும் இந்திய நாட்டினைத் தொழில் முனைவோருக்கான உலகளாவிய ஆயுஷ் மையமாக எவ்வாறு மாற்றலாம் என்பது பற்றி விவாதிக்கவும் இந்த உச்சி மாநாடு உதவும்.

## திறன்மிகு நகரங்கள், திறன்மிகு நகரமயமாக்கல் மாநாடு

- மூன்று நாட்கள் கால அளவிலான "திறன்மிகு நகரங்கள், திறன்மிகு நகரமயமாக்கல் மாநாடானது" சூரத் நகரில் தொடங்கியது.
- சூரத் திறன்மிகு நகரக் கழக நிறுவனத்துடன் இணைந்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகம் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது.
- சூரத் மற்றும் இந்தூர் ஆகியவற்றிற்கு சிறந்த நகரத்திற்கான விருதும், உத்தரப் பிரதேச மாநிலத்திற்குச் சிறந்த மாநிலத்திற்கான விருதும் இதில் வழங்கப்பட்டன.

## இந்தியாவின் குழந்தைகளின் நிலை

- பல்பரிமாணக் குழந்தை மேம்பாட்டு நிலை மற்றும் போக்குகள் எனப்படும் இந்தியாவின் குழந்தைகளின் நிலை குறித்த சமீபத்திய ஒரு அறிக்கையானது நிதி ஆயோக் மற்றும் யுனிசெஃப் இந்தியா ஆகியவற்றால் உருவாக்கப்பட்டு வெளியிடப் பட உள்ளது.

- ❖ இந்தியாவின் குழந்தைகள் நிலை குறித்த இந்தியாவின் முதல் அறிக்கை இதுவாகும்.
- ❖ அனைத்து மாநிலங்களிலும் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து, கல்வி, நீர் மற்றும் சுகாதாரம், வீட்டு வாழ்க்கைத் தரம் மற்றும் குழந்தைகளுக்கு ஏதுவான சூழல் ஆகியவற்றைப் புரிந்து கொள்வதற்கு ஏதுவான ஒரு கட்டமைப்பை இந்த அறிக்கை உருவாக்கும்.

## தலைமை அறிவியல் ஆலோசகர்



- ❖ மத்திய அரசின் தலைமை அறிவியல் ஆலோசகராகப் பிரபல இயற்பியலாளர் அஜய் குமார் சூட் நியமிக்கப்பட்டுள்ளார்.
- ❖ இவர் பிரதமரின் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க ஆலோசனைக் குழுவில் உறுப்பினராக உள்ளார்.
- ❖ இவர் மூன்று வருட பணிக் காலத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.
- ❖ இவர் கிராபைன் பற்றிய இவரது பணிக்காக பிரபலமாக அறியப்படுகிறார்.
- ❖ மேலும், இவர்பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் கல்வி கழகத்தில் இயற்பியல் பேராசிரியராகவும் உள்ளார்.
- ❖ இந்தப் பணி நியமனத்திற்கு மத்திய அமைச்சரவையின் நியமனக் குழு ஒப்புதல் அளித்து உள்ளது.
- ❖ இவர் புகழ்பெற்ற உயிரியலாளர் K.விஜயராகவனை அடுத்து இந்தப் பதவியை ஏற்க உள்ளார்.

## 2022 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் எண்ணெய் உற்பத்தி

- ❖ 2022 ஆம் ஆண்டு மார்ச் 31 அன்று முடிவடைந்த நிதியாண்டில் இந்தியாவின் கச்சா எண்ணெய் உற்பத்தி 2.67 சதவீதம் குறைந்துள்ளது.
- ❖ ONGC நிறுவனத்தின் உற்பத்தியானது அதன் இலக்கை விட குறைவாக இருந்தது.
- ❖ ஆனால், ரிலையன்ஸ்-பாரத் பெட்ரோலியம் நிறுவனத்தின் கிருஷ்ணா கோதாவரி எண்ணெய்க் கிணற்றின் இயற்கை எரிவாயு உற்பத்தி உயர்ந்துள்ளது.
- ❖ 2021-22 ஆம் ஆண்டில் (ஏப்ரல் 2020 முதல் மார்ச் 2022 வரை) கச்சா எண்ணெய் உற்பத்தி 29.69 மில்லியன் டன்களாக இருந்தது.

- இது 2020-21 ஆம் ஆண்டில் இருந்த 30.5 மில்லியன் டன் உற்பத்தியை விட 2.63 சதவீதம் குறைவாகும்.
- நாட்டின் கச்சா எண்ணெய் உற்பத்தி குறைவதற்கு முதன்மைக் காரணம், உற்பத்திக் காலம் கடந்த தளங்களில் இயற்கையான உற்பத்தி குறைந்து வருவதே ஆகும்.

## ஐக்கிய அரபு அமீரகத்தில் UPI

- இந்திய தேசிய கொடுப்பனவுக் கழகத்தின் சர்வதேச பணவழங்கீட்டு நிறுவனமானது, ஐக்கிய அரபு அமீரகம் முழுவதும், BHIM எனும் பண வழங்கீட்டு இடைமுக அமைப்பு NEOPAY முனையங்களில் நேரடியாக கிடைக்கப் பெறும் என்று அறிவித்துள்ளது.
- இந்த முன்னெடுப்பானது, ஐக்கிய அரபு அமீரகத்திற்குச் செல்லும் மில்லியன் கணக்கான இந்தியர்கள் வசதியான மற்றும் பாதுகாப்பான முறைகளில் பணம் செலுத்துவதற்கான ஒரு வசதியை அளிக்கும்.
- NEOPAY வசதி பெற்ற வணிக வளாகங்கள் மற்றும் கடைகள் என அனைத்திலும் BHIM UPI அமைப்பைப் பயன்படுத்திப் பணம் செலுத்தலாம்.
- NEOPAY என்பது மஷ்ரெக் வங்கியின் ஒரு பணவழங்கீட்டுத் துணை நிறுவனம் ஆகும்.
- அந்த நாட்டில் UPI வசதியை ஏற்றுக் கொள்ளும் உள்கட்டமைப்பை உருவாக்க இந்திய தேசியக் கொடுப்பனவுக் கழகத்தின் சர்வதேசப் பணவழங்கீட்டு நிறுவனமானது 2021 ஆம் ஆண்டில் NEOPAY உடன் கை கோர்த்தது.

## அகில இந்தியக் காவல் அறிவியல் மாநாடு

- மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா 48வது அகில இந்தியக் காவல் அறிவியல் மாநாட்டினைத் தொடங்கி வைத்தார்.
- இது காவல்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு வாரியத்தினால் ஏற்பாடு செய்யப் பட்டது.
- போபாலில் உள்ள மத்திய காவல்துறைப் பயிற்சிக் கழகத்தில் இந்த இரண்டு நாட்கள் அளவிலான நிகழ்ச்சி நடத்தப் பட்டது.
- பல்வேறு காவல் படைகள், பிரிவுகள், சமூக விஞ்ஞானிகள், தடயவியல் வல்லுநர்கள் மற்றும் பிற பங்குதாரர்களுக்கு இந்தியக் காவல் துறை சார்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கருத்தாக்கங்கள் குறித்து விவாதிக்க ஒரு பொதுவானத் தளத்தை வழங்குவதே இந்த நிகழ்ச்சியின் நோக்கமாகும்.
- அகில இந்தியக் காவல் அறிவியல் மாநாட்டில் காவல் படைகள், பிரிவுகள், சமூக விஞ்ஞானிகள், தடயவியல் நிபுணர்கள் மற்றும் பங்குதாரர்கள் ஆகியோர் சீர்திருத்த நிர்வாகத் துறையின் அதிகாரிகளுடன் முதன்முறையாக கலந்து கொள்ள உள்ளனர்.

## முப்பரிமாண அச்சாக்க உற்பத்தி கொள்கை

- பொருள், இயந்திரம் மற்றும் மென்பொருளுக்கான 50 இந்தியா சார்ந்த தொழில் நுட்பங்கள், முப்பரிமாண அச்சாக்கத்திற்கான 100 புதியப் புத்தாக்க நிறுவனங்கள் மற்றும் 500 புதியத் தயாரிப்புகள் போன்ற சில இலக்குகளை அடைவதை இந்தியா ஒரு இலக்காகக் கொண்டுள்ளது.

- 2025 ஆம் ஆண்டுக்குள் முப்பரிமாண அச்சாக்கத்தினை உருவாக்கலுக்கான தேசிய உத்தியின் படி இந்த இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.
- நெகிழி, பிசின், தெர்மோபிளாஸ்டிக் (வெப்பநெகிழி), உலோகம், இழை அல்லது பீங்கான் போன்ற பொருட்களின் தொடர் அடுக்குகளை அடுக்கி, பொருட்களின் முன்மாதிரிகள் அல்லது செயல்பாட்டு மாதிரிகளை உருவாக்க 3D அச்சாக்கம் அல்லது முப்பரிமாண அச்சாக்கம் கணினியின் வடிவமைப்பு முறையைப் பயன்படுத்துகிறது.




## அணு மின் நிலையங்கள்

- எதிர்காலத்தில் அணுமின் நிலையங்களை நிறுவுவதற்காக ஐந்து புதிய இடங்களுக்கு அரசு கொள்கை ரீதியிலான ஒரு ஒப்புதலை வழங்கியுள்ளதாக டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.
- சோதனை முறையில் அமைக்கப்பட உள்ள 10 உள்நாட்டு 700 மெகா வாட் அழுத்தம் கொண்ட கனரக நீர் உலைகளைக் கட்டமைப்பதற்கான நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி அனுமதியை அரசாங்கம் வழங்கியுள்ளது.
- அணுசக்தித் திறன் 2031 ஆம் ஆண்டிற்குள் 22,480 மெகா வாட் திறனை எட்டும் என்று இதன் மூலம் எதிர்பார்க்கப் படுகிறது.

## மத்திய குடிமைப் பணி தேர்வில் மாற்றுத் திறனாளி விண்ணப்பதாரர்கள்

**LOGICALLY CHALLENGED?**

**WHAT SENSE DO THESE RULES MAKE?**

| Level of disability | Services open |
|---|---|
| Both hands or arms | Eligible for IAS but not any other service |
| One arm and leg | Eligible for IFS but not for IAS and several other services |
| Both legs | Eligible for all accounts services except Indian Audits and Accounts Service |
| One arm or one leg | Armed Forces Headquarters Service open only to these two kinds of locomotor disability |
| One leg or hearing impaired | Eligible for Delhi, Andaman and Nicobar Islands, Lakshadweep, Daman and Diu and Dadra and Nagar Haveli police service (DANIPS) but not for any other police service |

- குடிமைப் பணியின் எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாற்றுத் திறனாளி விண்ணப்ப தாரர்களுக்கு உச்ச நீதிமன்றம் தனது இடைக்கால உத்தரவில் அனுமதி அளித்துள்ளது.

- இந்திய இரயில்வே பாதுகாப்புப் படைப் பணி (IRPFS), இந்தியக் காவல்துறைப் பணி ஆகியவற்றுடன் சேர்த்து டெல்லி, டாமன் & டையூ, தாத்ரா மற்றும் நகர் ஹவேலி, அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் மற்றும் லட்சத்தீவு காவல் பணி ஆகியவற்றிற்கும் அவர்கள் தற்போது தற்காலிகமாக விண்ணப்பிக்கலாம் என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

## டெல்லி இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் - Posoco நிறுவனம்

- பவர் சிஸ்டம் ஆபரேஷன் கார்ப்பரேஷன் லிமிடெட் (Posoco) என்ற நிறுவனத்தின் வடக்குப் பிராந்திய சரக்கு அனுப்புகை மையமானது, டெல்லியின் இந்தியத் தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- இது இந்தியாவின் மின்துறை தொடர்பான பிரச்சினைகள் குறித்த ஒரு ஆராய்ச்சியை ஊக்குவிப்பதற்கும் கல்வித்துறைக்கும் தொழில்துறைக்கும் இடையிலான சில தொடர்புகளை வலுப்படுத்துவதற்குமான ஒரு ஒப்பந்தமாகும்.

## ரைசினா பேச்சுவார்த்தை 2022

- ரைசினா பேச்சு வார்த்தை பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் தொடங்கி வைக்கப் பட்டதுர்.
- இந்நிகழ்விற்கான ஒரு சிறப்பு விருந்தினராக ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் கலந்து கொண்டார்.
- இது நாட்டின் முதன்மையானப் புவி-பொருளாதாரம் மற்றும் பலதரப்பு வெளியுறவுக் கொள்கை மாநாடு ஆகும்.
- "Terranova - Impassioned, Impatient, Imperilled" என்பது 2022 ஆம் ஆண்டின் ரைசினா பேச்சு வார்த்தையின் கருத்துரு ஆகும்.

## வர்த்தக மற்றும் தொழில்நுட்பச் சபை

- சமீபத்தில், புது டெல்லியில் ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் உர்சுலா வான் டெர் லேயனுடன் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் ஒரு இருதரப்புப் பேச்சுவார்த்தையினை மேற்கொண்டார்.
- உத்திசார் கூட்டாண்மையை வலுப்படுத்துவதற்காக வேண்டி ஐரோப்பிய ஒன்றிய-இந்திய வர்த்தக மற்றும் தொழில்நுட்பச் சபையை நிறுவுவதற்காக ஓர் ஒப்பந்தமானது மேற்கொள்ளப் பட்டது.
- இதன் மூலம் ஐரோப்பிய ஒன்றியத்துடன் வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பச் சபையை நிறுவ உள்ள 2வது நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.

## உர்ஜா பிரவாஹா

- இந்தியக் கடலோரக் காவல்படையானது 'உர்ஜா பிரவாஹா' என்ற புதிய கப்பலைப் படையில் இணைத்துள்ளது.
- இது குஜராத்தின் பருச் என்ற பகுதியில் படையில் இணைந்துள்ளது.




## ராட்டில் மற்றும் குவார் மின் நிலையங்கள்

- ஜம்மு & காஷ்மீரில் அமைக்கப்பட உள்ள 850 மெகாவாட் திறனுடைய ரேட்டில் ஆற்றல் நிலையம் மற்றும் 540 மெகாவாட் திறனுடைய குவார் நீர்மின் நிலையம் ஆகியவற்றிற்கு பிரதமர் மோடி அவர்கள் சமீபத்தில் அடிக்கல் நாட்டினார்.
- இந்த அணைகள் கிஷ்த்வார் மாவட்டத்தில் பாயும் செனாப் ஆற்றின் குறுக்கே கட்டப் படும்.

## வெளிநாட்டு வாக்காளர்களின் பதிவு

- வெளிநாட்டில் தங்கியுள்ள இந்தியச் சமூகத்தினரை வெளிநாட்டு வாக்காளர்களாக பதிவு செய்யுமாறு இந்தியத் தலைமை தேர்தல் ஆணையர் சுஷில் சந்திரா வலியுறுத்தி உள்ளார்.
- வெளிநாடுகளில் உள்ள இந்திய வாக்காளர்களுக்கு மின்னணு முறையில் அனுப்பப் படும் தபால் வாக்குச் சீட்டு முறையை விரிவுபடுத்துவது குறித்தும் ஆலோசிக்கப் படுகிறது.

## குடும்ப நுகர்வு செலவினக் கணக்கெடுப்பு



- அனைத்திந்திய குடும்ப நுகர்வு செலவினக் கணக்கெடுப்பு ஆனது, பொதுவாக ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தேசியப் புள்ளியியல் அலுவலகத்தால் (NSO) நடத்தப் படுகிறது.
- இது நாட்டின் நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில் உள்ள குடும்பங்களின் நுகர்வுச் செலவின முறைகள் பற்றியத் தகவல்களைச் சேகரிப்பதற்காக வடிவமைக்கப் பட்டு உள்ளது.
- இந்தக் கணக்கெடுப்பில் சேகரிக்கப்பட்ட தரவு சரக்கு (உணவு மற்றும் உணவு அல்லாத) மற்றும் சேவைகளுக்கான சராசரிச் செலவினங்களைப் பற்றி தெளிவு படுத்துகிறது.
- நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள வறுமை நிலைகளை மதிப்பிடுவதற்கும், மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்ற பொருளாதாரக் குறிகாட்டிகளை மதிப்பாய்வு செய்யச் செய்வதற்கும் இது பயன்படுகிறது.
- 2011-12 ஆம் ஆண்டிலிருந்து தனிநபர் குடும்பச் செலவுகள் குறித்த அதிகாரப்பூர்வ மதிப்பீடுகளை இந்தியா பெற்றிருக்கவில்லை.

## கிசான் பகிதாரி, பிரத்மிக்தா ஹமாரி – பிரச்சாரம்




- 'கிசான் பகிதாரி, பிரத்மிக்தா ஹமாரி' பிரச்சாரத்தை வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது.
- பல்வேறு துறைகள் மற்றும் அமைச்சகங்களுடன் இணைந்து அரசின் 'சுதந்திரத் திரு நாள் அமுதப் பெருவிழாவின்' கீழ் இந்தப் பிரச்சாரம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இந்தப் பிரச்சாரத்தின் போது, வேளாண் மற்றும் விவசாயிகள் நலத் துறையால் இந்திய விவசாயிகளுக்காக பிராந்திய அளவில் பல்வேறு நாடு தழுவிய நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப் படுகின்றன.

## கின்னஸ் சாதனைப் புத்தகம் – இந்தியா

- 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 23 ஆம் தேதியன்று ஒரே நேரத்தில் 78,220 தேசியக் கொடிகளை அசைத்துக் காட்டி கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்து இந்தியா ஒரு வரலாற்றைப் படைத்தது.
- இந்த நிகழ்வானது, மத்திய உள்துறை அமைச்சர் அமித் சா முன்னிலையில் நடந்தேறியது.

- இது பீகார் மாநிலத்தின் போஜ்பூரில் நடைபெற்ற 'வீர் குன்வர் சிங் விஜயோத்சவ்' என்ற ஒரு நிகழ்ச்சியில் நிகழ்த்தப்பட்டது.




## AAHAR-2022: சர்வதேச உணவு மற்றும் விருந்தோம்பல் கண்காட்சி




- ஆசியாவின் மிகப்பெரிய சர்வதேச உணவு மற்றும் விருந்தோம்பல் கண்காட்சியான AAHAR-2022, இந்திய வர்த்தக மேம்பாட்டு அமைப்புடன் (ITPO) இணைந்து வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- புது டெல்லியில் உள்ள பிரகதி மைதானத்தில் இந்தக் கண்காட்சி நடத்தப் பட்டது.
- இது 36வது கண்காட்சி ஆகும்.
- இந்த கண்காட்சியானது, பார்வையாளர்களுக்கும் பங்கேற்பாளர்களுக்கும் வேண்டிய புதிய வணிக வழிகளை உருவாக்குவது குறித்த தகவல்களைப் பெறுவதற்கு என்று ஒரு நிகரற்ற வாய்ப்பை வழங்கும்.
- நாட்டின் ஆற்றல் மிக்க வளர்ந்து வரும் சந்தையைச் செயல்திறன் மிக்க முறையிலும், பயனுள்ள முறையில் சந்தைப்படுத்தவும் இந்தக் கண்காட்சி உதவும்.

## முத்தரப்பு மேம்பாட்டுக் கழக நிதி

- இந்தியா மற்றும் ஐக்கிய இராஜ்ஜியம் ஆகிய இரு நாடுகளும் புத்தாக்க நிறுவனங்களுக்குப் பயனளிக்கும் வகையில் தங்களதுப் புத்தாக்கச் சூழலமைவினை மேம்படுத்த விரும்புவதால், இந்த இருநாடுகளும் தங்களது உலகப் புத்தாக்கக் கூட்டாண்மையைத் தொடங்கியுள்ளன.
- வளர்ச்சி மற்றும் கண்டுபிடிப்புத் துறையில் இந்தியாவுடன் இணைந்துப் பணியாற்ற விரும்பும் ஜெர்மனி, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம், பிரான்ஸ் போன்ற பிற நாடுகளுடனான திட்டங்களுக்கு முத்தரப்பு மேம்பாட்டுக் கழக (TDC) நிதியைப் பயன்படுத்துவதற்கான ஒரு மாதிரியை இந்தக் கூட்டாண்மை வழங்கும் என்று எதிர் பார்க்கப் படுகிறது.
- இந்தக் கூட்டாண்மைக்கு இந்தியாவும் இங்கிலாந்தும் இணைந்து நிதியளிக்க உள்ளன.

## இந்தியா - எஃகு உற்பத்தி வளர்ச்சி

- உலகின் முதல் பத்து எஃகு உற்பத்தி நாடுகளில் இந்தியா மட்டுமே 2022 ஆம் ஆண்டு ஜனவரி முதல் மார்ச் மாதம் வரையில், கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் இருந்ததை விட, அதிக எஃகு உற்பத்தியை மேற்கொண்டுள்ளது.
- உலக எஃகு சங்கம் வெளியிட்டுள்ள தரவுகளில் இந்தத் தகவலானது கூறப்பட்டுள்ளது.
- இந்தியா, முந்தைய ஆண்டை விட 5.9% அதிகமாக 9 மில்லியன் டன் எஃகினை உற்பத்தி செய்தது.
- 2022 ஆம் ஆண்டில் 9 மில்லியன் டன் எஃகு உற்பத்தி செய்யப்பட்டதை அடுத்து இந்தியாவின் வளர்ச்சி விகிதம் 4.4 சதவீதமாக உள்ளது.


worldsteel ASSOCIATION

MARCH 2022 CRUDE STEEL PRODUCTION

TOP 10 STEEL-PRODUCING COUNTRIES

| | Mar 2022 (Mt) | % change Mar 22/21 | Jan-Mar 2022 (Mt) | % change Jan-Mar 22/21 |
|---|---|---|---|---|
| China | 88.3 | -6.4 | 243.4 | -10.5 |
| India | 10.9 | 4.4 | 31.9 | 5.9 |
| Japan | 8.0 | -4.3 | 23.0 | -2.9 |
| United States | 7.0 | -1.7 | 20.3 | -0.4 |
| Russia | 6.6 e | -1.8 | 18.7 | -1.2 |
| South Korea | 5.7 | -6.1 | 16.9 | -3.8 |
| Germany | 3.3 | -11.8 | 9.8 | -3.7 |
| Turkey | 3.3 | -2.9 | 9.4 | -4.7 |
| Brazil | [illegible] e | [illegible] | 8.5 | -2.2 |
| Iran | 2.3 e | -6.1 | 6.9 | -4.4 |

## பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒதுக்கீடுகள் ரத்து - கேந்திரிய வித்யாலயாக்கள்

- கேந்திரிய வித்யாலயாக்களில் சேர்க்கைக்கான உறுப்பினர்களைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பரிந்துரைக்கும் ஒதுக்கீடு முறையை மத்திய அரசு ரத்து செய்துள்ளது.
- KVS சிறப்பு சேர்க்கை வழங்கீட்டுத் திட்டத்தின் கீழ், ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு 1 முதல் 9 வகுப்புகளில் சேர்க்கைக்காக ஒவ்வொரு கல்வியாண்டிலும் அவரவர் தொகுதிகளில் இருந்து அதிகபட்சமாக 10 மாணவர்களைப் பரிந்துரைக்கும் அதிகாரம் இருந்தது.

## நிலையான மேம்பாட்டு இலக்குகள் குறித்த ஒப்பந்தம்

- பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் மற்றும் ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டம் ஆகியவை நிலையான மேம்பாட்டு இலக்குகளை உள்ளாட்சி மயமாக்குவது தொடர்பான ஒரு கூட்டுப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- இந்த ஒப்பந்தத்தில் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தின் செயலாளர் சுனில் குமார் மற்றும் ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்ட அமைப்பின் உள்நாட்டுப் பிரதிநிதி ஷோகோ நோடா ஆகியோர் கையெழுத்திட்டனர்.

## சிவகிரி யாத்திரை & பிரம்ம வித்யாலயா

- சிவகிரி யாத்திரையின் 90வது ஆண்டு விழா மற்றும் பிரம்ம வித்யாலயாவின் பொன் விழா ஆகிய இரண்டுக் கொண்டாட்டங்களின் தொடக்க விழாவில் பிரதமர் மோடி அவர்கள் பங்கேற்றார்.
- ஓராண்டு அளவிலான இந்த இணைக் கொண்டாட்டங்களுக்கான முத்திரையையும் பிரதமர் மோடி அவர்கள் வெளியிட உள்ளார்.
- பிரம்ம வித்யாலயா மற்றும் சிவகிரி யாத்திரை இரண்டும் மகத்தான சமூக சீர்திருத்த வாதியான ஸ்ரீ நாராயண குருவின் ஆசியுடனும் வழிகாட்டுதலுடனும் தொடங்கப் பட்டது.

## இந்தியத் திறன்மிகு நகரங்கள் கண்காட்சி 2022

- இந்தியத் திறன்மிகு நகரங்கள் கண்காட்சி ஆனது, பசுமை கட்டிடங்கள், தூய எரிசக்தி, தூய சூழல், நீர், நகர்ப்புற இயக்கம் மற்றும் வளங்களை சரியான முறையில் மேம்படுத்துவதற்கும் நகரங்களைத் திறன்மிக்கதாகவும் நிலையானதாகவும் மாற்றச் செய்வதில் தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு போன்ற நகர்ப்புற மேம்பாட்டின் முக்கியத் தூண்களுடன் பரிமாற்றத் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைக்கிறது.
- 2022 ஆம் ஆண்டு இந்தியத் திறன்மிகு நகரங்கள் விருதுகள் என்பது நகர்ப்புற மற்றும் கிராமப்புறத் துறைகளில் தனிநபர்கள், கொள்கை வகுப்பாளர்கள், வணிக நிறுவனங்கள், நகராட்சிகள், அரசு நிறுவனங்கள் மற்றும் சங்கங்கள் ஆகியவற்றின் முயற்சிகளை மதிப்பளித்து, அங்கீகரித்து, ஊக்குவிக்கும் ஒரு வகையான தளமாகும்.
- சென்னை, கோயம்புத்தூர், திண்டுக்கல், ஈரோடு, மதுரை, சேலம், தஞ்சாவூர், தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருப்பூர் மற்றும் வேலூர் ஆகியவை தமிழகத்தின் 12 திறன்மிகு நகரங்களாகும்.

| Categories | Winners | Projects |
|---|---|---|
| Best Green Buildings Project | Faridabad Smart City Limited | ICCC Building |
| Best Healthcare Initiatives | Bhopal Smart City Development Corporation Limited | COVID Management through ICCC |
| Best Startup Initiatives | Bhopal Smart City Development Corporation Limited | B-Nest Foundation |
| Best Water Management | Solinas Integrity Private Limited | Pipeline Management Project for 24×7 Water Supply |
| City Innovation | Ujjain Smart City Limited | Digital Center |
| COVID 19 Recovery Innovation Award | Jabalpur Smart City Limited | Leveraging ICCC against COVID Pandemic |
| Digital City | New Town Kolkata Green Smart City Corporation | Digital Services in New Town Kolkata |
| Governance and Economy | Pimpri Chinchwad Smart City Limited | Smart Sarathi |
| Public Private Partnership Initiatives | Indore Smart City Development Limited | She Kunj |
| Safe City | Dehradun Smart City Limited | DICCC |
| Smart Energy Project | Jabalpur Smart City Limited | Smart Light Project |
| Smart Parking Initiatives | Indore Smart City Development Limited | Two Wheeler Multi-Level Parking |
| Smart Urban Mobility | Silvassa Smart City Limited | E-Bus Project |
| Smart Waste Disposal and Clean City | New Town Kolkata Green Smart City Corporation | Integrated Solid Waste Management System in New Town Kolkata |
| Smart City of the Year | Ujjain Smart City Limited | MRIDA |

## புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பரிமாற்றத் திட்டம்

- இந்தியா மற்றும் மாலத்தீவுகள் ஆகிய இரு நாடுகளுக்கும் இடையே புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பரிமாற்றம் செய்யும் நோக்கத்திற்காக வேண்டி ஒரு பரிமாற்ற இடைத் தொடர்பை அமைப்பதற்காக ஒரு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளன.
- இதற்கானச் சந்திப்பின் போது இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முன்மொழியப் பட்டன.
- அவற்றுள் ஒன்று, ஒரு சூரியன், ஒரு உலகம், ஒரு கட்டமைப்பு (OSOWOG - One Sun, One World, One Grid) என்ற ஒரு திட்டத்தின் கீழான பரிமாற்ற இடைத் தொடர்பிற்கானது, மற்றொன்று ஆற்றல் ஒத்துழைப்பிற்கான ஒரு ஒப்பந்தம் ஆகும்.

## புதுமையான வேளாண் முறை

- நிதி ஆயோக் அமைப்பானது, டெல்லியில் விஞ்ஞான் பவனில் "புதுமையான வேளாண் முறை" குறித்த தேசிய அளவிலான ஒரு பயிலரங்கத்தினை ஏற்பாடு செய்தது.
- இந்தப் பயிலரங்கில், இயற்கை வேளாண்மை முறைகளின் அடிப்படைகள், அறிவியல் மற்றும் செயல்முறைகளைப் புரிந்து கொள்ள வேண்டியதன் ஒரு அவசியம் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.
- இயற்கை வேளாண்மையைப் படிப்படியாகப் பின்பற்றச் செய்வது குறித்தும் இந்தப் பயிலரங்கத்தில் எடுத்துரைக்கப்பட்டது.
- கோவிட்-19 தொற்றுக் காலத்தின் போது நல்ல ஆரோக்கியம், சத்தான உணவு மற்றும் நோய் எதிர்ப்புச் சக்தி வழங்குதல் பற்றிய விழிப்புணர்வு அதிகரித்தது பற்றியும் இதில் சிறப்பித்துக் கூறப் பட்டது.
- சிறந்த ஊட்டச்சத்து வழங்கீட்டினை உறுதியுடன் வழங்கச் செய்வதில் கால்நடைகள் மற்றும் பசுக்களின் முக்கியத்துவம் குறித்தும் இந்தப் பயிலரங்கத்தில் பேசப்பட்டது.

- இயற்கை விவசாயத்தில் தொழில்நுட்பம் மற்றும் அறிவியலின் ஒரு முக்கியத்துவம் குறித்தும் இங்கு எடுத்துரைக்கப்பட்டது.

## சாலை விபத்துகள் குறித்த தகவல்களுக்கான ஒருங்கிணைந்த தரவுத் தளம்


- சாலை விபத்துகள் குறித்த தகவல்களுக்கான ஒருங்கிணைந்த தரவுத் தளம் (iRAD - Integrated Road Accident Database) என்பது சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின் ஒரு முன்னெடுப்பாகும்.
- நாட்டின் சாலைப் பாதுகாப்பை மேம்படுத்துவதே இதன் நோக்கம் ஆகும்.
- பல்வேறு துறைகள்/பங்குதாரர் அமைப்புகளின் விபத்து தொடர்பான அனைத்துத் தரவையும் ஒன்றிணைத்து அணுகுவதற்கு ஒரு மையப்படுத்தப்பட்ட விபத்து தரவுத் தளத்தை உருவாக்கச் செய்வதே இது உருவாக்கப்பட்டதன் பின்னணியில் உள்ள ஒரு முக்கியக் குறிக்கோள் ஆகும்.
- இது சமீபத்தில் சண்டிகர் நகரில் தொடங்கப்பட்டது.
- சாலை விபத்துகள் குறித்த தகவல்களுக்கான ஒருங்கிணைந்த தரவுத் தளம் என்பது, இந்தியா முழுவதும் விபத்துக்குள்ளாகும் பகுதிகள் பற்றிப் பல்வேறு விபரங்களைச் சேகரிப்பதற்காக வேண்டி சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்தின் ஒரு முன்னெடுப்பாகும்.

## லித்துவேனியாவில் இந்தியத் தூதரகம்

- லித்துவேனியாவில் புதிய இந்தியத் தூதரகத்தை நிறுவுவதற்கான முன்மொழிதலுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- பால்டிக் பிராந்தியத்தில் அமைய உள்ள இந்தியாவின் முதல் முழு அளவிலான தூதரகம் இதுவாகும்.
- லித்துவேனியா, தனது பிராந்தியத்தில் தைவான் நாட்டின் ஒரு அதிகாரப் பூர்வத் தூதரகத்தை நிறுவ அனுமதித்ததை அடுத்து, சீனாவுடனான அரசுமுறை சண்டையின் ஒரு மையமாக உள்ளது.
- 2008 ஆம் ஆண்டில் இந்தியாவில் தூதரகத்தைத் திறந்த முதல் பால்டிக் நாடு லித்துவேனியா ஆகும்.

## P&K உரங்களுக்கான ஊட்டச்சத்து அடிப்படையிலான மானிய வீதங்கள்

- பாஸ்பாட்டிக் மற்றும் பொட்டாசிக் (P&K) உரங்களுக்கு ஊட்டச்சத்து அடிப்படையிலான மானிய விலையை மத்திய அரசு அறிவித்தது.
- இது 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான இந்த ஆண்டின் காரிஃப் பருவத்திற்கான அறிவிப்பாகும்.
- இது 2021 ஆம் ஆண்டு முழுமைக்கும் ரூ.57,150 கோடியில் இருந்து ரூ.60,939 கோடியாக உயர்த்தப் படும்.
- இந்த மானிய உயர்வானது, டை-அம்மோனியம் பாஸ்பேட் மற்றும் யூரியா அல்லாத பிற உரங்களின் உலகளாவிய விலை உயர்விலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்கும்.




# சர்வதேசச் செய்திகள்

## பலிக்கட்டான் இராணுவப் பயிற்சி 2022

- அமெரிக்க இராணுவம் மற்றும் பிலிப்பைன்ஸ் இராணுவம் ஆகியவை இணைந்து 2022 ஆம் ஆண்டு பலிக்கட்டான் என்ற இராணுவப் பயிற்சியினைத் தொடங்கியுள்ளன.
- பிலிப்பைன்ஸ் தலைமையில் நடைபெறும் இந்த வருடாந்திரப் பயிற்சியானது தாய்வான் அருகே உள்ள பிலிப்பைன்ஸ் பகுதியின் லூசான் எனுமிடத்தில் நடைபெற உள்ளது.
- சுமார் 8,900 பிலிப்பைன்ஸ் மற்றும் அமெரிக்கப் படைகள் பங்கேற்கும் இந்த ராணுவப் பயிற்சியானது மிகப்பெரிய ஒரு பலிக்காட்டான் ராணுவப் பயிற்சியாகும்.

## HURUN சுயமாக உருவான U40 உலகக் கோடீஸ்வரர்கள் 2022

- ஹுருன் ஆராய்ச்சி நிறுவனமானது, ஹுருன் சுயமாக உருவான 40 வயதிற்குட்பட்ட கோடீஸ்வரர்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது.
- 40 வயது மற்றும் அதற்கும் கீழான சுயமாக உருவான உலகக் கோடீஸ்வரர்களை (அமெரிக்க டாலர் மதிப்பில்) இது தரவரிசைப்படுத்துகிறது.
- இது 40 வயது மற்றும் அதற்கும் கீழான, சுயமாக உருவான 80 கோடீஸ்வரர்களைப் பட்டியலிடுகிறது.
- இப்பட்டியலில் இந்தியா 4வது இடத்தில் உள்ளது.

- 37 நபர்களுடன் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.
- 25 நபர்களுடன் சீனா 2வது இடத்திலும், ஐக்கிய ராஜ்ஜியம் (8), இந்தியா (6) மற்றும் ஸ்வீடன் (3) ஆகிய நாடுகளும் முதல் 5 இடங்களில் உள்ளன.
- 76 பில்லியன் டாலர் சொத்து மதிப்புடன் மெட்டா நிறுவனத்தின் தலைமை நிர்வாக அலுவலர் மார்க் சுகர்பெர்க், சுயமாக உருவான 40 வயதிற்குட்பட்ட உலகின் மிகப் பெரும் பணக்காரராக திகழ்கிறார்.
- இவரைத் தொடர்ந்து, பைட் டான்ஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி சாங் யிமிங், FTX நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி சாம் பாங்க்மேன் பிரைடு, ஏர்பின்பி நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி பிரையன் செஸ்கி, முகநூல் நிறுவனத்தின் இணை நிறுவனர் டஸ்டின் மாஸ்கோவிட்ஸ் ஆகியோர் உள்ளனர்.

Global U40 Self-made Billionaires by Country and City of Residence

| | Country | No. of Billionaires | Change | | City | No. of Billionaires | Change |
|---|---|---|---|---|---|---|---|
| 1 - | USA | 37 | 6 | 1 ↑ | San Francisco | 15 | -1 |
| 2 | China | 25 | 5 | 2 ↓ | Beijing | 13 | 4 |
| 3 ↑ | UK | 8 | 5 | 3 ↑ | Palo Alto | 8 | 4 |
| 4 ↓ | India | 6 | 2 | 4 • | London | 7 | 5 |
| 5 • | Sweden | 3 | 2 | 5 - | Bengaluru | 4 | 0 |
| 6 • | Brazil | 2 | 2 | 5 ↓ | Shenzhen | 4 | 0 |
| 6 - | UAE | 2 | 0 | 7 ↑ | Stockholm | 3 | 2 |
| 8 • | Bahamas | 1 | 1 | 8 • | Sao Paolo | 2 | 2 |
| 8 • | Denmark | 1 | 1 | 8 - | Santa Monica | 2 | 0 |
| 8 ↓ | Australia | 1 | -1 | 8 - | Guangzhou | 2 | 0 |
| 8 ↓ | Singapore | 1 | -2 | 8 • | Mumbai | 2 | 2 |
| | | | | 8 - | Dubai | 2 | 0 |
| | | | | 8 - | LA | 2 | 0 |
| | | | | 8 - | Phoenix | 2 | 0 |

↑ Rank increase YOY ↓ Rank decrease YOY - No change
*Source: Hurun Global Rich List 2022*

## உலகின் மிகப்பெரிய மின்சாரப் பயணக் கப்பல்

- உலகின் மிகப்பெரிய மின்சாரப் பயணக் கப்பலானது யாங்சே நதியில் தனது முதல் பயணத்தை முடித்துக் கொண்டு, சீனாவின் மத்திய ஹூபே மாகாணத்திலுள்ள யிசாங் என்ற துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.
- இந்தப் பயணக் கப்பலானது, 7,500 கிலோவாட் – மணி திறன் கொண்ட ஒரு மாபெரும் கடல் சார் மின்கலனால் ஆற்றலைப் பெறுகிறது.
- இந்தக் கப்பலின் பெயர் யாங்சே நதி த்ரீ கார்ஜஸ் 1 (Yangtze River Three Gorges 1) என்பது ஆகும்.
- இந்தக் கப்பலானது முக்கியமான சுற்றுலாப் பயணங்களை மேற்கொள்ள வேண்டிப் பயன்படுத்தப் படும்.

## உலக மக்கள்தொகை நிலை அறிக்கை 2022

- ஐக்கிய நாடுகள் மக்கள்தொகை நிதியம் என்ற அமைப்பானது, ஆண்டுதோறும் உலக மக்கள்தொகை நிலை அறிக்கையினை வெளியிடுகிறது.
- இந்த அறிக்கையானது "Seeing the Unseen: The case for action in the neglected crisis of unintended pregnancy "என்று தலைப்பிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

- 2015 முதல் 2019 ஆம் ஆண்டு வரையில், உலகளவில் ஆண்டுதோறும் சுமார் 121 மில்லியன் என்ற அளவில் தேவையற்ற கருத்தரிப்புகள் அதிகரித்துள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- உலகம் முழுவதும் நவீன மற்றும் பாதுகாப்பான கருத்தடை முறைகள் இல்லாததால், சுமார் 257 மில்லியன் பெண்கள் கருத்தரிப்பினைத் தவிர்ப்பதற்கான கருத்தடை முறைகளை உபயோகிக்காமல் உள்ளனர்.

## கும்பல் கொலைகளுக்கு எதிரானச் சட்டம்

- அமெரிக்காவில் கும்பல் கொலைகளை வெறுக்கத்தக்க ஒரு குற்றமாக அறிவிக்கும் சட்டத்தில் அமெரிக்க அதிபர் ஜோ பிடன் கையெழுத்திட்டுள்ளார்.
- எம்மெட் டில் கும்பல் கொலைகளுக்கு எதிரான சட்டம் என்று இந்தச் சட்டத்திற்கு எம்மெட் டில் என்பவரின் நினைவாக பெயரிடப்பட்டது.
- இவர் 14 வயது நிரம்பிய ஒரு கறுப்பினச் சிறுவன் ஆவார்.
- இவர் 1955 ஆம் ஆண்டு மிசிசிப்பியில் உள்ள ஒரு மளிகைக் கடையில் வெள்ளையினப் பெண் ஒருவரைப் புண்படுத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டுக் கொடூரமாக கொல்லப் பட்டார்.

## இலங்கையில் அவசரநிலை அறிவிப்பு

- இலங்கையின் அதிபர் கோத்தபய ராஜபக்சே, அந்த நாட்டில் அவசரகால நிலையைப் பிரகடனப் படுத்தியுள்ளார்.
- இது நாட்டின் பாதுகாப்புப் படையினருக்கு பல்வேறு அதிகாரங்களை வழங்குகிறது.
- இலங்கை மக்கள் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக எழுந்த கோபத்துடன் நூற்றுக்கணக்கான குடிமக்கள் அவரது வீட்டை முற்றுகையிட முயன்றச் செய்ததை அடுத்து இது அறிவிக்கப்பட்டது.
- இலங்கை நாட்டில் பணவீக்கம் 18.7 சதவீதத்தை எட்டியுள்ளது.
- உணவுப் பொருட்களின் விலை 30.1 சதவீதம் உயர்ந்துள்ளது.
- டீசல் தட்டுப்பாடும் நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
- மின்னியற்றிகளை இயக்க டீசல் இல்லாததால் அங்கு தினமும் 13 மணி நேரம் மின் வெட்டு ஏற்படுகிறது.

## இணைய வனவிலங்கு வர்த்தகம் குறித்த அறிக்கை – உலக வனவிலங்கு நிதியம்

- மியான்மரில் இணையவழி வனவிலங்கு வர்த்தகம் அதிகரித்து வருவதாக உலக வன விலங்கு நிதியம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது
- இது அருகி வரும் உயிரினங்களுக்கும் பொதுச் சுகாதாரத்திற்கும் மிகப்பெரும் ஒரு ஆபத்தை விளைவிக்கச் செய்வதாக கூறுகின்றது.
- 2021 ஆம் ஆண்டில் ராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து இத்தகையப் பரிவர்த்தனைகளைத் தடை செய்வதற்கான அமலாக்க நடைமுறைகள் அந்த நாட்டில் பலவீனமடைந்துள்ளன.

- ஒரு வருடத்தில் இத்தகையப் பரிவர்த்தனைகள் 74% அளவிற்கு உயர்ந்துள்ளன.
- வர்த்தகம் செய்யப்பட்ட 173 இனங்களில், 54 இனங்கள் உலகளவில் அழிந்து வரும் நிலையில் உள்ளன.
- வனவிலங்கு வர்த்தகங்களுடன் தொடர்பான 639 முகநூல் கணக்குகள் அடையாளம் காணப் பட்டு முடக்கப்பட்டன.




## ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபை – பருவநிலை நிபுணர்

- ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையானது, மனித உரிமைகள் மற்றும் பருவநிலை மாற்றம் தொடர்பான உலகின் முதல் சுயாதீன நிபுணராக டாக்டர் லான் ஃப்ரை என்பவரை நியமித்துள்ளது.
- இவர் 3 ஆண்டுகளுக்கு இப்பதவியில் நியமிக்கப் பட்டுள்ளார்.
- இவர் ஆஸ்திரேலியா மற்றும் துவாலு ஆகிய நாடுகளின் இரட்டைக் குடியுரிமையைக் கொண்டுள்ளார்.
- இவர் இந்தப் பதவியை வகிக்க உள்ள ஆஸ்திரேலிய மற்றும் துவாலு நாடுகளின் தேசியக் குடியுரிமையைக் கொண்டுள்ள முதல் நபராவார்.

| Award | Winner | Runner-Up |
|---|---|---|
| Men's Single | Carlos Alcaraz (Spain) | Casper Ruud (Norway) |
| Women's Single | Iga Świątek (Poland) | Naomi Osaka (Japan) |
| Men's Double | Hubert Hurkacz / John Isner | Wesley Koolhof / Neal Skupski |
| Women's Double | Laura Siegemund / Vera Zvonareva | Veronika Kudermetova / Elise Mertens |

## சர்வதேச விமானப் போக்குவரத்து இணைப்புத் திட்டம்

- வான்வழி (பொது) போக்குவரத்து அமைச்சகமானது சர்வதேச விமானப் போக்குவரத்து இணைப்புத் திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.

- சமூக – பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக, இந்தியாவின் சில குறிப்பிட்ட மாநிலங்களிலிருந்து, சில தேர்ந்தெடுக்கப்பட்ட சர்வதேச தளங்களுக்கு விமானப் போக்குவரத்து இணைப்பினை மேம்படுத்தும் ஒரு நோக்கத்துடன் இந்தத் திட்டமானது தொடங்கப்பட்டது.
- புதியதாகத் தொடங்கப்பட்ட இத்திட்டத்திற்கு சில மாநில அரசுகள் ஆதரவு வழங்கி உள்ளன.

## இலங்கையின் அமைச்சரவை

- இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக அரசாங்கத்திற்கு எதிராக மக்களின் கோபம் அதிகரித்துள்ள நிலைமையில் இலங்கை நாட்டு அமைச்சரவையின் அனைத்து அமைச்சர்களும் ராஜினாமா செய்யத் தீர்மானித்து உள்ளனர்.
- இலங்கையில் பொது அவசரநிலையானது ரத்து செய்யப் பட்டு விட்டது.
- பிரதமர் மஹிந்த ராஜபக்சேவைத் தவிர ஏனையோர் பதவி விலகியுள்ளனர்.

## 5வது ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் சபை




- இந்த சபையானது 193 ஐநா உறுப்பு நாடுகளால் ஆனது.
- இது உலகளாவிய சுற்றுச்சூழல் நிர்வாகத்தை முன்னேற்றுவதற்காக வேண்டி இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கூடுகிறது.

- இது கென்யாவின் நைரோபியில் நடத்தப் பட்டது.
- இது நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைந்திடச் செய்வதற்காக இயற்கைக்கான நடவடிக்கைகளை வலுப்படுத்த 14 தீர்மானங்களுடன் முடிவடைந்தது.
- 2024 ஆம் ஆண்டிற்குள் பிளாஸ்டிக் மாசுபாட்டை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான சர்வதேச சட்டப்பூர்வ ஒப்பந்தத்தை உருவாக்குவதற்கான ஆணையுடன் அரசுகளுக்கு இடையேயான ஒரு பேச்சுவார்த்தைக் குழுவை நிறுவ சபை ஒப்புக் கொண்டது.
- இதைத் தொடர்ந்து UNEP@50 என்ற நிகழ்வு நடைபெற்றது.
- 1972 ஸ்டாக்ஹோம் மாநாட்டின் ஒரு முன்முயற்சியாக ஐக்கிய நாடுகளின் சுற்றுச் சூழல் திட்டம் (UNEP - United Nations Environment Programme) நிறுவப்பட்டதன் 50வது ஆண்டு விழாவை உலக நாடுகள் கொண்டாடின.
- நைரோபியில் இத்திட்டத்தின் தலைமையகத்தை நிறுவுவதற்கான ஒரு முடிவு 1972 ஆம் ஆண்டில் ஐ.நா.வால் எடுக்கப்பட்டது.
- நைரோபியில் உள்ள இந்த ஐக்கிய நாடுகளின் அலுவலகமானது தெற்கு அரைக் கோளத்தில் உள்ள ஒரே UN தலைமையகமாக உள்ளது.
- ஓசோன் அடுக்கைச் சேதப்படுத்தும் பொருட்களின் மீதான மாண்ட்ரியல் என்ற நெறி முறையை ஏற்க உதவும் வகையில் 1987 ஆம் ஆண்டில் உலகளாவியத் தீர்வை ஏற்றுக் கொள்வதற்கு UNEP பங்களித்தது.

## பாகிஸ்தான் நெருக்கடி

- 342 உறுப்பினர்களைக் கொண்ட பாகிஸ்தான் தேசியச் சட்டமன்றத்தில் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் பெரும்பான்மையை இழந்தார்.
- பாகிஸ்தான் பிரதமர் கானுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் இணைந்து கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை பாகிஸ்தான் துணை சபாநாயகர் சூரி தள்ளுபடி செய்தார்.
- இது பாகிஸ்தானின் அரசியலமைப்பு மற்றும் விதிகளுக்கு எதிரானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.
- அதன்பிறகு, தேசிய சட்டமன்றத்தைக் கலைக்குமாறு ஜனாதிபதி ஆல்விக்கு இம்ரான் கான் அறிவுறுத்தினார்.
- இதற்கிடையில், ஜனாதிபதி ஆல்வி இரு சபைகளையும் கலைத்தார்.
- 90 நாட்களுக்குள் புதிய தேர்தல் நடத்தப்படும் என்றார்.
- பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுக்கு எதிரான நம்பிக்கை வாக்கெடுப்பு நிராகரிக்கப் பட்டதை எதிர்த்து அந்நாட்டு உச்ச நீதிமன்றம் விசாரணை நடத்தி வருகிறது.
- அந்நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு தலைமை நீதிபதி உமர் அதா பண்டியல் தானாக முன்வந்து (suo motu cognizance) இந்த வழக்கினை எடுத்துக் கொண்டார்.
- இதற்கிடையில், ஜனாதிபதி ஆல்வி தற்காலிகப் பிரதமரை நியமிக்கும் வரை இம்ரான் கான் பாகிஸ்தான் பிரதமராக தொடரலாம்.
- ஆனால், முன்னாள் தலைமை நீதிபதி குல்சார் அகமதுவைத் தற்காலிகப் பிரதமர் பதவிக்கு இம்ரான் கான் பரிந்துரைத்தார்.

## 2022 ஆம் ஆண்டின் பாடத் திட்டத்தின் படியான QS உலகப் பல்கலைக்கழக தர வரிசை

- ஐக்கியப் பேரரசின் QS (குவாக்கரேலி சைமண்ட்ஸ்) நிறுவனமானது 12வது பாடத் திட்டத்தின் படியான QS உலகப் பல்கலைக்கழக தரவரிசை 2022 என்ற தரவரிசையை வெளியிட்டது.
- உலகெங்கிலும் உள்ள கல்வி நிறுவனங்களின் பாடம் வாரியான தரவரிசையானது பல பட்டியல்களின் தொகுப்பாகும்.
- ஒரு குறிப்பிட்ட பாடத்தில் முன்னணியில் உள்ள பல்கலைக்கழகங்களை எதிர்கால மாணவர்கள் அடையாளம் காண உதவுவதற்காக, பாடத்திட்டத்தின் அடிப்படையில் QS உலகப் பல்கலைக்கழக தரவரிசை ஆண்டுதோறும் வெளியிடப் படுகிறது.
- பொறியியல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவின் கீழ் முதல் 100 இடங்களில் இடம் பெற்று உள்ள இந்திய நிறுவனங்கள் மும்பையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (65வது இடத்தையும்), டெல்லியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (72வது இடத்தையும்) ஆகியனவாகும்.
- 2022 ஆம் ஆண்டு QS உலகப் பல்கலைக்கழக தரவரிசையில் முதல் 3 இடத்தில் உள்ள கல்வி நிறுவனங்கள்
    - மாசாசூசெட்ஸ் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்,
    - ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம்,
    - ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகம் & கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம்.

## ஐக்கிய நாடுகள் அவையின் மனித உரிமைகள் சபையில் இருந்து ரஷ்யா இடைநீக்கம்




- உக்ரைனில் மனித உரிமைகளை மீறியதாக அந்நாட்டு ராணுவ வீரர்கள் மீது குற்றம் சாட்டப் பட்டதையடுத்து, ஐநா மனித உரிமைகள் சபையில் (UNHRC) இருந்து ரஷ்யா இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் (UNGA) உறுப்பினர் நாடுகள் ரஷ்யாவை இடை நீக்கம் செய்வதற்கு ஆதரவாக வாக்களித்தன.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபை தனது உறுப்பினர் நாடாக திகழும் காலத்தில் மனித உரிமை மீறல்களை செய்த சபையின் எந்த ஒரு உறுப்பினர் நாட்டினையும் இடை நீக்கம் செய்ய முடியும்.

- ஓர் உறுப்பினர் நாட்டினை இடைநீக்கம் செய்ய ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்குகள் தேவைப்படுகிறது.
- இந்த வழக்கில் இதற்கு ஆதரவாக 93 வாக்குகளும், எதிராக 24 வாக்குகளும், 58 வாக்குகள் எதற்கும் வாக்களிக்காமலும் பதிவாகின.
- இதில் இந்தியா வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் வெளிநடப்பு செய்தது.

## நம்பிக்கையில்லாத் தீர்மானம்

- பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் தலைமை குறித்து நடத்தப்பட்ட ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மான வாக்கெடுப்பில் தோல்வியடைந்த அவர் அந்தப் பதவியிலிருந்து நீக்கப் பட்டார்.
- நம்பிக்கையில்லாத் தீர்மான வாக்கெடுப்பு மூலம் பதவி நீக்கம் செய்யப்பட்ட முதல் பாகிஸ்தான் பிரதமர் இவராவார்.
- பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அந்நாட்டின் எதிர்க்கட்சி தலைவர் ஷாபாஸ் ஷெரீப் தாக்கல் செய்தார்.

## மைத்ரி


- குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தனது இரு நாட்டுப் பயணத்தின் இறுதிக் கட்டமாக ஆம்ஸ்டர்டாம் நகரைச் சென்றடைந்தார்.
- 34 ஆண்டுகளில் இவர் நெதர்லாந்து நாட்டிற்குப் பயணம் மேற்கொள்வது இதுவே முதல் முறையாகும்.
- இவர் வருகையின் போது, ஒரு புதிய மஞ்சள் துலிப் வகை மலருக்கு 'மைத்ரி' என்று அவர் பெயரிட்டார்.

## பேரிடரைத் தாங்கும் உள்கட்டமைப்பிற்கான கூட்டணி

- பேரிடரைத் தாங்கும் உள்கட்டமைப்பிற்கான கூட்டணியில் மடகாஸ்கர் இணைந்து உள்ளது.
- இக்கூட்டணியில் இணைந்துள்ள 30வது நாடாக இது மாறியுள்ளது.
- 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பருவநிலை நடவடிக்கை உச்சி மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் உரையாற்றிய போது இக்கூட்டணியைத் தொடங்கி வைத்தார்.
- பேரிடரைத் தாங்கும் உள்கட்டமைப்பிற்கான கூட்டணி என்பது பல்வேறு நாடுகளின் அரசுகள், ஐக்கிய நாடுகள் அவையின் முகமைகள், பலதரப்பு மேம்பாட்டு வங்கிகள் மற்றும் நிதிமுறைமைகள், தனியார் துறை மற்றும் அறிவுசார் நிறுவனங்கள் ஆகிய சிலவற்றின் கூட்டிணைவாகும்.
- இது நீடித்த நிலையான வளர்ச்சிக்கு ஆதரவாக வேண்டி பருவநிலை மற்றும் பேரிடர் ஆபத்துகளில் புதிய மற்றும் ஏற்கனவே உள்ள உள்கட்டமைப்பின் மீதான எதிர்திறனை மேம்படுத்த எண்ணுகின்றது.
- இக்கூட்டமைப்பின் தலைமையகமானது இந்தியாவின் புதுடெல்லி நகரில் அமைந்து உள்ளது.

- 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரையில் 23 நாடுகளின் அரசுகள் மற்றும் 7 அமைப்புகள் அடங்கிய 30 உறுப்பினர் நாடுகள் இக்கூட்டமைப்பில் இணைந்துள்ளன.

## மானிலிருந்து மனிதனுக்கு கோவிட்-19 பரவல்




- ஒரு மானிடமிருந்து மனிதனுக்குப் பரவிய கரோனா வைரசின் முதல் பாதிப்பானது கனடாவில் பதிவாகியுள்ளது.
- வெள்ளை வால் கொண்ட ஒரு மானிடம் SARS-CoV-2 மரபணுக்களின் சில பிறழ்ந்த அமைப்புகள் கண்டறியப்பட்டதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.
- மான் ஒரு விலங்கு வைரஸ் தேக்கியாக செயல்பட முடியும் என்பதை இது குறிக்கிறது.

## 77 மில்லியன் பேர் வறுமையில் தவிப்பு

- உக்ரைன் போருக்கு முன்பாகவே, கடந்த ஆண்டு, கூடுதலாக 77 மில்லியன் மக்களை இந்த பெருந்தொற்று நிலையானது கடுமையான வறுமையில் தள்ளியது.
- பல வளர்ந்து வரும் நாடுகள் அதிக கடன் சுமை காரணமாக இதிலிருந்து மீள இயலாமல் உள்ளன.
- 2019 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளில் 812 மில்லியன் மக்கள் ஒரு நாளைக்கு 1.90 டாலர் அல்லது அதற்கும் குறைவான அளவில் கடுமையான வறுமையில் வாழ்ந்தனர்.
- ஐக்கிய நாடுகள் சபையினால் வெளியிடப்பட்டுள்ள ஒரு அறிக்கையில் இந்தத் தகவல் குறிப்பிடப் பட்டுள்ளது.

## வெப்பமண்டலப் புயல் மேகி

- மேகி எனப்படும் ஒரு வெப்பமண்டலப் புயலானது பிலிப்பைன்ஸ் நாட்டில் நிலச்சரிவு மற்றும் வெள்ளப் பாதிப்பினை ஏற்படுத்தி குறைந்தபட்சம் 167 பேரின் உயிரைப் பறித்துப் பெரும் சேதத்தை ஏற்படுத்தியது.

- தேசியப் பேரிடர் அமைப்பின் தகவல்படி, மேலும் 110 நபர்கள் காணாமல் போய் விட்டதாகவும் 1.9 மில்லியன் மக்கள் பாதிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.
- இது 2022 ஆம் ஆண்டில் பசிபிக் பகுதியில் புயல் உருவாகும் பருவத்தின் 3வது வெப்ப மண்டலத் தாழ் அழுத்த நிலை மற்றும் 2வது வெப்பமண்டலப் புயலாகும்.

## ஹலோ கொடுப்பனவு அமைப்பு

- ரஷ்யாவின் மத்திய வங்கியானது, கடன் வழங்கும் நிறுவனங்களின் தேசியப் பதிவில் ஹலோ எனப்படும் ஒரு புதிய பணவழங்கீட்டு (கொடுப்பனவு) அமைப்பினை சேர்த்து உள்ளது.
- டிரான்ஸ்கேபிடல்பாங்க் (TransKapitalBank) எனப்படும் ரஷ்ய வணிக வங்கியானது, இந்த அமைப்பின் பணவழங்கீட்டு உள்கட்டமைப்புச் சேவைகளை இயக்கும் அமைப்பாக செயல்படும்.
- ஹலோ பணவழங்கீட்டு அமைப்பானது, பணப்பரிமாற்றப் பரிவர்த்தனைகளுக்கான வழிவகை செய்யும் பணவழங்கீட்டுச் சேவைகள் மற்றும் நிறுவனங்களின் ஒரு தொகுதியாகும்.

## சார்மட் கண்டம் விட்டு கண்டம் பாயும் உந்துவிசை ஏவுகணை

- இது சமீபத்தில் ரஷ்யாவினால் வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்ட கண்டம் விட்டு கண்டம் பாயும் உந்துவிசை ஏவுகணையாகும்.
- இந்தப் புதிய ஏவுகணை தொகுதியானது, மிக உயரிய தந்திரோபய மற்றும் தொழில் நுட்ப அம்சங்களைக் கொண்டுள்ளது.
- சார்மட் எனப்படும் இந்தப் பெயரானது சார்மாடியன் எனப் படும் ஒரு நாடோடிப் பழங்குடியினரின் நினைவாக சூட்டப்பட்டுள்ளது.
- இந்தப் பழங்குடியினர் ரஷ்யா, உக்ரைன் மற்றும் கசகஸ்தான் ஆகிய நாடுகளின் தற்போதையப் பிராந்தியங்களில் கி.மு. 6 முதல் 4 ஆம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தில் வாழ்ந்தனர்.

## சீனா-சாலமன் தீவுகள் பாதுகாப்பு ஒப்பந்தம்



- சீனாவிற்கும் சாலமன் தீவுகளுக்கும் இடையே ஒரு பாதுகாப்பு ஒப்பந்தம் கையெழுத்து ஆனது.
- சாலமன் தீவுகளுடன் தற்போதுள்ள ஒத்துழைப்பு ஏற்பாடுகளை மேம்படுத்துவதற்காக இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.
- இந்த ஒப்பந்தம் தெற்கு பசிபிக் பிராந்தியத்தில் சீன அரசிற்கு ஒரு வலுவான ஊன்று கோலாக அமையும் என்பதால், இந்த ஒப்பந்தத்தின் தாக்கம் குறித்து பல அதிருப்திகள் அதிகரித்து வருகின்றன.

## இணைய வழிப் பாதுகாப்புப் பயிற்சிகள்


- வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பானது, எஸ்டோனியா நாட்டில் லாக்ட் ஷீல்ட்ஸ் எனப்படும் இணையவழிப் பாதுகாப்புப் பயிற்சிகளை நடத்தியது.
- வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு இணைய அமைப்பானது, உலகின் மிகப்பெரிய மற்றும் மிகவும் சிக்கலான "live-fire" எனப்படும் இணையப் பாதுகாப்புப் பயிற்சிகளை மேற்கொள்ளும்.
- நிகழ்நேரத் தாக்குதல்களுக்கு எதிராக தேசியத் தகவல் தொழில்நுட்ப அமைப்புகள் மற்றும் முக்கிய உள்கட்டமைப்பு ஆகியவற்றைப் பாதுகாக்கும் இணையப் பாதுகாப்பு நிபுணர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காக இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இந்த லாக்ட் ஷீல்ட்ஸ் நிகழ்வு வடிவமைக்கப்பட்டுள்ளது.

## பாரீஸ் புத்தகத் திருவிழா 2022




- 2022 ஆம் ஆண்டு பாரீஸ் புத்தகத் திருவிழாவில் இந்தியா ஒரு கௌரவ விருந்தினராக நியமிக்கப் பட்டுள்ளது.
- இந்த நிகழ்ச்சிக்குக் கடைசியாக இந்தியா கௌரவ விருந்தினராக அழைக்கப்பட்டது 2007 ஆம் ஆண்டில் ஆகும்.
- 2022 ஆம் ஆண்டு மே மாதத்திற்கு ஒத்தி வைக்கப்பட்ட புது தில்லி உலக புத்தகக் கண்காட்சியில் பிரான்ஸ் கௌரவ விருந்தினராக பங்கேற்க உள்ளது.

## பாமாயில் ஏற்றுமதி – இந்தோனேசியா





- ஏப்ரல் மாதம் 28 ஆம் தேதி முதல் பாமாயில் ஏற்றுமதியைத் தடை செய்ய இந்தோனேசியா முடிவு செய்துள்ளது.
- உள்நாட்டில் கிடுகிடுவென உயர்ந்து வரும் விலைவாசியைக் கட்டுப்படுத்தவும், உள்நாட்டில் உணவுப் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்யவும் வேண்டி இந்த முடிவானது மேற்கொள்ளப்பட்டது.
- உலகிலேயே அதிகளவில் பாமாயில் ஏற்றுமதி செய்யும் நாடு இந்தோனேசியா ஆகும்.

## இம்மானுவேல் மக்ரோன்

- இம்மானுவேல் மக்ரோனிடம் மரைன் லு பென் என்பவர் தோல்வியுற்றார்.
- இம்மானுவேல் மீண்டும் பிரான்ஸ் நாட்டின் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட உள்ளார்.
- கடந்த 20 ஆண்டுகளில் அந்நாட்டின் அதிபர் பதவிக்கு மறுமுறை தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பிரான்ஸ் அதிபர் மக்ரோன் ஆவார்.

## உலக இராணுவச் செலவினம்





- 2021 ஆம் ஆண்டில் உலக இராணுவச் செலவினம் 2.1 டிரில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டியது.

- இது ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனத்தின் தரவுகளில் கூறப் பட்டுள்ளது.
- அமெரிக்கா, சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் இராணுவத்திற்காக அதிகளவில் செலவு செய்யும் முதல் மூன்று நாடுகள் ஆகும்.
- 76.6 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பிலான இராணுவச் செலவினத்துடன் கடந்த ஆண்டு இந்தியா மூன்றாவது இடத்தில் இருந்தது.
- இது 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 0.9 சதவீதம் அதிகமாகும்.

## ஐரோப்பிய ஒன்றியத்தின் புதிய இணைய விதிகள்

- ஐரோப்பிய ஒன்றியமானது உலகின் மிகப்பெரியத் தொழில்நுட்ப நிறுவனங்கள் தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கங்களை அகற்ற வேண்டும் என்ற புதிய ஒரு சட்டத்தை இறுதி செய்துள்ளது.
- உலகின் மிகப்பெரும் இணையதளப் பெருநிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதற்காக ஐரோப்பிய ஒன்றியம் மேற்கொண்ட ஒரு சமீபத்திய நடவடிக்கை இதுவாகும்.
- டிஜிட்டல் சேவைகள் என்ற சட்டமானது, தவறான தகவல் முதல் வெறுப்பூட்டும் பேச்சு மற்றும் சிறுவர் பாலியல் வன்கொடுமை ஆகியவற்றின் படங்கள் உள்ளிட்டத் தடை செய்யப் பட்ட உள்ளடக்கத்தை வழங்கும் இணைய தளங்களுக்குக் கடுமையான விதி முறைகளை விதிக்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளது.




## சர்வதேச மதச் சுதந்திர அறிக்கை 2022

- 2021 ஆம் ஆண்டில் மிக மோசமான மதச் சுதந்திர மீறல்கள் காரணமாக குறிப்பிட்ட அளவில் கவலை கொள்ள வைக்கும் நாடுகளின் ஒரு பட்டியலில் இந்தியாவைச் சேர்ப்பதற்கு தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக சர்வதேச மதச் சுதந்திரத்திற்கான அமெரிக்க ஆணையம் பரிந்துரைத்துள்ளது.
- இந்தியாவுடன் சேர்த்து, ஆப்கானிஸ்தான், நைஜீரியா, சிரியா மற்றும் வியட்நாம் ஆகியவை குறிப்பிட்ட அளவில் கவலை கொள்ள வைக்கும் நாடுகளின் பட்டியலில் சேர்க்கப்பட பரிந்துரைக்கப்பட்ட நாடுகள் ஆகும்.
- மியான்மர், சீனா, எரித்ரியா, ஈரான், வட கொரியா, பாகிஸ்தான், ரஷ்யா, சவுதி அரேபியா, தஜிகிஸ்தான் மற்றும் துர்க்மெனிஸ்தான் ஆகியவை இந்தப் பட்டியலில் இருந்து விலக்குவதற்குப் பரிந்துரைக்கப்பட்ட நாடுகள் ஆகும்.

### ரஷ்யா மற்றும் UNWTO

- ❖ ஐக்கிய நாடுகள் அவையின் உலகச் சுற்றுலா அமைப்பிலிருந்து ரஷ்யா விலக முடிவு செய்துள்ளதாக ஐநா உலகச் சுற்றுலா அமைப்பு அறிவித்துள்ளது.
- ❖ உக்ரைனுக்கு எதிராகப் போர் தொடுத்ததற்காக ரஷ்ய நாட்டினை இடை நிறுத்தம் செய்வதற்காக இந்த அமைப்பில் ஒரு வாக்கெடுப்பு மேற்கொள்ளப் பட்டதை அடுத்து, இந்த அமைப்பில் இருந்து விலக ரஷ்யா முடிவு செய்தது.
- ❖ ஐக்கிய நாடுகள் அவையின் உலகச் சுற்றுலா அமைப்பானது, அதன் உறுப்பினர் நாடுகளில் ஒன்றினை இடை நிறுத்தம் செய்வதைப் பற்றி விவாதிப்பதற்காக கூடியது இதுவே முதல் முறையாகும்.

# பொருளாதாரச் செய்திகள்

### சிறுசேமிப்புத் திட்டங்கள் மீதான வட்டி வீதங்கள்

- ❖ 2022-23 ஆம் நிதியாண்டின் முதலாம் காலாண்டிற்கான (ஏப்ரல்-ஜுன் 2022) சிறு சேமிப்புத் திட்டங்கள் (அ) தபால் நிலைய சேமிப்புத் திட்டங்கள் மீதான வட்டி வீதங்களை மாற்றாமல் வைத்திருக்க மத்திய நிதி அமைச்சகம் முடிவு செய்துள்ளது.
- ❖ 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் – ஜுன் மாதங்களுக்கான பல்வேறு திட்டங்கள் மீதான வட்டி வீதங்கள் 4.0% முதல் 7.6% வரை என்ற வரம்பிலேயே உள்ளது.
- ❖ சிறுசேமிப்புத் திட்டங்களுக்கான வட்டி வீதங்களை அரசு காலாண்டு அடிப்படையில் அறிவிக்கிறது.
- ❖ சிறுசேமிப்புத் திட்டங்கள் மீதான வட்டி வீதங்கள் தொடர்ந்து 8வது காலாண்டாக மாற்றப் படாமல் உள்ளது.




## ஆக்சிஸ் வங்கி – சிட்டி வங்கி ஒப்பந்தம்

- ஆக்சிஸ் வங்கியானது, சிட்டிவங்கியின் இந்திய நுகர்வு வணிகத்தினை 1.6 பில்லியன் டாலர் தொகைக்கு, ஓர் அனைத்துப் பண ஒப்பந்தத்தின் மூலம் கையகப்படுத்துவதாக சிட்டி குழுமம் அறிவித்துள்ளது.
- இந்தப் பரிமாற்றமானது சில்லறை வங்கி, கடன் அட்டைகள், நுகர்வோர் கடன்கள் மற்றும் சொத்து மேலாண்மை ஆகியவற்றை உள்ளடக்கிய, சிட்டி வங்கி இந்தியப் பிரிவின் நுகர்வோர் வங்கி வணிகங்களை உள்ளடக்கும்.
- சிட்டி வங்கி இந்தியப் பிரிவின் சுமார் 3600 நுகர்வோர் வணிக ஊழியர்கள், இந்த ஒப்பந்தம் நிறைவு பெற்ற பிறகு ஆக்சிஸ் வங்கிக்கு இடம் மாற்றப்படுவர்.

## RAMP திட்டம்

- 808 மில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பிலான உலக வங்கியின் ஒரு ஆதரவுத் திட்டத்திற்கு அரசாங்கம் அங்கீகாரம் அளித்துள்ளது.
- இது "குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் செயல்திறனை மேம்படுத்த்துதல் மற்றும் துரிதப்படுத்துதல்" (RAMP - Raising and Accelerating MSME Performance) திட்டம் என்று அழைக்கப்படுகிறது.
- RAMP என்பது 2022-23 ஆம் நிதியாண்டில் தொடங்கப்பட உள்ள ஒரு புதிய திட்டமாகும்.
- நாட்டின் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் செயல்பாட்டை மேம்படுத்தச் செய்வதற்கும் உதவி வழங்குவதற்கும் வேண்டி இது தொடங்கப் பட்டுள்ளது.

## இந்தியாவின் கடன் மதிப்பீடு




- பொருளாதாரத்தின் மறுமலர்ச்சிக்கான வருவாய் இடைவெளியைப் பூர்த்தி செய்வதற்கு நிதியளிப்பதற்காக, 2022-23 ஆம் ஆண்டின் முதல் பாதியில் கடன்கள் மூலம் ரூ.8.45 லட்சம் கோடியைத் திரட்டுவதற்கு இந்திய அரசு இலக்கு நிர்ணயித்து உள்ளது.
- அடுத்த நிதியாண்டில் மொத்தச் சந்தைக் கடன் ரூ.14.31 லட்சம் கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான காலக் கட்டத்தில் ரூ.8.45 லட்சம் கோடி கடன் வாங்க திட்டமிடப்பட்டுள்ளது.
- 2022-23 ஆம் நிதியாண்டிற்கான கடனில் 60 சதவீதம் இந்த நிதியாண்டின் முதல் ஆறு மாதங்களில் முடிக்கப்படும்.
- 2021-22 ஆம் ஆண்டில் பெறப்பட்ட மொத்தக் கடன் ரூ.12,05,500 கோடி ஆகும்.


## மோசடி சம்பவங்கள்

- டிசம்பர் மாதத்துடன் முடிவடைந்த ஒன்பது மாதக் காலக் கட்டத்தில், 27 பட்டியலிடப் பட்ட வணிக வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் 96 மோசடி சம்பவங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன.
- இதன் மதிப்பு மொத்தம் ரூ.34,097 கோடியாகும்.
- பஞ்சாப் நேஷனல் வங்கியில் ரூ.4,820 கோடி மதிப்பிலான மோசடி நடந்துள்ளது.
- பேங்க் ஆப் இந்தியா வங்கியில் தான் அதிகபட்சமாக 13 மோசடிகள் நடந்துள்ளன.

## மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்களுக்கான வழிவகைக்கான முன்பண வரம்பு

- இந்திய ரிசர்வ் வங்கியானது, மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுக்கான வழி வகைக்கான முன்பண வரம்பினை 51,560 கோடி ரூபாயிலிருந்து 47,010 கோடி ரூபாயாகக் குறைத்துள்ளது.
- வழி வகைக்கான முன்பணம் என்பது, வருவாய்க்கும் செலவினங்களுக்கும் இடையே ஏற்படும் முரண்களைச் சமாளிப்பதற்கு உதவுவதற்காக வேண்டி அரசிற்கு இந்திய ரிசர்வ் வங்கி வழங்கும் ஒரு குறுகிய காலக் கடனாகும்.

## சரக்கு மற்றும் சேவை வரி



High Note

GST COLLECTIONS (₹ Crore)

| | |
|---|---|
| April | 1,41,384 |
| May | 1,02,709 |
| June | 92,849 |
| July | 1,16,393 |
| Aug | 1,12,020 |
| Sep | 1,17,010 |
| Oct | 1,30,127 |
| Nov | 1,31,526 |
| Dec | 1,29,780 |
| Jan | 1,40,986 |
| Feb | 1,33,026 |
| Mar | 1,42, 095 |
| TOTAL | ₹14,89,905 CR |

MARCH collections 15% higher than last fiscal, 40% over 2020

AVERAGE monthly collection ₹1.38 lakh crore in Q4

MAHARASHTRA recoded highest collection at ₹20,305 cr

EXPERTS predict April collection to remain high

WHAT IT MEANS

HIGH collections suggest economic recovery gaining pace

RAILWAY freight at record high in Mar provides further evidence

PETROL AND DIESEL sales also rise as mobility increases

- இதுவரை இல்லாத வகையில் பொருளாதாரத்திற்கு மிகவும் நன்மையளிக்கக் கூடிய வகையில் மிகப்பெரிய மதிப்பிலான சரக்கு மற்றும் சேவை வரியானது மார்ச் மாதத்தில் வசூலிக்கப்பட்டது.
- சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) வசூல் ஆனது, 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் மொத்தம் ரூ.1,42,095 கோடியாக வசூலாகியுள்ளது.

- இது 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் வசூலிக்கப்பட்ட முந்தைய அதிகபட்சமான ரூ.1,40,986 கோடி என்ற ஒரு இலக்கை முறியடித்து உள்ளது.
- 2022 ஆம் ஆண்டு மார்ச் மாத வருவாய் கடந்த ஆண்டின் இதே மாதத்தை விட 15% அதிகமாகும்.
- இது 2020 ஆம் ஆண்டு மார்ச் மாத வருவாயை விட 46% அதிகமாகும்.

## இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறை

- 2020-21 ஆம் ஆண்டில் 102.63 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்த இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறையானது 87.5 சதவீதம் அதிகரித்து 2021-22 ஆம் ஆண்டில் 192.41 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது.
- கடந்த நிதியாண்டில் மொத்த ஏற்றுமதியின் மதிப்பானது 417.81 பில்லியன் அமெரிக்க டாலர் என்ற அளவைத் தொட்டது.
- அதே காலகட்டத்தில் இறக்குமதியின் மதிப்பும் 610.22 பில்லியன் அமெரிக்க டாலர்கள் என்ற அளவினைத் தொட்டது.
- இவ்வகையில் இது 192.41 பில்லியன் டாலர் வர்த்தக இடைவெளியை ஏற்படுத்தியது.


## முதல் பாதுகாப்பு நிதி

- HDFC பரஸ்பர நிதியின் முதல் பாதுகாப்பு நிதியானது பரஸ்பர நிதிகள் துறையில் இம்மாதிரியான வகையில் முதல் வகையாகும் இருக்கும்.
- HDFC பரஸ்பர நிதி நிறுவனமானது இதற்காக இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்திடம் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது.
- இது பாதுகாப்பு மற்றும் அது சார்ந்த துறைகளில் உள்ள நிறுவனங்களில் முதலீடு செய்யும்.
- HDFC பரஸ்பர நிதி நிறுவனமானது நாட்டின் மூன்றாவது பெரியச் சொத்து மேலாளர் நிறுவனம் ஆகும்.

## இந்திய ரிசர்வ் வங்கியின் நாணய ரெப்போ விகிதங்கள்

- இந்திய ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கைக் குழு, தொடர்ச்சியாக 11வது முறையாக ரெப்போ மற்றும் ரிவர்ஸ் ரெப்போ வட்டி விகிதங்களை மாற்றாமல் வைத்திருப்பதற்கு ஆதரவாக வாக்களித்தது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் சக்தி காந்த தாஸ் கூறுகையில், 4 சதவீத ரெப்போ வட்டி விகிதத்தை மாற்றாமலிருக்க இந்தக் குழு ஒருமனதாக வாக்களித்துள்ளது.
- மேலும் விளிம்பு நிலை வசதி என்ற நிதிமுறை (MSF - Marginal Standing Facility) விகிதம் மற்றும் வங்கி விகிதம் ஆகியனவும் 4.25 சதவீதமாக மாறாமல் உள்ளது.
- 2022-23 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 16.2%, இரண்டாம் காலாண்டில் 6.2%, மூன்றாம் காலாண்டில் 4.1%, மற்றும் நான்காம் காலாண்டில் 4.0% என தற்போதைய உண்மையான GDP வளர்ச்சி ஆனது 7.2% என்று கணிக்கப்பட்டுள்ளது.

## வரி வருவாய்




- 2021-22 ஆம் ஆண்டிற்கான வரி வருவாய் ஆனது மத்திய நிதிநிலை அறிக்கையின் மதிப்பீட்டை விட ரூ.5 லட்சம் கோடி அதிகரித்துள்ளது.
- மத்திய நிதி நிலை அறிக்கையில் மதிப்பிடப்பட்ட ரூ.22.17 லட்சம் கோடிக்குப் பதிலாக, நிகழ்நேர மதிப்பீட்டிற்கு முந்தையப் புள்ளி விவரங்களின்படி வருவாய் வசூல் ரூ.27.07 லட்சம் கோடியாக உள்ளது.
- 2020-21 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூ.20.27 லட்சம் கோடியை விட 2021-22 ஆம் ஆண்டில் பதிவான வரி வருவாய் 34 சதவீதம் அதிகமாகும்.

## நடப்புக் கணக்குப் பற்றாக்குறை

- 2021-22 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் 9.9 பில்லியன் டாலராகவும் (மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.3%) மற்றும் 2020-21 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 2.2 பில்லியன் டாலராகவும் (மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.3%) இருந்த இந்தியாவின் நடப்புக் கணக்குப் பற்றாக்குறை ஆனது 2021-22 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 23 பில்லியன் டாலராக (மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.7%) அதிகரித்துள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் கூற்றுப்படி, 2021-22 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் நடப்புக் கணக்குப் பற்றாக்குறை விரிவடைந்ததற்கு அதிக வர்த்தகப் பற்றாக்குறையே ஒரு முக்கிய காரணமாகும்.

## நிலையான வைப்பு நிதி வசதி

- நிலையான வைப்பு நிதி வசதியானது அதிகப் பணப்புழக்கத்தை திரும்பப் பெறுவதற்கான ஒரு வலுவான கருவியாக கருதப்படுகிறது.
- இந்த வசதி இந்திய ரிசர்வ் வங்கியால் அறிமுகம் செய்யப் பட்டது.
- 2014 ஆம் ஆண்டில் உர்ஜித் படேல் குழுவின் அறிக்கையால் முதலில் பரிந்துரைக்கப் பட்ட இந்த ஒரு கருத்தாக்கமானது, பணப்புழக்கத்தை நிர்வகிப்பதற்கான மத்திய வங்கியின் செயல் கருவித் தொகுப்பின் ஒரு பகுதியாக விரைவில் மாறக்கூடும்.

- ❖ நிலையான வைப்பு நிதி வசதி என்பது பணப்புழக்கத்தினைத் திரும்பப் பெறச் செய்வதற்காக எந்தவொருப் பிணையமும் வழங்க வேண்டிய அவசியமில்லாத ஒரு வருவாய் தரும் வசதியாகும்.





## ஒருங்கிணைந்தப் பணவழங்கீட்டு இடைமுகம் மூலம் பணம் எடுத்தல்

- ❖ இந்திய ரிசர்வ் வங்கியானது அனைத்து தானியங்கிப் பண இயந்திர மையங்களிலும் அட்டை இல்லாமல் பணம் எடுக்கும் வசதியினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ இந்த வசதியானது எந்த வங்கியையும் சாராமல் ஒருங்கிணைந்தப் பணவழங்கீட்டு இடைமுகத்தினைப் பயன்படுத்திப் பணம் எடுக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.
- ❖ இந்திய ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கைக் குழுவானது இந்த ஒரு முடிவை மேற் கொண்டுள்ளது.
- ❖ அனைத்து வங்கிகளுக்கும், தானியங்கிப் பண இயந்திர மையங்கள் மூலம் அட்டை இல்லாமல் பணம் எடுக்கும் வசதியினை அறிமுகப்படுத்த இந்திய ரிசர்வ் அனுமதி வழங்கியுள்ளது.

## 2022 ஆம் நிதியாண்டிற்கான சொத்துப் பணமாக்கல் திட்ட இலக்கு

- ❖ 2022 ஆம் நிதியாண்டில் மத்திய அரசு தனது சொத்துப் பணமாக்கல் இலக்கான 88,000 கோடியைத் தாண்டியுள்ளதாக ஒரு மதிப்பீட்டில் கூறியுள்ளது.
- ❖ மத்திய அரசு 96,000 கோடி மதிப்பிலான அளவிற்கு ஒப்பந்தங்களைச் செய்துள்ளது.
- ❖ சாலைகள், மின்சாரம், நிலக்கரி மற்றும் கனிமச் சுரங்கம் ஆகியவை சொத்துப் பணமாக்குதலில் ஒரு குறிப்பிடத்தக்கப் பங்களிப்பைச் செய்துள்ள சில தொழில் துறைகள் ஆகும்.




## விகாஸ் சிரி சம்பத் - 1111 திட்டம்

- கர்நாடக விகாஸ் கிராமீனா என்ற வங்கியானது 1,111 நாட்கள் அளவிலான வைப்புத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- கர்நாடகா விகாஸ் கிராமீனா வங்கி என்பது தார்வாட் என்ற நகரில் அமைந்துள்ள ஒரு பிராந்தியக் கிராமப்புற வங்கியாகும்.
- 1,111 நாட்கள் அளவிலான இந்த வைப்புத் தொகைத் திட்டமானது பொது மக்களுக்கு 5.70 சதவீதமும் முதியோருக்கு 6.20 சதவீதமும் வட்டி வீதங்களை வழங்குகிறது.
- இந்தத் திட்டமானது குறைந்தபட்சமாக பத்தாயிரம் ரூபாய் முதல் அதிகபட்சமாக இரண்டு கோடி ரூபாய் வரையிலான வைப்புத் தொகைக்கு அனுமதிக்கிறது.
- இந்தியப் பிராந்தியக் கிராமிய வங்கியான கர்நாடக விகாஸ் கிராமீனா வங்கிக்கு கனரா வங்கி நிதியுதவி செய்கிறது.
- இது இந்திய அரசின் நிதி அமைச்சகத்திற்குச் சொந்தமானதாகும்.

## சிறு நிதிக் கடன்களுக்கான ஒழுங்குமுறை கட்டமைப்பு

- இந்திய ரிசர்வ் வங்கியானது சிறுநிதி கடன்களுக்கான ஒழுங்குமுறைக் கட்டமைப்பை அறிவித்தது.
- இந்திய ரிசர்வ் வங்கி, வங்கி சாரா நிதி நிறுவனங்களான சிறு நிதி நிறுவனங்கள் வழங்கும் சிறு நிதிக் கடன்களின் மதிப்பு நிர்ணயம் செய்வதற்கான வரம்புகளை நீக்கி உள்ளது.
- முன்னதாக, சிறு நிதிக் கடன் நிறுவனங்கள் வசூலிக்கும் வட்டி விகிதத்தில் வரம்பு இருந்தது.
- அதிகபட்ச வட்டி விகிதமானது, நிறுவனத்தால் ஏற்படும் நிதிச் செலவை விட 10-12% அதிகமாகும் அல்லது முதல் ஐந்து பெரிய வணிக வங்கிகளின் சராசரி அடிப்படை விகிதத்தை விட 2.75 மடங்கு (இவற்றுள் எது குறைவோ) ஆகும்.
- இப்போது, இந்த வரம்புகளை அகற்றுவது வங்கி சாரா நிதி நிறுவனங்களான சிறு நிதி நிறுவனங்களை, வங்கிகள் போன்ற மற்ற கடன் வழங்கும் நிறுவனங்களின் நிலைக்கு கொண்டு வருகிறது.
- மேலும், நுண்கடன் பெறத் தகுதியுடையக் குடும்ப ஆண்டு வருமானம் ₹3 லட்சமாக உயர்த்தப் பட்டுள்ளது.



## அமெரிக்க மத்திய வங்கி விகித உயர்வு

- வட்டி விகிதத்தை உயர்த்துவதற்கான அமெரிக்க பெடரல் ரிசர்வ் வங்கியின் ஒரு முடிவானது, இந்தியாவில் ஒரு குறிப்பிட்ட அளவு விளைவை மட்டுமே ஏற்படுத்தும், ஏனெனில் இந்தியச் சந்தைகள் பெரும்பாலும் அதன் தாக்கத்தினை வைத்தே விலை நிர்ணயம் செய்துள்ளன என்பதால்.
- இனி பணவியல் கொள்கையானது உலகளாவியக் காரணிகளை விட உள்நாட்டுப் பெரும் பொருளாதார நிலைகளை வைத்தே தொடர்ந்து நிர்ணயிக்கப்படும்.

## ஆசிய வளர்ச்சிக் கண்ணோட்ட அறிக்கை 2022

- 2021-22 ஆம் ஆண்டில் 8.9% என்று மதிப்பிடப்பட்ட இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியானது, 2022-23 ஆம் ஆண்டில் 7.5 சதவீதமாக இருக்கும் என்று ஆசிய மேம்பாட்டு வங்கி கணித்துள்ளது.
- 2023-2024 ஆம் ஆண்டில் வளர்ச்சி மேலும் அதிகரித்து 8 சதவீதத்தை எட்டும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- ரஷ்யா-உக்ரைன் மோதலை இந்திய நாட்டிற்கான மதிப்பீட்டில் ஒரு காரணியாக ஆசிய மேம்பாட்டு வங்கி எடுத்துக் கொண்டுள்ளது.
- இந்த நெருக்கடியால் எண்ணெய் விலை உயரும்.
- கோவிட்-19 தொற்றுநோயின் தீவிரமும் தடுப்பூசி வழங்கீட்டு வீதத்தின் அதிகரிப்பின் காரணமாக குறையும்.
- மேலும் சீனா 2022-23 ஆம் ஆண்டில் 5 சதவீதமும், 2023-24 ஆம் ஆண்டில் 4.8 சதவீதமும் வளர்ச்சியைக் காணும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## நெக்ஸோ அட்டை

- இலண்டன் நகரைச் சேர்ந்த இணையச் சங்கேதப் பணம் சார்ந்த கடன் வழங்கும் ஒரு நிறுவனமான நெக்ஸோ, உலகளாவியக் கொடுப்பனவு நிறுவனமான மாஸ்டர்கார்டு நிறுவனத்துடன் கை கோர்த்துள்ளது.
- இது உலகில் முதல்முறையாக "இணையச் சங்கேதப் பணம் சார்ந்த கொடுப்பனவு அட்டைகளை" அறிமுகப்படுத்த உள்ளது.
- மின்னணுப் பணம் சார்ந்த ஒரு நிறுவனமான டிபாக்கெட் என்பது நெக்ஸோ என்ற நிறுவனத்திற்கு அட்டைகளை வழங்கும் ஒரு நிறுவனமாகும்.
- இந்த அட்டைக்குக் குறைந்தபட்ச திருப்பிச் செலுத்தும் வகையிலான தொகையோ, மாதாந்திரக் கட்டணங்களோ அல்லது செயலற்ற நிலையில் இருப்பதற்கான கட்டணங்களோ தேவையில்லை.
- ஒரு மாதத்திற்கு 20,000 யூரோக்கள் வரையில் FX கட்டணம் (foreign transaction) இல்லை.
- 20% அல்லது அதற்கும் குறைவான கடன் மதிப்பு விகிதத்தைக் கொண்டிருக்கும் வாடிக்கையாளர்களுக்கு 0% வட்டி வழங்கப்படும்.

## ஃபின்க்ளூவேஷன்

- இந்தியத் தபால் பணவழங்கீட்டு வங்கியானது (IPPB - India Post Payments Bank) ஃபின்க்ளூவேஷன் (Fincluvation) என்ற ஒரு முன்னெடுப்பினைத் தொடங்க உள்ளதாக அறிவித்துள்ளது
- ஃபின்க்ளூவேஷன் என்பது, நிதி உள்ளடக்கத்திற்கான சில தீர்வுகளை இணைந்து உருவாக்கவும், புதுமையான தீர்வுகளை உருவாக்கவும் வேண்டி நிதித் தொழில்நுட்பப் புத்தாக்க நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் ஒரு கூட்டு முயற்சி ஆகும்.
- ஃபின்க்ளூவேஷன் என்பது, நிதி உள்ளடக்கத்தை இலக்காகக் கொண்ட மதிப்புமிக்க நிதித் தயாரிப்புகளை உருவாக்குவதற்காக தொடக்க நிறுவனச் சமூகங்களை ஒன்று திரட்டுவதற்கான ஒரு சக்தி வாய்ந்த தளத்தை உருவாக்குவதற்காக வேண்டி இந்தத் தொழில்துறை மேற்கொள்ளும் முதல் முயற்சியாகும்.
- ஃபின்க்ளூவேஷன் என்பது இதில் பங்கு பெறும் சிலப் புத்தாக்க நிறுவனங்களுடன் இணைந்து நிதித் தீர்வுகளை உருவாக்குவதற்கான இந்தியத் தபால் பணவழங்கீட்டு வங்கியின் ஒரு நிரந்தரத் தளமாக இருக்கும்.

## தனலட்சுமி வங்கி

- தனலட்சுமி வங்கி ஆனது வரிகளை வசூலிப்பதற்காக, மத்திய நேரடி வரிகள் வாரியம் மற்றும் மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியம் ஆகியவற்றுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ளது.
- தலைமைக் கணக்குக் கட்டுப்பாட்டாளரின் பரிந்துரையின் அடிப்படையில் பல்வேறு வரிகளை வசூலிக்க இந்திய ரிசர்வ் வங்கி தனலட்சுமி வங்கிக்கு அங்கீகாரம் அளித்து உள்ளதாக அந்த வங்கி தனது ஒழுங்குமுறைத் தாக்கல் ஒன்றில் தெரிவித்து உள்ளது.
- தனலட்சுமி வங்கி கேரளாவில் அமைந்துள்ளது.

## டிஜிட்டல் வங்கி அலகுகள்

- இந்திய ரிசர்வ் வங்கியானது, "டிஜிட்டல் வங்கி அலகுகளை நிறுவுதல்" குறித்த வழி காட்டுதல்களை வெளியிட்டது.
- இது நமது நாட்டின் 75வது சுதந்திரத் தின அமுதப் பெருவிழா தினத்தை (ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ்) நினைவு கூரும் வகையில் அறிவிக்கப்பட்டது.
- இந்த வழிகாட்டுதல்கள் உள்நாட்டில் பட்டியலிடப்பட்ட அனைத்து வணிக வங்கிகளுக்கும் (பிராந்திய கிராமப்புற வங்கிகள், பணவழங்கீட்டு வங்கிகள் மற்றும் உள்ளூர் வங்கிகள் தவிர்த்து) பொருந்தும்.
- இந்த டிஜிட்டல் வங்கி அலகுகள், டிஜிட்டல் வங்கித் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கான குறிப்பிட்ட குறைந்தபட்ச டிஜிட்டல் உள்கட்டமைப்பைக் கொண்ட நிலையான சிறப்பு வணிக அலகு/ மையமாக திகழும்.
- இது தற்போதுள்ள நிதித் தயாரிப்புகள் மற்றும் சேவைகளுக்கும் டிஜிட்டல் முறையில் தனது சேவையை விரிவுபடுத்தும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## புதிய வேதிக் குறிப்புப் பொருள்




- தேசிய ஊக்க மருந்து சோதனை ஆய்வகத்தினால், உள்நாட்டிலேயே 6 புதிய மற்றும் அரிதான குறிப்புப் பொருட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
- இது ஊக்க மருந்துப் பகுப்பாய்விற்காக உலகம் முழுவதும் செயல்படுகின்ற உலக ஊக்க மருந்து எதிர்ப்பு முகமையின் அங்கீகாரம் பெற்ற அனைத்து ஆய்வகங்களிலும் தேவைப் படுகின்ற தூய வடிவிலான ஒரு வேதிப் பொருளாகும்.
- இந்த 6 வேதிக் குறிப்புப் பொருட்களையும், ஜம்முவிலுள்ள மத்திய அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சிச் சபையின் – ஒருங்கிணைந்த மருத்துவ கல்வி நிறுவனம் மற்றும் கௌகாத்தியிலுள்ள தேசிய மருந்தியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்துத் தேசிய ஊக்க மருந்துப் பரிசோதனை ஆய்வகம் உள்நாட்டிலேயே தயாரித்தது.
- தேசிய ஊக்க மருந்துப் பரிசோதனை ஆய்வகத்தின் ஆளுகை அமைப்பின் 15வது அமர்வின் போது மத்திய இளையோர் விவகாரம் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் தாகூர் இவற்றை வெளியிட்டார்.
- இந்தியா இன்று வரையில், வேதிக் குறிப்புப் பொருட்களை ஆஸ்திரேலியா மற்றும் கனடா ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து வந்தது.

## வியாழன் வடிவிலான இரட்டைக் கோள் கண்டுபிடிப்பு

- K2-2016-BLG-0005Lb என அழைக்கப்படும் வியாழனின் ஒரே மாதிரியான ஒரு இரட்டைக் கோளினை வானியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- இது வியாழன் கோளினை ஒத்த நிறையைக் கொண்டுள்ளது.
- வியாழன் கோளானது நமது சூரியனிலிருந்து (462 மில்லியன் மைல் தொலைவில்) இருப்பது போல இந்தக் கோளானது அதன் நட்சத்திரத்திலிருந்து (420 மில்லியன் மைல் தொலைவில்) ஏறக்குறைய அதே தொலைவில் உள்ளது.

- இந்த ஆய்வு பற்றியத் தகவல்கள் ArXiv.org என்ற தளத்தில் முன் அச்சாக வெளியிடப் பட்டது
- இது ராயல் வானியல் சங்கத்தின் மாதாந்திர அறிவிப்புகள் என்ற இதழில் வெளியிடச் செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டது.
- பூமியிலிருந்து சுமார் 17,000 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள இந்த புறக்கோள் ஆனது, 2016 ஆம் ஆண்டு கெப்ளர் என்ற விண்வெளித் தொலைநோக்கி மூலம் முதன் முறையாக கண்டறியப்பட்டது.
- இந்தக் கோளைக் கண்டறிய, விஞ்ஞானிகள் ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் சார்பியல் மற்றும் ஈர்ப்பு நுண்குவிதல் போன்ற கோட்பாடுகளைப் பயன்படுத்தினர்.
- K2-2016-BLG-0005Lb என்பது விண்வெளி அடிப்படையிலான தரவுகளிலிருந்து கண்டு பிடிக்கப்பட்ட முதல் பிணைப்பு சார்ந்த நுண்குவியப் புறக்கோள் ஆகும்.





## உலகக் காற்று அறிக்கை 2022

- 2021 ஆம் ஆண்டில் காற்றாலை ஆற்றல் துறை அதன் இரண்டாவது சிறந்த ஆண்டாக இருந்தது.
- ஆனால் காற்றாலை ஆற்றல் நிறுவப்படுதல் நிகர சுழிய இலக்குகளுடன் இது இணங்கி இருக்கும் வகையில் வியத்தகு முறையில் அதிகரிக்கப்பட வேண்டும்.
- காற்றாலை ஆற்றலுக்கான ஒட்டு மொத்த திறன் 837 ஜிகாவாட்டாக வளர்ந்தது.
- இது 2022 ஆம் ஆண்டு உலக காற்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- உலக காற்று ஆற்றல் சபையானது இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

## இந்தியாவின் விண்வெளிச் சிதிலங்கள்

- 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இந்தியா செயற்கைக்கோள் எதிர்ப்புச் சோதனைகளை மேற்கொண்டதனால் உருவாக்கப்பட்ட விண்வெளிச் சிதிலங்கள் சிதைந்து விட்டதாக தென்படுகிறது.
- இது நாசாவின் சமீபத்தியத் தரவுகளில் கூறப்பட்டுள்ளது.
- இதன் காரணமாக விண்வெளிச் சிதிலங்களில் இந்திய நாட்டின் பங்களிப்பு கடந்த நான்கு ஆண்டுகளில் மிகக் குறைந்த அளவினை எட்டியுள்ளது.

- அமெரிக்கா, சீனா மற்றும் முன்னாள் சோவியத் யூனியன் நாடுகள் விண்வெளியில் செயலிழந்த மற்றும் செயலில் உள்ள செயற்கைக் கோள்களை அதிக எண்ணிக்கையில் கொண்டுள்ளன.
- இதுவும் மேற்கூறப்பட்ட நாடுகள் அதிக எண்ணிக்கையிலான விண்வெளிச் சிதிலங்களை உற்பத்தி செய்வதற்கான ஒரு காரணமாகிறது.
- 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்கைக்கோள் எதிர்ப்புச் சோதனைக்குப் பிறகு நாட்டின் விண்வெளிச் சிதிலங்களின் அளவு அதிகரித்தது.



## பன்மையச் செயற்கை முழங்கால்

- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கழக ஆராய்ச்சியாளர்கள், இந்தியாவின் முதல் பன்மையச் செயற்கை முழங்காலை உருவாக்கியுள்ளனர்.
- இது ஆயிரக்கணக்கான மாற்றுத் திறனாளிகளின் நிலையை மேம்படுத்த உதவும்.
- 'கதம்' என்பது உயிரி மருத்துவத் தொழில்நுட்பக் கழகம் மற்றும் மொபிலிட்டி இந்தியா ஆகியவற்றுடன் இணைந்து உருவாக்கப்பட்ட முழங்கால் மேல்பகுதிக்கான செயற்கை உறுப்பான பன்மைய முழங்கால் ஆகும்.
- இது 'இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட' ஒரு தயாரிப்பு ஆகும்.



## HD1 - இதுவரை கண்டறியப்படாத தொலைதூர அண்டம்




- HD1 எனப் பெயரிடப்பட்ட ஓர் அண்டமானது இதுவரை வானியலாளர்களால் கண்டு பிடிக்கப் பட்ட ஒரு மிக தொலைதூர அண்டமாக இருக்கலாம் என்று கருதப் படுகிறது.
- இந்த அண்டத்தின் பிரகாசத் தன்மைக்கு அதன் மையத்தில் இருக்கும் ஒரு பெரிய கருந்துளை காரணமாக இருக்கலாம் அல்லது ஆதியில் தோன்றிய சில மிகப்பெரிய நட்சத்திரங்களின் உருவாக்கம் காரணமாக இருக்கலாம்.
- அமெரிக்காவின் மாசசூசெட்ஸில் உள்ள ஹார்வர்ட்-ஸ்மித்சோனியன் வானியற்பியல் மையத்தின் ஃபேபியோ பக்குசி (Fabio Pacucci) என்பவர் தனது சக ஊழியர்களுடன் இணைந்து HD1 அண்டத்தினைக் கண்டுபிடித்தார்.

## சிலந்தி இனங்கள்

- 50,000 என்ற அளவில் அறியப்பட்ட பல்வேறு வகையான சிலந்தி இனங்கள் பூமியில் வாழ்வதாக உலகச் சிலந்திப் பட்டியல் அறிவித்துள்ளது.
- இது சுவிஸ் நாட்டின் தலைநகர் பெர்னில் அமைந்துள்ள இயற்கை வரலாற்று அருங் காட்சியகத்தில் அமைந்துள்ளது.
- இன்னும் சுமார் 50,000 சிலந்தி இனங்கள் கண்டறியப்பட உள்ளன என்று மதிப்பிட்டு உள்ளதாக இந்தப் பட்டியலை வெளியிட்ட அமைப்பு கூறியது.
- குரியுரியஸ் மினுவானோ என்பது உலகம் முழுவதும் சேர்த்து கண்டறியப்பட்ட 50,000 என்ற சிலந்தி இனமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## பெர்னார்டினெல்லி - பெர்ன்ஸ்டீன் வால் நட்சத்திரம்

- சமீபத்தில், நாசா நிறுவனத்தின் ஹப்பிள் விண்வெளித் தொலைநோக்கியானது, மிகப் பெரிய பெர்னார்டினெல்லி-பெர்ன்ஸ்டீன் என்ற வால் நட்சத்திரம் என்பது வானியல் அறிஞர்களால் இதுவரை கண்டறியப்படாத ஒரு மிகப்பெரிய பனித்துகள்களால் ஆன ஒரு வால் நட்சத்திரக் கரு என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.
- இந்த அணுக்கரு C/2014 UN271 என அழைக்கப்படுவதோடு இது சுமார் 129 கிலோமீட்டர் விட்டம் கொண்டது.

- இந்தக் கருவானது இதுவரை கண்டறியப்பட்ட வால் நட்சத்திரங்களைக் காட்டிலும் 50 மடங்கு பெரியதாக இருப்பதோடு அதன் நிறையானது, சுமார் 500 டிரில்லியன் டன்கள் என மதிப்பிடப் பட்டுள்ளது.
- இந்த வால் நட்சத்திரமானது, பெட்ரோ பெர்னார்டினெல்லி மற்றும் கேரி பெர்ன்ஸ்டீன் ஆகியோரால் சிலியில் உள்ள ஒரு வானியல் ஆய்வகத்தில் டார்க் எனர்ஜி மதிப்பீட்டில் (Dark Energy Survey) இருந்து பெறப்பட்ட சேமிப்புப் படங்களில் இருந்து கண்டுபிடிக்கப் பட்டது.
- இது 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் கண்டுபிடிக்கப்பட்டது முதல் தீவிரமாக ஆய்வு செய்யப்பட்டது.




## விண்வெளிச் செங்கற்கள்

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு மற்றும் இந்திய அறிவியல் கல்வி நிறுவனம் ஆகியவற்றைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் விண்வெளிச் செங்கற்களை தயாரிக்க செய்யும் ஒரு முறையை உருவாக்கியுள்ளனர்.
- பாக்டீரியா மற்றும் யூரியா ஆகியவற்றைப் பயன்படுத்தி, செவ்வாய்க் கிரகத்தின் மண்ணிலிருந்து விண்வெளிச் செங்கற்களை உருவாக்குவதற்கு சேற்று வார்ப்பு என்ற முறை பயன்படுத்தப் பட்டுள்ளதாக இக்குழு செயல்விளக்கம் அளித்தது.
- இந்தக் கற்களை, செவ்வாய்க் கிரகத்தில் மனிதக் குடியேற்றத்திற்கு வழிவகுக்கும் விதமாக கட்டிடங்களை அமைப்பதற்குப் பயன்படுத்தலாம்.



## பாக்ஸ்லோவிட் வைரஸ் தடுப்பு கோவிட் மாத்திரை

- ❖ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட வேண்டிய அளவில் அதிக அபாய நிலையில் இருக்கும் லேசான மற்றும் நடுத்தர அளவிலான கோவிட்-19 பாதிப்புள்ள நோயாளிகளுக்கு, பாக்ஸ்லோவிட் என்ற பெயரில் விற்கப்படும் நிர்மத்ரெல்விர் மற்றும் ரிடோனாவிர் ஆகிய மருந்துகளை வழங்க உலக சுகாதார அமைப்பு வலுவான பரிந்துரையை வழங்கியது.
- ❖ இன்று வரையில், அதிக ஆபத்து நிலையில் உள்ள நோயாளிகளுக்கு இந்த மருந்து ஒரு சிறந்த சிகிச்சையினை வழங்கும் ஒன்றாக இருக்கும் என்று உலக சுகாதார அமைப்பு கூறுகிறது.





## ஆக்ஸியம் ஸ்பேஸ் ஆக்ஸ்-1 விண்வெளித் திட்டம்

- ❖ சர்வதேச விண்வெளி நிலையத்திற்குப் பயணிக்க உள்ள முதல் தனியார் விண்வெளி செயல்திட்டமாக ஆக்ஸியம்-1 உருவெடுத்துள்ளது.
- ❖ இது ஆக்ஸியம் ஸ்பேஸ் எனப்படும் தனியார் விண்வெளி நிறுவனத்தினால் திட்டமிடப் பட்டுச் செயல்படுத்தப்பட்டது.
- ❖ ஆக்ஸியம்-1 நாசாவிடமிருந்து அனுமதியைப் பெற்று, ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் டிராகன் விண்கலத்தைப் பயன்படுத்தி, சர்வதேச விண்வெளி நிலையத்திற்கான தனது விண்கலத்தினை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.
- ❖ விண்வெளிப் பயணத்தை வணிக ரீதியாகச் சாத்தியமாக்குவதன் மூலம், விண்வெளிக்கு ஆராய்ச்சியாளர்களைக் கொண்டு வந்து விண்வெளி மற்றும் மனித உடலைப் பற்றிய நமது புரிதலை மேம்படுத்த முடியும் என்று ஆக்ஸியம் ஸ்பேஸ் நிறுவனம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.




## செவ்வாய்க் கிரகத்தில் சூரிய கிரகணம்

- நாசாவின் பர்சீவெரன்ஸ் மார்ஸ் ரோவர் என்ற உலாவி, ஃபோபோஸில் நிகழ்ந்த ஒரு கிரகணத்தின் காணொளியைப் படம் பிடித்துள்ளது.
- போபோஸ் என்பது செவ்வாய்க் கிரகத்தின் இரண்டு துணைக் கோள்களுள் ஒன்றாகும்.
- இந்த செவ்வாய்க் கிரகணம் ஆனது, துணைக் கோள்களின் சுற்றுப்பாதையில் ஏற்படும் நுட்பமான மாற்றங்கள் குறித்த புதிய கண்ணோட்டத்தை விஞ்ஞானிகளுக்கு வழங்கியுள்ளது.
- ஃபோபோஸ் என்ற ஒரு துணைக்கோள் செவ்வாய்க் கிரகத்தை நோக்கி மிக மெதுவாக நகர்ந்து வருவதோடு, அது இன்னும் பல மில்லியன் கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு அக்கிரகத்துடன் மோதும்.




## இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் தேசிய நோய்த் தடுப்பு ஊக்கி ஆய்வியல் நிறுவனத்தின் சோதனைக் கருவி

- இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் தேசிய நோய்த் தடுப்பு ஊக்கி ஆய்வியல் நிறுவனமானது, ஹீமோபிலியா மற்றும் வான் வில்லிபிராண்ட் நோய் (Von Willebrand's disease) ஆகிய நோய்களைப் பரிசோதிப்பதற்காக வேண்டி எளிய மற்றும் விரைவான முடிவினை வழங்கக் கூடிய சோதனைக் கருவியை உருவாக்கியுள்ளது.
- இந்தக் கருவியானது, இந்தியத் தலைமை மருந்துக் கட்டுப்பாட்டகத்திடமிருந்து அனுமதியைப் பெற்று, அதிக எண்ணிக்கையில் உற்பத்தி செய்வதற்கான ஒரு அனுமதியையும் பெற்றுள்ளது.
- வான் வில்லிபிராண்ட்ஸ் நோயானது வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் ஓர் இரத்தப் போக்கு நோயாகும்.



## சுயப் படியெடுப்பு ரக எம்.ஆர்.என்.ஏ. கோவிட்-19 தடுப்பூசிகள்




- ஒரு சுயப் படியெடுப்பு எம்.ஆர்.என்.ஏ. தடுப்பூசி என்பது, உட்செலுத்தப்பட்ட ஆர்என்ஏ என்பது உடலுக்குள் பெருகக் கூடியதாக அமையும்.
- தற்போது நடத்தப்பட்டு வரும் சில சோதனைகளில் கோவிட்-19 தொற்றிற்கு எதிரான நம்பிக்கைத் தரக் கூடிய முடிவுகளை அளித்துள்ளது.
- ARCT-154 என்ற இந்தத் தடுப்பூசியானது, கலிபோர்னியாவின் சான் டியாகோ நகரில் உள்ள ஆர்க்டரஸ் தெரபியூட்டிக்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது.
- இதற்கான சோதனைகள் வியட்நாம் நகரில் நடந்து வருகின்றன.
- இது கடுமையான கோவிட்-19 மற்றும் அதன் மூலமான இறப்புக்கு எதிராக 95% பாதுகாப்பையும், மிதமான கோவிட் தொற்றுக்கு எதிராக 55% பாதுகாப்பையும் வழங்கியது.

## அண்டங்கள் ஒன்றிணைவதன் ஒளிப்படம்

- VV-689 அமைப்பில் அமைந்துள்ள இரண்டு அண்டங்கள் ஒன்றிணைவதன் ஒரு ஒளிப் படத்தை நாசா வெளியிட்டுள்ளது.
- இந்த இரண்டு இணைந்த அண்டங்களுக்கு "ஏஞ்சல் விங்" என்ற ஒரு புனைவுப் பெயர் வழங்கப் பட்டுள்ளது.
- மோதிக் கொண்ட இந்த அண்டங்களின் படமானது கேலக்ஸி சூ சிட்டிசன் (Galaxy Zoo citizen) என்ற கலத்தின் மூலம் எடுக்கப்பட்டது.



# சுற்றுச்சூழல் செய்திகள்

## சந்திராப்பூர் - வெப்பமான நகரம்

- மகாராஷ்டிராவின் சந்திராப்பூர் நகரமானது உலகின் மூன்றாவது மிக வெப்பமான நகரமாக எல் டொராடோ வானிலை இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- இந்த நகரத்தில் அதிகபட்சமாக 45.3 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது.
- மாலியின் கேயஸ் நகரம் பூமியின் வெப்பமான இடமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- மாலியைச் சேர்ந்த செகோவ் என்ற நகரம் இந்தப் பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளது.
- பிராந்திய வானிலை மையத்தின் தகவல் படி, விதர்பா பகுதியின் மிகவும் வெப்பமான நகரமாக நாக்பூர் உள்ள நிலையில் அதைத் தொடர்ந்து அகோலா நகரம் உள்ளது.

## 121 ஆண்டுகளில் பதிவான வெப்பமான நாட்கள்

- 121 ஆண்டுகளில் இல்லாத அளவில் சராசரியாக, மார்ச் மாதத்தில் மிக வெப்பமான நாட்கள் பதிவாகியுள்ளதாக இந்திய வானிலை ஆய்வுத் துறையின் ஒரு பகுப்பாய்வு கூறுகிறது.
- நாடு முழுவதும் அதிகபட்ச வெப்பநிலை என்பது, இயல்பை விட 1.86 டிகிரி செல்சியஸ் நிலையைத் தாண்டியுள்ளது.
- பெரும்பாலும் வடமேற்கு மற்றும் மத்திய இந்தியாவில் உள்ள அதிகபட்ச வெப்ப நிலையில் மிக அதிகமான விலக்கல்கள் காரணமாக இந்த வெப்பநிலையானது பதிவு ஆகி உள்ளது.
- மழைப்பொழிவு இல்லாத நிலை மற்றும் மத்திய & வடமேற்கு இந்தியாவில் வீசும் சூடான மற்றும் வறண்ட மேற்குக் காற்று ஆகியவையே இதற்கான முதன்மைக் காரணங்களாகும்.

## பருவநிலை மாற்றம் மீதான அரசுகளுக்கிடையிலான குழுமத்தின் 6வது மதிப்பீட்டு அறிக்கை – சிறப்பம்சங்கள்

- பருவநிலை மாற்றம் மீதான அரசுகளுக்கிடையிலான குழுமத்தின் 6வது மதிப்பீட்டு அறிக்கையானது, அனைத்துத் துறைகளிலும் வெளி வரும் உமிழ்வைக் குறைக்காமல், புவி வெப்பமடைதலை 1.5°C வெப்பநிலைக்குள் கட்டுப்படுத்துவது கடினம் என்று எடுத்துக் கூறியுள்ளது.
- வெப்பநிலையை 1.5 டிகிரி செல்சியசிற்குள் கட்டுப்படுத்த, 2025 ஆம் ஆண்டிற்கு முன்பாகவும் 2030 ஆம் ஆண்டிற்குள்ளும் உச்சத்தை எட்ட உள்ள பசுமை இல்ல வாயுக்களின் உலகளாவிய உமிழ்வினை 43% வரை குறைக்க வேண்டும்.

## PREVIOUS IPCC ASSESSMENT REPORTS: HIGHLIGHTS

**FIRST REPORT, 1990**

- Emissions resulting from human activities are increasing atmospheric concentrations of greenhouse gases
- Global temperatures have risen by 0.3°–0.6°C in 100 years. In business-as-usual scenario, likely to increase by 2°C compared to pre-industrial levels by 2025, and 4°C by 2100
- Sea-level likely to rise 65 cm by 2100
- Report formed basis for negotiation of UN Framework Convention on Climate Change in 1992

**SECOND REPORT, 1995**

- Revises projected rise in global temperatures to 3°C by 2100, and sea-level rise to 50 cm
- The scientific underpinning for Kyoto Protocol in 1997

**THIRD REPORT, 2001**

- Revises predicted temperature rise to 1.4°–5.8°C by 2100 compared to 1990
- Rainfall to increase; sea-level likely to rise by 80 cm from 1990 by 2100.
- Frequency, intensity and duration of extreme weather events to increase
- Presents new and stronger evidence to suggest most of warming attributable to human activities

**FOURTH REPORT, 2007**

- Greenhouse gas emissions rose by 70% between 1970 and 2004
- Atmospheric concentrations of $CO_2$ in 2005 (379 ppm) the highest in 650,000 years
- In worst-case scenario, global temperatures could rise 4.5°C by 2100 from pre-industrial levels; sea-levels could be 60 cm higher than in 1990
- Wins 2007 Peace Nobel for IPCC
- Report is the scientific input for the 2009 Copenhagen climate meeting

**FIFTH REPORT, 2014**

- Temperature rise by 2100 could be 4.8°C from pre-industrial times
- Atmospheric concentrations of $CO_2$, $CH_4$ and $N_2O$ "unprecedented" in last 800,000 years
- More frequent and longer heat waves "virtually certain"
- "Large fraction of species" face extinction
- Forms scientific basis for negotiations of Paris Agreement in 2015

## காற்றின் தரம் குறித்த தரவுத் தளம் 2022




- உலக சுகாதாரத் தினத்தை முன்னிட்டு (ஏப்ரல் 7), உலக சுகாதார அமைப்பானது (WHO) 2022 ஆம் ஆண்டு காற்றின் தரம் குறித்த தரவுத் தளத்தை வெளியிட்டது.
- கிட்டத்தட்ட உலகிலுள்ள அனைத்து மக்களும் (99%) உலக சுகாதார அமைப்பின் காற்றின் தர வரம்புகளை மீறிய காற்றையேச் சுவாசிப்பதாக இது காட்டுகிறது.
- உலக சுகாதார அமைப்பானது முதல் முறையாக நைட்ரஜன் டை ஆக்சைட்டின் (NO2) வருடாந்திரச் சராசரிச் செறிவுகளின் நிலமட்ட அளவீடுகளையும் எடுத்துள்ளது.

- 10 µm (PM10) அல்லது 2.5 µm (PM2.5) என்ற மதிப்பிற்குச் சமமான அல்லது அதை விடச் சிறிய விட்டம் கொண்ட துகள்களின் அளவீடுகளும் இதில் அடங்கும்.
- "கிழக்கு மத்தியத் தரைக் கடல் மற்றும் தென்கிழக்கு ஆசியப் பகுதிகளில் மிகவும் மோசமாகவும், அதைத் தொடர்ந்து ஆப்பிரிக்காவிலும் காற்றின் தரம் மோசமாக உள்ளதாக" இந்த அறிக்கை கூறுகிறது.
- கிழக்கு மத்தியத் தரைக் கடல் பகுதியில் அதிக செறிவுமிக்க நைட்ரஜன் டை ஆக்சைடு காணப் பட்டது.
- குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் உடைய நாடுகளில் உள்ள 1 சதவீதத்திற்கும் குறைவான நகரங்களில் காற்றின் தரம் உலக சுகாதார அமைப்பினால் பரிந்துரை செய்யப் பட்ட வரம்புகளுக்கு இணங்க உள்ளது.

## வெப்ப நெகிழ்திறனை விரிவடையச் செய்தல் அறிக்கை

- இந்தியாவின் நகரங்கள் மற்றும் மாவட்டங்கள், கோடைக்காலத்தில் பாதிக்கப்படக் கூடிய மக்களைப் பாதுகாப்பதற்கான தனது முயற்சிகளை அதிகரிக்க வேண்டும்.
- இது 'வெப்ப நெகிழ்திறனை விரிவடையச் செய்தல்,' என்ற தலைப்பிலான ஒரு புதிய அறிக்கையில் இந்தத் தகவலானது கூறப்பட்டுள்ளது.
- நாட்டின் பல்வேறு நகரங்கள் வெப்ப அலைகளால் தவித்து வருவதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- கேரளா மற்றும் இமாச்சலப் பிரதேசம் ஆகிய சில மாநிலங்களில் தீவிர வெப்ப நிலை என்பது பதிவாகி வருகிறது.
- இந்த மாநிலங்களில் வெப்ப அலைகள் நிலவியதாக வரலாற்றில் பதிவுகள் இல்லை.

## காட்டுத் தீ பற்றிய ஆய்வு

- கடந்த இருபது ஆண்டுகளில் காட்டுத் தீயின் தீவிரம், அடிக்கடி காட்டுத் தீ ஏற்படும் தன்மை மற்றும் காட்டுத் தீ ஏற்படும் மாதங்களின் எண்ணிக்கை ஆகியவை அதிகரித்துள்ளதாக ஓர் ஆய்வு கண்டறிந்துள்ளது.
- இது ஆற்றல், சுற்றுச்சூழல் மற்றும் நீர் வளச் சபையினால் வெளியிடப்பட்டது.
- இந்த ஆய்விற்கு 'மாறி வரும் பருவநிலையில் காட்டுத் தீ நிகழ்வுகளை மேலாண்மை செய்தல்' என்று தலைப்பிடப்பட்டுள்ளது.
- கடந்த இருபது ஆண்டுகளில் காட்டுத் தீ ஏற்படும் நிகழ்வுகள் பத்து மடங்கு அதிகரித்து உள்ளதாக இந்த ஆய்வு கண்டறிந்துள்ளது.
- இந்தியாவில் உள்ள 62 சதவீதத்திற்கும் அதிகமான மாநிலங்கள் அதிதீவிரமான காட்டுத் தீயால் பாதிக்கப்படக் கூடியவை என்றும் இந்த ஆய்வில் கண்டறியப் பட்டு உள்ளது.
- மத்தியப் பிரதேசம், உத்தரகாண்ட் மற்றும் ராஜஸ்தான் ஆகிய சில மாநிலங்களில் குறிப்பிடத் தக்க அளவில் காட்டுத் தீ பதிவாகியுள்ளது.

# மாநிலச் செய்திகள்

## மழைநீர் சேமிப்புப் பிரச்சாரம் (Catch the Rain) – 2022

- மணிப்பூர் மாநில முதல்வர் N. பிரேன் சிங் 2022 ஆம் ஆண்டின் ஜல் சக்தி அபியான் “மழைநீர் சேமிப்பு” என்ற பிரச்சாரத்தினைத் தொடங்கி வைத்தார்.
- மணிப்பூரிலுள்ள அடையாளம் காணப்பட்ட நீர்ப்பற்றாக் குறையுடைய மாவட்டங்கள் மற்றும் மண்டலங்களில் நீர்வளங்காப்பு குறித்த பல்வேறு நடவடிக்கைகளைத் தீவிரப் படுத்தும் நோக்கத்துடன் இந்தப் பிரச்சாரமானது தொடங்கப்பட்டது.
- இந்தப் பிரச்சாரத்தின் கருத்துரு, “மழை பொழியும் போதே, பொழியும் இடத்திலேயே அதைச் சேமியுங்கள்” என்பதாகும்.




## உயிர் வாழும் வேர்ப் பாலங்கள் - மேகாலயா

- ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பின் (யுனெஸ்கோ) உலகப் பாரம்பரியத் தளங்களின் தற்காலிகப் பட்டியலில் 'ஜிங்கிங் ஜ்ரி அல்லது உயிர் வாழும் வேர்ப் பாலங்கள் (லிவிங் ரூட் பிரிட்ஜ்)' சேர்க்கப்பட்டுள்ளது.
- இது மேகாலயாவில் உள்ள 70க்கும் மேற்பட்ட கிராமங்களில் காணப்படுகிறது
- இது மக்களுக்கும் இயற்கைக்கும் இடையிலான சமூக-கலாச்சார, சமூக மற்றும் தாவரவியல் தொடர்புகளை எடுத்துரைக்கிறது.
- நீர்நிலைகளின் இருபுறமும் 'ஃபிகஸ் எலாஸ்டிகா' என்ற மரத்தை வளர்ப்பதன் மூலம் இந்தக் கிராம மக்கள் இந்த உயிர் வாழும் வேர்ப் பாலங்களை வளர்க்கின்றனர்.



- சுமார் 10 முதல் 15 ஆண்டுகள் வரை வளர்ந்த இந்த மரங்கள் ஒரு பாலம் போன்ற அமைப்பினை உருவாக்குகின்றன.

## அசாம் மற்றும் மேகாலயா ஒப்பந்தம்

- அசாம் மற்றும் மேகாலயா ஆகிய மாநிலங்கள் தங்களுக்கிடையே எல்லை மோதல் நிகழ்ந்த 12 இடங்களில் ஆறு இடங்களில் 50 ஆண்டு கால எல்லைப் பிரச்சனையைத் தீர்க்க ஒப்புக் கொண்டன.
- மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா முன்னிலையில் அசாம் மற்றும் மேகாலயா முதல்வர்கள் முறையே ஹிமந்தா பிஸ்வா சர்மா மற்றும் கான்ராட் சங்மா ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.
- இந்த இரு மாநிலங்களும் 884.9 கிலோ மீட்டர் நீளமுடைய ஒரு எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன.

## வினய சமரஷ்யா யோஜனா

- கர்நாடக அரசானது வினய சமரஷ்யா யோஜனா என்ற திட்டத்தை அறிவித்துள்ளது.
- இது அந்த மாநிலத்தின் கிராமப் பஞ்சாயத்துகளில் நிலவும் சாதிப் பாகுபாடுகளுக்கு எதிராக ஒரு பொது விழிப்புணர்வைப் பரப்புவதற்கான ஒரு பிரச்சாரமாகும்.
- இது ஏப்ரல் 14 அன்று டாக்டர் B.R.அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாள் விழாவின் போது முறையாகத் தொடங்கப்படும்.
- 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திய மழையிலிருந்துத் தன்னைக் காப்பதற்காக, கர்நாடகாவின் கோப்பல் என்ற மாவட்டத்திலுள்ள மியாபூர் குக்கிராமத்திலுள்ள ஒரு ஆலயத்தினுள் தஞ்சம் புகுந்த வினய் என்ற 3 வயது தலித் சிறுவனின் நினைவாக இந்த முன்னெடுப்பிற்கு இப்பெயரானது சூட்டப்பட்டுள்ளது.

## இராஜஸ்தான் நிறுவன தினம்

- மார்ச் 30 அன்று, இராஜஸ்தான் மாநிலம் உருவாக்கப்பட்டதை நினைவு கூறும் விதமாக இராஜஸ்தான் திவாஸ் (இராஜஸ்தான் நிறுவன தினம்) அனுசரிக்கப்படுகிறது.
- 1949 ஆம் ஆண்டு மார்ச் 30 அன்று, இந்திய ஒன்றியத்துடன் இரஜபுத்தினப் பகுதிகளை இணைத்ததையடுத்து இராஜஸ்தான் மாநிலமானது உருவாக்கப்பட்டது.
- இராஜஸ்தான் மாநிலத்தின் 73வது நிறுவன தினமானது இந்த ஆண்டு கொண்டாடப் பட்டது.
- இந்தியாவில் பரப்பளவில் மிகப்பெரிய மாநிலமாக திகழ்வது இராஜஸ்தான் மாநிலம் ஆகும்.
- இந்தியாவின் 4% புவியியல் பரப்பினை இராஜஸ்தான் கொண்டுள்ளது.
- மக்கள்தொகை ரீதியாக இராஜஸ்தான் இந்தியாவின் 7வது பெரிய மாநிலமாகும்.
- இம்மாநிலத்தில் ரந்தம்பூர் தேசியப் பூங்கா (சவாய் மதோபூர்), சரிஸ்கா புலிகள் காப்பகம் (ஆல்வார்) மற்றும் முகுந்தரா மலை புலிகள் காப்பகம் (கோட்டா) என்று 3 தேசியப் புலிகள் காப்பகங்கள் உள்ளன..
- இராஜஸ்தான் அரசர்களின் நிலம் எனவும் அழைக்கப்படுகிறது.

## இந்தியாவின் முன்னணி காய்கறி உற்பத்தியாளர்

| Fruits production (mt) | 2020-21 | 2021-22 | Vegetables production (mt) | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| Andhra Pradesh | 17.70 | 18.01 | Uttar Pradesh | 29.16 | 29.58 |
| Maharashtra | 11.74 | 12.30 | West Bengal | 30.33 | 28.23 |
| Uttar Pradesh | 11.23 | 11.26 | Madhya Pradesh | 21.33 | 20.59 |
| Karnataka | 7.99 | 8.55 | Bihar | 17.84 | 17.77 |
| Gujarat | 8.24 | 8.24 | Maharashtra | 14.21 | 16.78 |
| **All India** | **102.48** | **102.92** | **All India** | **200.45** | **199.88** |

- காய்கறி உற்பத்தியில் உத்தரப் பிரதேச மாநிலம் முதலிடத்தில் உள்ளது.
- இதில் மேற்கு வங்காளத்தினை இரண்டாம் இடத்திற்குத் தள்ளி இந்த மாநிலம் முதல் இடத்தைப் பிடித்தது
- பழங்கள் உற்பத்தியில் ஆந்திரப் பிரதேச மாநிலம் முதலிடத்தில் உள்ளது.

## கைதிகளுக்கு தனிநபர் கடன்

- கைதிகள் வங்கிகளிடமிருந்துத் தனிநபர் கடன்களைப் பெற அனுமதிக்கும் திட்டத்தை மகாராஷ்டிர அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது கைதிகளின் குடும்பங்களுக்கு அவர்களின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவதற்கும் அவர்களின் சட்ட விவகாரங்கள் தொடர்பான செலவுகளைச் சந்திப்பதற்கும் உதவுகிறது.
- இது நம் நாட்டில் மேற்கொள்ளப்படும் இது போன்ற முதல் வகை முயற்சியாகும்.
- மகாராஷ்டிரா மாநிலக் கூட்டுறவு வங்கியானது இத்திட்டத்தின் கீழ், 7% என்ற வட்டி விகிதத்தில் 50,000 வரை கடன் வழங்கும்.
- இந்த வகை கடன் "கவ்தி" கடன் என்று அழைக்கப்படுகிறது.

## இந்தியப் படகு மற்றும் கடல்சார் கண்காட்சி

- 4வது இந்தியப் படகு மற்றும் கடல்சார் கண்காட்சியானது கேரளாவின் கொச்சி நகரில் உள்ள போல்காட்டி அரண்மனையில் நடத்தப் பட்டது.
- இந்தக் கண்காட்சியானது இந்தியாவில் ஒரேயொரு மற்றும் மிகவும் செல்வாக்குமிக்க படகு மற்றும் கடல்சார் கண்காட்சி ஆகும்.
- இந்த நிகழ்வினை கொச்சியைச் சேர்ந்த க்ருஷ் எக்ஸ்போ எனும் நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது.

## கங்கூர் திருவிழா

- இது மத்தியப் பிரதேசம், குஜராத் மற்றும் மேற்கு வங்காளத்தின் சில பகுதிகளிலும் ராஜஸ்தான் மாநிலத்திலும் கொண்டாடப்படுகிறது.
- இது ராஜஸ்தானின் மிக முக்கியத் திருவிழாக்களுள் ஒன்றாகும்.
- இதில் பெண்கள், சிவபெருமானின் மனைவியான கௌரி என்ற கடவுளை வழிபடுவர்.

## டெல்லி மாநகராட்சிக் கழக (திருத்தம்) மசோதா




- ❖ மாநிலங்களவையானது இந்த மசோதாவை நிறைவேற்றியது.
- ❖ இந்த மசோதா டெல்லியின் மூன்று மாநகராட்சிகளை ஒருங்கிணைக்கும் நோக்கத்தில் உருவாக்கப்பட்டது (வடக்கு, தெற்கு, கிழக்கு).
- ❖ இது ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் மூலோபாயத் திட்டமிடல் மற்றும் வளங்களின் உகந்தப் பயன்பாட்டிற்கான வலுவான ஓர் அமைப்பை உருவாக்கச் செய்வதை உறுதி செய்வதற்கானதாகும்.
- ❖ இதற்கு முன்பாக, 1957 ஆம் ஆண்டு டெல்லி மாநகராட்சிக் கழகச் சட்டத்தில் திருத்தம் செய்யும் இந்த மசோதாவை மக்களவை நிறைவேற்றியது.


## சார்ஹூல் திருவிழா 2022

- ❖ சார்ஹூல் என்பது ஜார்க்கண்ட் மாநிலத்தின் உள்ளூரைச் சேர்ந்த சார்னா என்ற ஒரு மதத்தின் ஒரு பகுதியாக பழங்குடிச் சமூகங்களால் கொண்டாடப்படும் புத்தாண்டுப் பண்டிகையாகும்.
- ❖ இது அமாவாசை நாளுக்கு அடுத்த மூன்று நாட்களுக்குப் பிறகு இந்து மாதமான சைத்ராவில் கொண்டாடப்படுகிறது.
- ❖ இது வசந்த காலத்தின் தொடக்கத்தின் கொண்டாட்டத்திற்கான ஒரு தினமாகும்.
- ❖ "சர்ஹூல்" (Sarhul) என்ற வார்த்தை மர வழிபாட்டுடன் தொடர்புடையது ஆகும்.

## மிகக்குறைவான வேலைவாய்ப்பின்மை வீதம் – சத்தீஸ்கர்

- ❖ சத்தீஸ்கர் மாநிலமானது மார்ச் மாதத்தில் குறைவான வேலைவாய்ப்பின்மை வீதத்துடன் இந்தியாவிலேயே முதலிடத்தில் உள்ளது.
- ❖ இந்தியப் பொருளாதார அமைப்புகளை கண்காணிக்கும் மையத்தினால் சமீபத்தில் வெளியிடப் பட்ட வேலைவாய்ப்பின்மை அறிக்கையில் இத்தகவலானது கூறப்பட்டு உள்ளது.
- ❖ சத்தீஸ்கரில் வேலைவாய்ப்பின்மை வீதம் ஆனது இதுவரையில் இல்லாத அளவில் குறைவான நிலையை (0.6%) எட்டியுள்ளது.

- இந்திய நாட்டின் வேலைவாய்ப்பின்மை வீதம் 7.5% ஆகும்.
- இதில் நகர்ப்புற வேலைவாய்ப்பின்மை 8.5% மற்றும் கிராமப்புற வேலை வாய்ப்பின்மை 7.1% ஆகும்.




*குறிப்பு*

- கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் இடையிலான ஒரு பொருளாதார இணைப்பினை அதிகரிப்பதை வலியுறுத்தும் நோக்கில், உள்ளார்ந்த வளர்ச்சி என்ற ஒரு இலக்கினை நிறுவும் நடவடிக்கையில், மகாத்மா காந்தியின் 'கிராம் சுவராஜ்' என்ற நோக்கத்திற்கு இணங்க 3 ஆண்டுகளுக்கு முன்பு சத்தீஸ்கர் அரசு ஒரு புதிய மாதிரியை நடைமுறைப் படுத்தியது.
- சத்தீஸ்கர் மாநிலத்தில் அடுத்து வரும் 5 ஆண்டுகளில் 12 முதல் 15 லட்சம் வரையிலான புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் நோக்கில் ரோஸ்கர் (வேலைவாய்ப்பு) என்ற ஒரு திட்டமானது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## நந்தினி ஷீரா சம்ரிதி கூட்டுறவு வங்கி

- கர்நாடக முதல்வர் பசவராஜ் பொம்மை, நந்தினி ஷீரா சம்ரிதி கூட்டுறவு வங்கியினை நிறுவியுள்ளார்.
- இது பால் உற்பத்தியாளர்களுக்கு மாபெரும் நிதி ஆதரவை வழங்கும் ஒரு புரட்சிகர முன்னெடுப்பாகும்.
- பால் உற்பத்தியாளர்களுக்காகா ஒரு பிரத்தியேக வங்கியினை நிறுவிய ஒரே மாநிலம் கர்நாடகாவாகும்.
- மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா "நந்தினி ஷீரா சம்ரிதி சஹாகர் வங்கியின்" சின்னத்தினை வெளியிட்டார்.

## காங்க்ரா தேயிலை

- இமாச்சலப் பிரதேசத்தின் காங்க்ரா தேயிலை வகையானது விரைவில் ஐரோப்பிய ஆணையத்தின் புவிசார் குறியீட்டினைப் பெற உள்ளது.
- இந்தக் குறியீடானது இத்தேயிலை வகை ஐரோப்பியச் சந்தையில் நுழைவதற்கு ஒரு வாய்ப்பினை வழங்கும்.

- காங்க்ரா தேயிலைக்கு 2005 ஆம் ஆண்டில் இந்தியாவின் புவிசார் குறியீடானது வழங்கப் பட்டது.




## சமூக அருங்காட்சியகம்

- லடாக்கின் லே மாவட்டத்தின் கியா - சசோமா கிராமங்களில் சமூக அருங்காட்சியகம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது.
- இது இப்பகுதியின் வளமான ஒரு கலாச்சார வரலாற்றைப் பாதுகாத்து மேம்படுத்தச் செய்வதற்கானதாகும்.
- இது இந்தியாவின் முதல் சமூக அருங்காட்சியகம் ஆகும்.

## ஹிம் பிரஹாரி திட்டம்

- உத்தரகாண்ட் அரசானது 'ஹிம் பிரஹாரி' என்ற திட்டத்தைச் செயல்படுத்த உள்ளது.
- ஹிம் பிரஹரி என்ற திட்டம் முன்னாள் ராணுவத்தினர் மற்றும் இளைஞர்களுக்கான ஒரு திட்டமாகும்.
- இது அந்த மாநிலத்தில் இருந்து மக்கள் இடம்பெயர்வதைத் தடுத்து நிறுத்துவதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.

## கர்நாடக 'ஒருங்கிணைப்பு தினம்'

- கடக்கில் உள்ள தொண்டதார்ய மடத்தின் ஸ்ரீ சித்தலிங்க சுவாமியின் பிறந்த நாள் என்பது, அந்த மாநிலம் முழுவதும் 'ஒருங்கிணைப்பு தினமாக' கொண்டாடப்படும் என்று கர்நாடக முதல்வர் பசவராஜ் பொம்மை அவர்கள் அறிவித்தார்.
- ஐக்கிய மண்டபத்தைத் திறந்து வைத்த பிறகு இது குறித்த அறிவிப்பினை பசவராஜ் பொம்மை அவர்கள் வெளியிட்டார்.
- இந்த மண்டபம், கடக்கில் உள்ள தொண்டதர்யா மடத்தின் நிலத்தில் அந்த தீர்க்க தரிசியினது உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தைச் சுற்றி கட்டப்பட்ட ஒரு கட்டிடம் ஆகும்.

## பஞ்சாப் மாநிலத்தில் 300 யூனிட் இலவச மின்சாரம்





- பஞ்சாப் மாநிலத்தில் ஜூலை 01 ஆம் தேதி முதல் ஒவ்வொரு வீட்டுக்கும் ஒவ்வொரு மாதமும் 300 யூனிட் இலவச மின்சாரம் வழங்கப்படும் என அம்மாநில முதலமைச்சர் பகவந்த் மன் அறிவித்துள்ளார்.
- மாதந்தோறும் 200 யூனிட் வழங்கப் பட்டு வந்த பட்டியல் சாதியினர், பிற்படுத்தப்பட்ட சாதியினர், வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்கள் மற்றும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் ஆகியோருக்கு இனி மாதந்தோறும் 300 யூனிட் மின்சாரம் இலவசமாக வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

## மிக உயரமான இந்திய தேசியக் கொடி

- மணிப்பூரின் பிஷ்ணுபூர் மாவட்டத்தில் உள்ள மொய்ராங் எனுமிடத்தில் உள்ள இந்திய தேசிய ராணுவத்தின் (ஐஎன்ஏ) தலைமையக வளாகத்தில் 165 அடி உயர இந்திய தேசியக் கொடி நிறுவப்படும் என்று மணிப்பூர் முதல்வர் N.பிரேன் சிங் அறிவித்தார்.
- இது வடகிழக்குப் பகுதியில் உள்ள மிக உயரமான தேசிய கொடியாகத் திகழும்.

## ஆப்பிரிக்கப் பன்றிக் காய்ச்சல்

- திரிபுராவிலுள்ள அரசு பன்றி வளர்ப்புப் பண்ணையில் ஆப்பிரிக்கப் பன்றிக் காய்ச்சல் பாதிப்பு கண்டறியப் பட்டது.
- இதன் மூலம் மொத்தம் 63 வயது முதிர்ந்த பன்றிகள் உயிரிழந்துள்ளன.
- இந்தப் பண்ணையானது செபாஹிஜாலா (Sepahijala) மாவட்டத்தின் தேவிப்பூர் என்னும் இடத்தில் அமைந்துள்ளது.
- இது மாநில விலங்கு வள மேம்பாட்டுத் துறையினால் இயக்கப்படுகிறது.




## L-மூலம் வையக விரிவு வலை வழங்கி (செயல்பாட்டகம்)

- இந்தியாவிலேயே முதன்முறையாக L-மூலம் என்ற ஒரு செயல்பாட்டகத்தினைப் பெற உள்ள மாநிலம் இராஜஸ்தான் ஆகும்.
- இது தடையற்ற இணைய வசதி மூலம், முதன்மையான எண்ணிமச் சேவைகள் மற்றும் மின்னாளுகையைச் செயல்படுத்துதலை மேற்கொள்வதற்கு மாநில அரசிற்கு உதவும்.
- இதில் அறிவிக்கப்பட்டப் பெயர்கள் மற்றும் எண்களுக்கான இணையக் கழகத்துடன் இணைந்து, ஜெய்ப்பூரிலுள்ள இராஜஸ்தானின் பாமாஷா மாநிலத் தரவு மையத்தில் இந்தச் செயல்பாட்டகமானது நிறுவப்பட்டுள்ளது.
- தற்போது மும்பை, புதுடெல்லி மற்றும் கோரக்பூர் ஆகிய நகரங்களில் மூன்று J – மூலம் செயல்பாட்டகங்களும், கொல்கத்தா மற்றும் மும்பை ஆகிய நகரங்களில் 2 L – மூலம் செயல்பாட்டகங்களும் நிறுவப்பட்டுள்ளன.

## மூன்று சக்கர மின்சார வாகனத் தொழிற்சாலை

- தெலுங்கானா மாநில அரசானது, கல்ஃபோர்னியாவிலுள்ள பிலிட்டி எலக்டிரிக் (Biliti Electric) என்ற நிறுவனத்துடன் இணைந்து உலகின் மிகப்பெரிய மூன்று சக்கர மின்சார வாகனத் தொழிற்சாலையினை நிறுவ உள்ளது.
- அந்த மாநிலத்தில் ஆண்டிற்கு 2.40 லட்சம் மின்சார வாகனங்களை உற்பத்தி செய்திட வேண்டி, பல கட்டங்களாக இந்த ஆலையை அது நிறுவத் திட்டமிட்டுள்ளது.
- இது உலகின் ஒரு மிகப்பெரிய மூன்று சக்கர மின்சார வாகனத் தொழிற்சாலையாகத் திகழும்.

## நிமோனியா பாதிப்பினைச் சுழிய நிலையாக்குவதற்கான விழிப்புணர்வு மற்றும் நடவடிக்கை

- கர்நாடகாவின் சுகாதார மற்றும் மருத்துவக் கல்வி அமைச்சர் K. சுதாகர், நிமோனியா பாதிப்பினைச் சுழிய நிலையாக்குவதற்கான ஒரு விழிப்புணர்வு மற்றும் நடவடிக்கை பிரச்சாரத்தினை வெற்றிகரமாகத் தொடங்கி வைத்தார்.

- இது 5 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளிடம் ஏற்படும் நிமோனியா பாதிப்பு குறித்த ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்தவும், அதை முன்கூட்டியே கண்டறிதலை உறுதி செய்யவும் வேண்டி தொடங்கப்பட்ட ஒரு பிரச்சாரமாகும்.
- நிமோனியா என்பது வைரஸ், பாக்டீரியா (அல்லது) பூஞ்சைத் தொற்றின் காரணமாக ஏற்படும் ஒரு நுரையீரல் தொற்றாகும்.
- கர்நாடகாவிலுள்ள 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் உயிரிழப்பு வீதமானது 1000 பிறப்பிற்கு 28 என்ற அளவில் உள்ளதாக 2018 ஆம் ஆண்டின் மாதிரிப் பதிவு முறைத் தரவுகள் கூறுகின்றன.
- தேசிய சுகாதாரக் கொள்கை இலக்குகளை அடைவதற்கு நிமோனியா உயிரிழப்பு வீதமானது 1000 பிறப்புகளுக்கு 3 உயிரிழப்புகளுக்கும் குறைவான அளவில் குறைக்கப் பட வேண்டும்.
- இந்தியாவில், குழந்தைகள் மத்தியில் ஏற்படும் நிமோனியா பாதிப்பானது நாட்டில் பதிவாகும் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் உயிரிழப்புகளில் 15% பங்கினைக் கொண்டுள்ளது.



## புழுங்கல் அரிசி விவகாரம்

**PARBOILED TICE STOCK WITH FCI** (LAKH TONNES)

| STATE | STOCKS |
|---|---|
| Andhra Pradesh | 0.66 |
| Telangana | 16.52 |
| Chhattisgarh | 1.49 |
| Odisha | 2.07 |
| Jharkhand | 2.98 |
| Kerala | 3.00 |
| Tamil Nadu | 12.09 |
| West Bengal | 0.43 |
| Karnataka | 0.1 |
| Bihar | 1.09 |
| Haryana | 0.11 |
| Punjab | 0.04 |
| TOTAL | 40.58 |

*As on April 1. Source: Ministry of Consumer Affairs, Food and Public Distribution*

- ஒரே மாதிரியான நெல் கொள்முதல் கொள்கையை பின்பற்றக் கோரி தெலுங்கானா மாநில முதல்வர் K. சந்திரசேகர் ராவ் மற்றும் அவரது அமைச்சரவை உறுப்பினர்கள் புது தில்லியின் தெலுங்கானா இல்லத்தில் போராட்டம் நடத்தினர்.
- தெலுங்கானா மாநிலம் அதிகளவில் உற்பத்தி செய்யும் புழுங்கல் அரிசியை உபரி அளவில் கொள் முதல் செய்வதை நிறுத்துவதாக மத்திய அரசு அறிவித்ததையடுத்து இந்தப் போராட்டமானது நிகழ்த்தப்பட்டது.
- புழுங்கல் அரிசிக்கான தேவை குறைவாக இருப்பதால், அதனை அதிகளவில் கொள் முதல் செய்து பணத்தை வீணடிக்க இயலாது என்று மத்திய அரசு கூறியுள்ளது.
- புழுங்கல் அரிசி என்பது ஆலையில் பிரித்தெடுக்கப்படுவதற்கு முன்பாக, நெல்லாக இருக்கும் போதே வேக வைக்கப் பட்ட அரிசியைக் குறிக்கிறது.

## டிஜிட்டல் பேருந்து சேவை

- மகாராஷ்டிர மாநில சுற்றுச்சூழல் துறை அமைச்சர், ஆதித்ய தாக்கரே மும்பையின் இந்திய நுழைவு வாயில் (இந்தியா கேட்) முதல் சர்ச் கேட் (தேவாலய நுழைவு வாயில்) வரையிலான பாதையில், முதலாவது முழுவதும் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட நகரின் முதல் பேருந்துச் சேவையைத் தொடங்கி வைத்தார்.
- BEST (Brihanmumbai Electricity Supply and Transport - பிருஹன்மும்பை மின்சார வழங்கீடு மற்றும் போக்குவரத்துக் கழகம்) முழுவதும் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட இந்தியாவின் முதல் பேருந்துச் சேவையாகும்.

## மணிப்பூர் - நாகாலாந்து எல்லைப் பிரச்சினை

- தெற்கு அங்காமி பொது மக்கள் அமைப்பானது, மார்ச் மாத தொடக்கத்தில் ஒரு முழு அடைப்பினை அறிவித்தது.
- சர்ச்சைக்குரிய கெசோல்ட்சா பகுதியில் இருந்து ஆயுதமேந்தியப் பணியாளர்கள் மற்றும் நிரந்தரக் கட்டமைப்புகளை திரும்பப் பெறுவதில் மணிப்பூர் அரசு தோல்வி அடைந்ததே இதற்கு ஒரு காரணமாகும்.
- தெற்கு அங்காமி பொது மக்கள் அமைப்பு நாகாலாந்தின் ஒரு பழங்குடி அமைப்பாகும்.
- நாகாலாந்தின் அங்காமிகளுக்கும், மணிப்பூரின் மாவோஸ் மற்றும் மராம்கள் ஆகிய மூன்று நாகா இனப் பழங்குடியினருக்கும் இடையிலான ஒரு பழைய நிலவுடைமைத் தகராறே இதற்கான மூலக் காரணம் ஆகும்.
- கெசோல்ட்சா ஆனது, நாகாலாந்து மற்றும் மணிப்பூர் ஆகியவற்றின் எல்லையில் உள்ள அழகிய சுகோ என்ற பள்ளத்தாக்கின் புறப்பரப்பில் அமைந்த அடர்ந்த காடுகள் நிறைந்த ஒரு பகுதியாகும்.
- சுகோ பள்ளத்தாக்கு முழுவதுமே நாகாலாந்திற்குச் சொந்தமானது என்று தெற்கு அங்காமி பொது மக்கள் அமைப்பே கூறினாலும், நாகலாந்து மாநில அரசு அவ்வாறு கோரவில்லை.

## உலகத் தரம் வாய்ந்த தரவு மையம்

- திரிபுரா மாநிலத்தில் ஒரு சர்வதேச தரத்திலான தரவு மையத்தை நிறுவுவதற்காக அம்மாநில அரசுக்கும் NIXI-CSC என்ற தரவுச் சேவை மையத்திற்கும் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- முன்மொழியப்பட்ட இந்தத் தரவு மையத்தை நிறுவுவதற்காக வேண்டி, CSE எனும் மின்னாளுகைச் சேவை அமைப்பு மற்றும் இந்தியத் தேசிய இணையப் பரிமாற்ற அமைப்பு ஆகியவை கூட்டு முயற்சியில் ஈடுபட்டுள்ளன.
- இந்த சர்வதேசத் தரத்திலான தரவு மையமானது திரிபுராவின் இந்திரா நகரில் அமைக்கப்பட உள்ளது.

## தூத் வாணி சமூக வானொலி நிலையம்

- குஜராத்தில் அமைக்கப்பட்டுள்ள தூத் வாணி என்ற சமூக வானொலி நிலையத்தை பிரதமர் மோடி அவர்கள் திறந்து வைத்தார்.
- இது கால்நடை வளர்ப்புத் துறைக்கென பிரத்தியேகமாக தொடங்கப்பட்டுள்ளது.
- பனாஸ் பால் பொருட்கள் துறை சமூக வானொலி நிலையமானது, பனஸ்கந்தா மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தால் நிறுவப்பட்டது.
- இது பனாஸ் பால் பண்ணை என்றும் அழைக்கப்படுகிறது.
- இது கால்நடை வளர்ப்பவர்களுக்கு மட்டுமே என்று பிரத்தியேகமாக தொடங்கப்பட்ட, நாட்டின் முதல் சமூக வானொலி நிலையமாகும்.

## கிராம நூலகம்

- ஜார்க்கண்டில் உள்ள ஜம்தாரா என்ற ஒரு மாவட்டமானது அந்த மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமப் பஞ்சாயத்துகளிலும் சமூக நூலகங்களைக் கொண்டுள்ள ஒரே மாவட்டமாக மாறி உள்ளது.
- சுமார் எட்டு லட்சம் மக்கள்தொகை கொண்ட இந்த மாவட்டத்தில் ஆறு தொகுதிகளின் கீழ் மொத்தம் 118 கிராமப் பஞ்சாயத்துகள் (ஊராட்சிகள்) உள்ளன.
- ஒவ்வோர் ஊராட்சியிலும் ஒரு நல்ல வசதியான நூலகம் உள்ளது.

## மேகாலயா தொழில் நிறுவனங்கள் கட்டமைப்புத் திட்டம்

- மேகாலயாவின் திட்டமிடல் துறையின் ஒரு முன்னெடுப்பான, “இணைய-முன்மொழிவு அமைப்பு” ஆனது, ஐக்கிய நாடுகள் விருதான 2022 ஆம் ஆண்டு தகவல் சங்கத்தின் உலக உச்சி மாநாடு (WSIS) மன்றப் பரிசுகளை வென்றுள்ளது.
- "இணைய-முன்மொழிவு அமைப்பு" என்பது மேகாலயா தொழில் நிறுவனங்கள் கட்டமைப்புத் திட்டத்தின் (MeghEA) ஒரு பகுதியாக இருப்பதோடு அந்த மாநிலத்தில் உள்ள அனைத்து அரசாங்கத் துறைகளிலும் உள்ள கோப்புகளின் 75 சதவீத காகிதம் சார்ந்த வேலைகளை இது நீக்குகிறது.
- பல்வேறு டிஜிட்டல் தொழில்நுட்பங்களின் சக்தியைப் பயன்படுத்தி மாநில மக்களுக்கு வேண்டிய நிர்வாகத்தையும் சேவை வழங்கலையும் மேம்படுத்தச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.





## காஸ்மோஸ் மலபாரிக்கஸ் திட்டம்

- ‘காஸ்மோஸ் மலபாரிக்கஸ்’ என்று பெயரிடப்பட்டுள்ள ஒரு திட்டத்திற்காக வேண்டி நெதர்லாந்துடன் கேரளா ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை மேற்கொண்டுள்ளது.
- இந்தத் திட்டமானது, 18 ஆம் நூற்றாண்டு காலத்து கேரளாவின் வரலாற்றை மேலும் விளக்க உதவும்.
- மலப்புரம் மற்றும் கொல்லத்தில் ஓவியப் பயிற்சி மையங்களை நிறுவ கேரள மாநிலம் நெதர்லாந்து அரசுடன் இணைந்து செயல்படும்.

## கோங்ஜோம் தினம்

- கோங்ஜோம் தினமானது, மணிப்பூரில் கோங்ஜோம் போர் நினைவிட வளாகத்தில் அனுசரிக்கப் பட்டது.
- 1891 ஆம் ஆண்டு ஆங்கிலேய-மணிப்பூரிப் போரின் போது நடைபெற்ற கோங்ஜோம் போரில் ஆங்கிலேயர்களுக்கு எதிராக போராடி மகத்தான தியாகங்களைச் செய்த அரசின் வீரத்திருமகன்களுக்கு மணிப்பூரில் மகத்தான முறையில் அஞ்சலி செலுத்தப் பட்டது.
- ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் 23 ஆம் தேதி, மணிப்பூர் அரசானது ஆங்கிலேயர்களுக்கு எதிராக போரிட்ட மணிப்பூரி வீரர்களை நினைவு கூர்ந்து அவர்களுக்கு அஞ்சலி செலுத்துகிறது.

## வெற்றறைக் கழிவுநீர் அமைப்பு




- உத்தரப் பிரதேசத்தில் உள்ள ஆக்ரா நகரமானது, இந்தியாவில் வெற்றறைக் கழிவுநீர் அமைப்புகளை (vacuum-based sewer systems) நிறுவிய முதல் நகரமாக மாறியுள்ளது.
- இந்த வெற்றறைகள் பொது இடங்களில் பயன்படுத்தப்படும்.
- தாஜ்மஹாலுக்கு அருகில் உள்ள இது போன்ற 240 வீடுகளை வெற்றறைச் சாக்கடை அமைப்புகளுடன் மாநகராட்சிக் கழகம் இணைத்துள்ளதாக ஆக்ரா திறன்மிகு நகர அதிகாரிகள் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.
- அடைப்பு அல்லது வேறு ஏதேனும் சிக்கல்கள் இருந்தால் இந்த அமைப்பு தானாகவே ஒரு எச்சரிக்கையை வழங்கும்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## டியூன் – நமித் மல்ஹோத்ரா

- டிமோதி சலாமெட் மற்றும் சென்டாயா ஆகியோர் நடித்த அறிவியல் ரீதியான ஒரு புனைவுக் கதையில் உருவான டியூன் திரைப்படம் இந்த ஆண்டிற்கான ஆஸ்கார் விருதில் 6 பிரிவுகளில் விருதினை வென்றுள்ளது.
- இந்தத் திரைப்படமானது 10 பிரிவுகளில் பரிந்துரைக்கப்பட்டு, அவற்றுள் 6 பிரிவுகளில் விருதுகளை வென்றது.
- நமித் மல்ஹோத்ரா அவர்களால் இந்த வெற்றி இந்தியாவிற்கும் பெருமை சேர்க்கிறது.
- இவர் டபுள் நெகடிவ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் தலைவர் ஆவார்.
- இந்த படப்பிடிப்புக் கூடம் நிறுவனம் தான் இத்திரைப்படத்திற்கான VFX பணிகளை மேற்கொண்டது.

## இந்தியப் பேட்மிண்டன் சங்கத்தின் தலைவர்

- இந்தியப் பேட்மிண்டன் சங்கத்தின் தற்போதைய தலைவரான ஹிமந்தா ஃபீஷ்வா சர்மா, 2022 முதல் 2026 வரையிலான 4 ஆண்டுக் காலத்திற்கு 2வது முறையாகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இவர் அசாம் மாநிலத்தின் தற்போதைய முதல்வர் ஆவார்.
- இவர் இச்சங்கத்தின் தலைவராக 2017 ஆம் ஆண்டில் முதன்முதலாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.
- இது தவிர, இவர் ஆசியப் பேட்மிண்டன் அமைப்பின் துணைத் தலைவராகவும், உலகப் பேட்மிண்டன் கூட்டமைப்பின் நிர்வாகச் சபையின் உறுப்பினராகவும் பணியாற்றிச் செய்கிறார்.

## மிகவும் மதிப்பு மிக்க பிரபலங்கள்

| Rank | Name | Brand Value (In Millions) |
|---|---|---|
| 1 | Virat Kohli | USD 185.7 |
| 2 | Ranveer Singh | USD 158.3 |
| 3 | Akshay Kumar | USD 139.6 |
| 4 | Alia Bhatt | USD 68.1 |
| 5 | MS Dhoni | USD 61.2 |
| 6 | Amitabh Bachchan | USD 54.2 |
| 7 | Deepika Padukone | USD 51.6 |
| 8 | Salman Khan | USD 51.6 |
| 9 | Ayushmann Khurrana | USD 49.3 |
| 10 | Hrithik Roshan | USD 48.5 |

- இந்திய கிரிக்கெட் வீரர் விராட் கோலி 2021 ஆம் ஆண்டில் தொடர்ந்து 5வது முறையாக அதிக மதிப்பு மிக்க பிரபலமாகத் தரவரிசைப் படுத்தப் பட்டுள்ளார்.

- டஃப் & ஃபெல்ப்ஸ் (இப்போது க்ரோல்) என்ற நிறுவனத்தினால் "டிஜிட்டல் முடுக்கம் 2.0" என்றஒரு தலைப்பில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டிற்கான பிரபல தர மதிப்பீட்டு அறிக்கையில் (7வது பதிப்பு) இந்தத் தகவலானது கூறப்பட்டுள்ளது.
- ஆலியா பட் இப்பட்டியலில் நான்காவது இடத்தைப் பிடித்துள்ளதோடு மேலும் மிகவும் மதிப்பு மிக்க பெண் பிரபலமாகவும் இவர் மாறியுள்ளார்.
- இவர் முதல் 10 இடங்களில் உள்ள இளையப் பிரபலமும் பெண் பாலிவுட் நடிகர்களில் மிகவும் மதிப்பு மிக்க நடிகையும் ஆவார்.

## அபராஜிதா ஷர்மா

- 2022 ஆம் ஆண்டின் மார்ச் 21 முதல் மார்ச் 31, வரையில் ஜெனீவா நகரில் நடைபெற உள்ள சர்வதேசத் தொலைத்தொடர்பு ஒன்றியச் சபை அமர்வுகளின் நிர்வாகம் மற்றும் மேலாண்மைக்கான நிலைக் குழுவின் ஒரு துணைத் தலைவராக அபராஜிதா ஷர்மா நியமிக்கப் பட்டுள்ளார்.
- 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் இந்த நிலைக்குழுவின் துணைத் தலைவராக அவர் தொடர்ந்து பணியாற்றுவார்.
- அவர் 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் அதன் தலைவராகவும் பணியாற்றுவார்.

## ஆனந்தி கோபால் ஜோஷி



- பம்பாய் மாகாணத்தின் ஆனந்தி கோபால் ஜோஷியின் 157வது பிறந்தநாள் 2022 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதியன்று அனுசரிக்கப்பட்டது.
- மேற்கத்திய மருத்துவத்தில் பயிற்சி பெற்ற இந்தியாவின் முதல் பெண் மருத்துவர்களில் இவரும் ஒருவர் ஆவார்.
- இவர் அமெரிக்காவின் பென்சில்வேனியாவின் மகளிர் மருத்துவக் கல்லூரியில் தனது 21 வது வயதில் மருத்துவப் பட்டம் பெற்றார்.

## கிராமிய விருதுகள் 2022

- இசைத் துறையின் மிக உயரிய விருதான கிராமிய விருதுகள் (2022), தகுதி வாய்ந்த இசைக் கலைஞர்களுக்கு லாஸ் வேகாஸ் நகரில் நடைபெற்ற ஒரு விழாவில் வழங்கப் பட்டது.
- இந்த முறை விருது வழங்கும் விழா நடைபெறும் இடமானது அமெரிக்காவின் லாஸ் ஏஞ்செல்ஸிலிருந்து லாஸ் வேகாஸ் நகருக்கு இடம் மாற்றப்பட்டது.
- டிரிவோர் நோவா (Trevor Noah) இந்த நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்.
- ஒலிவியா ரோட்ரிகோ (Olivia Rodrigo), சிறந்தப் புதுமுக கலைஞர் என்ற பிரிவிலும் சிறந்த பாப் குரலிசைப் பாடல் என்ற பிரிவிலும் கிராமிய விருதுகளை வென்றார்.
- டோஜா கேட் மற்றும் SZA சிறந்த பாப் பாடல் இரட்டையர்/ குழு (Pop Duo/ Group) என்ற பிரிவில் விருதினை வென்றார்.
- இந்த ஆண்டின் சிறந்தப் பாடலுக்கான விருதினை ஜான் பட்டிஸ்டே பெற்றார்.

Best new artist: Olivia Rodrigo

Song of the year (songwriter's award): "Leave the Door Open," Silk Sonic (Brandon Anderson, Christopher Brody Brown, Dernst Emile II and Bruno Mars)

Best rap performance: "Family Ties," Baby Keem featuring Kendrick Lamar

Best country album: "Starting Over," Chris Stapleton

Best music video: "Freedom," Jon Batiste

Producer of the year, non-classical: Jack Antonoff

Best R&B song: "Leave the Door Open," Silk Sonic

Best R&B performance: (tie) "Leave the Door Open," Silk Sonic, and "Pick Up Your Feelings," Jazmine Sullivan

Best music film: "Summer of Soul"

Best dance/electronic album: "Subconsciously," Black Coffee

Best global music: "Mohabbat," Arooj Aftab

Best global music album: "Mother Nature," Angélique Kidjo

Best traditional blues album: "I Be Trying," Cedric Burnside

Best contemporary blues album: "662," Christone "Kingfish" Ingram

Best folk album: "They're Calling Me Home," Rhiannon Giddens with Francesco Turrisi

Best historical album: "Joni Mitchell Archives, Vol. 1: The Early Years (1963-1967)

Best Pop Duo / Group Performance: Doja Cat and SZA for "Kiss Me More"

Record of the year: 'Leave the door open' by Bruno Mars and Anderson Paak

Album of the year: 'We Are' by Jon Batiste

## தேவிகா ரங்காச்சாரி எழுதியப் புத்தகம்

- விருது பெற்ற குழந்தைகளின் எழுத்தாளரும் ஒரு வரலாற்றாசிரியருமான தேவிகா ரங்காச்சாரி "Queen of Fire" எனப்படும் புதிய ஒரு புனைவுக் கதையினை எழுதியுள்ளார்.
- இந்தப் புத்தகம் ஜான்சியின் இராணி லட்சுமி பாய் பற்றி எடுத்துரைக்கிறது.
- இந்தப் புத்தகமானது, ஓர் இராணியாகவும், படை வீரராகவும், அரசியல்வாதியாகவும் இராணி லட்சுமி பாய் கடந்து வந்த வாழ்க்கைப் பயணத்தைப் பற்றி கூறுகிறது.

## கிராமி விருதுகள் 2022 – இந்திய வெற்றியாளர்கள்



- 64வது வருடாந்திர கிராமிய விருதுகளில் இரண்டு இந்திய இசைக் கலைஞர்களும் விருது பெற்றனர்.
- இந்திய அமெரிக்கப் பாடகியும் பாடலாசிரியருமான ஃபாலு, குழந்தைகளுக்கான சிறந்த இசைப் பாடல் தொகுப்புப் பிரிவில் தனது முதல் கிராமி விருதினைப் பெற்றார்.
- A colourful world என்ற தனது பாடல் தொகுப்பிற்காக ஃபல்குனி ஷா (அ) ஃபாலு இந்த விருதினை வென்றார்.
- சிறந்தப் புதிய கால பாடல் தொகுப்பு பிரிவில் ஸ்டீவர்ட் கோப்லிண்ட் என்பவரும், இசையமைப்பாளர் ரிக்கி கேஜ் என்பவரும் (இவரது 2வது கிராமி விருது) விருதுகளை வென்றனர்.
- 2015 ஆம் ஆண்டில் ரிக்கி கேஜ் அவரது முதல் கிராமி விருதினை வென்றார்.

## ஆசியாவின் பணக்காரர்

- கௌதம் அதானி 100 பில்லியன் டாலர் சொத்து மதிப்புடன் ஆசியாவின் பணக்காரராக மாறியுள்ளார்.
- உலகளாவியக் குறியீட்டில் அதானி 10வது இடத்திலும், ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் தலைவர் அம்பானி 11வது இடத்திலும் உள்ளனர்.
- ப்ளூம்பெர்க் பில்லியனர்ஸ் குறியீட்டின் படி, அதானி சென்டி பில்லியனர் ஆகவும் மாறி உள்ளார்.
- சென்டி பில்லியனர் என்பது 100 பில்லியன் டாலர் அல்லது அதற்கு மேல் நிகரச் சொத்து மதிப்புள்ள ஒரு நபரைக் குறிக்கிறது.

## பேராசிரியர் அலோக் சக்ரவால் எழுதிய புத்தகம்

- மத்தியக் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான், “பிர்சா முண்டா – ஜன்ஜாதிய நாயக்” என்ற ஒரு புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.
- இந்தப் புத்தகத்தை பேராசிரியர் அலோக் சக்ரவால் என்பவர் எழுதியுள்ளார்.
- இந்தப் புத்தகமானது பகவான் பிர்சா முண்டாவின் போராட்டத்தையும் சுதந்திர இயக்கத்தில் வனவாசிகளின் பங்களிப்பையும் வெளியே கொண்டு வருவதற்கான ஒரு விரிவான முயற்சியாகும்.

## சாமேலி தேவி ஜெயின் விருது

- 2021 ஆம் ஆண்டிற்கான ஒரு சிறந்தப் பெண் ஊடகவியலாளருக்கான சாமேலி தேவி ஜெயின் விருது ஆரிஃபா ஜோஹாரிக்கு வழங்கப்பட்டது.
- ஊடக அறக்கட்டளை இந்த விருதினை அறிவித்துள்ளது.
- ஆரிஃபா ஜோஹாரி மகாராஷ்டிராவின் மும்பையில் உள்ள 'ஸ்க்ரோல் நிறுவனத்தில்' பணி புரிகிறார்.
- சாமேலி தேவி ஜெயின் விருது என்பது சமூக மேம்பாடு, அரசியல், சமத்துவம், பாலின நீதி, சுகாதாரம், போர் மற்றும் மோதல்கள் மற்றும் நுகர்வோர் விழுமியங்கள் போன்ற கருப்பொருள்களைப் பற்றி அறிக்கைகளைத் தயார் செய்த இந்தியாவின் பெண் ஊடகப் பத்திரிகையாளர்களுக்கு பத்திரிகைத் துறையில் ஆண்டுதோறும் வழங்கப் படுகின்ற ஒரு மிகவும் மதிப்பு மிக்க அங்கீகாரமாகும்.

## அஸ்வினி ஸ்ரீவஸ்தவாவின் புத்தகம்

- அஷ்வினி ஸ்ரீவஸ்தவா எழுதிய "Decoding Indian Babudom" என்ற ஒரு புதியப் புத்தகம், விடாஸ்டா பப்ளிஷிங் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் மூலம் வெளியிடப்பட்டது.
- இந்தியாவின் அதிகாரத்துவ அமைப்பைப் பற்றி ஒரு பத்திரிக்கையாளரால் எழுதப் பட்ட முதல் வகையான புத்தகம் இதுவாகும்.
- இது ஒரு சாமானியரின் பார்வையில் இந்தியாவின் நிர்வாக அமைப்பு மற்றும் நிர்வாகத்தின் செயல்பாட்டை எடுத்துரைக்கிறது..
- நிர்வாகத்தில் வணிகர்களின் நம்பிக்கையை அதிகரிப்பதன் மூலம் முதலீட்டைக் கொண்டு வரக்கூடிய நல்ல மற்றும் பயனுள்ள நிர்வாகத்தை அடைய இந்த நூலின் ஆசிரியர் "15 சூத்திரங்களை" பரிந்துரைத்துள்ளார்.

## பிரிட்ஸ்கர் பரிசு 2022

- பிரான்சிஸ் கேரே இந்தப் பரிசை வென்ற முதல் ஆப்பிரிக்கர் மற்றும் முதல் கறுப்பின நபர் ஆவார்.
- அவர் ஆப்பிரிக்காவின் பர்கினா பாசோவில் (Burkina Faso) பிறந்தார்.
- இது ஹயாட் அறக்கட்டளையால் 1979 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் நிறுவப்பட்டது.
- இது வாழும் கட்டிடக் கலைஞரைக் கௌரவிப்பதற்காக வேண்டி ஆண்டுதோறும் வழங்கப் படும் விருதாகும்.
- இது பெரும்பாலும் கட்டிடக்கலைக்கான நோபல் பரிசு என்று குறிப்பிடப்படுகிறது.

## பில்லி எலிஷ்

- இவர் 21 ஆம் நூற்றாண்டில் பிறந்து ஆஸ்கார் விருது பெறும் முதல் கலைஞர் ஆவார்.
- 'நோ டைம் டு டை' என்ற பாடலுக்காக இவருக்கு விருது வழங்கப்பட்டது.
- இவர் ஒரு அமெரிக்காவைச் சேர்ந்த பாடகி மற்றும் பாடலாசிரியர் ஆவார்.
- 94வது அகாடமி விருதுகளில் 'நோ டைம் டு டை' என்ற பாடலுக்காக பில்லி எலிஷ் மற்றும் சகோதரர் ஃபின்னியாஸ் ஆஸ்கார் விருதை வென்றனர்.

## குரு நாபா தாஸ்

- பஞ்சாப் அரசு ஆனது, குரு நாபா தாசின் பிறந்தநாளை முன்னிட்டு, தடை செய்யப்பட்ட விடுமுறைப் பட்டியலில் இருந்து அதனை நீக்கி ஒரு அறிவிக்கப்பட்ட விடுமுறையாக அதனை அறிவித்துள்ளது.
- இவர் 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு புனிதத் துறவி ஆவார்.
- இன்றைய தெலுங்கானா மாநிலத்தில் உள்ள கம்மம் மாவட்டத்தில் பாயும் கோதாவரி ஆற்றின் கரையில் உள்ள பத்ராசலம் கிராமத்தில் 1537 ஆம் ஆண்டு ஏப்ரல் 08 ஆம் தேதி குரு நாபா தாஸ் பிறந்தார்.
- குரு நாபாதாஸ் 1585 ஆம் ஆண்டில் 'பகத்மால்' என்ற புத்தகத்தை எழுதினார்.

## ஆண்டின் சிறந்த உலகப் பத்திரிகைப் புகைப்படம்



- "கம்லூப்ஸ் ரெசிடென்ஷியல் ஸ்கூல்" என்ற பெயரில் கனடா நாட்டின் புகைப்படக் கலைஞர் ஆம்பர் பிராக்கென் (Amber Bracken) என்பவர் எடுத்தப் புகைப்படம் ஆனது 2022 ஆம் ஆண்டின் சிறந்த உலகப் பத்திரிகைப் புகைப்பட விருதை வென்றுள்ளது.
- இது டச்சு அறக்கட்டளை உலகப் பத்திரிகைப் புகைப்பட அமைப்பால் வழங்கப் பட்டது
- இந்தப் புகைப்படம் சிலுவைகளில் தொங்கவிடப்பட்ட குழந்தைகளின் ஆடைகளைப் படம் பிடித்துக் காட்டுகிறது.
- இது பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள கம்லூப்ஸ் இந்தியன் ரெசிடென்ஷியல் பள்ளி என்ற பள்ளியில் துஷ்பிரயோகம், புறக்கணிப்பு மற்றும் நோயால் இறந்த இருநூறுக்கும் மேற்பட்டக் குழந்தைகளை நினைவு கூருகிறது.
- பிராக்கனின் புகைப்படம் வடக்கு மற்றும் மத்திய அமெரிக்கப் பிராந்தியப் பிரிவில் சிங்கில்ஸ் விருதையும் வென்றது.

## சரஸ்வதி சம்மான் 2021

- புகழ்பெற்றக் கவிஞரும் இலக்கியவாதியுமான பேராசிரியர் ராம்தராஷ் மிஸ்ராவுக்கு 2021 ஆம் ஆண்டுக்கான மதிப்பு மிக்க சரஸ்வதி சம்மான் விருது வழங்கப்படவுள்ளது.
- இவரது 'மெய்ன் டூ யாஹான் ஹூன்' என்ற கவிதைத் தொகுப்பிற்காக இந்த விருதானது வழங்கப் படவுள்ளது.

- இந்த விருதினை கேகே பிர்லா அறக்கட்டளை அறிவித்துள்ளது.
- தற்போதையத் தலைவர் டாக்டர். சுபாஷ் C. காஷ்யப் என்பவரின் தலைமையில் விருது பெறும் நபரைத் தேர்வுக் குழு தேர்வு செய்கிறது.

## வினோத் ராய் எழுதிய புத்தகம்

- வினோத் ராய், "Not Just A Night Watchman : My Innings with BCCI" என்ற புத்தகத்தினை எழுதியுள்ளார்,
- இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தில், தான் ஆற்றிய 33 மாத பணிகளைப் பற்றி இப்புத்தகத்தில் அவர் கூறியுள்ளார்.
- இவர் இந்தியாவின் முன்னாள் கணக்குத் தணிக்கையாளர் ஆவார்.
- மேலும் இவர் 2017 ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட நிர்வாகக் குழுவின் தலைவர் ஆவார்.

## ஹர்கோபிந்த் கோரானா

- 2022 ஆம் ஆண்டானது நோபல் பரிசு பெற்ற வேதியியலாளர் ஹர் கோபிந்த் கோரானாவின் 100வது பிறந்தநாள் நிறைவைக் குறிக்கிறது.
- இவர் இந்தியாவின் ராய்ப்பூர் நகரில் (தற்போது பாகிஸ்தானிலுள்ள ராய்ப்பூர்) 1922 ஆம் ஆண்டு ஜனவரி 09 அன்று பிறந்தார்.
- இவர் சர் அலெக்சாண்டர் டோட் என்பவரின் தலைமையின் கீழ் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் உறுப்பினர் பொறுப்பினை ஏற்றிருந்த போது நியூக்ளிக் அமிலம் குறித்த ஒரு ஆராய்ச்சியினைத் தொடங்கினார்.
- இவர் 1968 ஆம் ஆண்டில் மார்ஷல் W. நிரென்பெர்க் மற்றும் ராபர்ட் W. ஹால்லி ஆகியோருடன் இணைந்து மருத்துவம் அல்லது உடலியல் துறைக்கான நோபல் பரிசினைப் பெற்றார்.
- 1969 ஆம் ஆண்டில் இந்திய அரசு இவருக்கு பத்ம விபூசன் விருது வழங்கியது.




## அமர் மித்ரா – எழுத்தாளர்

- மூத்த வங்காள மொழி எழுத்தாளர் அமர் மித்ராவிற்கு 45 ஆண்டுகளுக்கு முன்பு அவர் எழுதிய ஒரு சிறுகதைக்கான இந்த ஆண்டின் O. ஹென்றி பரிசானது வழங்கப் பட்டு உள்ளது.

- வங்காள மொழியில் எழுதப்பட்ட கான்புரோ என்ற அவரது முதல் சிறுகதைக்கு இந்த விருதானது வழங்கப் பட்டது.
- முன்னதாக அது ஆங்கிலத்தில் (The Old Man of Kusmapur) மொழிபெயர்க்கப் பட்டது.
- மொழிபெயர்க்கப் பட்ட இந்தச் சிறுகதையானது 2020 ஆம் ஆண்டில் அமெரிக்க இதழ் ஒன்றில் வெளியிடப்பட்டது.
- இவருக்கு 2006 ஆம் ஆண்டில் சாகித்திய அகாடமி விருதானது வழங்கப்பட்டது.

## லதா மங்கேஷ்கர் விருது

- பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு முதலாவது லதா தீனாநாத் மங்கேஷ்கர் புரஸ்கர் விருதானது வழங்கி கௌரவிக்கப்பட உள்ளது.
- இந்த அறிவிப்பினை மறைந்த அந்தப் பாடகியின் குடும்பத்தினர் அறிவித்துள்ளனர்.
- மாஸ்டர் தீனாநாத் மங்கேஷ்கர் விருது வழங்கும் விழாவில் பிரதமர் அவர்களுக்கு இந்த விருதானது வழங்கப்பட உள்ளது.

## ஞானபீட விருது




- 56வது ஞானபீட விருதானது (2021) அசாமின் நீலமணி பூகன் என்பவருக்கு வழங்கப் பட்டது.
- மாமோனி ரோய்சம் கோஸ்வாமி மற்றும் பிரேந்திர குமார் பட்டாச்சார்யா ஆகியோருக்குப் பிறகு, ஞானபீட விருதை வென்ற மூன்றாவது அசாமிய நபர் நீலமணி பூகன் ஆவார்.
- 1990 ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ விருதைப் பெற்ற எண்பது வயதான இவருக்கு 2002 ஆம் ஆண்டில் சாகித்ய அகாடமியின் உறுப்பினர் பதவி வழங்கப்பட்டது.
- இந்திய இலக்கியத்திற்கு ஆற்றியப் பங்களிப்பிற்காக 57வது ஞானபீட விருதிற்கு (2022) நாவலாசிரியர் தாமோதர் மௌசோ தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## உலக மரங்களின் நகரம் – 2021

TREE CITIES OF THE WORLD™
A programme of:
Food and Agriculture Organization of the United Nations
Arbor Day Foundation®

- ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு மற்றும் ஆர்பர் டே அறக்கட்டளை ஆகியவை இணைந்து மும்பை மற்றும் ஹைதராபாத் ஆகிய நகரங்களை '2021 ஆம் ஆண்டின் உலக மரங்களின் நகரங்களாக' அங்கீகரித்துள்ளன.
- "ஆரோக்கியமான, நெகிழ்திறன்மிக்க மற்றும் மகிழ்ச்சியான நகரங்களை உருவாக்கச் செய்திட வேண்டி நகர்ப்புறங்களில் மரங்கள் நடுவதற்கும் அதன் மூலம் பசுமையைப் பெருக்குவதற்கும் பராமரிப்பதற்குமான அதன் உறுதிப்பாட்டிற்காக வேண்டி" இந்த இரு இந்திய நகரங்களுக்கும் இந்த அங்கீகாரமானது வழங்கப்பட்டுள்ளது.
- முக்கியமாக ஹைதராபாத் நகரம் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக இந்தப் பிரிவில் அங்கீகரிக்கப் பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.
- 2021 ஆம் ஆண்டில், '2020 ஆம் ஆண்டிற்கான உலக மரங்களின் நகரமாக' அங்கீகாரம் அளிக்கப் பட்ட இந்தியாவின் ஒரே நகரம் ஹைதராபாத் ஆகும்.

## இக்பால் சிங் லால்புரா

- பஞ்சாப் பணிப் பிரிவினைச் சேர்ந்த ஒய்வு பெற்ற இந்தியக் காவல்பணி அதிகாரி இக்பால் சிங் லால்புராவை தேசிய சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவராக மத்திய அரசு மீண்டும் நியமித்துள்ளது.
- கடந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் லால்புரா முதன்முதலாக இந்த ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார்.
- இவர் ரோபர் என்ற சட்டமன்றத் தொகுதியில் (போட்டியிட்டுத் தோல்வியுற்றார்) பாஜக வேட்பாளராக போட்டியிட டிசம்பர் மாதத்தில் தனது பதவியை ராஜினாமா செய்ய வேண்டியிருந்தது.

## தொழுநோய்க்கான சர்வதேச காந்தி விருது - 2021

- M. வெங்கையா நாயுடு அவர்கள், குஜராத்தின் சஹ்யோக் குஷ்தா யக்னா அறக் கட்டளை மற்றும் புது தில்லியின் சண்டிகர் நகரைச் சேர்ந்த டாக்டர் பூஷன் குமார் ஆகியோருக்கு 2021 ஆம் ஆண்டிற்கான தொழுநோய்க்கான சர்வதேச காந்தி விருதினை வழங்கினார்.
- இது காந்தி நினைவு தொழுநோய் அறக்கட்டளை மூலம் ஆண்டுதோறும் வழங்கப் படும் ஒரு விருது ஆகும்.

## 80வது SKOCH உச்சிமாநாடு 2022 - NMDC

- எஃகு அமைச்சகத்தின் கீழ் செயல்படும், தேசியக் கனிமவள மேம்பாட்டுக் கழகமானது (NMDC - National Mineral Development Corporation), 80வது SKOCH உச்சி மாநாடு மற்றும் SKOCH விருது விழாவில் ஒரு தங்கம் மற்றும் ஒரு வெள்ளிப் பதக்கத்தை வென்றது.
- இதற்கான நிகழ்ச்சி சமீபத்தில் புதுதில்லியில் நடத்தப் பட்டது.
- SKOCH உச்சி மாநாட்டின் கருப்பொருள் 'வங்கிகள், நிதிச் சேவைகள் மற்றும் காப்பீட்டு நிறுவனங்கள் & பொதுத் துறை நிறுவனங்களின் நிலை' என்பதாகும்.
- தேசியக் கனிமவள மேம்பாட்டு கழகத்தின் சத்தீஸ்கரின் தண்டேவாடா மாவட்டத்தில் உள்ள பன்சி இந்தியத் தொழில்துறைப் பயிற்சி நிறுவனம் மூலம் தொழில்நுட்பக் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டினை ஊக்குவித்தல் திட்டமானது சமூகப் பொறுப்பு பிரிவில் தங்கப் பதக்கத்தினைப் பெற்றது.
- பெருநிறுவன மூல வளங்களின் திட்டமிடலைச் செயல்படுத்தலுக்கான ஒரு திட்டமான 'கல்பதரு' என்ற ஒரு திட்டமானது, எண்ணிம (டிஜிட்டல்) உள்ளடக்கம் என்ற பிரிவில் வெள்ளி பதக்கத்தினைப் பெற்றது.




## பிரேம் ராவத் எழுதிய புத்தகம்

- இந்திய எழுத்தாளர் பிரேம் ராவத் 'Hear Yourself' என்ற ஒரு புத்தகத்தை மும்பையில் வெளியிட்டார்.
- புகழ்பெற்ற நியூயார்க் டைம்ஸின் அதிகம் விற்பனையாகும் இந்தப் புத்தகமானது ஏற்கனவே 58 நாடுகள் மற்றும் ஐந்து மொழிகளில் கிடைக்கிறது.
- இந்தப் புத்தகமானது, மக்கள் தங்களது சொந்தச் செயல்திறனைப் புரிந்து கொள்ள உதவும்.
- இந்தப் புத்தகம் மக்களுக்குச் சிறந்த சுய புரிதலை வளர்ப்பதற்கும் உதவும்.

## தொல்காப்பியம்

- சமீபத்தில் தொல்காப்பியத்தின் இந்தி மொழிபெயர்ப்பினையும், செம்மொழி தமிழ் இலக்கியத்தின் 9 படைப்புகளின் மீதான கன்னட மொழிபெயர்ப்புகளையும் மாநிலக் கல்வித் துறை அமைச்சர் வெளியிட்டார்.
- தமிழ் இலக்கியக் கவிஞர்கள் சபையின் (சங்கம்) காரணமாக இவ்வாறு பெயரிடப்பட்ட தமிழ் இலக்கியமானது சங்க காலத்தைச் சேர்ந்ததாகும்.


- தொல்காப்பியம் எனும் ஒரு நூல் தொல்காப்பியரால் இயற்றப்பட்டதோடு அது தமிழ் இலக்கியத்தின் முதல் படைப்பாகவும் இது கருதப்படுகிறது.
- அது தமிழ் இலக்கணம் பற்றிய ஒரு படைப்பாக இருந்தாலும், அக்கால அரசியல் மற்றும் சமூகப் பொருளாதார நிலைமைகள் பற்றிய நுண்ணறிவுகளையும் வழங்கச் செய்கிறது.

## மால்கம் ஆதிசேஷய்யா விருது 2022

- பிரபல இந்தியப் பொருளாதார நிபுணரும் அரசியல் விமர்சகருமான பிரபாத் பட்நாயக், 2022 ஆம் ஆண்டிற்கான மால்கம் ஆதிசேஷய்யா என்ற விருதுக்குத் தேர்ந்து எடுக்கப் பட்டு உள்ளார்.
- இவ்விருது ஆண்டுதோறும் மால்கம் மற்றும் எலிசபெத் ஆதிசேஷய்யா என்ற ஒரு அறக் கட்டளையால் வழங்கப்படுகிறது.
- இது ஒரு சிறந்த சமூக அறிவியலாளருக்கு வழங்கப்படுகிறது.
- இந்த விருதில் சான்றிதழும், ரூ.2 லட்சம் மதிப்பிலான பரிசுத் தொகையும் அடங்கும்.

## ஆண்டின் சிறந்த இயக்குனர் விருது

- சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின் கட்கரி, டெல்லியில் நடைபெற்ற விழாவில் 2021 ஆம் ஆண்டிற்கான, பல பிரிவுகளுக்கான AIMA மேனேஜிங் இந்தியா விருதுகளை வழங்கினார்.
- திரைப்படப் பிரிவில், ஷூஜித் சிர்கார் சர்தார் உதம் திரைப்படத்திற்காக ஆண்டின் சிறந்த இயக்குனருக்கான விருதைப் பெற்றார்.
- இந்த ஆண்டு, 12வது AIMA மேனேஜிங் இந்தியா விருது விழாவானது, 7வது தேசியத் தலைமைத்துவ மாநாட்டுடன் இணைந்து, நேரடியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.




## இந்திய இராணுவத்தின் தலைவர்

- நரவானேவையடுத்து ஜெனரல் மனோஜ் முகுந்த் இராணுவப் பணியாளர்களின் 29வது தலைவராக லெப்டினட் ஜெனரல் மனோஜ் பான்டே பொறுப்பேற்றுள்ளார்.
- இவர் இந்திய இராணுவத்தின் தலைவர் பதவியில் பொறுப்பேற்ற முதல் பொறியாளர் ஆவார்.

- இராணுவப் பணியாளர்களின் தலைவர் என்பவர், இராணுவத் தலைவர் என்றும் அழைக்கப் படுகிறார்.
- இவர் இந்திய இராணுவத் தலைமையகங்களின் தலைவரும் இந்திய இராணுவத்தின் உயர்நிலை அதிகாரியும் ஆவார்.



## இராஜேஷ் தல்வார் எழுதிய புத்தகம்

- இராஜேஷ் தல்வார் எழுதிய "The Boy who wrote a Constitution : A play for children on Human Rights" என்ற புத்தகமானது வெளியிடப்பட்டுள்ளது.
- இது பீம்ராவ் இராம்ஜி அம்பேத்கர் அவர்களின் குழந்தைப்பருவ நினைவுகளை (அ) உண்மைத் தகவல்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு புத்தகமாகும்.
- இது டாக்டர் B.R. அம்பேத்கர் அவர்களின் 131வது பிறந்த நாளன்று வெளியிடப் பட்டு உள்ளது.
- தல்வார் எழுதிய மற்றப் புத்தகங்கள், "The vanishing of Subash Bose, Gandhi, Ambedkar and four legged scorpion" மற்றும் "Aurangzeb" ஆகியனவாகும்.

## தேசிய உலோகவியலாளர் விருது 2021

- மத்திய எஃகு துறை அமைச்சர் ராம் சந்திர பிரசாத் சிங் இந்த நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்குகிறார்.
- உற்பத்தி, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, வடிவமைப்பு, கல்வி, கழிவு மேலாண்மை மற்றும் எரிசக்திப் பாதுகாப்பு ஆகிய துறைகளில் இரும்பு மற்றும் எஃகுத் துறையில் பணி புரியும் உலோகவியலாளர்கள்/பொறியாளர்களின் சிறந்தப் பங்களிப்பையும், ஆத்ம நிர்பார் என்ற ஒரு இலக்கை அடைவதில் அவர்கள் ஆற்றும் ஒரு குறிப்பிட்டப் பங்களிப்பையும் அங்கீகரிப்பதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ஹூருன் உலக சுகாதாரத் துறையின் பணக்காரர்கள் பட்டியல் 2022

- இந்திய சீரம் நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், டாக்டர் சைரஸ் S. பூனவல்லா, 2022 ஆம் ஆண்டு ஹூருன் உலக சுகாதாரத் துறையின் பணக்காரர்கள் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளார்.
- இவர் 2022 ஆம் ஆண்டில் சுகாதாரத் துறையில் கோடீஸ்வரர் என்ற ஒரு பெருமையைப் பெற்றார்.

- 26 பில்லியன் டாலர் (41% அதிகரிப்பு) என்ற அளவிலானச் சொத்து மதிப்புடன் இவர் இந்தப் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளார்.
- சுகாதாரத் துறையின் பணக்காரர்கள் பட்டியலில் சீனா (34) முதலிடத்திலும், அதனைத் தொடர்ந்து அமெரிக்கா (16), சுவிட்சர்லாந்து (15), ஜெர்மனி (11), மற்றும் இந்தியா (9) ஆகிய நாடுகளும் உள்ளன.

**TOP INDIAN HEALTHCARE BILLIONAIRES**

| Name | Company | Net worth ($ billion) |
|---|---|---|
| Cyrus Poonawalla | Serum | 26 |
| Dilip Shanghvi & family | Sun Pharamaceutical | 18 |
| Murali Divi & family | Divi's Laboratories | 9.5 |
| Pankaj Patel & family | Cadilla Healthcare | 5.4 |
| Kiran Mazumdar & John Shaw | Biocon | 3.8 |
| Samir Mehta & family | Torrent Pharma | 3.7 |
| Sudhir Mehta & family | Torrent Pharma | 3.7 |
| B Parthasaradhi Reddy & family | Hetero Drugs | 3.6 |
| Manju D Gupta & family | Lupin | 3 |

Source: Hurun Global Healthcare Rich List 2022

## T. இராமாராவ்

- ஒரு மூத்த இயக்குநரும் திரைப்படத் தயாரிப்பாளருமான ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த தாட்டினேனி இராமா ராவ் காலமானார்.
- 84 வயதான இவர் சென்னையில் காலமானார்.
- இவர் T. இராமா ராவ் எனப் பிரபலமாக அறியப்பட்டார்.

## ஜான் F. கென்னடி விருது

- ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக பணியாற்றியதற்காக ஜான் F. கென்னடியின் துணிச்சலுக்கான விருதைப் பெறும் ஐந்து நபர்களுள் ஒருவராக உக்ரேனிய அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கியும் இடம் பெற்றுள்ளார்.
- உக்ரேனிய மக்களின் வாழ்வா சாவா போராட்டத்தில் அவர்களின் ஆன்மா, தேசபக்தி மற்றும் அயராத ஒரு தியாகத்தை அவர் வழி நடத்திய விதத்திற்காக ஜெலென்ஸ்கி தேர்ந்தெடுக்கப் பட்டார்.

## தொழில்முனைவோர் தலைமைத்துவ விருதுகள்

- ஜெனரல் அட்டாமிக்ஸ் குளோபல் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் இந்திய-அமெரிக்க தலைமை நிர்வாகி விவேக் லால் அவர்கள், இந்திய அமெரிக்க வர்த்தகக் குழுமத்தின் மதிப்பு மிக்க தொழில்முனைவோர் தலைமைத்துவ விருதுகளுக்குத் தேர்வு செய்யப் பட்டுள்ளார்.
- பாதுகாப்புத் துறையில் அவர் ஆற்றியப் பங்களிப்பைப் பாராட்டும் வகையில் இந்த விருதானது வழங்கப்படுகிறது.
- இந்திய அமெரிக்க வர்த்தகக் குழுமமானது 1968 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இந்தியா - அமெரிக்க வர்த்தக ஒத்துழைப்புக்கான முதன்மையான இருதரப்புக் கழகம் இதுவாகும்.

## வாழ்நாள் சாதனையாளர் விருது

- உயிரியலாளர், இயற்கை வரலாற்றாசிரியர் மற்றும் ஒளிபரப்பாளர் சர் டேவிட் அட்டன்பரோவுக்கு "சாம்பியன்ஸ் ஆஃப் தி எர்த்" (புவியின் சாதனையாளர்) எனப்படும் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டுள்ளது.
- இந்த விருதானது, ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பினால் வழங்கப் படுகிறது.
- சுற்றுச்சூழல் துறையில் தடம் பதித்த தனிநபர்கள், குழுக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு வழங்கப் படும் ஐக்கிய நாடுகள் சபையின் உயரிய சுற்றுச்சூழல் விருது இதுவாகும்.

## உலக இளம் தலைவர்கள் பட்டியல்

- எடெல்வியெஸ் பரஸ்பர நிதி நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ராதிகா குப்தா, ஆம் ஆத்மி கட்சித் தலைவர் ராகவ் சாதா மற்றும் உக்ரைனிய துணைப் பிரதமர் மற்றும் டிஜிட்டல் பரிமாற்றத் துறை அமைச்சர் மைக்கைலோ ஃபெடோரோவ் ஆகியோரை உலகப் பொருளாதார மன்றம் தனது 2022 ஆம் ஆண்டு உலக இளம் தலைவர்கள் பட்டியலில் சேர்த்துள்ளது.
- உலகப் பொருளாதார மன்றமானது, இந்தப் பட்டியலை உலகின் 40 வயதிற்குட்பட்ட மிகவும் நம்பிக்கைக்குரிய 109 இளம் தலைவர்கள் என்று விவரித்துள்ளது.
- இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள் சுகாதாரச் சமத்துவம், பசுமை ஆற்றல், கல்விச் சீர்திருத்தங்கள் மற்றும் அகதிகளின் உரிமைகள் போன்ற பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.
- சமீபத்தில் வெளியிடப்பட்ட இந்தப் பட்டியலில் இந்தியர்களான தடகள வீராங்கனை மானசி ஜோஷி, இன்னோவ்8 கோவொர்க்கிங் நிறுவனத்தின் நிறுவனர் ரித்தேஷ் மாலிக், பாரத் பே நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி சுஹைல் சமீர், சுகர் அழகு சாதனப் பொருள் தயாரிப்பு நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி வினிதா சிங் மற்றும் உலக இமாலயப் பயண நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ஜெய்தீப் பன்சால் ஆகியோர் அடங்குவர்.

## ஐக்கிய இராஜ்ஜியத்தின் காமன்வெல்த் பாயிண்ட்ஸ் ஆஃப் லைட் விருது

- ஐக்கிய இராஜ்ஜியத்தின் காமன்வெல்த் பாயின்ட்ஸ் ஆஃப் லைட் விருதிற்கு வங்காள தேசத்தைச் சேர்ந்த 'பித்யானந்தோ' என்ற கல்வித் தொண்டு நிறுவனத்தின் நிறுவனர் கிஷோர் குமார் தாஸ் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- ஒதுக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த குழந்தைகள் சிறந்த கல்வியைப் பெறுவதற்காக வாய்ப்புகளை மேம்படுத்துவதில் இவர் ஆற்றிய மகத்தானப் பணிக்காக இவருக்கு இந்த விருதானது வழங்கப்படுகிறது.
- இந்த விருதானது, தங்கள் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் சிறந்தத் தனிப்பட்ட தன்னார்வலர்களை அங்கீகரிக்கிறது.

## M.விஜயன்

- புகழ்பெற்றக் கட்டமைப்பு உயிரியலாளர் M. விஜயன் பெங்களூரில் காலமானார்.
- இந்தியாவில் பெருமூலக்கூறு படிகவியல் மீதான உருவாக்கத்தில் விஜயன் ஒரு முக்கியப் பங்கினை வகித்தார்.
- பேராசிரியர் விஜயன் பத்மஸ்ரீ, சாந்தி ஸ்வரூப் பட்நாகர் பரிசு ஆகிய விருதுகளைப் பெற்றவர் ஆவார்.

## இந்தியப் பொதுத் தொடர்பு சமூக விருதுகள்

- தேசியக் கனிமவள மேம்பாட்டுக் கழக நிறுவனமானது, இந்தியப் பொதுத் தொடர்பு சமூகத்தின் 2022 ஆம் ஆண்டு பொதுத் தொடர்பு விருது விழாவில் நான்கு பிரிவுகளில் முதல் இடத்தைப் பிடித்தது.
- தேசியக் கட்டமைப்பினை விரிவுபடுத்தச் செய்வதற்கும் அதற்குப் பங்களிப்பதற்கும் தேசியக் கனிமவள மேம்பாட்டுக் கழக நிறுவனம் மேற்கொண்ட ஒரு தீர்மானமானது உள்நாட்டில் ஊடகங்கள் மற்றும் பொது மக்களுடன் ஒரு வலுவானக் கட்டமைப்பினை உருவாக்குவதற்கான அதன் முயற்சிகளால் வலுப்படுத்தப்பட்டுள்ளது.

## தேசிய மென்பொருள் மற்றும் சேவை நிறுவனங்களின் சங்கத்தின் தலைவர்

- தேசிய மென்பொருள் மற்றும் சேவை நிறுவனங்களின் சங்கம் (நாஸ்காம்) ஆனது, 2022-23 ஆம் ஆண்டிற்கான தனது தலைவராக கிருஷ்ணன் ராமானுஜம் என்பவரை நியமித்துள்ளதாக அறிவித்துள்ளது.
- இவர் டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் என்ற நிறுவனத்தின் நிறுவன வளர்ச்சிக் குழுவின் தலைவராக உள்ளார்.
- இந்தியாவில் உள்ள அக்சென்ச்சர் என்ற நிறுவனத்தின் தலைவரும் மூத்த நிர்வாக இயக்குநருமான ரேகா M. மேனன் என்பவரையடுத்து ராமானுஜம் இந்தப் பதவிப் பொறுப்பினை ஏற்றார்.
- மைக்ரோசாப்ட் இந்தியா நிறுவனத்தின் தலைவர் ஆனந்த் மகேஷ்வரி என்பவரை 2022-23 ஆம் ஆண்டிற்கான துணைத் தலைவராக நியமிப்பதாகவும் நாஸ்காம் அறிவித்தது.
- இந்தப் பதவியில் ராமானுஜத்திற்குப் பிறகு மகேஸ்வரி அப்பொறுப்பினை ஏற்பார்.

# விளையாட்டுச் செய்திகள்

## ஜியா ராய்

- மும்பையைச் சேர்ந்த 13 வயது சிறுமியான ஜியாராய், வெறும் 13 மணி நேரம், 10 நிமிடங்களில் பாக் நீர்ச் சந்தியை கடந்த இளம் நபர் என்ற ஒரு சாதனையைப் படைத்துள்ளார்.
- இவர் வெற்றிகரமாக 29 கி.மீ. தொலைவைக் கடந்துள்ளார்.
- இதற்கு முன்பாக, புலா சௌத்ரி என்பவர் 13 மணி நேரம், 52 நிமிடங்களில் பாக் நீர்ச் சந்தியைக் கடந்து சாதனையைப் படைத்திருந்தார்.




## அல் ரிஹ்லா

- இது அடிடாஸ் நிறுவனத்தினால் 2022 ஆம் ஆண்டு FIFA கத்தார் உலகக் கோப்பைப் போட்டிக்காக வேண்டி அதிகாரப் பூர்வமாக வெளியிடப்பட்ட ஒரு பந்தாகும்.
- இது அடிடாஸ் நிறுவனத்தின் 14வது உலகக் கோப்பைப் பந்தாகும்.
- இது மற்ற உலகக் கோப்பைப் பந்துகளை விட வேகமாக பறக்கும் என்பதால் வேகமான அனைத்து விளையாட்டு வேகங்களுக்கும் ஈடு கொடுக்கும் வகையில் இது வடிவமைக்கப் பட்டுள்ளது.
- இது முழுவதுமாக நீர்சார்ந்த மைகள் மற்றும் பசைகளைக் கொண்டு உருவாக்கப் பட்டது.

## கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள்

- மத்திய இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் சிங் தாக்கூர் மற்றும் கர்நாடக ஆளுநர் T.C. கெஹ்லாட் ஆகியோர் கேலோ இந்தியா பல்கலைக் கழக விளையாட்டுப் போட்டிகளின் முத்திரை, ஜெர்சி (ஆடை), சின்னம் மற்றும் கீதம் ஆகியவற்றை வெளியிட்டனர்.
- இப்போட்டிகளுக்கான ஒரு கருத்துருப் பாடலை கன்னட ராப் பாடகர் சந்தன் ஷெட்டி இசையமைத்துள்ளார்.
- இது இரண்டாவது கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள் ஆகும்.
- முதலாவது கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள் 2020 ஆம் ஆண்டில் ஒடிசாவில் நடத்தப்பட்டன.

## ICC மகளிர் உலகக் கோப்பைப் போட்டி

- ஆஸ்திரேலிய அணியானது, 71 ரன்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணியை வீழ்த்தி, 2022 ஆம் ஆண்டு ICC மகளிர் உலகக் கோப்பையைக் கைப்பற்றியது.
- இது ஆஸ்திரேலிய மகளிர் அணி வெல்லும் 7வது உலகக் கோப்பை ஆகும்.
- இந்தப் போட்டியின் சிறந்த ஆட்டக் காரர் மற்றும் ICC மகளிர் உலகக் கோப்பைப் போட்டியின் ஆட்ட நாயகி என்றப் பட்டமானது ஆஸ்திரேலிய அணியின் அலிசா ஹீலே என்பவருக்கு வழங்கப்பட்டது.

## மியாமி ஓபன் 2022

- 2022 ஆம் ஆண்டு மியாமி ஓபன் டென்னிஸ் போட்டியானது 37வது ஆடவர் மற்றும் மகளிர் டென்னிஸ் போட்டியாகும்.
- இது அமெரிக்காவில் ஃபுளோரிடாவின் மியாமி கார்டென்ஸ் பகுதியில் நடைபெற்றது.
- இந்தப் போட்டியானது, 2022 ஆம் ஆண்டு ATP போட்டியில் ATP மாஸ்டர்ஸ் 1000 போட்டியாகவும், 2022 ஆம் ஆண்டு WTA போட்டியில் WTA 1000 போட்டியாகவும் வகைப் படுத்தப் பட்டது.

## ஆர்லியன்ஸ் மாஸ்டர்ஸ் 2022

- இந்திய பூப்பந்தாட்ட வீரர் மிதுன் மஞ்சுநாத், 2022 ஆம் ஆண்டு ஆர்லியன்ஸ் மாஸ்டர்ஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தினை வென்றார்.
- இப்போட்டி பிரான்ஸ் நாட்டில் நடத்தப் பட்டது.
- இவர் பிரான்சின் தோமா ஜுனியர் போப்போங் என்பவரிடம் தோல்வியுற்றார்.

## தாய்லாந்து ஓபன் சர்வதேச குத்துச்சண்டை போட்டி 2022

- 15 நபர்கள் கொண்ட இந்தியக் குத்துச் சண்டை அணியானது புக்கெட் நகரில் நடத்தப் பட்ட 2022 ஆம் ஆண்டின் தாய்லாந்து ஓபன் சர்வதேச குத்துச்சண்டைப் போட்டியில் 10 பதக்கங்களை வென்று தனது பங்கேற்பினை நிறைவு செய்தது.
- இதில் 3 தங்கம், 4 வெள்ளி மற்றும் 3 வெண்கலப் பதக்கங்கள் அடங்கும்.

**Gold**

1. Govind Sahani (48kg),
2. Ananta Pralhad Chopde (54kg)
3. Sumit (75kg)

**Silver**

1. Amit Panghal (52kg)
2. Monika (48kg),
3. Varinder Singh (60kg)
4. Ashish Kumar (81kg)

**Bronze**

1. Manisha (57kg),
2. Pooja (69kg)
3. Bhagyabati Kachari (75kg)

## ரெய்க்ஜாவிக் ஓபன் சதுரங்கப் போட்டி

- ஐஸ்லாந்தின் ரெய்க்ஜாவிக் நகரில் நடைபெற்ற புகழ்பெற்ற ரெய்க்ஜாவிக் ஓபன் சதுரங்கப் போட்டியில் R. பிரக்ஞானந்தா சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.
- இதற்கான இறுதிப் போட்டியானது இரண்டு இந்திய வீரர்களுக்கு இடையே நடத்தப் பட்டது.
- இறுதிச் சுற்றில் தனது சகநாட்டவரான கிராண்ட்மாஸ்டர் D.குகேஷ் என்பவரை வீழ்த்தி R. பிரக்ஞானந்தா வெற்றி பெற்றார்.



## FIH இளையோர் மகளிர் ஹாக்கி உலகக் கோப்பை 2022

- 2022 ஆம் ஆண்டு FIH இளையோர் மகளிர் ஹாக்கி உலகக் கோப்பைப் போட்டிகளில் நான்காவது முறையாக நெதர்லாந்து அணி பட்டத்தை வென்றுள்ளது.
- தென்னாப்பிரிக்காவின் போட்செஃப்ஸ்ட்ரூம் நகரில் நடைபெற்ற ஒரு போட்டியில், ஜெர்மனி அணியை வீழ்த்தி நெதர்லாந்து அணி இந்தச் சாதனையைப் படைத்தது.

- இப்போட்டியில், இந்திய அணியை வீழ்த்தி மூன்றாமிடத்தைப் பெற்ற இங்கிலாந்து அணியானது வெண்கலப் பதக்கத்தை வென்றது.
- 2022 ஆம் ஆண்டில் உக்ரைன் மீது ரஷ்யா மேற்கொண்ட படையெடுப்பின் காரணமாக 2022 ஆம் ஆண்டு மகளிர் FIH ஹாக்கி இளையோர் உலகக் கோப்பைப் போட்டிகளில் பங்கேற்பதற்கு ரஷ்ய நாட்டிற்கு FIH அமைப்பு தடை விதித்துள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் நடைபெற உள்ள இந்தப் போட்டியானது 10வது மகளிர் FIH ஹாக்கி இளையோர் உலகக் கோப்பைப் போட்டியாகும்.
- இது சிலியின் சாண்டியாகோ நகரில் நடத்தப் பட உள்ளது.

## ஆடவர் ஹாக்கி உலகக் கோப்பையின் சின்னம் - 2023

- ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக், மாநிலத் தலைநகர் புவனேஸ்வரில் உள்ள கலிங்கா மைதானத்தில் 2023 ஆம் ஆண்டிற்கான FIH ஆடவர் ஹாக்கி உலகக் கோப்பையின் சின்னத்தினை வெளியிட்டார்.
- நாட்டின் மிகப்பெரிய ஹாக்கி மைதானம் கட்டப்பட்டு வரும் புவனேஸ்வர் மற்றும் ரூர்கேலா ஆகிய நகரங்களில் 15வது உலகக் கோப்பைப் போட்டியானது நடைபெற உள்ளது.

## ஐபிஎல் போட்டிகளில் 150 விக்கெட்டுகள் வீழ்த்திய வீரர்

- இந்தியன் பிரீமியர் லீக் வரலாற்றில் பஞ்சாப் கிங்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியின் நட்சத்திர வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ்வர் குமார் 150 விக்கெட்டுகளை வீழ்த்திப் புதிய ஒரு மைல்கல்லை எட்டியுள்ளார்.
- இது போன்ற சாதனையைப் படைத்த முதல் இந்திய வேகப்பந்து வீச்சாளர் என்ற ஒரு பெருமையையும் இவர் பெற்றார்.
- டாக்டர். DY.பாட்டீல் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் ஷிகர் தவான், லியாம் லிவிங்ஸ்டோன் மற்றும் ஷாருக் கான் ஆகியோரது விக்கெட்டுகளை இழக்கச் செய்து புவனேஷ்வர் தனது 150வது விக்கெட்டை எடுத்தார்.
- மேற்கிந்திய ஆல்ரவுண்டரான டுவைன் பிராவோ (174) மற்றும் இலங்கையின் புகழ் பெற்ற லசித் மலிங்கா (170) ஆகியோருக்குப் பிறகு, ஐபிஎல் போட்டிகளில் 150 என்ற அளவில் விக்கெட்டுகளை வீழ்த்திய மூன்றாவது வேகப்பந்து வீச்சாளர் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியின் நட்சத்திர வீரர் ஆவார்.

## தேசிய மூத்தோர் ஆடவர் பிரிவு ஹாக்கி சாம்பியன்ஷிப்

- 12வது தேசிய மூத்தோர் ஆடவர் பிரிவு ஹாக்கி சாம்பியன்சிப் போட்டியில் ஹரியானா அணி வெற்றி பெற்றுள்ளது.
- ஹரியானா மாநிலம் தமிழ்நாடு அணியை வீழ்த்தி இந்த வெற்றியைக் கைப்பற்றியது
- இந்தப் போட்டி போபால் நகரில் நடைபெற்றது.
- 2011 ஆம் ஆண்டிற்குப் பிறகு முதல்முறையாக ஹரியானா இந்தக் கோப்பையை வென்றுள்ளது.

## விஸ்டென் வழங்கும் 'ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரர்கள்'

- இந்திய அணித் தலைவர் ரோஹித் சர்மா மற்றும் இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா ஆகியோர் 2022 ஆம் ஆண்டிற்கான விளையாட்டுத் துறைக்கான விஸ்டெனின் புள்ளி விவரப் புத்தகத்தில், 'ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரர்கள்' என்ற பிரிவில் சேர்க்கப்பட்ட 5 வீரர்களுள் ஒருவராக இடம் பெற்றுள்ளனர்.
- இவர்கள் நியூசிலாந்து கிரிக்கெட் வீரர் டிவோன் கான்வே, இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஒல்லே ராபின்சன் மற்றும் தென் ஆப்பிரிக்க பெண் நட்சத்திரக் கிரிக்கெட் வீரர் டேன் வான் நிகெர்க் ஆகியோருடன் இப்பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.
- 2022 ஆம் ஆண்டு விஸ்டென் கிரிக்கெட் வீரர்கள் புள்ளி விவரப் புத்தகமானது, ஐக்கிய இராஜ்ஜியத்தில் வெளியிடப்பட்ட ஒரு கிரிக்கெட் குறிப்புப் புத்தகமாகும்.
- இது உலகின் மிகவும் ஒரு பிரபலமான விளையாட்டுத் துறைப் புத்தகத்தின் 159வது பதிப்பாகும்.
- இது 1864 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் வெளியிடப்படுகிறது.




## இன்விக்டஸ் போட்டிகள்




- 2022 ஆம் ஆண்டின் இன்விக்டஸ் போட்டிகள் நெதர்லாந்தின் தி ஹேக் என்ற நகரில் தொடங்கப் பட்டன.
- முதலாவது இன்விக்டஸ் போட்டிகளானது 2014 ஆம் ஆண்டில் இலண்டன் நகரில் நடத்தப் பட்டது.

- இப்போட்டிகளானது 2016 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் ஒர்லான்டோ நகரிலும், 2017 ஆம் ஆண்டில் கனடாவின் டொரோன்டோ நகரிலும், 2018 ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரிலும் நடத்தப் பட்டன.
- 2023 ஆம் ஆண்டின் இன்விக்டஸ் போட்டிகளை ஜெர்மனியின் டுசெல்டோர்ஃப் நகரம் நடத்த உள்ளது.
- மாற்றுத் திறனாளிகளுக்காக நடத்தப் படும் ஒலிம்பிக் போட்டிகள் போன்ற வகையில் இது காயமடைந்த, பாதிப்படைந்த மற்றும் நோய் வாய்ப்பட்ட இராணுவப் போர் வீரர்கள் மற்றும் சேவைப் பணியாளர்களுக்காக வேண்டி நடத்தப்படும் ஒரு சர்வதேச விளையாட்டுப் போட்டியாகும்.
- கவிஞர் வில்லியம் எர்னெஸ்ட் ஹென்லே என்பவரின் 'இன்விக்டஸ்' என்ற கவிதையை உத்வேகமாகக் கொண்டு இப்போட்டிகள் உருவாக்கப்பட்டன.

## ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டி

- சரிதா மோர் (59 கிலோ) மற்றும் சுஷ்மா ஷோக்கீன் (55 கிலோ) ஆகியோர் 2022 ஆம் ஆண்டு ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் பெண்களுக்கான ஃப்ரீஸ்டைல் பிரிவுகளில் இந்தியாவிற்கான வெண்கலப் பதக்கங்களை வென்றனர்.
- மங்கோலியாவின் உலான்பத்தர் என்ற இடத்தில் இப்போட்டியானது நடைபெற்றது.

## கேலோ இந்தியா பல்கலைக் கழக போட்டிகள் - செயலி

- முதல் முறையாக 2வது கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள் அதன் சொந்தச் செயலியைக் கொண்டு நிகழ்த்தப்படும்.
- இந்தப் போட்டியானது பெங்களூருவில் நடைபெறுகிறது.
- இந்தக் கைபேசிச் செயலியானது, இந்த மதிப்புமிக்க நிகழ்வு தொடர்பான அனைத்துத் தகவல்களையும் ஒரே இடத்தில் வழங்கும்.

## ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டி

- மங்கோலியா நாட்டின் உலான்பத்தரில் நடைபெற்ற ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில், 57 கிலோ எடைப் பிரிவில் அன்ஷு மாலிக் வெள்ளிப் பதக்கத்தினை வென்றார்.
- 65 கிலோ எடைப் பிரிவில் ராதிகா வெள்ளிப் பதக்கத்தினை வென்றார்.
- மேலும், 62 கிலோ எடைப் பிரிவில் மனிஷா வெண்கலப் பதக்கத்தினை வென்றார்.

## கீரன் பொல்லார்ட் - ஓய்வு

- மேற்கிந்திய தீவுகள் அணியின் ஆல்ரவுண்டர் கீரன் பொல்லார்ட் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.
- 34 வயதான அவர் தனது 15 ஆண்டு கால சர்வதேச கிரிக்கெட் பயணத்தின் முடிவினை அறிவித்தார்.

- 100க்கும் மேற்பட்ட டி20 போட்டிகளிலும், 123 ஒருநாள் போட்டிகளிலும் மேற்கிந்தியத் தீவுகள் அணியில் பங்கேற்று விளையாடிய முதல் வீரர் கீரன் பொல்லார்ட் ஆவார்.
- 2012 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஐசிசி டி20 கிரிக்கெட் உலகக் கோப்பையில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ஒரு முக்கிய உறுப்பினராக இவர் அங்கம் வகித்தார்.

### ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டி 2022

- இந்திய மல்யுத்த வீரர் ரவிக்குமார் தாஹியா, மங்கோலியாவின் உலான்பாதர் என்னும் இடத்தில் நடத்தப் பட்ட 2022 ஆம் ஆண்டு ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றார்.
- இது ரவிக்குமார் தாஹியா பெற்ற மூன்றாவது ஆசிய சாம்பியன்ஷிப் பட்டமாகும்.
- 2022 ஆம் ஆண்டு ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற ஒரே இந்திய வீரர் தாஹியா ஆவார்.
- மற்ற இந்திய மல்யுத்த வீரர்களான பஜ்ரங் புனியா மற்றும் கவுரவ் பாலியன் ஆகியோர் இந்த சாம்பியன்ஷிப் போட்டியின் இறுதிப் போட்டியில் தோல்வியடைந்து வெள்ளிப் பதக்கத்தை மட்டுமே வென்றுள்ளனர்.
- இதர இந்திய மல்யுத்த வீரர்களான நவீன் மற்றும் சத்யவார்ட் காடியன் ஆகியோர் கான்டினென்டல் சாம்பியன்ஷிப் போட்டியில் தலா ஒரு வெண்கலப் பதக்கத்தை வென்றனர்.

## முக்கிய தினங்கள்

### ஒடிசா தினம் - ஏப்ரல் 01

- இது உட்கல் திவாஸ் அல்லது உட்கலா திபாஷா என்று அழைக்கப்படுகிறது.
- ஒரு சுதந்திர மாநிலமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதற்கான ஒரு போராட்டத்திற்குப் பிறகு ஒடிசா மாநிலம் உருவானதை நினைவு கூரும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் 01 ஆம் தேதியன்று இத்தினமானது கொண்டாடப்படுகிறது.
- இந்தப் புதிய மாகாணம் 1936 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்தது.
- இந்த மாநிலம் ஆனது முதலில் ஒரிசா என்றே அழைக்கப்பட்டது.
- ஆனால் 2011 ஆம் ஆண்டில் மார்ச் மாதத்தில், நாடாளுமன்றத்தில் ஒரிசா மசோதா நிறைவேற்றப் பட்டு ஒடிசா என அது பெயர் மாற்றப்பட்டது.
- ஒடிசாவின் முந்தையத் தலைநகரம் கட்டாக் ஆகும்.
- இம்மாநிலத்தின் தற்போதையத் தலைநகரம் புவனேஸ்வர் ஆகும்.

## சர்வதேச குழந்தைகள் புத்தக தினம் – ஏப்ரல் 02

- இத்தினமானது 1967 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் அனுசரிக்கப்படுகிறது.
- இது சர்வதேச இளம் நபர்களுக்கான புத்தக வாரியத்தினால் ஏற்பாடு செய்யப் படுகிறது.
- இந்த வாரியமானது, சிறுவர் புத்தகங்கள் மீதான கவனத்தை ஈர்ப்பதற்காகவும் வாசிப்பு ஆர்வத்தைத் தூண்டுவதற்காகவும் செயல்படும் ஒரு சர்வதேச மற்றும் இலாப நோக்கமற்ற அமைப்பாகும்.
- 2022 ஆம் ஆண்டில் "கதைகள் என்பது நீங்கள் ஒவ்வொரு நாளும் மேலே உயர உதவும் சிறகுகள்" என்ற கருத்துருவில் கனடா இத்தினத்தை ஏற்பாடு செய்கிறது.




## உலக மன இறுக்க விழிப்புணர்வு தினம் - ஏப்ரல் 02

- இது ஐக்கிய நாடுகள் அமைப்பின் உறுப்பினர் நாடுகளால் ஆண்டுதோறும் அனுசரிக்கப் படுகிறது.
- உலகம் முழுவதும் உள்ள மன இறுக்கக் குறைபாட்டு நோயால் (Autism) பாதிக்கப்பட்ட நபர்கள் குறித்த விழிப்புணர்வை குடிமக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்காக வேண்டி இந்தத் தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இத்தினமானது ஐக்கிய நாடுகளின் உலகத் தகவல்தொடர்புத் துறை மற்றும் ஐக்கிய நாடுகளின் பொருளாதாரம் மற்றும் சமூக விவகாரங்கள் துறை ஆகியவற்றால் நடத்தப் படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "அனைவருக்கும் உள்ளார்ந்த தரமான கல்வி" (Inclusive Quality Education for All) என்பதாகும்.

## இராணுவ மருத்துவப் படை நிறுவன தினம் - ஏப்ரல் 03

- இராணுவ மருத்துவப் படையின் நிறுவன தினத்தை நினைவுகூரும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- வங்காள மாகாண மருத்துவச் சேவை ஆனது 1764 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியன்று நிறுவப் பட்டது.
- இது இந்தியாவில் உள்ள மூன்று மாகாணங்களின் முதல் ராணுவச் சேவை அமைப்பு ஆகும்.
- இந்திய மருத்துவச் சேவை, இந்திய மருத்துவத் துறை மற்றும் இந்திய மருத்துவ மனைப் படை ஆகியவை இணைக்கப்பட்டு 1943 ஆம் ஆண்டு ஏப்ரல் 03 ஆம் தேதி அன்று இந்திய இராணுவ மருத்துவப் படை உருவாக்கப்பட்டது.

- இந்திய ராணுவ மருத்துவப் படையானது சுதந்திரத்திற்குப் பிறகு ராணுவ மருத்துவப் படை என மறுபெயரிடப்பட்டது.
- இராணுவ மருத்துவப் படையின் முழக்கம் சர்வே சாந்து நிராமயா (அனைவரும் நோய் மற்றும் இயலாமையிலிருந்து விடுபடலாம்) என்பதாகும்.

## சுரங்க விழிப்புணர்வு மற்றும் சுரங்க நடவடிக்கைகளில் உதவிக்கான சர்வதேச தினம் – ஏப்ரல் 24

- கண்ணி வெடிகள் பற்றி ஒரு விழிப்பணர்வை ஏற்படுத்துவதும் அவற்றை ஒழிப்பதை நோக்கிய முன்னேற்றத்தினையும் இத்தினமானது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- "சுரங்க நடவடிக்கை" என்பது கண்ணிவெடிகள் மற்றும் போரில் வெடிக்காத சில மருந்துகள் போன்றவற்றை அப்புறப்படுத்துவதையும், அபாயகரமானப் பகுதிகளை அடையாளம் கண்டு அதனை வேலியிடுவதையும் குறிக்கிறது.
- 2022 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் சுரங்க நடவடிக்கை சேவை என்ற அமைப்பானது "பாதுகாப்பான நிலம், பாதுகாப்பானப் படிகள் (பாதைகள்) பாதுகாப்பான இல்லம்" என்ற கருத்துருவின் கீழ் இந்த தினத்தை அனுசரிக்கிறது.




## சர்வதேச மனசாட்சி தினம் – ஏப்ரல் 05

- இத்தினமானது, மக்களைச் சுயமாக சிந்திக்கவும், தங்களது மனசாட்சியைப் பின்பற்ற செய்யவும், நல்ல செயல்களைச் செய்யவும் நினைவூட்டுகிறது.
- முதலாவது சர்வதேச மனசாட்சி தினமானது 2020 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.

## தேசியக் கடல்சார் தினம் – ஏப்ரல் 05

- இந்த ஆண்டு 59வது தேசியக் கடல்சார் தினமாகும்.
- உலகின் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்கு சரக்குப் பொருட்களை ஏற்றிச் செல்வதற்காக வேண்டி நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட, பாதுகாப்பான மற்றும் உறுதியான,

சுற்றுச்சூழலுக்கு உகந்த ஒரு அணுகுமுறையாக, கண்டங்களுக்கு இடையேயான வணிகம் மற்றும் உலகப் பொருளாதாரத்திற்கு ஆதரவளிப்பது குறித்த விழிப்புணர்வை எடுத்துரைக்கச் செய்வதற்காக ஒவ்வோர் ஆண்டும் இத்தினமானது அனுசரிக்கப் படுகிறது.

- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Sustainable Shipping beyond Covid-19" என்பதாகும்.

## சர்வதேச வளர்ச்சி மற்றும் அமைதிக்கான விளையாட்டுத் தினம் - ஏப்ரல் 06


- ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையால் இந்த தினமானது அறிவிக்கப்பட்டது.
- மனித உரிமைகள், சமூகம் மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகிய துறைகளில் விளையாட்டு ஏற்படுத்தக் கூடிய நேர்மறையான தாக்கத்திற்கு ஐக்கிய நாடுகள் சபை அதிகளவில் அங்கீகாரம் அளிப்பதை இந்தத் தினம் குறிக்கிறது.
- 2022 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் உலகளாவிய கருத்துரு, "அனைவருக்குமான நிலையான மற்றும் அமைதியான ஒரு எதிர்காலத்தைப் பாதுகாப்பது: விளையாட்டின் பங்களிப்பு" என்பதாகும்.

## உலக சுகாதார தினம் - ஏப்ரல் 07

- உடல்நலம் தொடர்பான பிரச்சனைகளை விவாதிக்கச் செய்யும் நோக்கத்துடன் இது கொண்டாடப் படுகிறது.
- 1948 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட உலக சுகாதார அமைப்பின் நினைவாக 1950 ஆம் ஆண்டில் முதல் உலக சுகாதார தினம் அனுசரிக்கப்பட்டது.
- "நமது கிரகம், நமது ஆரோக்கியம்" என்பது இந்த ஆண்டிற்கான கருத்துரு ஆகும்.

## ருவாண்டாவில் 1994 இனப் படுகொலை பற்றிய சர்வதேசப் பிரதிபலிப்பு தினம் - ஏப்ரல் 07

- ருவாண்டாவில் டுட்சி (Tutsi) இன மக்களுக்கு எதிரான இனப் படுகொலையை இது நினைவு கூர்கிறது.
- இது ருவாண்டாவில் உள்ள ஹுட்டு (Hutu) என்ற தீவிரவாத தலைமையிலான அரசால் நடத்தப் பட்டது.



## சர்வதேச ரோமானி தினம் - ஏப்ரல் 08

- 1990 ஆம் ஆண்டில் முதன்முதலில் அறிவிக்கப்பட்ட பிறகு, ஒவ்வோர் ஆண்டும் இந்தத் தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- சர்வதேச ரோமானியத் தினமானது உலகளவில் உள்ள ரோமானிய சமூகங்கள் மீதான பாகுபாடுகள் குறித்து கவனத்தை ஈர்க்கிறது.
- இது அனைவரின் மனித உரிமைகளும் மதிக்கப்பட வேண்டும் மற்றும் கடைபிடிக்கப் பட வேண்டும் என்று அழைப்பு விடுக்கிறது.

## மத்திய சேமக் காவல் படையின் 57வது வீர தினம் - ஏப்ரல் 09

- மத்திய சேமக் காவல் படையின் வீர தினம் ஆனது (சௌர்ய திவாஸ்) அப்படைப் பிரிவின் துணிச்சலான வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாக அனுசரிக்கப் படுகிறது.
- 2022 ஆம் ஆண்டானது மத்திய சேமக் காவல் படையின் 57வது வீர தினத்தைக் குறிக்கச் செய்கிறது.
- 1965 ஆம் ஆண்டில் இதே நாளில் தான், குஜராத்தின் கட்ச் பகுதியில் அமைந்துள்ள சர்தார் காவல் முகப்பில், பல மடங்கு பெரியளவில், நாட்டினுள் படையெடுத்த பாகிஸ்தான் ராணுவத்தைத் தோற்கடித்து, மத்திய சேமக் காவல் படையின் சிறிய படைப் பிரிவு வரலாறு ஒன்றைப் படைத்தது.

## உலக ஹோமியோபதி தினம் - ஏப்ரல் 10

- ஹோமியோபதியின் நிறுவனர் டாக்டர் கிறிஸ்டியன் ஃப்ரெட்ரிக் சாமுவேல் ஹானிமனின் 267வது பிறந்தநாளை நினைவு கூரும் வகையில் இந்தத் தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- ஏப்ரல் மாதத்தின் 09 மற்றும் 10 ஆம் தேதிகளில் ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் உள்ள மூன்று உயர்மட்ட அமைப்புகளால் இரண்டு நாட்கள் அளவிலான அறிவியல் மாநாடு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- மத்திய ஹோமியோபதி ஆராய்ச்சி சபை, தேசிய ஹோமியோபதி ஆணையம் மற்றும் தேசிய ஹோமியோபதி நிறுவனம் ஆகியவை இந்த மூன்று உயர்மட்ட அமைப்புகள் ஆகும்.

## பாதுகாப்பான தாய்மைக்கான தேசிய தினம் – ஏப்ரல் 11

- இத்தினமானது இந்தியாவில் ஆண்டுதோறும் அனுசரிக்கப்படுகிறது.
- மகப்பேறிற்கு முன்பும், மகப்பேறின் போதும், அதற்குப் பின்பும் ஒரு கர்ப்பிணிப் பெண்ணிற்குத் தேவைப்படும் நலம் பேணுதல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதே இத்தினத்தின் நோக்கமாகும்.
- இத்தினமானது வெண் பட்டை கூட்டமைப்பினால் தொடங்கப்பட்ட முன்னெடுப்பாகும்.
- 2022 ஆம் ஆண்டானது 19வது பாதுகாப்பான தாய்மைக்கான தேசிய தினமாகும்.

## உலக நடுக்குவாத நோய் தினம் - ஏப்ரல் 11

- ❖ வீரியமிக்க நரம்பு மண்டலக் கோளாறான பார்கின்சன் (நடுக்குவாத) நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- ❖ இந்த ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு, 'ஒருங்கிணைக்கப்பட்ட சுகாதாரம்' என்பதாகும்.
- ❖ இலண்டனைச் சேர்ந்த டாக்டரான ஜேம்ஸ் பார்கின்சன் என்பவரின் பிறந்த நாளை இத்தினம் குறிக்கிறது.
- ❖ பார்கின்சன் நோயின் அறிகுறிகளைக் கொண்ட ஆறு நபர்களின் குறைபாடுகள் பற்றி முறையாக விவரித்த முதல் நபர் இவரே ஆவார்.
- ❖ மேலும், ஏப்ரல் மாதமானது பார்கின்சன் நோய் விழிப்புணர்வு மாதமாக அனுசரிக்கப் படுகிறது.

## சர்வதேச மனித விண்வெளிப் பயண தினம் - ஏப்ரல் 12

- ❖ 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் தேதியன்று யூரி காகரின் என்பவர் மேற்கொண்ட முதல் மனித விண்வெளிப் பயணத்தின் ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் இத்தினமானது ஆண்டுதோறும் அனுசரிக்கப்படுகிறது.
- ❖ தொழில்நுட்ப வளர்ச்சியால் மனிதகுலம் எவ்வளவு சாதித்துள்ளது என்பதை அடையாளம் காண உதவுவதே இந்தத் தினத்தின் நோக்கமாகும்.

## சம ஊதிய தினம் - ஏப்ரல் 12

- ❖ சம ஊதிய தினமானது பாலின ஊதிய இடைவெளி குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அனுசரிக்கப் படுகிறது.
- ❖ 2021 ஆம் ஆண்டில் ஒரு சராசரி ஆண் சம்பாதித்த வருவாயைச் சம்பாதிப்பதற்கு, ஒரு சராசரி பெண் 2022 ஆம் ஆண்டில் கூடுதலாக எத்தனை மாதங்கள் உழைக்க வேண்டும் என்பதை இத்தினம் எடுத்துரைக்கிறது.

## சர்வதேச தெருவோரக் குழந்தைகள் தினம் - ஏப்ரல் 12

- ❖ உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான தெருவோரக் குழந்தைகளின் வலிமை மற்றும் நெகிழ்திறனை அங்கீகாரம் செய்வதற்காக வேண்டி, சர்வதேச தெருவோரக் குழந்தைகள் தினமானது ஆண்டுதோறும் உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது.
- ❖ நினைத்துப் பார்க்க முடியாத அளவில் துன்பங்களை எதிர்கொண்டு வாழும் தெருவோரக் குழந்தைகளின் மனிதநேயம், மரியாதை மற்றும் பாதுகாப்பு ஆகிய சிலவற்றை இந்தத் தினம் அங்கீகரிக்கிறது.

## சியாச்சின் தினம் - ஏப்ரல் 13

- ❖ மேகதூத் நடவடிக்கையின் கீழ், இந்திய இராணுவத்தின் தைரியத்தை நினைவு கூரும் வகையில் இந்த தினமானது அனுசரிக்கப்படுகிறது.

- எதிரிகளிடமிருந்து வெற்றிகரமாகத் தங்கள் தாய்நாட்டினைக் காப்பாற்றும் ஒரு முயற்சியில் ஈடுபட்ட சியாச்சின் போர் வீரர்களை இந்தத் தினம் கௌரவிக்கின்றது.
- 38 ஆண்டுகளுக்கு முன்பு பனி படர்ந்த சியாச்சின் என்ற சிகரத்தினைக் கைப்பற்றச் செய்யும் ஒரு போராட்டத்தில் உயிர்த் தியாகம் செய்த ராணுவ வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.

## சர்வதேச தலைப்பாகைத் தினம் - ஏப்ரல் 13

- இந்தத் தினமானது 2004 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது.
- சீக்கியர்கள் தங்கள் மதத்தின் ஒரு கட்டாய அங்கமாக தலைப்பாகையை அணிய வேண்டும் என்ற கடுமையான விதி குறித்த ஒரு விழிப்புணர்வை இந்தத் தினம் ஏற்படுத்தச் செய்கிறது.
- 2022 ஆம் ஆண்டு தலைப்பாகை தினமானது, குருநானக் தேவ்வின் 553வது பிறந்தநாள் மற்றும் பைசாகி பண்டிகையைக் குறிக்கிறது.
- "தஸ்தர்" அல்லது "பக்ரி" அல்லது "பாக்" என்றும் அழைக்கப்படும் தலைப்பாகையானது ஆண்களாலும், தமது தலையை மறைக்க சில பெண்களாலும் அணியப்படும் ஒரு ஆடையைக் குறிக்கிறது.

## ஜாலியன் வாலாபாக் படுகொலை - ஏப்ரல் 13

- இது அமிர்தசரஸ் படுகொலை என்றும் அழைக்கப்படுகிறது.
- இது 1919 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 அன்று நடைபெற்றது.
- டயர் என்ற ஒரு அதிகாரியின் உத்தரவின் பேரில், அப்பகுதியில் கூடியிருந்த கூட்டம் மீது தகவல் தெரிவிக்கப்படாமல் இரக்கமற்ற முறையில் துப்பாக்கிச் சூடு நடத்தப் பட்டது.
- இந்த ஆண்டு இந்தப் படுகொலை நடந்தேறிய 103வது ஆண்டு நிறைவு தினமானது அனுசரிக்கப் படுகிறது.

## அம்பேத்கர் ஜெயந்தி - ஏப்ரல் 14

- இந்த தினமானது பீம் ஜெயந்தி என்றும் அழைக்கப்படுகிறது.
- பாபா சாகேப் டாக்டர் பீம் ராவ் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில் இந்த தினமானது கொண்டாடப்படுகிறது.
- இந்த தினம் 2015 ஆம் ஆண்டு முதல் இந்தியா முழுவதும் அதிகாரப்பூர்வப் பொது விடுமுறை தினமாக கடைபிடிக்கப்படுகிறது.
- 2022 ஆம் ஆண்டில் பாபா சாகேப் அவர்களின் 131வது பிறந்தநாள் கொண்டாடப் படுகிறது.
- டாக்டர் அம்பேத்கர் இந்திய அரசியலமைப்பின் தந்தை (தலைமை வடிவமைப்பாளர்) என்று அழைக்கப் படுகிறார்.
- சுதந்திரத்திற்குப் பிறகு நாட்டின் முதல் சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சராகவும் இவர் பணியாற்றினார்.
- டாக்டர் பீம் அவர்களுக்கு 1990 ஆம் ஆண்டில் நாட்டின் உயரியக் குடிமை விருதான பாரத ரத்னா (மரணத்திற்குப் பிறகு) வழங்கப்பட்டது.

## உலக சாகாஸ் நோய் தினம் - ஏப்ரல் 14




- இரத்த ஒட்டுண்ணி (சாகாஸ்) நோய் பற்றியும், அந்நோய் பற்றியப் புரிதலையும், இந்த நோயைத் தடுப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் அல்லது நீக்குவதற்கும் தேவையான வள ஆதாரங்கள் பற்றியும் மக்களிடையே ஒரு பொது விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதற்காக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இது அமெரிக்கன் டிரிபனோசோமியாசிஸ் அல்லது அரவமற்ற ஒரு நோய் என்றும் அழைக்கப் படுகிறது.
- 'சாகாஸ் நோயை ஒழிப்பதற்கு ஒவ்வொரு நோய்ப் பாதிப்பினையும் கண்டறிந்து பதிவு செய்தல்' என்பதே 2022 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு ஆகும்.

## உலக கலை தினம் - ஏப்ரல் 15

- 2012 ஆம் ஆண்டில் நடைபெற்ற யுனெஸ்கோ அமைப்பின் பொது மாநாட்டில் இந்தத் தினம் பற்றி அறிவிக்கப்பட்டது.
- இந்தத் தினமானது, ஒரு கலையின் வளர்ச்சி, பரவல் மற்றும் ரசனை ஆகியவற்றை ஊக்குவிக்கச் செய்வதற்கான ஒரு கொண்டாட்டமாகும்.
- இந்தத் தினமானது இத்தாலியப் பல்கலைக் கழக நிபுணர் லியோனார்டோ டா வின்சி அவர்களின் பிறந்த நாளைக் குறிக்கிறது.

## இமாச்சலப் பிரதேச தினம் - ஏப்ரல் 15

- இந்நாளில் தான் இமாச்சலப் பிரதேசம் ஒரு முழு அளவிலான மாநிலமாக மாறியது.
- மண்டி, சம்பா, மஹாசு மற்றும் சிர்மூர் ஆகிய நான்கு மாவட்டங்கள், 24க்கும் மேற்பட்ட சுதேச அரசுகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டு, 1948 ஆம் ஆண்டில் இமாச்சலப் பிரதேசம் ஓர் ஒன்றியப் பிரதேசமாக உருவானது.
- பல தசாப்தங்களுக்குப் பிறகு,1971 ஆம் ஆண்டில் இமாச்சலப் பிரதேசம் சிம்லாவை அதன் தலைநகராகக் கொண்டு இந்தியாவின் 18வது மாநிலமாக மாறியது.

## உலக குரல் தினம் - ஏப்ரல் 16

- அனைத்து மக்களின் அன்றாட வாழ்விலும் குரலின் மகத்தான முக்கியத்துவத்தைப் பற்றி எடுத்துரைப்பதற்காக இந்த தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டு, உலக குரல் தினத்தின் கருத்துரு, ‘உங்கள் குரலை உயர்த்துங்கள்’ என்பது ஆகும்.

## யானைகளைப் பாதுகாத்தல் தினம் - ஏப்ரல் 16

- யானைகள் எதிர்கொள்ளும் ஆபத்துகள் மற்றும் உயிர்வாழ்வதற்காக அவை எதிர் கொள்ள வேண்டிய பல்வேறு சிரமங்கள் குறித்து ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்தச் செய்வதற்காக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- தாய்லாந்தைச் சேர்ந்த எலிபண்ட் ரீஇன்டரடக்சன் (யானைகளை மீண்டும் அறிமுகப் படுத்தல்) என்ற அறக்கட்டளையால் இந்தத் தினமானது நிறுவப்பட்டது.

## உலக ஹீமோபிலியா தினம் - ஏப்ரல் 17

- இந்தத் தினமானது ஹீமோபிலியா பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளதோடு ஃபிராங்க் ஷ்னாபலின் என்பவரின் பிறந்த நாளையும் குறிக்கச் செய்கிறது.
- ஃபிராங்க் ஷ்னாபெல் உலக ஹீமோபிலியா கூட்டமைப்பை நிறுவியவர் ஆவார்.
- இந்தத் தினமானது மற்ற இரத்தப் போக்கு கோளாறுகள் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.
- இந்த ஆண்டு இந்தத் தினத்தின் கருத்துரு, Access for All: Partnership. Policy. Progress. Engaging your government, integrating inherited bleeding disorders into national policy என்பதாகும்.

## உலகப் பாரம்பரியத் தினம் - ஏப்ரல் 18

- மனிதப் பாரம்பரியத்தை பாதுகாப்பதற்காகவும், அதற்காகச் செயல்படும் சில அமைப்புகளின் முயற்சிகளை அங்கீகரிப்பதற்காகவும் வேண்டி இந்த தினம் அனுசரிக்கப் படுகிறது.
- நினைவுச் சின்னங்களும், பழங்காலக் கட்டிடங்களும் உலகத்தின் ஒரு சொத்தாகும்.
- இவை தேசத்தின் வளமானப் பாரம்பரியத்தை உருவாக்குகின்றன.
- 2022 ஆம் ஆண்டின் உலகப் பாரம்பரியத் தினத்தின் கருத்துரு "மரபு மற்றும் பருவ நிலை" என்பதாகும்.
- இந்தியாவில் மொத்தம் 3691 நினைவுச் சின்னங்கள் மற்றும் தளங்கள் உள்ளன.
- இவற்றில் 40 தளங்கள் யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியத் தளங்களாக அறிவிக்கப் பட்டுள்ளன.

## உலக கல்லீரல் தினம் - ஏப்ரல் 19

- கல்லீரலை முழுவதுமாக பராமரித்துக் கொள்வதற்காக வேண்டி கல்லீரல் நோய்க்கான காரணங்கள் மற்றும் அதைத் தடுப்பதற்கான வழிமுறைகள் பற்றிய ஒரு விழிப்புணர்வைப் பரப்புவதற்கு இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- மூளைக்கு அடுத்தபடியாக உடலில் இரண்டாவது பெரிய மற்றும் இரண்டாவது மிகவும் சிக்கலான உறுப்பு கல்லீரல் ஆகும்.
- இது உடலில் முக்கியமான சில செயல்பாடுகளை மேற்கொள்கிறது.
- மேலும், இது ஒரு மனித உடலின் செரிமானம், நோய் எதிர்ப்புச் சக்தி, வளர்சிதை மாற்றம் மற்றும் ஊட்டச்சத்துச் சேமிப்பு ஆகியவற்றுடன் தொடர்புடையது.

- கல்லீரல் இரத்தத்தில் சர்க்கரையின் அளவை ஒழுங்குபடுத்துதல், உடலில் இருந்து நச்சுப் பொருட்களை நீக்குதல், இரத்தம் உறைவதற்கு உதவுதல் மற்றும் கொழுப்பின் அளவைக் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றைச் செய்கிறது.

## ஐக்கிய நாடுகளின் சீன மொழி தினம் – ஏப்ரல் 20

- கங்ஜீ என்பவருக்கு மரியாதைச் செலுத்தும் விதமாக இத்தினமானது தேர்ந்தெடுக்கப் பட்டது.
- கங்ஜீ என்பவர் சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்பு சீன மொழி எழுத்துகளைக் கண்டு பிடித்தவராகக் கருதப்படும் ஒரு புராண நபர் ஆவார்.

## தேசியக் குடிமைப் பணி தினம் - ஏப்ரல் 21

- நாட்டின் பல்வேறு பொதுப் பணிச் சேவைத் துறைகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளின் பணிகளை அங்கீகரிக்கும் வகையில் இந்தத் தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- சுதந்திர இந்தியாவின் முதல் உள்துறை அமைச்சரான சர்தார் வல்லபாய் படேல் அவர்கள், 1947 ஆம் ஆண்டில், டெல்லியில் உள்ள மெட்கால்ஃப் நிலையத்தில் நிர்வாகச் சேவை அதிகாரிகளின் தகுதிகாண் அதிகாரிகளிடம் உரையாற்றிய ஒரு தினத்தை நினைவு கூரும் வகையில் இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- அவர் தனது உரையில் குடிமைப் பணியாளர்களை இந்தியாவின் எஃகுச் சட்டகம் என்று அழைத்தார்.

## உலகப் படைப்பாற்றல் மற்றும் புத்தாக்க தினம் - ஏப்ரல் 21

- குறைகளைத் தீர்ப்பதில் படைப்பாற்றல் மற்றும் புதுமையின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், தனிப்பட்ட மற்றும் குழு நிலைகளில், ஆக்கப் பூர்வமான பல்துறைச் சிந்தனையை ஊக்குவிப்பதையும் இந்தத் தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஏப்ரல் 15 முதல் 21 வரை உலகப் படைப்பாற்றல் மற்றும் புதுமை வாரமும் அனுசரிக்கப் படுகிறது.
- 2022 ஆம் ஆண்டிற்கான உலகப் படைப்பாற்றல் மற்றும் புதுமை தினத்தின் கருத்துரு, "ஒத்துழைப்பு" என்பதாகும்.

## உலகப் புவி தினம் – ஏப்ரல் 22

- இத்தினமானது சர்வதேச அன்னைப் பூமி தினம் எனவும் அழைக்கப்படுகிறது.
- புவியின் நலன் பற்றிய ஒரு விழிப்புணர்வைப் பரப்பச் செய்வதற்காகவும், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு ஆதரவளிப்பதற்கு வேண்டி மக்களை ஊக்குவிக்கச் செய்வதற்காகவும் உலகம் முழுவதும் இத்தினம் கொண்டாடப்படுகிறது.
- 1970 ஆம் ஆண்டில் முதன்முறையாக அனுசரிக்கப்பட்டது முதல் 2022 ஆம் ஆண்டின் உலகப் புவி தினமானது அதன் 52வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- 2009 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையினால் புவி தினம் சர்வதேச அன்னைப் பூமி தினம் எனப் பெயர் மாற்றப்பட்டது.

- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு என்பது, 'நமது கோளுக்காக முதலீடு செய்யுங்கள்' என்பதாகும்.

## உலகப் புத்தகம் மற்றும் பதிப்புரிமை தினம் - ஏப்ரல் 23

- புத்தகங்களைப் படிப்பதன் நன்மைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இது 1995 ஆம் ஆண்டு முதல் யுனெஸ்கோ அமைப்பினால் ஒரு வருடாந்திர விழாவாக நடத்தப் படுகிறது.
- இந்நாளில் இறந்த வில்லியம் ஷேக்ஸ்பியர், மிகுவல் செர்வாண்டஸ் மற்றும் இன்கா கார்சிலாசோ டி லா வேகா போன்ற புகழ்பெற்ற எழுத்தாளர்களுக்கு மரியாதை செலுத்துவதற்காக இந்த தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டு, மெக்சிகோவின் குவாடலஜாரா நகரம் உலகப் புத்தக தலைநகரம் என்ற பெருமையைப் பெற்றது.
- இந்த ஆண்டிற்கான கருத்துரு 'Read, so you never feel low' என்பதாகும்.

## ஆங்கில மொழி தினம் - ஏப்ரல் 23

- ஆங்கில மொழியை ஆராய்வதன் மூலம் பன்மொழித்துவம் மற்றும் ஒரு கலாச்சாரப் பன்முகத் தன்மையைக் கொண்டாடுவதை இந்த தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஆங்கில மொழி தினமானது, புகழ்பெற்ற எழுத்தாளர் வில்லியம் ஷேக்ஸ்பியரின் பிறந்த நாள் மற்றும் இறந்த நாள் ஆகிய இரண்டையும் குறிக்கிறது.

## தேசியப் பஞ்சாயத்து ராஜ் தினம் - ஏப்ரல் 24

- பஞ்சாயத்து ராஜ் அமைச்சகமானது தேசியப் பஞ்சாயத்து ராஜ் தினம் அல்லது தேசிய உள்ளாட்சி தினத்தை ஏற்பாடு செய்கிறது.
- இந்தியா முதலாவது தேசியப் பஞ்சாயத்து ராஜ் தினத்தை 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கொண்டாடியது.
- 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் 24 ஆம் தேதியன்று, 1992 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (73வது திருத்தம்) சட்டத்தின் வாயிலாக பஞ்சாயத்து ராஜ் நிறுவப்பட்டதன் மூலம் அடித்தட்டு நிலையில் அதிகாரப் பரவல் வழங்கப் பட்டதன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வை இது குறிக்கிறது.
- 1959 ஆம் ஆண்டில், மறைந்தப் பிரதமர் ஜவர்ஹர்லால் நேரு ஆட்சிக் காலத்தில் பஞ்சாயத்து ராஜ் முறையைக் கொண்டு வந்த முதல் மாநிலம் ராஜஸ்தான் ஆகும்.

## சர்வதேச அமைதிக்கான பலதரப்பு மற்றும் இராஜதந்திர தினம் - ஏப்ரல் 24

- 'சர்வதேச அமைதிக்கான பல்தரப்பு மற்றும் இராஜதந்திர தினமானது' ஐக்கிய நாடுகள் சபையால் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 24 அன்று முதன்முதலில் அனுசரிக்கப்பட்டது.
- கல்வி மற்றும் பொது விழிப்புணர்வு உள்ளிட்டவை மூலம், அமைதிக்கானப் பலதரப்பு மற்றும் இராஜதந்திர நன்மைகள் பற்றிய தகவல்களைப் பரப்புவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## உலக ஆய்வக விலங்குகள் தினம் - ஏப்ரல் 24

- இது உலக ஆய்வக விலங்குகள் தினம் அல்லது ஆய்வக விலங்குகளுக்கான உலக தினம் என்றும் அழைக்கப்படுகிறது.
- இந்த தினமானது 1979 ஆம் ஆண்டு தேசிய கூறாய்வு எதிர்ப்புச் சங்கத்தினால் நிறுவப் பட்டது.
- உலகெங்கிலும் உள்ள ஆய்வகங்களில் விலங்குகள் உள்ளாக்கப்படும் ஒரு துன்பத்தை முடிவுக்குக் கொண்டு வருவதையும், மேம்படுத்தப் பட்ட விலங்கு சாராத அறிவியல் நுட்பங்களை மாற்றாகப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதையும் இந்தத் தினம் ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.

## உலக நோய்த் தடுப்பு வாரம் 2022 - ஏப்ரல் 24 முதல் 30 வரை

- உலக நோய்த் தடுப்பு வாரம், ஏப்ரல் மாதத்தின் கடைசி வாரத்தில் கொண்டாடப் படுகிறது.
- அனைத்து வயதினரையும் நோய்களிலிருந்துப் பாதுகாப்பதில் தடுப்பூசிகளின் பயன்பாட்டை ஊக்குவிப்பதோடு தேவையான கூட்டு நடவடிக்கையை முன்னிலைப் படுத்துவதை இத்தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டு, உலக சுகாதார அமைப்பு உலக நோய்த் தடுப்பு வாரத்தை ஏப்ரல் 24 முதல் ஏப்ரல் 30 வரை கொண்டாட உள்ளது.
- இந்த ஆண்டு நோய்த் தடுப்பு வாரத்தின் கருத்துரு "அனைவருக்கும் நீண்ட ஆயுள்" (Long Life for All) என்பதாகும்.

## உலக பென்குயின் தினம் - ஏப்ரல் 25

- இந்தத் தினமானது புவியில் வாழும் தனித்துவமான பல்வேறு பறவைகளில் ஒன்றை அங்கீகரிக்கிறது.
- இந்தக் கவர்ச்சியான பறக்க இயலாப் பறவை இனங்களைக் கொண்டாடுவதற்கான தினம் இதுவாகும்.
- புவியில் 17 வகை பென்குயின் இனங்கள் உள்ளன.

## சர்வதேசப் பிரதிநிதிகள் தினம் - ஏப்ரல் 25

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் உறுப்பினர் நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் பிரதிநிதிகளின் செயல்பாடு குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.
- சர்வதேச அமைப்பு குறித்த ஐக்கிய நாடுகளின் மாநாடு என்றும் அழைக்கப்படும் சான் பிரான்சிஸ்கோ மாநாட்டின் முதல் நாளானது சர்வதேச பிரதிநிதிகள் தினமானாக அனுசரிக்கப் படுகிறது.
- ஐம்பது நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் 1945 ஆம் ஆண்டு ஏப்ரல் 25 அன்று பிரான்சிஸ்கோ நகரில் நடைபெற்ற முதல் கூட்டத்தில் பங்கேற்றனர்.

## உலக மலேரியா தினம் - ஏப்ரல் 25

- மனித குலத்திற்கு ஆபத்தாக இருக்கும் இந்த உயிருக்கு ஆபத்தான நோய் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இத்தினமானது அனுசரிக்கப் படுகிறது.

- மலேரியா உலக மக்கள்தொகையில் பாதிக்கும் மேற்பட்டவர்களைப் பாதிக்கிறது.
- ஏழை நாடுகளில் வாழும் மக்களுக்கு இந்நோய் பாதிப்பு வருவதற்கான வாய்ப்புகள் கணிசமாக அதிகம் ஆகும்.
- மலேரியாவை உண்டாக்கும் பிளாஸ்மோடியம் என்ற ஒட்டுண்ணியால் பாதிக்கப்பட்ட, பெண் அனோபிலிஸ் கொசு கடிப்பதன் மூலம் மலேரியா பரவுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "மலேரியா நோயின் அதிகரிப்பைக் குறைக்கவும், உயிர்களைக் காப்பாற்றவும் வேண்டி புதுமைகளைப் பயன்படுத்துதல்" என்பதாகும்.

## தேசிய டிஎன்ஏ தினம் - ஏப்ரல் 25

- 2003 ஆம் ஆண்டில் மனித ஜீனோம் திட்டம் நிறைவடைந்ததையும் 1953 ஆம் ஆண்டில் டிஎன்ஏவின் (மரபணுவின்) இரட்டைச் சுருள் வடிவமைப்பு கண்டுபிடிக்கப் பட்டதையும் நினைவு கூரும் வகையில் இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- 1953 ஆம் ஆண்டு இதே நாளில், ஜேம்ஸ் வாட்சன் மற்றும் பிரான்சிஸ் க்ரிக் ஆகியோர் நேச்சர் என்ற ஒரு அறிவியல் இதழில் டிஆக்ஸிரைபோநியூக்ளிக் அமிலத்தை (டிஎன்ஏ) கண்டுபிடித்ததாக அதிகாரப் பூர்வமாக அறிவித்தனர்.

## உலக அறிவுசார் சொத்து தினம் - ஏப்ரல் 26

- புத்தாக்கம் மற்றும் படைப்பாற்றலை ஊக்குவிப்பதில் அறிவுசார் சொத்துரிமைகள் (IP) வகிக்கும் பங்கைப் பற்றி அறிய இந்த தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- ஒரு நிலையான எதிர்காலத்திற்கான மாற்றத்தை அளிக்கும் புதிய மற்றும் சிறந்த தீர்வுகளைக் கண்டறிவதில் இளைஞர்கள் கொண்டுள்ள பெரும் ஆற்றலை இந்த தினம் அங்கீகரிக்கிறது.
- இந்த ஆண்டிற்கான உலக அறிவுசார் சொத்து தினத்திற்கான கருத்துரு, ஒரு சிறந்த எதிர்காலத்திற்காக வேண்டி அறிவுசார் சொத்து மற்றும் இளைஞர்களின் புத்தாக்கம் மீது ஈடுபாடு செலுத்துகிறது.
- இந்தத் தினமானது, "காப்புரிமைகள், பதிப்புரிமை, வர்த்தக முத்திரைகள் மற்றும் வடிவமைப்புகள் ஆகியவை அன்றாட வாழ்க்கையில் எவ்வாறு ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதைப் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக" 2000 ஆம் ஆண்டில் உலக அறிவுசார் சொத்து அமைப்பினால் நிறுவப்பட்டது.

## சர்வதேச செர்னோபில் பேரிடர் நினைவு தினம் - ஏப்ரல் 26

- 1986 ஆம் ஆண்டில் ஏற்பட்ட செர்னோபில் பேரழிவின் விளைவுகள் பற்றியும் அணு சக்தியின் அபாயங்கள் பற்றியும் பொதுவான விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்திட வேண்டி ஒவ்வோர் ஆண்டும் இந்தத் தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இந்தத் தினமானது, மனிதனால் ஏற்படும் பேரழிவுகளைப் பற்றி நமக்குத் தெரிவிப்பது மட்டுமல்லாமல், அணுசக்தியின் அபாயங்களைப் பற்றி ஒரு பொதுவான முறையில் மனிதர்களுக்குக் கற்பிதம் செய்கிறது.

## உலக எழுதுபொருட்கள் தினம் 2022 - ஏப்ரல் 27

- உலக எழுதுபொருட்கள் தினமானது ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் மாதத்தின் கடைசிப் புதன்கிழமையன்று கொண்டாடப்படுகிறது.
- இந்த ஆண்டு இது ஏப்ரல் 27 ஆம் தேதி அனுசரிக்கப்பட்டது.
- கணினியைப் பயன்படுத்தச் செய்வதை விட காகிதத்தில் எழுதுதல் மற்றும் எழுது பொருட்கள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தைக் குறிக்கும் வகையில் இந்த தினம் கொண்டாடப் படுகிறது.
- எழுதுபொருள்களைப் பாதுகாப்பதற்கும் அதன் உபயோகத்தினை ஊக்கப் படுத்தச் செய்வதற்கும் இத்தினமானது உலகம் முழுவதும் உள்ள ஆர்வலர்களால் கொண்டாடப் படுகிறது.
- மேக்னா கார்ட்டா (மகா சாசனம்) உருவாக்கப்பட்டதன் 800வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் 2012 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் உலக எழுது பொருள் தினம் கொண்டாடப் படுகிறது.
- பிரிட்டிஷ் வரலாற்றில் எழுதப்பட்ட மிக முக்கியமான ஆவணங்களில் ஒன்று இந்த மேக்னா கார்ட்டா (மகா சாசனம்) ஆகும்.

## சர்வதேச தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தில் பெண்களின் ஈடுபாடு தினம் - ஏப்ரல் 28

- சர்வதேச தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தில் பெண்களின் ஈடுபாடு தினமானது ஆண்டுதோறும் ஏப்ரல் மாதத்தின் நான்காவது வியாழன்கிழமை அன்று அனுசரிக்கப் படுகிறது.
- இந்த ஆண்டு இந்தத் தினமானது ஏப்ரல் 28 அன்று அனுசரிக்கப்பட்டது.
- இந்தத் தினமானது, தொழில்நுட்பத்தில் பெண்கள் மற்றும் மகளிரின் பங்கேற்பை அதிகரிக்கச் செய்வதற்கான ஒரு உலகளாவிய இயக்கத்தை ஊக்குவிப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு, அணுகல் மற்றும் பாதுகாப்பு ஆகும்.

## வேலையில் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்திற்கான உலக தினம் - ஏப்ரல் 28

- உலகளவில் நிகழும் தொழில் சார்ந்த விபத்துக்கள் மற்றும் நோய்களைத் தடுப்பதை இந்தத் தினம் ஊக்குவிக்கிறது.
- பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம் ஆகிய கலாச்சாரத்தை நோக்கிய ஒரு சமூகப் பேச்சு வார்த்தையை மேம்படுத்துவதில் இது கவனம் செலுத்துகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "ஒரு நேர்மறையான பாதுகாப்பு மற்றும் சுகாதார கலாச்சாரத்தை உருவாக்குவதில் பங்கேற்பு மற்றும் சமூகப் பேச்சுவார்த்தை" என்பதாகும்.

## சர்வதேச நடன தினம் - ஏப்ரல் 29

- இந்த தினமானது நடனத்தின் மதிப்பு மற்றும் முக்கியத்துவத்தை கொண்டாடுவதுடன், நிகழ்ச்சிகள் மற்றும் திருவிழாக்கள் மூலம் இந்தக் கலை வடிவம் பற்றிய கல்வியையும் அதன் பங்கேற்பையும் ஊக்குவிக்கிறது.

- தொழில்துறை பயிற்சி நிறுவனத்தின் நடனக் குழுவானது 1982 ஆம் ஆண்டில் சர்வதேச நடன தினத்தை நிறுவியது.
- நவீன பேலட் என்ற நடன முறையை உருவாக்கிய ஜீன் ஜார்ஜஸ் நோவர்ரே (1727-1810) என்பவரின் பிறந்த நாளை இத்தினம் நினைவு கூறுகின்றது.

## உலக கால்நடை தினம் - ஏப்ரல் 30

- இந்த தினம் ஏப்ரல் மாதத்தின் கடைசி சனிக்கிழமையன்று அனுசரிக்கப் படுகிறது.
- இந்த ஆண்டு இத்தினம் ஏப்ரல் 30 ஆம் தேதி அனுசரிக்கப்படுகிறது.
- இத்தினமானது, உலகெங்கிலும் உள்ள கால்நடை மருத்துவர்களால் மேற்கொள்ளப் படும் உயிர்காக்கும் பணிகள் பற்றி எடுத்துரைக்கவும் அதனை ஊக்குவிக்கவும் வேண்டி நிறுவப்பட்ட ஒரு வருடாந்திர நிகழ்வு ஆகும்.
- 2022 ஆம் ஆண்டின் உலக கால்நடை கருத்துரு, "கால்நடை மருத்துவத்தின் நெகிழ்திறனை வலுப்படுத்துதல்" என்பதாகும்.

## ஆயுஷ்மான் பாரத் திவாஸ் - ஏப்ரல் 30

- பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா என்ற திட்டமானது ஆயுஷ்மான் பாரத் யோஜனாவின் ஒரு முக்கிய அங்கமாகும்.
- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் 2018 ஆம் ஆண்டில் ஆயுஷ்மான் பாரத் யோஜ்னா திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.
- முறையான மருத்துவ வசதிகளை பெற முடியாத கோடிக்கணக்கான இந்தியர்களுக்கு சுகாதார நலன்களை வழங்குவதற்காக இத்திட்டமானது தொடங்கப் பட்டது.
- நரேந்திர மோடி அவர்களின் அரசினால் தொடங்கப்பட்ட இந்த முதன்மைத் திட்டம், ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான மேம்பாட்டு இலக்குகளில் (SDGs) ஒன்றைப் பூர்த்தி அடையச் செய்வதற்காக பொதுச் சுகாதார திட்டத்தின் ஒரு பின்னணியில் தொடங்கப் பட்டது.

## சர்வதேச சிற்ப தினம் - ஏப்ரல் 30

- சிற்பத்தின் உருவாக்கம் மற்றும் புரிதல் மற்றும் சமூகத்திற்கு அதன் தனித்துவமான மற்றும் முக்கியப் பங்களிப்பை மேம்படுத்தச் செய்வதற்கான சர்வதேச சிற்பக்கலை மையத்தின் திட்டத்தினை ஊக்குவிப்பதை இந்தத் தினம் நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இந்த தினமானது ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் மாதத்தின் கடைசி சனிக்கிழமையன்று அனுசரிக்கப் படுகிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★